# மறையாசிரியர் இடைநிலைத் தேர்வு

# கைநூல்



தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்

இலங்கை

# மறையாசிரியர் இடைநிலைத் தேர்வுக்கான கைநூல்



இலங்கை கத்தோலிக்க மறையாசிரியர்களின் மறை அறிவை வளர்க்கும் நோக்குடன் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் மூன்று தேர்வுகள் நடாத்தப்படுகின்றன அவை:- மறையாசிரியர் முதல் தேர்வு, மறையாசிரியர் இடைநிலைத்தேர்வு, மறையாசிரியர் இறுதித் தேர்வு என்பனவாகும்.

மறையாசிரியர் இடைநிலைத்தேர்வில் தோற்றவிருக்கும் மறையாசிரியர்களுக்கான பாடத் திட்டம் இக் கைநூலில் தரப்பட்டுள்ளது. அவை:- திருவிவிலியம், அருளடையாளம், இரண்டாம் வத்திக்கான் சங்க வெளியீடு, தொடர்புசாதனங்கள் மூலம் மறையைக் கற்பிக்கும் முறைகள், இலங்கை, உலக திருச்சபை வரலாறு ஆகியனவாகும். முதலாம் வினாத்தாள் 01லிருந்து 05 வரையிலான பாடங்களையும் இரண்டாம் வினாத்தாள் 06லிருந்து 09 வரையிலான பாடங்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தேர்வுக்குத் தோற்றவுள்ள மறையாசிரியர்கள் இக் கைநூலை கற்று தெளிவு பெற வேண்டும் என விரும்புகிறோம்.

மறையாசிரியர் முதல் தேர்வில் சித்தி பெற்றோர் அல்லது க. பொ. த உயர் தர கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்தவ நாகரீகம் பாடத்தில் சித்தி பெற்றோர் மறையாசிரியர் இடைநிலை தேர்வுக்குத் தோற்றலாம்.

மேற்படி தேர்வுக்குத் தோற்றவுள்ள உங்களுக்குத் தேவையான மறை அறிவு, சிந்தனை மற்றும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு இக் கைநூல் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

இறை ஆசீர்.

அருட்பணி பெனட் சாந்த
தேசிய மறைக்கல்வி இயக்குனர்
தேசிய மறைக்கல்வி நடுநிலையம்
கொழும்பு – 08

# பொருளடக்கம்

1. திருவிவிலியம் பற்றிய அறிமுகம்

2. தொடக்க நூல், விடுதலைப் பயணம் பற்றிய அறிவு

3. ஒத்தமை நற்செய்தி பற்றிய அறிமுகம்

4. தூய லூக்கா நற்செய்தி

5. அருளடையாளங்கள்

6. திருச்சபை பற்றிய 2ம் வத்திக்கான் சங்கக் கண்ணோட்டமும் இன்றைய உலகில் திருச்சபை பற்றிய வத்திக்கான் சங்க வெளியீடு பற்றிய அறிவும்

7. சமூகத் தொடர்புச்சாதனங்களும் மறைக்கல்வி போதனா முறைகளும்

8. மத்திய யுகத்தில் திருச்சபை வரலாறு

9. இலங்கைத் திருச்சபை வரலாறு

I S B N : 978 - 624 - 6121 - 02 - 0
Date : 20. 02. 2023
Printers : S and S Printers
No. 49, Jayantha Veerasekara Mawatha,
Colombo - 10
011 2384028/ 0112390873
All rights reserved

### 1.1.1 ஆசிரியத்துவம்

பஞ்சாகமம் (ஐந்நூல்) என்பது திருவிவிலியத்தில் அடங்கியுள்ள முதல் 5 நூல்களாகும். அவை தொடக்க நூல், விடுதலைப்பயணம். லேவியராகமம், எண்ணிக்கை, இணைச்சட்டம் ஆகியனவாகும்.

பாரம்பரிய கருத்துப்படி பஞ்சாகமம் மோசேயின் ஐந்நூல்களௌன அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவரே அந்நூலின் ஆசிரியர் என கருத முடியாது. பஞ்சாகமத்தின் அமைப்பை நோக்கும்போது (தொநூ. 1:1-2, 4, 2:5-25)

- ஒரே விடயம் மீண்டும் மீண்டும் கூறப்படுதல். - (உ+ம்) உலகப் படைப்பு.
- ஒரே விடயம் இரண்டு விதமாக விபரிக்கப்பட்டுள்ளது. - (உ+ம்) வெள்ளப்பெருக்கு, மிருகங்களின் எண்ணிக்கை (தொநூ. 6:5-8, 6:19, 7:2, 8-9).
- வரலாறு கட்டியெழுப்பப்படுவதுடன் ஒரேமாதிரியான நிகழ்ச்சி மாற்றமடைதல் - (உ+ம்) புளியாத அப்பப் பண்டிகை.
- ஒரு கதையிலிருந்து இன்னொரு கதையைப் பிரதிசெய்தல் - (உ+ம்) ஈசாக் பற்றியவை (தொநூ 12 லிருந்து எடுக்கப்பட்டுள்ளது)
- இணைச்சட்ட நூலிலுள்ள வேறுபாடு.

இவற்றை கவனிக்கும்போது பஞ்சாகமம் ஒரு நபரால் எழுதப்பட்டது அல்ல. ஒவ்வொரு சமூகத்தினரிடமும் காணப்பட்ட பாரம்பரியங்கள், மரபுகள் நான்கின் அடிப்படையில் எழுதப்பட்டது என்பது புலனாகிறது. அதன்படி இதிலுள்ள பாரம்பரியங்கள் நான்கையும் இவ்வாறு குறிப்பிடலாம்.

### 1.1.2 பஞ்சாகமத்தில் காணப்படும் மரபுகள்

| மரபுகள் | | வாய்மொழிக் காலம் | எழுத்து வடிவம் பெற்ற காலம் |
|---|---|---|---|
| 1. யாவே மரபு | (J) | கி. மு 950 | 900 |
| 2. எலோகிம் மரபு | (E) | கி. மு 750 | 722 |
| 3. இணைச்சட்ட மரபு | (D) | கி. மு 700 | 621 |
| 4. குருமரபு மரபு | (P) | கி. மு 400 க்கு பின் | |

## 1.2 J, E, D, P மரபுகள்

### 1. யாவே மரபு (J) கி. மு 950-900

இம்மரபு "J" என அழைக்கப்படுவது இங்கு இறைவனுக்கு 'யாவே' என பெயரிடப்பட்டதாலாகும். சில நூல்களில் யாவே என்ற பெயரும் இடம்பெற்றுள்ளது. யாவேக்கு "Y" க்குப் பதிலாக "J" எழுதக் காரணம், ஜேர்மன் மொழியில் இறைவனின் பெயரை எழுதும்போது "J" என்ற எழுத்தை பாவிப்பதாலாகும். இம்மரபின்படி தொடக்கத்திலிருந்தே யாவே பெயர் பழக்கத்திலிருந்தது. எபிரேய மொழியில் "ய" க்கும் "ஜே" க்கு மிடையே வித்தியாசம் இல்லை.

**(அ) சிறப்பு பண்புகள்**

- மிகப் பழமையான சமய, சட்ட கருத்துக்கள் அடங்கியுள்ளன.
- படைப்பைப் பற்றிய 2ம் கதையுடன் தொடங்கி (தொநூ 2:4-25) மோசேயின் (இச 34:4-6) இறப்புடன் முடிவடைகிறது.
- தொடக்க நூலில் பாதிக்கு மேல் (இம்மரபு) உள்ளது. (இச. 34:4-6)
- மிகுதியில் அதிகமான பகுதி விடுதலைப்பயணத்திலும் எண்ணிக்கை நூலிலும் அடங்கியுள்ளது.
- லேவியராகமத்தில் யாவே மரபு இல்லை.
- இணைச்சட்ட நூலில் இம்மரபு சிறிதளவே உள்ளது. (இச 31:1-30, 34:1-12)

- மிகப் பழைமையான வரலாறு தொடர்பான விளக்கத்தை முன்வைக்கிறது.
- யூதேயா பகுதி தென்னரசின் எருசலேமைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.
- எருசலேமின் பிரதான நகரத்தையும், தாவீதின் அரண்மனையைப் பற்றியும் மிக உயர்வாக வர்ணிக்கப்படுகிறது.
- தென்னரசில் யூதா, சிமியோன் இவர்களின் வம்சத்தைப் பற்றி அதிகம் குறிப்பிடப்பட்டுள்ளது.

- சம்பிரதாயங்களும் கலாச்சாரங்களும் பண்பாடுகளும் எருசலேமிலும் தாவீதின் அரண்மனையிலும் நடை பெற்றதாக சான்று பகருகிறது.

**(ஆ) மொழியும் இலக்கிய அமைப்பும்.**

- இலகுவானது, தெளிவானது, பல்விதமானதாக உள்ளது.
- இயல்பானதைப் போலவே நாடக பண்பையும் காட்டுகிறது.
- இம்மரபின் ஆசிரியர் மக்களின் விருப்பு வெறுப்புகளை மதித்துள்ளார்.
- கதைகளில் வரும் பாத்திரங்களில் விசேட பண்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (லாபான் - உலோபியாக)
- சிக்கலான சம்பவங்கள் எளிய நடையில் முன்வைக்கப்பட்டுள்ளது.
- கதையின் கருப்பொருள் உயிருள்ளது, இயல்பானது.
- கதை மூலம் வாசகர்களின் ஆர்வம் தூண்டப்படுகிறது. (ஆபிரகாமை சந்திக்க வந்த விருந்தினர்)
- மொசப்பதேமியா, எகிப்து நாடுகளின் பழைய வரலாற்று கதைகள் சேர்க்கப்பட்டுள்ளன. (ஏதேன் தோட்டம், உலகப்படைப்பு, நோவாவின் கதை, பாபேல் கோபுரம் போன்றவை).

**(இ) முன்வைக்கப்படும் இறையியல் கருத்துக்கள்**

- இறை நம்பிக்கைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.
- ஆசிரியர் இயற்கையின் வழியாகவும் மனித வரலாற்றின் வழியாகவும் இறைவனைக் காண்கிறார்.
- மேன்மையான மனிதராக இறைவன், மனிதத் தன்மையுள்ளவராக காட்டப்படுகிறார்.
- இறைவன் மனிதனோடு மிக நெருங்கியவராகவும் மனிதத் தன்மை உள்ளவராகவும் எடுத்துக் காட்டப்படு கிறார்.
- இறைவன் மனிதனைப்போல் செயற்படுகிறார், பயணிக்கிறார், பேசுகிறார்.
- இறைவுறவை முறித்துக்கொண்டதால் இவ்வுலகில் பாவம் நுழைந்தது. அதனால் துன்பமும், வேதனையும், சாவும் மனிதனுக்கு ஏற்படுகின்றன. ஆனால் இறைவன் மனிதனை கைவிடுவதில்லை.

## (2) எலோகிம் மரபு (E) கி. மு. 750-722

**(அ) சிறப்பு பண்புகள்**

- இறைவனை எலோகிம் என்ற எபிரேய பெயரினால் அழைத்தனர்.
- சமாரியாவை அசிரியா கைப்பற்றுவதற்கு முன்னர் எழுதப்பட்டது. (கி.மு 770ல் ஜெரொபவாம் (எரொபவாம்) அரசன் வட அரசை ஆட்சி செய்த காலத்தில் கி.மு 785-744)
- வட அரசில் இறைவாக்கினரிடையே இம்மரபு வடிவம் பெற்றது.
- இஸ்ராயேல் ஆட்சியின் வீழ்ச்சியினால் வட அரசிலிருந்து அகதிகளாக தென்னரசுக்கு வந்தவர்கள் இம்மரபு முறையை கொண்டுவந்திருக்கக் கூடும்.
- ஆபிரகாமின் கதை (தொநூ 15ம் அதி) தொடக்கம் மோசேயின் மரணம் வரை (இச 34) இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. லேவியராகமத்தில் உள்ளடக்கப்படவில்லை. ஒரு பகுதி தொடக்க நூலிலும் விடுதலைப் பயணத்திலும் காணப்படுகிறது.
- எண்ணாகமத்தில் 9 அதிகாரங்களும் இணைச்சட்டத்தில் 3 அதிகாரங்களும் (31,33,34) இதில் அடங்கும்.
- 
- சிக்கேம், பெத்தேல், போன்ற பழைமை வாய்ந்த வழிபாட்டுத்தலங்களுக்கும் யாக்கோபு யோசேப்பு ஆகியவர்களுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. மோசேயின் ஆசியினால் இவை நடைபெற்றதாக காட்டப்படுகிறது. (இச 33)

**(ஆ) மொழியும் இலக்கிய அமைப்பும்:-**

- மொழி நடை “J” மரபை விட சிறப்பானது, இலகுவானது, குறுகியது. விபரிக்கும் தன்மை இல்லை. உயர்ந்த எபிரேய மொழிநடை காணப்படுகிறது.
- “J” மரபைப்போல் இயற்கையாக இல்லாவிடினும் கருத்துக்கள் தெளிவாக முன்வைக்கப்படுகிறது.

- ஆசிரியர், தான் அறிமுகம் செய்யும் பாத்திரங்கள் வழியாக பிரதிபலிக்கும் உணர்ச்சியை இயற்கை, வாழ்க்கை வழியாக வெளிப்படுத்துகிறார்.
- வரலாறு முறையாக, தர்க்கரீதியாக, உயர்மட்டத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.
- ஈசாக்கின் பலி முக்கிய வரலாற்று நிகழ்ச்சியாகும் (தொநூ. 22).

**(இ) தலைப்பும் முன்வைக்கப்படும் இறையியல் கருத்துக்களும்:-**

- இறைவன் மனிதனை விட வேறுபட்டவர், உருவமற்றவராவார்.
- இறைவன் மனித அனுபவங்களுக்கு அப்பாற்றபட்டவர். அவர் மனிதனோடு நெருங்கிய தொடர்பற்றவர். காட்சி, கனவு, தூதர்கள் (வானதூதர்) வழியாக மனிதனோடு பேசுபவர் என அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (தொநூ. 20:3, 6, 21:7, 28:12, 31:11)
- வட நாட்டில் மூடநம்பிக்கையான அந்நிய தெய்வங்களை விட இறைவன் மேலானவர்.
- உடன்படிக்கையின் நிபந்தனைகளை இறைவாக்கினர் மூலம் வெளிப்படுத்துகிறார்.
- இறைவன் சாட்சியாளரும் உடன்படிக்கையின் பங்காளருமாவார்.
- மனிதனுக்கும் இறைவனுக்குமுள்ள உறவு, உடன்படிக்கை வாழ்வோடு தொடர்புள்ளது என விபரிக்கப் படுகிறது.
- இறைவாக்கினரின் ஆன்மீக பணியின் வரலாறு சீனாய் உடன்படிக்கையை முதன்மைப்படுத்தி கூறப்பட்டுள்ளது.
- மோசேக்கு மட்டுமே இறைவனோடு முகமுகமாய் கதைக்க முடிந்தது. ஆனால் மனிதன் இறைவனை பயத்துடனும் பீதியுடனுமே நெருங்கினான். (விப. 3:6)
- நேர்மை, பாவத்திலிருந்து விடுதலை, (மீட்பு) போன்றவை இம்மரபின் உடன்படிக்கை நிபந்தனைகளுக்குள் அடங்கி உள்ளது.

## (3) இணைச்சட்ட மரபு (D) கி. மு 700-621

**(அ) சிறப்பு பண்புகள்:-**

- இம்மரபு ''இணைச்சட்ட நூலில்'' மாத்திரமே காணப்படுகின்றது. வட அரசின் வீழ்ச்சிக்குப் பின் லேவியர் தங்களோடு கொண்டு வந்த சமய பழக்கவழக்கங்கள் இம்மரபில் காணப்படுகிறது.
- இம்மரபு யோசியா அரசரின் காலத்திற்குட்பட்டது. (கி.மு 906-630) இவ்வரசர் இம்மரபை மோசேயின் மூன்று மறையுரைகளாக முன்வைத்துள்ளார். நாடு கடத்தலின் ஆரம்பத்தில் புதிய மாற்றம் ஏற்பட்டது.
- இம்மரபின்படி வரலாறு என்பது, இறைவன் மக்களுக்கு காட்டிய அன்பின் பிரதிபலிப்பாகும்.
- 2 அரசர் 22ம் அதிகாரத்திலுள்ளதுபோல் பழைய திருச்சட்ட நூலைப் பயன்படுத்தியே இம்மரபு கட்டியெ ழுப்பப்பட்டுள்ளது. ஆசிரியரைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. பலரின் எண்ணப்படி செக்கேமில் திருச்சட்டம் தெரிந்த குரு அல்லது குருக்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். இம்மரபில் மிகக்குறுகிய காலப் பகுதியே உள்ளடக்கப்பட்டுள்ளது. சீனாய் மலையில் இறைவன் பத்து கட்டளைகளை கொடுக்கும் சம்பவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மரபில் காணப்படும் மேன்மையான ஒரே நபர் மோசே ஆவார். "E'' மரபைவிட புதிய தன்மையுடையது. இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக் கையை புதுப்பித்துக் கொள்ளும்போது பின்பற்றிய ஒழுங்கு முறைகளின் விபரம் இங்கு தரப்பட்டுள்ளது.

**(ஆ) மொழியும் இலக்கிய அமைப்பும்.**

- இஸ்ராயேல் மக்களுக்கு நேரடியாகக் கூறும் அறிவுரைகள் இரண்டு இதில் உள்ளது.
- செக்கேமில் நடைமுறையில் இருந்த ஒழுங்கு முறைகள் புதுப்பிக்கப்படும்போது வழிபாட்டு முறைகளில் "D'' மரபு தோன்றியது.
- உடன்படிக்கை வாழ்வு வாழ, பிரமாணிக்கத்துடன் அவற்றை அனுசரிக்க, மக்களை அழைப்பது இறைவாக்கினர் அழைப்பதுபோன்ற நடையில் அமைந்துள்ளது.

**(இ) தலைப்பும் முன்வைக்கப்படும் இறையியல் கருத்துக்களும்:-**

- உடன்படிக்கை வாழ்வு வாழ்வதற்காக சட்டங்களை அனுசரிக்க வேண்டும்.

- உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதும் சட்டங்களை நிறைவேற்றுவதுமே உண்மையான இறை வழிபாடாகும்.
- எப்பொழுதும் தனது வாழ்வில் உடன்படிக்கைக்கு சாட்சி பகர வேண்டும்.
- இறைவார்த்தையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலர் இறைவார்த்தைக்குச் செவிமடுக்க அழைக்கப் படுகிறார்கள். இறைவார்த்தையினால் வெளிப்படுத்தப்படும் இறைவன் அனைத்தையும் கடந்தவர்.
- இறைவெளிபாட்டுக்கு மட்டுமல்ல இறைவனின் குரலொலிக்கும் மக்கள் பயந்தார்கள்.
- இறைவனுக்கு முகம், கை கால் இருப்பதுபோல காட்டப்படுவது அவரின் வல்லமை, வலிமை, பிரசன்னத்தை வெளிப்படுத்துவதற்காகும்.
- எந்த விதத்திலும், உருவத்திலும் இறைவனுக்கு சிலைகள் செய்யக்கூடாது (இச 5:8)
- இறைவன் எல்லாத் தெய்வங்களையும் விட வேறுபட்டவர். (இச. 12:29-31)
- உடன்படிக்கை பேழை இறைவனின் ஆசனம் அல்ல. இறைவார்த்தை அல்லது திருச்சட்டம் வைக்கப் பட்டிருக்கும் இடமாகும். (இச. 10:3-5)
- தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் ''D'' மரபின்படி ஒரே மக்களாக அல்லது ஒரே சமுதாயமாக அறிமுகம் செய்யப் படுகிறார்கள். இவ்வொன்றிப்பு, இனத்தைப் பாதுகாக்க வலிமை தருகிறது.
- அவர்கள் வழிபடும் ஒரே இடமாக எருசலேம் தேவாலயம் இருந்தது.

## (4) குருமரபு 'P' கி. மு. 400 இன் பின்

**(அ) சிறப்புப் பண்புகள்:-**

- கி. மு. 500ம் ஆண்டளவில் எழுதப்பட்டு கி. மு 422ம் ஆண்டளவில் 'J' 'E' 'D' மரபுகளோடு கலந்தது. பபிலோனிய அடிமைத்தனத்தின் தாக்கங்கள் இஸ்ராயேல் மக்களைப் பாதித்ததினால் அவர்களின் நம்பிக்கையைப் புதிய வடிவில் முன்வைக்க நேர்ந்தது. இதற்காக குருக்களின் 'P' எழுத்து வடிவம் மரபாக்கப்பட்டது.
- தொடக்க நூலில் 1ம் அதிகாரம் தொடக்கம் மோசேயின் இறப்பு வரையுள்ள பகுதி இம்மரபிற்கு உரியது. (இச. 34:1-9)
- விடுதலைப்பயண நூலில் கடைசி 6 அதிகாரங்களிலும் இம்மரபு அதிகளவில் காணப்படுகிறது.
- லேவியராகமம் முழுவதிலும் எண்ணிக்கை ஆகமத்தில் முதல் 10 அதிகாரத்திலும் 'P' மரபுள்ளது.
- திருவழிபாடு, சடங்கு முறைகள், குருக்களின் சடங்கு சம்பிரதாயங்கள் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
- உள்ளத் தூய்மைக்கும் பரிசுத்ததனத்திற்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது.
- பாரம்பரிய கருத்துக்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.
- பரம்பரை (மரபு பட்டியல் எண்ணிக்கை கூடுதலாக பயன்படுத்துத்தப்பட்டுள்ளது.)
- இம்மரபில் இறைவனை மனிதனாக காண்பதில்லை.

**(ஆ) மொழியும் இலக்கிய அமைப்பும்**

- மீண்டும் மீண்டும் கூறுதல் (உ+ம்) மாலையும் காலையும் நிறைவுற்று நாளாயிற்று, அது அவ்வாறே ஆயிற்று, செய்து முடித்தார்.
- மொழி நடை ஒரே மாதிரியானது.
- பாவிக்கும் மொழிநடை இலகுவானதாகவும், விளங்கிக் கொள்ளக்கூடிய எளிய நடையிலும் விபரிக்கப்பட்டுள்ளது.

**(இ) முன்வைக்கப்டும் இறையியல் கருத்துக்கள்:-**

- மோசேயையும் இறைசட்டத்தையும் (பத்துக் கட்டளைகளையும்) ஒழுங்கு முறைப்படி முன்வைப்பதனால் வரலாறு இறையியலுடன் தொடர்புள்ளதாகவுள்ளது.
- தொடக்கத்தில் மனிதன் இறைவனுடனும் முழு உலகத்துடனும் சமாதானத்துடன் வாழ்ந்தான்.

- இறைசாயலுடன் மனிதனைப் படைத்த இறைவன் அவருக்குக் கீழ்படிந்து படைப்புக்கள் அனைத்தையும் ஆளவும், அதிகாரம் செலுத்தவும், அவற்றை விருத்திசெய்யவும் மனிதனுக்கு அழைப்பு விடுக்கிறார்.
- ஓய்வு (சபாத்) நாளின் சட்டங்களுக்கு கீழ்ப்படிவது இறைவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவின் அடையாளமாகும்.
- இறைவன் எல்லாவற்றிக்கும் மேலானவர்.
- இறைவன் மேன்மையானவராக முன்வைக்கப்படுகிறார்.
- இறைவன் தனது வல்லமை, மகிமையால் மனிதருக்கு தன்னை வெளிப்படுத்தினார். வார்த்தையினால் உலகைப் படைத்தார். தனது வல்லமை மகிமையுடன் மோசேக்கு மாத்திரமே தன்னை வெளிப்படுத்தினார். கூடாரமும், எருசலேம் தேவாலயமும் இறைபிரசன்னம் வெளிப்படுத்தப்பட்ட இடங்களாகும்.
- மக்களுக்கு நேரடியாக இறைவனோடு தொடர்புகொள்ள முடியாததால் குருக்கள் நடுநிலைமை வகித்தனர்.
- இஸ்ராயேல் மக்களின் வாழ்வு முழுவதும் இறை வழிபாடாக சட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- இறைவனுக்கு எதிராக செயற்படுவோர் வழக்கப்படி செலுத்த வேண்டிய நட்ட ஈட்டை முறைப்படி செலுத்துவதற்கு ஆவண செய்ய வேண்டும்.
- இறைவனுக்கு ஏற்புடையோர் ஆசீரைப் பெற்று இறைவனுக்கு உகந்தவர்களாக வாழ்ந்தார்கள்.
- இதைப்போல் மக்களின் திருச்சட்டமும், ஆராதனையும், வரலாறும் மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தன.
- மனித வரையறையைக் கடந்து இறை விருப்பத்தின், இறை வார்த்தையின் வழியாக செயலாற்றும் இறைவனை இங்கு சந்திக்கலாம்.
- ஓய்வு (சபாத்) நாள் வழிபாட்டை பரிசுத்த நாளாகவும், ஓய்வு நாளாகவும், இறைவனை சந்திக்கும் நாளாகவும் அனுசரித்தல் (விப. 24:16)

**மரபுகள் பற்றிய அட்டவணை**

| **காலப்பகுதி** | **'J' மரபு கி. மு 10-9 நூற்றாண்டுகளுக்கிடையில்** | **'E' மரபு கி. மு 8ம் நூற்றாண்டு** | **'D' மரபு கி. மு 7ம் நூற்றாண்டு** | **'P' மரபு 6-5 நூற்றாண்டுகளுக்கிடையில்** |
|---|---|---|---|---|
| ஆரம்பித்த இடம் | எருசலேம் (தென்னரசு) | செக்கேம் (வட அரசு) | செக்கேம் (வட அரசு) | எருசலேமும் பபிலோனியாவும் (தென்னரசு) |
| தூய இடமும் தொடர்பும் | எருசலேம், எபிரோன், பெயர்செபா | செக்கேம், பெத்தேல், பெயர்செபா | - | - |
| கோத்திரங்களின் தொடர்பு | யூதா | எப்ராயிம் | - | - |
| அமைப்பு | வீர கதாபாத்திரங்களடங்கிய வரலாற்று விளக்கம் | வரலாறு | இலக்கிய நடை, அறிவுரை, இறை வாக்குகள், ஞானம், சடங்கு முறைகள் | வரலாறு, சட்டங்கள் |
| சமய சார்பு | ஞானம் | இறைவாக்கு | எசேக்கியேல் | சட்ட நம்பிக்கைகள் |
| அரசியல் தொடர்பு | சலமோன், ரெகபெவாம் | 2ம் எரொபவாம் | உடன்படிக்கை வாழ்விற்கு அழைப்பு | பபிலோனிய, பாரசீக அரசு |
| முக்கிய கருப் பொருள் | குலமுதுவர்கள் பெற்ற ஆசீர் | மோசேயின் உடன்படிக்கை | - | வாழ்வு ஒரு திருப்பயணம் |
| மேன்மையான வரலாற்று மனிதர்கள் | ஆபிரகாம் | யாக்கோபு, யோசேப்பு, மோசே | மோசே | ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே |
| இஸ்ரயேலர் பற்றிய நோக்கு | இனம் | பல்வித சமய குழுக்களின் ஒன்றிப்பு | சமூகம் அல்லது பொதுக் குடும்பம் | இறைவனை வழிபடும் அரசு. |

### 1.3 நூல் வடிவமைத்தல்

திருவிவிலிய வரலாற்றின் ஆரம்பம் வாய்மொழி பாரம்பரியம் வரை செல்கிறது. திருவிவிலியம் நூல் வடிவம் பெறமுன் வாய்மொழி பாரம்பரியம் மிக முக்கிய இடத்தைப் பெற்றது. திருவிவிலியம் நூல் வடிவம் பெற்றது, தாவீது அரசனது ஆட்சியின் பின்னராகும். அதற்கு முன்னைய நூற்றாண்டுகளில் அதாவது குலமுதுவர்கள், மோசே, இஸ்ராயேலர் கானான் நாட்டில் குடியேறுதல், நீதித்தலைவர்கள், சவுல் அரசனின் ஆட்சி ஆகியன வாய்மொழி பாரம்பரியக் காலத்திற்குட்பட்டவையாகும்.

இக்காலங்களில் எழுத்தாளர் அல்லது எழுத்துவடிவம் இல்லையென இதனால் கருதுவதற்கில்லை. (உ+ம்) உடன்படிக்கை சட்டங்கள் (விப. 20:22-23:35). பத்துக்கட்டளைகள் (விப. 20, இச. 5) போன்ற பகுதிகள் இதற்கு முன்னர் எழுத்து வடிவம் இருந்ததை காட்டுக்கின்றன. இஸ்ரயேலரின் பழக்க வழக்கங்களை பாதுகாத்த இந்தப் பகுதிகள் சிலவற்றைத் தவிர, தங்களின் வரலாற்றை அறிவிக்க வாய்மொழி பாரம்பரியத்தை முக்கிய வழியாகப் பயன்படுத்தினர்.


இப்பாரம்பரியத்தின் ஊடாக மக்கள் தங்கள் வாழ்க்கையில் சேகரித்த அனுபவங்கள், பழக்க வழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், நம்பிக்கை என்பன கடந்த காலங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டு காலமாக இறை மக்களால் தமது மூதாதையரிடம் விட்டுச்சென்ற அனுபவங்களை பாதுகாக்கும்போது, அவ்வனுபவங்களுக்கு தங்களின் அனுபவங்களையும் சேர்த்து பழைய பாரம்பரியங்களையும் பாதுகாத்துக் கொண்டனர். இந்த ஒன்றுசேர்த்லின்போது பழைய பாரம்பரியங்களில் முக்கிய கருப்பொருள் அழிந்து போகாமல் பாதுகாக்கப்பட்டன. இப்படியாக குலமுதுவர்கள், மோசே, இறைவாக்கினர் இவர்களின் மறைச்சான்றுகள் முன்பு போலவே பிற்காலத்திலும் பாதுகாப்பாக இருந்தன.

வாய்மொழி பாரம்பரியமாக இவ்வாறு முன்னேறிய இறை மக்களின் நம்பிக்கை அனுபவம் சலமோன் அரசனின் காலத்தில் அதாவது (கி.மு. 950 ஆண்டளவில்) நூல்வடிவம் பெற்றது. தாவீதினதும் சிறப்பாக சலமோனினதும் ஆட்சி காலத்தில் பிரதிகளை தயாரிக்க சட்டபூர்வமான அனுமதி கிடைத்தது. இவ்வளவு காலம் பாதுகாத்து வந்த பழைய பாரம்பரியங்கள் இங்கே நூல்வடிவம் பெற்றது. இந்நூல் வடிவத்தில் முன்னைய நூற்றாண்டுகளில் உரிமையாக்கிக் கொண்ட கலாச்சாரம் மட்டுமல்ல இஸ்ராயேல் தேசத்தின் ஆரம்பத்திற்கு முன்பிருந்த வரலாறும் இதற்குள் அடங்கியுள்ளதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறே இஸ்ராயேலரின் வரலாறு கட்டியெழுப்பப்படுவதற்கு இன்னுமொரு காரணம் எருசலேம் தேவாலயம் கட்டியெழுப்பப்பட்டதுடன் அதன் சடங்கு முறைகளின்போது நம்பிக்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதையும் கூறலாம். இந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு கட்டாயம் நூல்வடிவம் தேவைப்பட்டது. ஆதலால் வாய்மொழி பாரம்பரியத்தினால் பாதுகாக்கப்பட்ட பழைய அனுபவங்களும் காலத்திற்கு காலம் சேர்க்கப்பட்ட அனுபவங்களும் நூல் வடிவமாகியது. ஆரம்பத்திலிருந்தே இதன் முக்கிய நோக்கம், இறைமக்களின் நம்பிக்கையை ஊட்டம் பெறச் செய்வதாகும். அதற்கு இந்த அனுபவங்களே துணை நின்றன. இவ்வாறு நூல் வடிவம் பெற்ற திருவிவிலியம் அவர்களது திருச்சட்டங்களின்போதும், திருயாத்திரைகளின்போதும் பயன்படுத்தப்பட்டது எனவும் நாம் அறிகிறோம்.

திருவிவிலியத்தில் சிற்சில பகுதிகளை பரிசீலனை செய்யும்போது மறுக்க முடியாத இரண்டு காரணிகளைக் காணலாம்.

1. பக்கச் சார்பற்ற (பொதுவான) வெளிப்டுத்தல்களுக்காக ஒன்று சேகரிக்கப்பட்ட தங்களது உரிமைகள் பழைமையானவை என.
2. சட்டவல்லுனர்கள் முன்பு சேகரித்து வைத்திருந்த தங்களது அனுபவங்களும் இப்பழைய பாரம்பரியத் திற்குள் அடங்கியுள்ளது என.




**வாய்மொழி பாரம்பரியம் எழுத்துப் பாரம்பரியத்தில் கட்டியெழுப்பப்பட்ட விதம்**

## 1.4 மரபுகளை ஒன்றிணைத்தல்

இஸ்ரயேல் மக்கள் வானத்திலிருந்து விழுந்த மக்கள் அல்லர். அவர்களுக்கென்று வரலாறு, பின்னணி இருந்தது. குலமுதுவர்களைச் சுற்றி அவர்கள் கோத்திரங்களாக வாழ்ந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தான ஒவ்வொரு வரலாறு இருந்தது. வரலாற்றை இவர்கள் நம்பிக்கைக் கண்ணோட்டத்துடன் பார்த்தனர். அதன் மூலம் அவர்கள் பெற்ற அனுபவம் கோத்திரத்தின் பரம்பரையினருக்கு ஒப்படைக்கப்பட்டது.

பின்பு இந்த கோத்திரங்கள் ஒன்று சேர்ந்து கானான் தேசத்தில் குடியேறினர். வடக்கு தெற்கு என்ற விதத்தில் சில மாற்றங்கள் அவர்களிடையே ஏற்பட்டது. இதனால் யாவே மரபு தோன்றியது. வடக்கிலிருந்த பழைமை வாய்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கி.மு 750ம் ஆண்டளவில் எலோகிம் மரபு உருவாகியது. இந்த உருவாக்கங்கள் இரண்டும் மக்களிடையே இருந்தன.

கி.மு. 722 ல் வட அரசின் வீழ்ச்சியின் பின் பஞ்சாகமம் (ஐந்நூல்) என்ற காவியத்தில் வடபகுதியில் ஆரம்பமாகிய ‘E’ மரபும் தென் பகுதியில் ‘J’ மரபும் ஒன்றிணைந்து ஒரு பிரதியாக உருவாகியது. தென்னரசின் வீழ்ச்சிக்கு சில காலங்களுக்கு முன், மேலே கூறப்பட்ட மரபுடன் (J, E) இணைச்சட்ட மரபும் (‘D’) சேர்க்கப்பட்டது. இது கி.மு. 622குப் பின் நடைபெற்றது. மூன்று மரபுகளின் சேர்க்கையினால் இருந்த புதிய கருத்துகள் சிலவும் உள்ளடக்கப்பட்டன. அவை இறைவன் ஒருவர் மாத்திரமே, ஒரே மக்களாய் இருக்கவேண்டும், தெரிந்தெடுப்பது இறைவனின் சொந்தவிருப்பத்தினால் ஆகும் என்பன. பபிலோனிய அடிமைத்தனத்தின் பின் குருக்களின் வற்புறுத்தலினால் (‘P’) மரபும் அதனுடன் இணைக்கப்பட்டது.

இவ்வாறு மரபுகளின் ஒன்றிணைவானது பல நூல்களாலான உறுதியுள்ள கயிற்றைக் போன்றதாக காணப் பட்டது. ஒவ்வொரு கோத்திரங்களிலுமிருந்த வரலாற்றுக் கதைகள், சமயக்கதைகள், நம்பிக்கையின் கதைகள் அனுபவங்கள் தொகுக்கப்பட்டு அவை திரும்பத் திரும்ப மரபுகளுடன் இணைந்து திரும்பவும் பெரிய மரபுகளு டன் கலந்து புத்தூக்கம் பெற்று கடைசியில் திருவிவிலியத்தின் பஞ்சாகமமாக (ஐந்நூல்கள்) எமக்குக் கிடைத் துள்ளது. இது 700, 800, ஆண்டுகள் பழைமையுமாகிய சேர்க்கையினால் உருவாகிய பஞ்சாகம நூலாகும்.

ஆதலால் பஞ்சாகமத்தின் ஆசிரியர் பலர் இருந்தார்கள் என்பது தெளிவு. உருவாக்கியவர்களும் அதிகம்பேர். திருவிவிலியத்தை இறைவன் மனிதன் மூலமாக எழுதுகிறார். இதில் மனிதவதாரமெடுத்த உயிருள்ள இறைவார்த்தைகளே அடங்கியுள்ளன. இறைவார்த்தைகள் மனித சமுதாயத்திலிருந்து உருவாகியது. அதனால் திருவிவிலியத்தில் காட்டிக் கொடுத்தல், மனித பலவீனங்கள், வீழ்ச்சி, பெருமூச்சு, கொலை என்பன அடங்கியுள்ளன. திருவிவிலியம் மனித வாழ்க்கையில் உயிருள்ள இறைவார்த்தைகளாக உயிரூட்டம் பெறுவதை விளக்கும் நூல் என்பதை எம்மால் மறுக்கமுடியாது. ஆதலால் ஒரே பகுதிக்குள் இம்மரபுகள் ஒன்றுசேர்ந்து இருப்பது ஒரு பிரச்சனையல்ல.

## 1.5 மோசேயின் தழுவல்

யூத கிறிஸ்தவ மரபு, பஞ்சாகமத்தின் ஆசிரியர் மக்கள் தலைவர் மோசே எனக் கூறுகின்றது. இதன் உண்மைகளை அறிவதாயின், மோசேயின் ஆசிரிய தன்மையை விளங்கிக் கொள்வதற்கும் நாம் நம் காலத்தை விட மிக வித்தியாசமான அந்த காலத்திற்குப் போக வேண்டும். எமது கலாச்சாரத்தை விட மிகவும் வேறுபட்ட யூத கலாச்சாரத்திற்கு செல்ல வேண்டும்.

அன்றை காலம் இன்று போலல்ல. நூலின் ஆசிரியரை வெளிப்படையாக அறிமுகம் செய்வது மிகவும் குறைவு. ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒரு நபர் நூலை எழுதுவார். ஆனால் அவரின் பெயரை மறைத்துவிடுவார். அச்சமூகத்தின் மூத்த தலைவருக்கு, வரலாற்று பிதாபிதாக்களுக்கு, குலமுதுவருக்கு ஆசிரிய உரிமை அர்ப்பணிக்கப்படும். இவற்றை நல்லெண்ணத்துடன் செய்வார்கள்.

திருவிவிலியத்தில் ஆசிரியத்துவம் வேறொருவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அநேகம் உள. நற்செய்தி இரண்டாம் தலைமுறை கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டது. ஆனால் அவர்கள் நற்செய்தியின் ஆசிரியத்துவத்தை (உரிமையை) முதலாம் தலைமுறை கிறிஸ்தவர்களுக்கு, திருத்தூதர்களுக்கு கொடுக்க மறக்கவில்லை. காரணம் தங்களுக்கு நற்செய்தி கிடைத்தது அவர்களிடமிருந்தே, தங்களின் நம்பிக்கையின் பிதாக்கள் அவர்களே, தமது ஒன்றிப்பின் ஆரம்பகர்த்தா அவர்களே என்பதாலாகும். அதுபோல் தூய பவுலின் சில திருமுகங்கள் அவரது சீடரால் எழுதப்பட்டது. ஆனால் அவர்கள் ஆசிரியத்துவத்தை தங்கள் குருவிற்கு அர்பணித்தனர்.

பஞ்சாகமம் பற்றி கூறக்கூடியதும் அதுவே. J, E, D, P மரபுகளில் ஆசிரியர்கள் பஞ்சாகமத்தை எழுதினர். ஆனால் யூத குருக்கள் அதன் ஆசிரியர் உரிமையை மோசேக்கு அர்ப்பணித்தனர். காரணம் மோசே மக்களின் தலைவர். விடுதலைப் பயணத்தில் வீரன். பஞ்சாகமத்தில் பிற்பகுதியிலுள்ள வரலாற்று பயணத்தை வழிநடத்துபவர், தலைமைத் தாங்குபவர் அவரே. அவரது அதிகாரம் யூத மக்களிலும், அவரது தழுவல் (model), அந்த மக்களிலிருந்து தோன்றிய பஞ்சாகமத்திலிருந்தும் உருவானது. பஞ்சாகமத்திலுள்ள சில

சம்பிரதாயங்கள், சட்டங்கள், உடன்படிக்கைகள் ஆகியன மோசே யுகத்தை நோக்கி செல்கின்றன. அவரதுவிடுதலைப்பயணம் இந்த குழுவை நோக்கியே செல்கிறது.

இவைகளைப் பார்க்கும்பொழுது பஞ்சாகமத்தின் இணை ஆசிரியர் மோசேயாக இல்லாவிடினும், அவர் அதன் பின்னணியிலுள்ள அதிகாரத்தைக் கொண்டவரும் (Authority Behind the Book) மறைமுகமான ஆசிரியரும் ஆவார்.

# இரண்டாம் பாடம்

## 2. தொடக்க நூல், விடுதலைப் பயண நூல் பற்றிய அறிவு

### 2.1 தொடக்க நூல்

#### 2.1.1 வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாறு பற்றிய திருவிவிலிய கண்ணோட்டம் (தொடக்க நூ 1-11 அதிகாரங்கள்)

**அறிமுகம்:-**

மனித இனத்தின் பிறப்பு, உலக ஆரம்பம் பற்றிய திருவிவிலியக் கருத்துக்கள் இந்த பாடத்தில் விபரிக்கப் படுகிறது. இது திருவிவிலியம் முழுவதற்கும் முன்னுரையாக அமைவதுடன், முதல் நூலுக்கு ‘தொடக்க நூல்’ (கிரேக்க மொழியில் “ஜெனசிஸ்”) என்னும் பெயர் பொருத்தமாக அமைகிறது. பூமி மற்றும் உலகம் முழுவதினதும் இஸ்ரயேல் மக்களினதும், மனுக்குலம் முழுவதினதும் ஆரம்பம், வளர்ச்சி என்பன இறைவனின் அழகிய திட்டத்திற்கு அமைய நடைபெறுவதாக ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட இக் கதைகளை விளங்கிக் கொள்வதில் நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள் நிறைய உள்ளன.

வரலாற்றுக்கு முற்பட்ட கால நிகழ்வுகளாக உலக ஆரம்பம் முதல் ஆபிரகாமின் அழைப்பு வரையிலான (தொடக்க நூல் 12ம் அதிகாரம்) நீண்ட காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் உள்ளன. இவை படைப்பினைக் கண்ணால் கண்ட ஒருவரின் அறிக்கை அல்ல. இது நம்பிக்கை, மனித இனத்தின் ஆரம்பம் பற்றிய ஆழமான இறையியல் கருத்தாகும். கி.மு 10ம் நூற்றாண்டளவில் தோன்றிய யாவே மரபு (J), கி.மு 8ம் நூற்றாண்டளவில் தோன்றிய எலோகிம் மரபு (E), கி.மு 6-5 ம் நூற்றாண்டளவில் தோன்றிய குரு மரபு (P) என்பனவற்றுடன் கலந்த இறையியல் கருத்தாகும்.

படைப்பு தொடர்பான ஆழமான இறையியல் கருத்துக்களை முன்வைக்கும் பொருட்டு, அக்காலத்தில் நிலவிய கதைகள், மொழிநடை போன்ற இலக்கிய அம்சங்களையும் திருவிவிலிய ஆசிரியர்கள் இணைத்துக் கொண்டனர். உலகப் படைப்பு, அழிவு, மனிதப் படைப்பு போன்ற இறையியலும், கட்டுக் கதைகளும் அக்காலத்தில் இருந்தன. மெசபொத்தேமிய இலக்கியத்தில் “எனுமா எலிஸ்”, ‘கல்கமேஷ்’ போன்ற வீர காவியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள படைப்பு, பெரு வெள்ளம் போன்ற கதைகள் இதற்கு உதாரணங்களாகும். அவ்வாறே திருவிவிலியத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்புடைய கதைகளும் இதற்கு உதாரணங்களாகும். இதனால் நாம் திருவிவிலியத்தின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்புடைய கதைகளைப் படிக்கும்போது அதன் இலக்கியப் பின்னணியை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

இதனால் இந்த இரண்டு அதிகாரங்களையும் கற்கும்போது அதில் அடங்கியுள்ள இறையியல் செய்தியை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். வரலாற்று விடயங்கள், விஞ்ஞானக் கருத்துக்களை ஆராய்தல் என்பன விவிலிய ஆசிரியரின் நோக்கம் அல்ல.

#### 2.1.2 உலகையும் மனித இனத்தையும் படைத்தல் (தொடக்க நூல் 1:1-2:25)

ஓன்றுக்கொன்று சமமான செய்திகள் மூலம் இது விபரிக்கபடுகிறது.

(I) தொடக்க நூல் 1:1 – 2:4 (குரு மரபு) (P)
(II) தொடக்க நூல் 2:4 – 25 (யாவே மரபு) (J)

ஆசிரியர்கள் தமக்கே உரித்தான வேறு பின்னணி, கண்ணோட்டத்துடன் இதனை முன்வைத்திருந்த போதிலும், இதன் மூலம் படைப்பின் செயற்பாடுகள் பற்றிய விரிவான கண்ணோட்டம் காட்டப்படுகிறது.

**படைப்பு பற்றிய முதலாம் கதை (வரலாறு) (தொநூ 1:1 – 2:4)**

இதில் வரும் படைப்பு பற்றிய விடயங்கள் தெளிவான திட்டத்திற்கமையக் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை தெரியவருகிறது. இறைவனின் வார்த்தை (கட்டளை), இறைவார்த்தை நிறைவேறுதல், படைப்பனைத்தும் நன்மையெனக் காணுதல், காலம் (நாள்) என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

மீண்டும் மீண்டும் கூறும் ஒருவித வாக்கிய அமைப்புடன் கூடியதாக விளங்குகிறது. 'ஆண்டவர் கூறினார்' 'அது அப்படியே ஆகியது' …. 'மாலை ஆனது' ….. 'காலை ஆனது' '… ஆம் நாளானது' போன்ற வசன அமைப்புக்களில் திருவழிபாட்டு நோக்கங்கள் இருப்பதைக் காணலாம்.

குரு மரபிற்கு அமைய இறைவனை அழைக்கும் பொருட்டு 'எலோகிம்' என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது. படைப்பின் ஆண்டவர் உன்னதரென்றும், சர்வ வல்லமை பொருந்தியவரெனவும் கதையின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

**விளக்கம்:**

**1. உலகப் படைப்பு**

'ஆரம்பத்தில்' என்பது, காலத்தின் அல்லது வரலாற்றின் தொடக்கத்தையும் 'வானமும், வையகமும்' என்பது மனித கண்களுக்குத் தோன்றும் உலகையும் குறிக்கிறது. இறைவன் அனைத்துலகினதும் படைப்பாளராகத் திகழ்கிறார் (1:1). புராதன உலகின் கருத்துப்படி 'வெறுமை, பாழ்நிலம்' என்பன வாழ்விற்கு அப்பாற்பட்டவை (எரே. 4:23) என்பதை அடையாளப்படுத்துகிறது.

இறைவனது படைப்பில் அனைத்திற்கும் தனித்துவமுண்டு. 'இருளில் ஒளி' 'இரவிலிருந்து பகலை' வேறுபடுத் துதல், பெயரிடுவதன் மூலம் ஒவ்வொரு படைப்பும் தனித்துவப்படுத்தப்படுவதை விளக்குகிறது. இயற்கைச் சட்டமும் படைப்புச் செயலின் ஒரு அங்கமாகும். சூரிய, சந்திரனின் செயற்பாடுகளுக்கு அமைய கால அளவு, நடவடிக்கைகள் என்பன இறை திட்டத்திற்கு அமையவே நடைபெறுகிறது.

முற்காலத்தில் சூரியன், சந்திரன் மற்றும் இயற்கை சக்திகள் கடவுளாகவே கணிக்கப்பட்டன. (எகிப்து, மெசபத்தேமியா) இவை அனைத்தும் இறைவனின் படைப்பாகக் காட்டப்படுவதானது, இறைவனின் சர்வ வல்லமையையும், ஒரே கடவுள் என்ற நிலையையும் முன்வைக்கின்றது.

**1. மனித இனத்தின் பிறப்பு**

படைப்பு செயலின் உச்ச கட்டமாக விளங்குவது ஆண், பெண் இருவரையும் படைத்தமையாகும். இந்த படைப்பின் மேன்மையும், சிறப்பும் 'நாம் மனிதரை எமது சாயலாகவும், பாவனையாகவும் படைப்போம்' என்ற பன்மைத் தன்மையில் காணப்படுகிறது. (1:26) இவ்வாறான வார்த்தைகள் ஏனைய படைப்புக்களின்போது கூறப்படாமையானது மனிதன் ஏனைய உயிரினங்களை விட மேலானவன் என்பதைக் காட்டுகிறது. பல்வேறு உயிரினங்கள் (பறவைகள், மிருகங்கள், ஊர்வன) இருந்தபோதிலும் மனிதன் என்ற ஒரு இனமே குறிப்பிடப்படுகிறது. படைப்பில் மனிதனின் செயற்பாட்டின் மூலம் மனிதன் இறைவனின் சாயலாகவும், பாவனையாகவும் படைக்கப்பட்டுள்ளான் என்பது தெரிகிறது. (1:26-28) இறைவன் உயிரினங்களின் படைப்பாள ராக செயற்படுகிறார். மனிதன் தன் செயற்பாட்டினால் உயிரினங்களின் நிலைப்பாட்டில் பங்காளனாகிறான். இறைவனின் திட்டத்தை செயற்படுத்துகிறான். இறைவனின் முதல் உரையாடல், முதல் மனிதருடன் நடைபெறுவது எத்துணை அர்த்தமிக்கது?

படைப்பின் மீது மனிதனுக்குள்ள ஆதிக்கம் அல்லது அதிகாரத்திக்குப் பரந்த கருத்து உண்டு. நிருவகித்தல் (எபிரேய மொழியில "ராதா") எனும் செயல் விவசாய மேய்ப்புப் பின்னணிக்கு அமைய 'பாதுகாத்தல்', 'வழிகாட்டுதல்', 'பராமரித்தல்' போன்ற கருத்துக்களையுடையது. அதனைக் கீழ்ப்படுத்துவது 'அதிகாரத்தைக் கைப்பற்றுவது' அல்ல. அது இறை ஆசீருடன் கொடுக்கப்படும் பொறுப்பாகும். (1:28)

ஆணும், பெண்ணும், சமமாக, மதிப்பாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது (1:27). அது சமூக வாழ்வாகும். படைப்பைப் பாதுகாத்தல் சமூகப் பொறுப்பாகும். அவர்கள் இருவரும் சமூக வாழ்வில் முக்கியமானவர்கள் என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

விவசாய பின்னணியில் காட்டப்படும் படைப்பில் அமைதியான சூழல், சிறப்பாகத் தெரியும் அங்கமாகும். இயற்கையில் காணப்படும் தாவரங்கள், உணவில் தங்கியிருப்பது பற்றிக் குறிப்பிடப்படுகின்ற போதிலும், மாமி

சத்தை உண்பதாகக் குறிப்பிட்படவில்லை. இது இயற்கையுடன் இணைந்து வாழும் முறையாகும் (எசா1:9). படைப்பின் முடிவில் இறைவன் ‘அவை நல்லதென’க் குறிப்பிடுவதிலிருந்து இது தெளிவாகிறது (1:31).

**2. படைப்பைத் தூய்மைப்படுத்தல்.**

படைப்பை ஆசீர்வதித்துத் தூய்மைப்படுத்துவதுடன் படைப்பின் செயற்பாடு நிறைவு பெறுகிறது. வெறுமையான நிலைமாறி உயிருள்ள உலகு உருப்பெற்றதுடன், இறைவனின் தூய்மையும் வெளிப்படுத்தப்படுகிறது.

இதில் ஒருவித இறைவழிபாட்டைக் காணலாம். தூய்மைப்படுத்துதல் (எபிரேய மொழியில் ‘கித்தஷ்’) இறைவழிப்பாட்டின் பின்னணியில் பெரும்பாலும் காணப்படுகிறது. சபத் நாள் எனப்படும் ஏழாம் நாள் இறைவனின் தூய்மையை ஏற்றுக் கொள்ளுதலும், அதற்குப் பங்காளராவதையும் அடையாளப்படுத்துகிறது. இதற்கு அடிப்படையாக அமைவது ‘உடன்படிக்கைத் தொடர்பாகும்’. அதாவது இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே நிலவும் ஆழமான தொடர்பு வெளிப்படுத்தப்படுகிறது (விப 19:4-5). மனித இனத்தின் அழைப்பு தூய்மையான மக்களாகுதலாகும். சபத் நாளின் அர்ப்பணிப்பின் அடிப்படை அதுவாகும்.

ஒவ்வொரு நாளும் படைப்பின் இறுதியில் இறைவன் அதனை நல்லதெனக் கண்டார். ஏழாம் நாள் அவற்றை ஒன்றினைத்து ஆசீர் வழங்கினார் (2:3). உலகம் முழுவதும் இறைவனின் ஆசீரால் நிரம்பி அழகானது. இந்த ஆசிரும், தூய்மைப்படுத்தும் செயற்பாட்டின்படி ‘சபத்’ என்பது படைப்பு செயற்பாட்டில் முடிவு அல்ல, மாறாக அதனை முன்னெடுத்துச் செல்வதாகும்.

**படைப்பு பற்றிய இரண்டாம் கதை (வரலாறு) (தொநூ 2:4-25)**

யாவே மரபு ஆசிரியரால் முன்வைக்கப்படுகின்ற இந்த விளக்கத்தில் கதை வடிவம், நாடக அமைப்பு ஆகியன உள்ளடங்கியுள்ளது. விவசாயப் பின்னணியில் தொடங்கும் இக் கதை இறைவனின் செயற்பாட்டை மானிட இயல்பில் விளக்குகிறது. (குயவன் - 2:7, விவசாயி - 2:8) பாம்பு, வாழ்வு தரும் மரம் - பண்டைய உலகில் இலக்கியத்துடன் தொடர்புடையதாக உள்ளது. இதில் படைப்பின் இறைவன் ‘யாவே’ எனும் ஆண்டவராக அறிமுகப்படுத்தப்படுகிறார்.

**விளக்கம்:**

**1.இயற்கைச் சூழல்**

யாவே மரபின் கதை முதற் கதைக்கு சமமானது, ஆனால் வேறு அமைப்பில் கதை முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. அதாவது உலகைப் படைத்தல், ஆணைப் படைத்தல், பெண்ணைப் படைத்தல், மனிதனின் வீழ்ச்சி என்பனவாகும்.

‘ஏதேன்’ தோட்டத்தின் மூலம் பழைய உலகின் செழிப்பான பின்னணி, அதன் நிலைப்பாடு என்பன விளக்கப்படுகிறது. நான்கு ஆறுகள் பற்றி விளக்கப்படுவதன் மூலம் ஏதேன் தோட்டம் முழு உலகினதும் நடுநிலையமாகக் காட்டப்படுகிறது. (சீராக். 24:25-27) யாவே இறைவன் உலகில் செயற்பாட்டை ஏதேன் தோட்டத்தை மையமாகக் கொண்டு செயற்படுவது, ஆலயத்தை மையமாகக் கொண்டு செய்யப்படும் அவரது செயற்பாட்டிற்கு சமனாகும் (எசே. 47:1-12). நீர், நிலம் ஆகியவை விவசாய சூழலில் வாழ்வின் அடிப்படைத் தேவைகளாகும். உலகினதும் வாழ்வினதும் செயற்பாட்டிற்கு ஏதேன் தோட்டம் அடிப்படையாக அமைவதை நாம் காண்கிறோம்.

**1. ஆணையும் பெண்ணையும் படைத்தல்**

இயற்கை அழகாக இருந்த பொழுதிலும் மனித உயிர்கள் இல்லையேல் அங்கே உயிரோட்டம் இல்லை. மனிதனின் பங்களிப்பினால் உலகம் வளம் பெறுகிறதென்பதை நிலத்தை பணபடுத்துவரின் செயற்பாடு காட்டுகிறது (தொநூ 2:5). இறைவன் மனிதனைப் பூமியின் மண்ணிலிருந்தே படைக்கிறார். அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, அவன் உயிருள்ளவன் ஆனான். (2:7) மனித வாழ்வு பூமியுடன் தொடர்புடையதாக விளங்குவதுடன் எபிரேய மொழியில் அதன் கருத்து சிறப்புடையதாக விளங்குகிறது.

முதலாவது கதையிலன்றி இரண்டாவது கதையில் ஆணைப் படைத்த பின்னரே பெண்ணைப் படைத்தமை குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் ஆணினதும், பெண்ணினதும் இயல்பை விளக்குவதற்கு ஆசிரியர் முன் வருகிறார். பெண் ஆணுக்குத் துணையாக இருக்க வேண்டும். துணையாக இருக்க வேண்டுமென்பது பணியாளராக அல்லது அடிமையாக இருக்க வேண்டும் என்பதல்ல. இது அந்நியோன்னிய தொடர்பாகும். (2:18)

மனிதனைப்போலவே மிருகங்களுக்கும் இத்தகைய துணையின்றி வாழ முடியாது (தொநூ. 2:20). திருவிவிலி யத்தில் துணைபுரிதல் (எபிரேய சொல் 'எசேர்') இறைவனுடன் தொடர்புறுவதைக் குறிக்கிறது (இச 33:26, வி.ப. 18:4, தி.பா. 33:20). இறைவனால் மனுக்குலத்திற்குத் தொடர்ந்தும் உதவி கிடைக்கிறது. ஆதலால் பெண் என்பவள் இறைவனால் கொடுக்கப்பட்ட உதவியாள் எனக் கொள்ளலாம். இவள் மனிதனுக்கு சமனான மனித சுபாவத்தை உடையவள் ஆவாள். மனிதனின் "விலா எலும்பிலிருந்து" உண்டாக்கப்பட்ட அவள் "தனது எலும்பின் எலும்பும் சதையின் சதையுமாக" இருப்பதை அவன் அறிகிறான் (2:22-23). ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருக்க வேண்டிய தொடர்பே இறைவனின் நோக்கமாக இருக்கிறது. ஆண், பெண் தொடர்பாக எபிரேய மொழியில் உபயோகிக்கப்படும் சொல் (ஈஷ் - ஈஷா) இதை தெளிவுபடுத்துகிறது. இது பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் ஏற்படும் தொடர்பின் இணைப்பாகவும் உள்ளது.

மனிதன் படைப்புக்கள் அனைத்திற்கும் பெயரிடுவதாகக் கதையில் கூறப்படுகிறது (2:20). பெயரிடுவதன் மூலம் படைப்பின்மீது (உயிரினங்கள்) அவனுக்குள்ள ஆதிக்கம் வெளிப்படுகிறது. எனினும் பெண் தொடர்பாக அவ்வாறு பெயரிடுதல் இல்லை. அவள் 'பெண்' என்று அழைக்கப்படுவாள் (2:23). இதன் மூலம் இருவருக்கிடையிலான சமத்துவமும், மதிப்பும் மேலும் விளக்கம் பெறுகிறது.

## 2.1.3 பாவத்தின் நிலைப்பாடு

**மனித வாழ்வும் மனித சுதந்திரமும் (தொ.நூ 3:1-24)**

இறைவன் படைத்த உலகு, அதன் இயற்கையின் பல்வகைத் தன்மையில் காணப்படும் அலங்காரம், அழகு என்பவற்றில் மிளிர்கிறது. எனினும் அது செடி, கொடிகள் நிறைந்த வனாந்தரமாக விளங்காது, மனிதனின் இருப்பிடமாக விளங்குவதே நோக்கமாகும். ஆயினும் மனித பயன்படுத்துதலையும் கடந்த, இரு மரங்கள் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. அவை 'வாழ்வு தரும் மரம்', 'நன்மை, தீமையை அறியும் மரம்' என்பனவாகும். முதலாவது மரத்தில் வாழ்வின் நிலைப்பாடு, இரண்டாம் மரத்தில் ஒழுக்கத்தின் நிலைப்பாடு ஆகியன இறைவனுடையவை என்பது இரு மரங்களையும் வேறுபடுத்துவதன் மூலம் தெளிவாக்கப்படுகிறது.

மனித வாழ்வின் விசேட இயல்பு சுதந்திரமாகும். 'முடிவெடுத்தல்' எனும் 'தேர்ந்தெடுத்தல்' மனிதனுக்கு உரிமையான கொடையாகும். மிருகங்களுக்கு அந்தத் திறன் இல்லை. உலகை ஆட்சி செய்தல் மனிதனுக்கு ஒப்படைக்கப்பட்ட சுதந்திர செயற்பாடாகும். இதனை செயற்படுத்துவதன் மூலம் இறைவனிடமிருந்து தான் பெற்ற பொறுப்பை அவன் நிறைவு செய்கிறான். 'உண்ணலாம்', 'உண்ணாதே' என்று இறைவனால் மனிதனுக் குக் கொடுக்கப்பட்ட கட்டளை மனித சுதந்திரத்துக்கு அநுகூலமாகவேயாகும். 'செய்தல்', செய்யாதிருத்தல்' ஆகிய இரண்டும் மனித சுதந்திரத்திற்கும், தெரிவு செய்வதற்கும் உள்ள உரிமையை உறுதி செய்கிறது. பாவம் மனிதனின் சுதந்திரத்தை அழிக்கிறது.

பாம்பு, பழங்காலத்தில் பல்வித கருத்துக்களுக்காக பயன்படுத்தப்பட்ட அடையாளமாகும். ஆழமான, பிரச்சனைகள் கூடிய, விளங்கிக் கொள்ள கஷ்டமான, வளம் ஆகியன அவற்றுள் சிலவாகும். இதிலிருந்து பாம்பு ஆழமான, மனதை ஈர்க்கக் கூடிய (ஆசை)யை அடையாளப்படுத்துவதாக பார்க்கிறோம்.

அனைத்து மரங்களின் கனியை உண்ணும்படியும், நன்மை, தீமை அறியும் மரத்தின் கனியை உண்ண வேண்டாமென்றும் கடவுள் ஏவாளுக்கு கட்டளையிட்டார். இது மனிதனின் சுதந்திரத்திற்கு அநுகூலமாகும். அது சுதந்திரமாக வாழ விடுவிக்கப்பட்ட அழைப்பாகும். நன்மை, தீமையை அறிதல் தவறு அல்ல, ஆனால் நன்மை, தீமையை அறிவதன் உரிமை இறைவனுக்கு மாத்திரமே உரியதாகும். இறைவனுக்கு சொந்தமான அந்த உரிமையைப் பறித்தெடுத்தல் அதாவது இறைவனுக்கு சமனாவதற்கு முயற்சித்தமை மனிதன் செய்த பாவமாகும் (3:5).

இச்செயலானது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தியமையாகும். இறைவன் அளித்த சுதந்திரத்திற்கு மாறாக செயற்பட்டமையாகும். சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமையைத் தவறாகப் பாவித்தமையாகும். இறைவனுக்கு சமனாவதற்குப் பதிலாக பசாசிற்கு சமனானமையாகும். வீழ்சியுற்ற மனிதன்மீது இறைவன் காட்டிய மனநிலை மட்டில் நமது கவனம் திருப்பப்படல் வேண்டும். அனைத்து மானிட செயற்பாடுகளும் இறைவன் முன்நிலையிலேயே நடைபெற வேண்டும். மனிதன் இறைவனிலிருந்து ஒளிந்து வாழ முயற்சித்தபோதிலும், அவர் முன்னிலையில் அனைத்து வெளிப்படையாகும் (2:10). 'இறைவன் அவர்களைக் கடந்து செல்லல்' "அவரது குரலைக் கேட்டல்" என்பன மனிதன் எந்நிலையில் செயற்பட்டாலும் இறைவன் அவனுக்கு அருகிலேயே இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது (2 சாமு. 5:24, எசே. 3:12-13).

'ஆடையின்றி இருத்தல்' என்பது மனிதனின் பலவீனத்தையும், பாதுகாப்பற்ற நிலையையும் காட்டுகிறது. பாவத்தில் விழுவதற்கு முன், இயற்கையுடன் இணைந்திருந்த மனிதனுக்கு அது தடையாக இருக்கவில்லை (2:25). அது உண்மையில் அமைதியானதும், சாந்தத்தினதும் அடையாளமாக விளங்கியது. மனிதன் தவறு செய்ததினால் அந்நிலை மாற்றமடைந்தது. இறைவனின் கேள்விக்கு விடையளிக்கும்போது ஒருவர் மற்றவர் மீது குற்றம் சுமத்தியதன் மூலம் முன்னர் இருந்த நிலை வேறுபட்டது. இறைவன் அவர்களை ஆடையால் உடுத்துவதானது பலவீனமான மனிதனுக்கு இறைபராமரிப்புக் கிடைத்ததை உணர்த்துகிறது (3:7, 3:21).

பலவீனமான மனிதனில் இறைவன் காட்டும் கருணை, நீதி, மனநிலை என்பன இக் கதை மூலம் தெளிவாகிறது. படைப்பின் கர்த்தாவின் முன்நிலையில் மனிதனின் இந்த வீழ்ச்சி, நம்பிக்கை இல்லாததொன் றல்ல. இறைவன் தண்டனை அளிப்பது, சபிப்பது என்பன பாவத்தின் விளைவாகும்.

ஆண், பெண் என்போருக்கிடையே நிலவும் சமத்துவம் (ஈஷ் - ஈஷா) மனிதனுக்கும், பூவுலகிற்கும் இடையிலான நிலைப்பாடு (ஆதாம் - ஆதாமா) என்பன இப்போது பிளவுபட்டது (3:16, 17). அதாவது மனிதனின் வீழ்ச்சி அனைத்து தொடர்பிலும் (இறைவன் - மனிதன் - இயற்கை)தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இறைவனின் சாபம் மனிதனுக்கும், பெண்ணுக்கும் மட்டுமல்ல, சர்ப்பத்திற்கும், பூமிக்குமாகும் (3:14, 17). மனித சுதந்திரத்தில் முடிவெடுத்தலுக்கு எதிராக செயற்படும் சக்திகள் இறைவனின் சாபத்திற்கு உள்ளாகும் என்பதை இது காட்டுகிறது. பூமியை பண்படுத்தல், பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் என்பன இறை ஆசிருடன் மனிதனுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பாகும். அது மனித வாழ்வின் அனுபவமாகும். எனினும் இறைவனால் வழங்கப்பட்ட சுதந்திரத்திற்கு மாறாக செயற்பட்டு சர்ப்பத்திற்கு செவிசாய்த்ததன் மூலம் மனிதனின் இந்த அனுபவம் அர்த்தமற்றதாகியுள்ளது (3:16,17- 19). இத்துடன் தொடர்புடைய களைப்பு, துன்பம், என்பன கருத்தற்ற தண்டனை என்ற உணர்வு தோன்றுகின்றது. திருவிவிலிய ஆசிரியர் பாவத்தின் உண்மை நிலை வழியாக மனிதனின் அனுபவத்தை நன்கு விளக்குகிறார்.

இந்தப் பின்னணியில் தோன்றும் நன்மையான செய்தியை நாம் கணிப்பிடக் கூடியதாக உள்ளது. அதாவது பலவீனமான மனிதனை இறைவன் பராமரித்தலாகும். இறைவன் அளிக்கும் உதவி, மதிப்பு, பாதுகாப்பு என்பன உடை அணிவிப்பதன் மூலம் அடையாளப்படுத்தப்படுகிறது. மனுக்குலத்திற்கும் அதன் சுதந்திரத்திற்கும் எதிரான தீய சக்திகளுக்குமிடையிலான போராட்டம் வெளிப்படுகிறது. (பெண்ணின் வித்திற்கும், சர்ப்பத்தின் வித்திற்கும் இடையில் 3:15) இறை திட்டத்தில் மனிதன், சுதந்திரம், சமத்துவம் என்பனவற்றை முன்னெடுத்துச் செல்லும்போது இப் போராட்டத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளான். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் விடுதலை செயற்பாடு தொடர்பான அடையாளமாகவும் இது உள்ளது.

**காயின் - ஆபேல் கதை (தொ.நூ 4:1-26)**

இக்கதை முதல் இரு அதிகாரங்களுடன் தொடர்புபட்டு அதன் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. கீழ்ப்படியாமையும் அதன் மூலம் உலகம் முழுவதும் துன்பம் பரவியமையும் இதில் காட்டப்படுகிறது. தவறினால், வீழ்ச்சியினால் மனிதன் தீமையுடன் இடைவிடாமல் போராட்டம் செய்கிறான். (தொ.நூ 3:4, 7, 15) பாவத்தினால் சகோதரத்துவம், ஒற்றுமை என்பன சிதறடிக்கப்படுகிறது. தவறினால் ஏற்பட்ட அநீதியை (ஆபேலின் மரணம்) அடிமைப்படுத்தி இறை நீதி தோன்றுவதை சேத்தின் பிறப்பு எடுத்துக்காட்டுகிறது (4:25).

இக் கதையை விளங்கிக் கொள்ளும் பொருட்டு பழைய ஏற்பாட்டின் வரலாற்றுப் பின்னணியில் வரும் விடயங்களை அறிய வேண்டுமென சில அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதன்படி பழைய ஏற்பாட்டில் மந்தை மேய்ப்பை மேற்கொண்ட கோத்திரத்திற்கும், விவசாயத்தை மேற்கொண்ட கோத்திரத்திற்கும் இடையிலான பகைமைக் காட்டப்படுகிறது. விவசாயத் தொழில், மந்தை மேய்த்தலை விட சிறப்புப் பெற்றிருந்ததாக காட்டப்படுகிறது. மந்தை மேய்க்கும் நாடோடி வாழ்க்கை ஆரம்பம் பற்றி காயீன் ஆபேலின் கதை மூலம் வெளிப்படுவதான கருத்தொன்றும் நிலவுகிறது.

கதை இவ்வாறு இருந்தபோதிலும் வரலாற்று ரீதியாக இதனை உறுதிப்படுத்துவதற்கு கதையில் அடிப்படை விடயங்கள் இல்லாதிருப்பதுடன், அவை உலகப் படைப்பை நோக்கிய வண்ணமாக அமைந்துள்ளது. மந்தை மேய்த்தல், விவசாயம், (கி.மு 10,000 த்தின் பின்) கைத்தொழில் (கி.மு 5000 த்தின் பின்) என்பன பின்னர் செயற்பாடாக காணப்படுகிறது. மேலும் 4:17 இல் வேறு இனத்தவர் வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. ஆதலால் இது வரலாற்றுக் கட்டுரைகள் அல்ல. யாவே மரபு ஆசிரியர் இறையியல் செய்தியை முன்வைக்கும் பொருட்டு உபயோகித்த கதையாகக் கொள்ளல் முக்கியமாகும்.

பாத்திரமொன்றினை மையமாகக் கொண்டு கட்டியெழுப்பப்படும் கதையில் அவதானத்தைச் செலுத்துவோம். காயின், ஆபேல் ஆகிய சகோதரர்களிடையே ஆரம்பம் முதல் வேற்றுமை காணப்படுகிறது. உ+ம்: பிறப்பு, தொழில் ஆகியன வேறுபடுதல் எதிர்ப்பு அல்ல. இருப்பினும் காயீன் அதனை எதிர்ப்பாகவே கருதுகிறார். இது அவனது சகோதரனைத் தாக்கச் செய்கிறது. இது இறைவன் மனிதனுக்கு அளித்த சுதந்திரத்தை மீறுவதாகும் (6:6-7).

ஆபேல் இறைவனின் விருப்பப்படி செயற்பட்டான். முதற் பலனை (ஆடுகளில் சில), நல்ல பகுதியை இறைவனுக்குக் காணிக்கையாக அளித்தான் (4:4). ஆனால் காயின் ஆபேலுக்கு எதிராக செயற்படுவதி லேயே தன் சுதந்திரத்தை செலவிட்டான் (4:8). "என் சகோதரனுக்கு நான் காவலாளியா?" என்று கேட்பதன் மூலம் காயின் சகோதரத்துவத்தை உதாசீனப்படுத்துகிறான்.

பழைய ஏற்பாட்டில் இரத்தம் வாழ்வின் முதன்மையாகக் கருதப்பட்டதுடன் அது இறைவனுக்கு மட்டுமே உரிய தூய பொருளாக் கருதப்பட்டது (லேவி 17:11). பலிச் சடங்குகளுக்கு அமைய இரத்தம் பீடத்தின்மீது தெளிக்கப்படுவதன் மூலம் அதன் தூய்மை வெளிப்படுகிறது. ஆதலால் மனிதக் கொலை ஒருவகையில் இறை வனுக்குரியதைப் பறித்துக் கொள்வதாகும். மறுபக்கத்தில் சகோதரத்துவத்திற்கு முரணாகச் செயற்படுவதாகும். மனச்சாட்சிக்கு எதிராகக் காயின் ஆபேலைக் கொன்றமை, இறைவனின் சித்தத்தை ஏற்காது செயற்பட்ட செயலாக அமைந்ததுடன் தன் பொறுப்பை உதறித்தள்ளிய நிலைக்கும் காயின் உட்பட்டான் (4:6-7). மோசேயின் சட்டப்படி அது மரண தண்டனைக்குரிய குற்றமாகும். அப்பாவிகளின் - துன்புறுத்தப்படுவோரின் கூக்குரல் நீதியின் இருப்பிடமான இறைவனை நோக்கிச் சென்றமையைக் காணக்கூடியதாக உள்ளது (வி.ப 3:7).

இறைவனிடமிருந்து விலகிச் செல்வதே பாவத்தின் விளைவாகும். இறைவனிடமிருந்து விலகிச் செல்லுதல், உலகிலிருந்து விலகுதல் என்பதானது காயினின் பாவத்தினால் மனித உறவில் ஏற்பட்ட விரிசல் நிலை எனக் காட்டப்படுகிறது (4:12). குறிக்கோள் இன்றி பயணிப்பவரின் அனுபவத்தை சுருக்கமாக ஒரு சாபம் - மனித உறவுகளின்றி வாழ்விற்குள் நுழைவதாகவும் காட்டப்படுகின்றது.

இறைவன் காயின்மீது வைத்த அடையாளம் தண்டனையின் அடையாளம் அல்ல. மாறாக இறை பாதுகாப்பின் அடையாளமாகும். மனித பெலவீனங்களில் இறைவனின் பாதுகாப்பு வெளிப்படுவதை திருவிவிலியத்தில் காணக்கூடியாக உள்ளது (3:12). இறை செயற்பாடுகளில் - துன்புறுத்தலுக்கு, அநீதிக்கு, பாவத்திற்கு எதிரான இறைவனின் செயற்பாடுகளுக்கு இது எடுத்துக்காட்டாகும்.

சேத்தின் பிறப்பு இக்கதை செய்திக்கு முடிவாக அமைகிறது. காயினில் எழுந்த சகோதரத்துவத்திற்கு எதிராக சவாலில் அச்சுறுத்தல்கள் வளர்ச்சியடைந்தமை, இலாமேக்கின் கதை செய்தியில் காட்டப்படுகிறது (4:23-24). எனினும் இறைவனின் செயலுக்கு எதிராக செயற்பட முடியாதுள்ளது. ஆபேலை நினைவுகூரும் முகமாகத் தோற்றம் பெற்ற சேத், சகோதரத்துவம் தொடர்பான நம்பிக்கையைக் கட்டியெழுப்புகிறான் (4:25). உண்மையான இறை வணக்கம், பலியிடல் என்பன இறை மனித தொடர்பை ஏற்படுத்துகிறது (4:26), எசாயா (6:6).

**வெள்ளப்பெருக்கு (தொநூ அதி. 6-9)**

நான்கு அதிகாரங்களில் கூறப்படும் பெரு வெள்ளம் பற்றிய கதை யாவே (J), குரு (P) மரபுகளைச் சேர்ந்ததாகும். தற்கால ஆய்வுகளின்படி பெரு வெள்ளக் கதை பண்டைய உலக இலங்கியங்களில் ஒன்றாக இருந்தமை பற்றி அறியக் கூடியதாக உள்ளது. பழைய மெசபதோமியா அல்லது பபிலோனிய பின்னணியில் தோன்றிய கில்கமேஷ், அத்ரஹாசின் போன்ற வீர காவியங்கள் இரண்டு இதற்கு எடுத்துக்காட்டாகும். திருவிவிலியத்தின் கதை அத்ரஹாசி வீர காவியத்துடன் பெரும்பாலும் தொடர்புடையதாக எழுதப்பட்டுள்ளதா கப் பல அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆதலால் பெரு வெள்ளம் தொடர்பான வரலாற்றினைப் பற்றித் தேடுவதல்ல, பெரு வெள்ளக் கதை மூலம் திருவிவிலிய ஆசிரியர் முன்வைக்கும் செய்தியை விளங்கிக் கொள்வதே முக்கியமானதாகும்.

இந்த வெள்ளப் பெருக்குக் கதையில் பொது அமைப்பைக் காணலாம். மனிதப் படைப்பு, இறை திட்டத்திற்கு எதிராக செயற்பட்டமை, தண்டனையாகப் பெரு வெள்ளம் ஏற்படல், மீண்டும் மனித இனம் முன்னேற்றம் அடைதல் போன்றவையாகும். நோவாவிக் கதை (பண்டைய வீர காவியங்களுக்கு சமனாக) நீதிமான்களுக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது. தொநூ 6-9 அதிகாரங்களில் காணப்படும் பெரு வெள்ளம் தொடர்பான கதையில் திருவிவிலிய ஆசிரியரின் இறையியல் கருத்துக்களும், அவர்களுக்கே உரிய

விசுவாசத்தை வெளிப்படுத்துதலும் சிறப்பாகத் தெரிகிறது. தொடக்க நூல் முதலாவது அதிகாரத்தில் காணப்படும் இறை திட்டம், ஆசீர்வழங்குதல் என்பன தொடர்ந்தும் நடைபெறுகிறது. (1:28 – 31, 9:1-7) மனுக்குலத்தின் பரம்பரை தொடர்பாகக் கூறப்படுவது இறை படைப்பின் செயற்பாடும், ஆசீர் வழங்குவதன் பெறுபேறும் சிறப்பாக முன்வைக்கப்படுகிறது.

**நோவாவின் சரிதையில் (பாத்திரத்தில்) வெளிப்படுத்தப்படும் உலகத் தோற்றம்**

இக்கதையில் நோவா பிரதான கதாபாத்திரமாக விளங்குகிறார். அவர் நற்குணமுடைய மனிதராக விளங்கினார் (6:9). இறைவனில் நம்பிக்கையுடையவராக இருந்தார். ‘அனைவருக்கும் மேலாக நோவா இரக்கத்தைப் பெற்றார்’ என ஆசிரியர் கூறுகிறார் (6:8).

இறை சித்தத்திற்கு மாறாக செயற்பட்ட பின்னரே உலகில் பாவம், தீமை என்பன பெருக ஆரம்பித்தன. அதன் விளைவையும், அழிவையும் யாவே மரபு ஆசிரியர் முன்வைக்கிறார் (6:5-7). வேகமாக வளர்ச்சியுற்ற சீர்கெட்டநிலையே உலகின் நிலைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைந்தது (6:11). பிற்காலத்தில் இறைவாக்கினரின் போதனைகளுக்கு செவிமடுக்காமைக்கும் இதுவே காரணமாகும். இது இறைவனின் மேன்மையையும் திட்டத்தையும் புறக்கணித்ததாக அமைந்தது (எசக்கியேல் 28:16-17).

இறைவன் நோவாவுக்கு வெளிப்படுத்திய ‘உலக அழிவு’ தொடர்பான அச்சுறுத்தலின் நோக்கம் உலகை அழிப்பதற்கு அல்ல. மாறாக மனித இனத்தால் மேற்கொள்ளப்பட்ட தீய செயல்களை உலகிலிருந்து அகற்றுவதாகும். அது ஒருவகையில் ‘தூய்மைப்படுத்தல்’ செயற்பாடாகும் (6:13). நோவாவின் கப்பல் மீண்டும் முதலாவது அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படைப்புக் கதையின்பால் எம்மைத் திருப்புகிறது. கப்பலில் நுழையும் மிருகங்கள், ஏனைய உயிரினங்களின் விபரங்கள் முதல் படைப்பின் விபரத்திற்கு சமனான உள்ளது (தொ.நூ 1:21-28). பெரு வெள்ளத்தின் பின் மீண்டும் இறைவன் புதுப்படைப்பை உருவாக்கினார் என்று இதிலிருந்து கருதப்படுகிறது. அதன்படி புதுப்படைப்பு, புது மனித இனம் என்பவற்றை இறைவன் தோற்றுவித்தார் (8:20-22). புதுப்படைப்பு இறைவனின் ஆசீரினால் உருவாகிறது (9:17). இயற்கையிலும், மனிதனிலும் உயிரும், வளர்ச்சியும் மீண்டும் ஏற்படுவதுடன், படைப்புக்களில் இறைவனின் பிரதிநிதியாக செயற்படும் பொறுப்பு மீண்டும் மனிதனிடம் ஒப்படைக்கப்படுகிறது (9:1-2). மனுக்குலத்தின் வீழ்ச்சியினால் குழப்பமடைந்து உலகினுள் மறுமலர்ச்சியை ஏற்படுத்த பெரு வெள்ளம் ஏற்பட்டது.

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உடன்படிக்கைத் தொடர்பினை நோக்குதல் முக்கியமானதாகும். பழைய ஏற்பாட்டில் மக்கள் வாழ்க்கை முறை உடன்படிக்கையின் மீதே கட்டியெழுப்பப்பட்டது (வி.ப 19:5-6, இ.ச 26:18-19). பெரு வெள்ளத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றம் உடன்படிக்கை வாழ்வின் மறுமலர்ச்சியாகும். உலகிலும், மனிதரிடையேயும் சிக்கலின்றி இருக்கும் பொருட்டு இந்த உடன்படிக்கையைப் பாதுகாத்தல் அவசியம் என்று ஆசிரியர் கண்டிப்பாகக் கூறுகிறார். வானவில் மூலம் அடையாளப்படுத்தப்படுவது மறுமலர்ச்சியடைந்த மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையிலான உடன்படிக்கைத் தொடர்பாகும் (9:13).

**பாபேல் கோபுரம் தொடர்பான கதை (தொ.நூ 11:1-9)**

இக் கதையை விளங்கிக் கொள்ளும் பொருட்டு 10வது அதிகாரத்தின் விளக்கத்தை மனதில் கொள்ள வேண்டும். நோவாவிற்கு பின்னர் வந்த பரம்பரையினரும், இனத்தினரும் உலகம் முழுவதிலும் பரவினர் (10:32). உண்மையில் அது உலகப் படைப்பின்போது இறைவனின் சித்தமாக இருந்ததுடன் (1:28) அது பல்வேறு யுகத்தில் பரவியதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது (5:1, 6:9).

மனிதன் வாழ்வதற்கு உலகம் முக்கியமானதாகும். உலகை ஆட்சி செய்வதில் மனிதனின் நிலைப்பாடு பற்றி ஆரம்ப அதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. உலகில் பல்வேறு இடங்களைப் பிரித்து அதைத் தமதாக்கிக் கொண்டு மனிதர் வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது. 10ம் அதிகாரத்தில் அக்கால புவியியல், இன, மொழி வேறுபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. சேம், காம், எப்பேத்து எனும் மூவரின் அடிப்படை புவியியல் வேறுபாடுகளைக் காணக் கூடியதாக உள்ளது.

பாபேல் கோபுரக் கதையானது, மனித பரவல் தொடர்பாக இறைவனின் திட்டத்திற்கு எதிராக மனிதன் செயற்படுவதைக் காட்டுகிறது (9:19, 10:5, 22). மறுபக்கத்தில் வானளாவிய கோபுரம் கொண்ட நகர் ஒன்றை “நமக்காக கட்டியெழுப்பி நமது பெயரை நிலை நாட்டுங்கள்” (11:4) என்ற மனிதனின் அகந்தையானது

படைப்பின் இறைவன்மீது நம்பிக்கை வைக்காமையைக் காட்டுகிறது. 'ஷினார்' எனும் பழைய பெயரால் குறிப்பிடப்படுவது, பழங்கால யூப்ரடீஸ் - தைக்ரீஸ் நதிகளுக்கடையில் தோன்றிய மெசபத்தோமியா எனும் பபிலோனியாவாகும். உயர்ந்த கோபுரத்துடனான நகர் அந்தப் பின்னணியில் விபரிக்கப்படுகிறது.

இறைதிட்டத்திற்கு எதிராக அல்லது கீழ்ப்படியாத மனித நடவடிக்கையால் அசந்த இறைத்திட்டம் மாற்ற மடைவதில்லை. இறைவனின் செயற்பாட்டால் அந்தக் கீழ்ப்படியாமையின் தன்மை மாற்றமடையும். எபிரேய மொழியில் 'குழப்பம் அடைதல்' என்ற செயல் 'பாபேல்' என்பதாகும். இறைவனின் செய்கையால் பல்வேறுபட்ட தன்மையில் மனிதனதும், உலகினதும் வளர்ச்சி தொடர்பான இறைதிட்டம் மனித பாவத்தையும் கடந்து செயற்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. இறைவனின் இந்தத் தலையீட்டினால் ஏற்படும் புதிய நிலை, ஆபிரகாமின் கீழ்ப்படிவின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

## 2.1.4 குலமுதுவர்கள் காலம்

**ஆபிரகாமின் அழைப்பு (தொநூ 12:1-6)**

தொடக்க நூலில் பன்னிரெண்டாம் அதிகாரத்தை வாசிக்கும்போது, அக்காலப்பகுதி கிறிஸ்துவிற்கு முன் 20ம் நூற்றாண்டு என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இக்காலத்தில் நாம் சந்திக்கும் மனிதர்களில் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு என்பவர்கள் முக்கியமானவர்கள், இவர்களின் பாத்திரங்கள், இறைவன் இஸ்ராயேல் மக்கள் மூலம் செயற்படுவது தொடர்பான வரலாறு காட்டப்படுகிறது.

கி.மு 20ம் நூற்றாண்டில் ஹமுராபி மன்னனின் காலத்தில் சுமேரிய பின்னணியிலான நாகரீகம் கொண்ட 'ஊர்' நகரம் அமைக்கப்பட்டுள்ளது. (இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னர் ஊர் நகரில் காணப்பட்ட கோயிலொன்றின் கோபுரம், அதற்கு அருகில் அமைந்த மாளிகைகளின் அத்திவாரங்கள், அங்கு காணப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள் என்பன தொல்பொருள் அகழ்வுகளின்போது கண்டுபிடிக்கப்பட்டு 1923ம் ஆண்டு உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது.)

அவ்வாறான வரலாற்று பின்னணியில் உருவான நகரான ஊர் நகரில் சேத்தின் பரம்பரையில் வந்த நபர் ஒருவரைப் பற்றித் தொடக்க நூலில் கூறப்படுகிறது. தெராகுவின் மகன் ஆபிரகாம் ஊர் நகரிலிருந்து ஆரான் எனுமிடத்திற்குச் சென்று குடியேறினார்.

ஒரே கடவுள் கொள்கைக்கு பழக்கப்பட்ட ஆபிரகாம் பல கடவுள் கொள்கையுடைய சமுதாயத்தில் புறக்கணிக் கப்பட்டிருக்கலாம். ஆதலால் சமய சுதந்திரத்தையும், குடும்ப முன்னேற்றத்தையும் கருதி தாம் வாழ்ந்த பிரதேசத்தை விட்டுச் செல்ல ஆபிரகாம் உந்தப்பட்டிருக்கலாம்.

ஆபிரகாமின் மனைவியான சாராய்க்கு குழந்தைகள் இல்லை. முற்கால செமித்திய மக்கள் மலடியான பெண்ணை இழிவாகக் கருதி, அவர்களை சமுதாயத்திலிருந்து புறக்கணித்தனர். தமக்குக் குழந்தைச் செல்வத்தை அருளும்படி ஆபிரகாம் தான் வழிபடும் இறைவனை அடிக்கடி வேண்டினார். அவ்வாறு தனது குடும்பத்தை இழிவாகக் கருதிப் புறக்கணிக்கும் சமுதாயத்திலிருந்து பிரிந்து செல்வது நல்லதெனக் கருதியமை அவர் புறப்பட்டுச் சென்றமைக்கான மற்றொரு காரணமாக இருக்கலாம்.

இயற்கைச் சக்திகளுக்குத் தெய்வத்துவம் அளித்த சுமேரிய சமூகத்தினர், விண்ணிற்கு அதிபதி, காற்றிற்கு அதிபதி, நீரின் அதிபதி என்று அவர்களை வணங்கியதோடு அக் கடவுளருக்குத் தேன், திராட்சை ரசம், பேரீச்சப் பலகாரம் என்பவற்றை பலி செலுத்தினர். பண்பாட்டு ரீதியில் சுமேரியர் சிறந்து விளங்கினாலும் அவர்களிடையே மனிதத்தன்மையற்ற பழக்க வழக்கங்களும் காணப்பட்டன. நர பலி, குழந்தைகள் கொலை, இறந்த அரசர்களின் பூத உடலுடன் உயிருள்ள பணிப்பெண்கள் பலரைப் புதைத்தல் என்பன அவற்றில் சிலவாகும். அது மட்டுமன்று 'மாடுக்' என்ற கடவுளுக்கு வணக்கம் செலுத்த வேண்டுமென்ற ஆணையும் இருந்தது.

**இவ்வாறான பின்னணியில் வாழ்ந்த ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்படுகிறார். திருவிவிலிய ஆசிரியர் இந்த சம்பவத்தைப் பின்வருமாறு விபரிக்கிறார்.**

*ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி, "உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல், உன்னை நான் பெரிய இனமாக்குவேன், உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன், நீயே ஆசியாக விளங்குவாய்" (தொநூ. 12:1-2).*

*தனது அறிவைவிட, இதயத்திற்கு முதலிடம் கொடுத்தே ஆபிரகாம் இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்டார். இறை அழைப்புக்கு செவிமடுத்த ஆபிரகாமுக்கு இறைவன் ஒரு செய்தியைத் தருகிறார். ''ஆபிரகாம்! அஞ்சாதே, நான் உனக்கு கேடயமாக இருப்பேன். உனக்குப் பெரும் கைமாறு கிடைக்கும்.'' (தொநூ. 15:1) என்று ஆண்டவர் கூறினார்.*

*அதற்கு ஆபிராம் ''என் தலைவராகிய ஆண்டவரே, எனக்கு என்ன தருவீர்? எனக்கோ குழந்தை இல்லை. நீர் எனக்குக் குழந்தை ஒன்றும் தராததால் என் வீட்டு அடிமை மகன் எனக்குப் பின் உரிமையாளன் ஆகப்போகிறான்'' என்றார் (தொநூ. 15: 2-3). ''இவன் உனக்குப் பின் உரிமையாளன் ஆகமாட்டான். ஆனால், உனக்குப் பிறப்பவனே உனக்குப் பின் உரிமையானள் ஆவான்'' என்று ஆபிரகாமுக்கு ஆண்டவர் கூறினார் (தொநூ. 15:4). அப்பொழுது ஆண்டவர் ஆபிரகாமை வெளியே அழைத்து வந்து, ''வானத்தை நிமிர்ந்து பார்.*

*முடியுமானால் விண்மீன்களை எண்ணிப் பார். இவற்றைப் போலவே உன் வழி மரபினரும் இருப்பர்'' என்றார் (தொ.நூ 15:5). ஆபிராம் ஆண்டவர்மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார் (தொ.நூ 15:6) அது முதல் ஆபிரகாம் 'விசுவாசத்தின் தந்தை' எனப்பட்டார்.*

*கதிரவன் மறைந்ததும் இருள் படர்ந்தது, அப்பொழுது புகைந்து கொண்டிருந்த தீச்சட்டி ஒன்றும் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றும் அந்தக் கூறுகளுக்கிடையே சென்றன. அன்றே ஆண்டவர் ஆபிராமுடன் ஓர் உடன்படிக்கை செய்து, ''எகிப்திலுள்ள ஆற்றிலிருந்து யூப்பிரதீசு பேராறு வரையுள்ள கேனியர், கெனிசியர், கத்மோனியர், இத்தியர், பெரிசியர், இராபாவியர், எமோரியர், கானானியர், கிர்காசியர், எபூசியர் ஆகியோர் வாழும் இந்நாட்டை உன் வழிமரபினருக்கு வழங்குவேன்'' என்றார் (தொநூ. 15:17-21).*

**இதுவரை முன்வைத்த விடயங்களின்படி ஆபிரகாம் பெற்ற மூவித வாக்குறுதிகளாவன:-**

1. நாட்டை உரிமையாக்கிக் கொள்ளல்
2. பெரும் இனமாதல்
3. முழு உலக மக்களுக்கும் ஆசீர்வாதமாதல்.

இறைவன் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வெளியடையாளமாக விளங்குவது விருத்ததேசனமாகும். பழங்காலத்தில் இவ்வாறான சடங்குகள் சில நாடுகளில் இருந்ததாகத் தெரிகிறது. ஆண்மகனொருவன் வயது வந்தவனாகக் கருதப்படுவதன் அடையாளமாகவே இது செய்யப்பட்டது. பிற்காலத்தில் இது சமயச் சடங்காக அங்கீகரிக்கப்பட்டது. இச்சடங்கானது தாம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட விசேட மக்கள் என்பதன் அடையாளமென இஸ்ராயேல் கருதினர். பிற இனத்தவர் இஸ்ராயேல் இனத்தின் அங்கத்தவராக வேண்டுமாயின் அவர் விருசத்தசேதனம் செய்யப்படல் வேண்டும். அன்று பின்பற்றப்பட்ட இச் சடங்கு, இன்று இறை மக்களாகக் கிறிஸ்தவர்கள் பெறும் திருமுழுக்கிற்கு முன்னடையாளமாக விளங்குகிறது.

**ஈசாக்**

சாரா மலடியாக இருந்ததால் இறைவனின் வாக்குறுதி நிறைவேறுமா என்று உறுதியாக நம்ப முடியாதிருந்தது. நம்பிக்கையின் பொருட்டு மற்றொரு சான்று தேவைப்பட்டது. சாரா தன் எண்ணப்படி செயற்பட்டு தன் அடிமைப் பெண்ணான எகிப்திய இனத்தைச் சார்ந்த ஆகார் மூலம் தனக்குப் பிள்ளை ஒன்றைப் பெற்றுத் தரும்படி கேட்டாள். இதன் விளைவாக சாரா அடிமைப் பெண்ணின் ஏளனத்துக்குட் பட்டதுடன், அடிமைப் பெண்ணையும், பிள்ளையையும் தன் வீட்டிலிருந்து துரத்திவிட வேண்டிய நிலைக்கும் உள்ளானாள்.

இறைவன் தன் வாக்குறுதியை நிறைவேற்றினார். சாரா ஆபிரகாமின் மூலம் ஒரு மகனைப் பெற்றாள், அவன் ஈசாக். ஈசாக் பிறந்த பின்னர் ஏற்பட்ட சச்சரவுகளின் விளைவாக ஆகார் தன் மகன் இஸ்மாயேலுடன் ஆபிரகாமின் வீட்டிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. (இஸ்மாயேல் அராபிய இனத்தவரின் மூதாதை எனக் கூறப்படுகிறது.)

குழந்தை வரம் கிடைத்த பின்னர் 'நன்மையின் தந்தை' என்ற கருத்தைக் கொண்டிருக்க ஆபிராம், 'இனங்களின் தந்தை' என்ற கருத்தைத் தரும் ஆபிரகாம் என அழைக்கப்பட்டார். செமித்திய மரபுப்படி ஒருவரின் பெயர் நிறைவான ஆளுமையின் அடையாளமாகும்.

ஆபிரகாமின் நம்பிக்கையை சோதிக்கும் பொருட்டு இறைவன் ஈசாக்கைத் தகனப் பலியாக ஒப்புக் கொடுக்கும்படி ஆபிரகாமைக் கேட்கிறார். ஆபிரகாம் இறைகட்டளைக்குப் பணிகிறார். எனினும் இறைவன் இறுதியில் ஆபிரகாமைத் தடுக்கிறார். *''பையன் மேல் கை வைக்காதே, அவனுக்கு எதுவும் செய்யாதே, 'உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்''* என்று ஆண்டவர் கூறினார்.

**ஈசாக்கைப் பலியிட கொண்டு சென்ற நிகழ்வின் மூலம் வெளிப்படும் செய்திகள்:-**

- அக்காலத்தில் தலைச்சன் பிள்ளைகளைப் பலியாக ஒப்புக்கொடுத்தல் வழக்கமாக இருந்தது.
- ஆபிரகாமும் அந்த வழக்கத்தை நிறைவேற்ற முன்வந்தார். ஆபிரகாம் ஈசாக்கை சாதாரண பிள்ளையா கவே கருதினார். எனினும் ஆபிரகாமின் முழு எதிர்பார்ப்பும் அவரே.
- ஆபிரகாமின் ஒரே எதிர்பார்பான அவரது மகன் ஈசாக்கை ஆண்டவர் தனக்கு பலியிடுமாறு அவரிடம் கேட்டார். ஆபிரகாமும் எவ்வித தயக்கமுமின்றி அதனை நிறைவேற்ற முன்வந்தார்.
- இறை சித்தத்தை நிறைவேற்றுவதில் ஆபிரகாம் ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறார்.
- தம் மக்களை இறைவனுக்குக் காணிக்கையாக அளிக்கும்படி இன்றும் பெற்றோர் கேட்கப்படுகின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் இன்றைய தந்தையர், தாம் முற்றாக எதிர்பார்ப்பு வைத்திருக்கும் தமது பிள்ளைகளைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளனர். இன்றைய காலத்திலே அவ்வாறு நிகழ்கிறதா என சிந்திப்போம்.
- இயேசு திருத்தூதர்களைத் தம்மிடம் அழைத்தபோது அவர்கள் அதற்குப் பதிலளித்த விதத்தைப் பற்றி சிந்திப்போம். நாமும் அவ்வாறே தீர்மானம் எடுப்போம். திருமணமான பேதுரு இறை அழைப்பை ஏற்று இயேசுவவைப் பின்பற்றியதை மனதில் கொள்வோம்.
- ஈசாக், இயேசுவுக்கு முன்னடையாளம், அவர் தந்தையின் சொல்லுக்குப் பணிந்தார். தாம் குற்றமற்றவராக இருந்தாலும் மரணத்தை நோக்கிச் செல்கிறார். இதனால் அவர் தந்தைமீது வெறுப்புக் கொள்ளவில்லை.
- சமகாலத்தில் நிகழ்த்தப்பட்ட நர பலியை இறைவன் புறக்கணிக்கிறார். ஈசாக்கைப் பற்றித் தெளிவடைந்த இறைவன் ஆபிரகாம் கொடுத்த வாக்குறுதியைப் பின்வருமாறு புதுப்பிக்கிறார்.

*''உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே. அஞ்சாதே, ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆசி வழங்கி, என் ஊழியன் ஆபிரகாமின் பொருட்டு உனது வழிமரபைப் பெருகச் செய்வேன்'' (தொ.நூ 26:24).*

குலமுதுவர்களில் அடுத்ததாகக் குறிப்பிடப்படுபவர் யாக்கோபு

**யாக்கோபு**

ஈசாக்கின் மனைவியான ரெபேக்காவும் ஆபிராமின் மனைவி சாராயைப் போல் மலடியாவாள். எனினும் இறை சித்தத்திற்கு அமைய அவள் இரட்டைப் பிள்ளைகளின் தாயானாள். அவர்களில் ஒருவன் ஏதோமியரின் தந்தையான ஏசா. மற்றவன், இஸ்ராயேலரின் குலமுதுவர்களில் ஒருவரான யாக்கோபு ஆவான்.

ஆரம்பம் முதற்கொண்டே யாக்கோபு, ஆபிரகாமைப் போன்று இறை பக்தியுடையவராக விளங்கவில்லை. தன் சகோதரனின் பசியைத் தீர்க்க உணவளித்துத் தலைச்சன் பிள்ளைக்குரிய உரிமையைப் பெற்றார். தாயின் ஆலோசனையின்படி செயற்பட்டு ஏசாவுக்கு சொந்தமான தந்தையின் ஆசீரையும் வஞ்சகமாகப் பெற்றுக் கொண்டான்.

தன் வாக்குறுதிகளை முன்னெடுத்துச் செல்ல குறையுள்ளவர்களையும், பலவீனர்களையும் இறைவன் தேர்ந் தெடுக்கிறார் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். அவர்களைத் தெரிவு செய்த பின்னர் அந்தப் பொறுப்பை சிறப்பாக நிறைவேற்ற இறையருளால் அவர்கள் நிரப்பப்படுகின்றனர். (தமது பலவீனங்களை எண்ணி பொறுப்பை ஏற்கவும், செயற்படுத்தவும் பின்வாங்கும் மக்களுக்கு இது சிறந்த வழிகாட்டலாக அமைகிறது)

இறை அழைப்புப் பற்றி உரோமையருக்குப் புனித பவுல் எழுதிய திருமுகத்தில் முன்வைக்கும் கருத்துக்களை அறிதலும் சிறப்பாகும். *''நம் மூதாதையராகிய ஈசாக்கு என்னும் ஒரே மனிதர் மூலமாக ரெபேக்கா குழந்தைகளைப் பெற்றாள். குழந்தைகள் பிறக்கு முன்பே, அவர்கள் நன்மையோ, தீமையோ செய்யும் முன்பே, ''மூத்தவன் இளையவனுக்குப் பணிந்திருப்பான்'' என்று அவருக்குச் சொல்லப்பட்டது. இதிலிருந்து கடவுள் மனிதரைத் தேர்ந்தெடுத்துத் தம் திட்டத்தை நிறைவேற்றுகிறார் என்பது தெளிவாகிறது. இத்திட்டம் மனிதர் செய்யும் செயல்களின்படியன்றி, அழைக்கும் கடவுளுடைய செயலின்படியே நிறைவேறுகிறது என்பதும் தெளிவாகின்றது'' (உரோ. 9:10 - 13).*

ஆபிரகாம் இறைவனை அறிந்த, அனுபவித்த இடம் எபிரோன் ஆகும். ஈசாக் தன் அனுபவத்தைப் பெற்ற இடம் பெயர்ஷெபாவிலாகும். அவ்வாறே யாக்கோபு தன் எதிர்காலம் தொடர்பான இறைத்திட்டத்தை உணர்ந்தது பெத்தேலிலாகும். அதன் கருத்து (பெத்தெல்) 'இறைவனின் இல்லம்' என்பதாகும்.

ஓர் இடையனாக யாக்கோபு ஆரானை நோக்கிச் செல்கையில் வழியில் இரவைக் கழிக்க வேண்டி இருந்த போது அவர் ஒரு கனவு கண்டார்.

- தரையில் ஒரு ஏணி இருந்தது, அதன் உச்சி வானம் வரையும் உயர்ந்திருந்தது.
- வானதூதர் அதில் ஏறுவதும், இறங்குவதுமாய் இருந்தனர்.
- இறைவன் அதற்கு மேலாக இருந்து யாக்கோபுவிடம் பேசி ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையை யாக்கோபு மூலம் முன்னெடுத்துச் செல்வதாக உறுதிப்படுத்தினார்.

**அவ்வுடன்படிக்கையின் மூவித பிரிவுகளாவன**

* இறைவன் இஸ்ராயேலருக்கு ஒரு நாட்டை உரிமையாக்கித் தருதல்.

* இஸ்ராயேல் எண்ணிக்கையில் பெருந்தொகையினராதல்.

* இஸ்ராயேலின் பொருட்டு உலகின் அனைத்து மக்களும் ஆசீர் பெறுதல்.

கனவில் விழித்துக் கொண்ட யாக்கோபு, உண்மையாகவே இறைவன் இங்கு இருக்கிறார் என்று பயந்து ''இதுவே இறைவனின் இல்லம், விண்ணுலகின் வாயில்'' என்றார். இதன் மூலம் நாம் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் சில உள்ளன.

**விண்ணக ஏணியும், பாபேல் கோபுரமும்**

மனிதன் தனது பலத்தினால் விண்வரையிலான உயரத்திற்கு (விண்ணிற்கு செல்வதற்கு) கட்டிடம் ஒன்றை அமைத்து இறை தொடர்பை ஏற்படுத்த முயன்ற முயற்சி தோல்வியடைந்தது. எனினும் இப்போது விண்ணிற்கும், மண்ணிற்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தப்பட்டது, அகங்காரம், தலைக்கனம், சுயநலம் நிறைந்த மனிதனால் இறைவனுடன் உறவினை எற்படுத்த முடியவில்லை. இறையன்பு, அருள் என்பவற்றின் மூலமே இறை உறவை ஏற்படுத்த முடியும் அந்நிலை உருவாகும் என்பதற்கு யாக்கோபு கண்ட விண்ணக ஏணி அடையாளமாக விளங்குகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட செய்திகள், சிங்காரத் தோட்டத்தில் கொடுக்கப்பட்ட இறைவனின் வாக்குறுதியை (பலுகிப் பெருகுதல்) இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்ளலாம். யாக்கோபு கண்ட இந்த விண்ணக ஏணி இறை இரக்கத்தினால் மனிதனுக்குக் கிடைக்கும் இறை உறவின் முன்னடையாளமாகும். அது இயேசுவையும், மரியாளையும் அடையாளப்படுத்துவதாகவும் கொள்ளலாம்.

பெத்தேலில் யாக்கோபு அனுபவ ரீரியாக கண்ட சம்பவத்தின் நினைவுச் சின்னமாக, தான் தூங்கும்போது தலைக்கு வைத்திருந்த கல்லை எடுத்து, நினைவுத் தூணாக அதை நாட்டி அதன்மேல் எண்ணெய் வார்த்தார். அது இறைவனின் செயலினதும் இறை அதிகாரத்தினதும் அடையாளமாகும்.

**யாக்கோபுவின் நேர்ச்சை (காணிக்கை)**

பெத்தேலில் யாக்கோபு இறைவனுக்கொரு நேர்ச்சை செய்தார். அதனை திருவிவிலிய எழுத்தாளர் இவ்வாறு விளக்குகிறார். ''கடவுள் என்னோடிருந்து நான் போகிற இந்த வழியில் எனக்குப் பாதுகாப்பளித்து உண்ண உணவும் உடுக்க உடையும் தந்து என் தந்தையின் வீட்டிற்கு நான் நலமுடன் திரும்பச் செய்வாராயின், ஆண்டவரே எனக்குக் கடவுளாக இருப்பார். மேலும், நான் நினைவுத் தூணாக நாட்டிய இந்தக் கல்லே கடவுளின் இல்லம் ஆகும், மேலும், நீர் எனக்குத் தரும் யாவற்றிலும் பத்தில் ஒரு பங்கு உமக்குச் செலுத்துவேன்''(தொநூ 28:20-22).

இந்த நேர்ச்சையின் காரணமாக யாக்கோபுவின் எதிர்காலம் சிறப்பாக அமைந்தது. யாக்கோபு அங்கிருந்து முன்னோக்கிச் சென்று ஆரானில் வாழ்ந்த தன் உறவினர்களிடம் வந்தான். யாக்கோபுவின் நேர்மையற்ற செயல்கள் எவ்வாறிருப்பினும் யாவே இறைவன் அவருக்குத் தேவையான அனைத்தையும் அளித்ததன் மூலம் அவன் பெரும் செல்வத்திற்கு உரிமையாளன் ஆனான். மனைவிமார் இருவர் (லேயாள், ராக்கேல்). அவர்களுடன் மேலும் இரு மனைவியர் (வேலையாட்கள்). பதினொரு ஆண் மக்கள், பல வேலையாட்கள், லாபானின் மந்தைகளில் மிகச் சிறந்தவை என்பன யாக்கோபுக்கு உரித்தாகின.

யாக்கோபு இந்த உடமைகளுடன் பதான் அராமிலிருந்து உறவினர்களிடமிருந்து தப்பிச் சென்றார். அவ்வாறு வந்து, தன்னுடன் பகைமையோடிருந்த தனது சகோதரனான ஏசாவுக்குப் பரிசுகள் பல வழங்கி அவனது மனதைத் தன்பால் ஈர்த்துக் கொண்டார்.

இதற்கிடையில் நடைபெற்ற சம்பவமொன்றை சுருக்கமாகக் கூறுவது பொருந்தும். அது யாக்கோபுவின் போராட்டமாகும். நம்பிக்கை இன்றி இருந்தபோது அவரோடு இருந்து அவருக்கு தைரியமளித்த இறைவன், செல்வத்தால் நிறைந்திருந்த வேளையில் இரவில் ஆடவர் ஒருவரின் வடிவில் அவரிடம் வந்தார், யாக்கோபு அவருடன் விடியுமட்டும் போரிட்டார். இறுதியில் அவரின் ஆசீரைப் பெற்ற பின்னரே அவரைப் போகவிட்டார். இதுவரை யாக்கோபு என அழைக்கப்பட்டவர் அது முதல் 'இஸ்ரயேல்' எனப் பெயர் பெற்றார் (தொநூ 32:24-30).

**யாக்கோபு எகிப்திற்குச் செல்லல்**

யோசேப்பின் கதையைப் பின்னணியாகக் கொண்டு யாக்கோபு எகிப்திற்குச் சென்ற விடயம் முன்வைக்கப் பட்டுள்ளது.

பார்வோன் மன்னனால் எகிப்தின் ஆளுநராக நியமிக்கப்பட்ட யோசேப்பின், சகோதரர்கள் பற்றிக் கேள்வியுற்ற பார்வோன், யோசேப்பின் தந்தையையும், குடும்பத்தினரையும் அழைத்துவரும்படி கூறினான். அவர்களது உடைமைகள் பற்றிக் கவலைப்படாது வரும்படி அறிவிக்கப்பட்டனர். எகிப்தில் செழிப்பான பிரதேசத்தை அவர்களுக்கு வழங்கும் நோக்குடனேயே அவர்களுக்கு அவ்வாறு கூறப்பட்டது.

இந்த அரச அநுசரணைப்படி யாக்கோபு தனக்குள்ள அனைத்தையும் எடுத்துக் கொண்டு தமது தந்தையின் (ஈசாக்கின்) இடமான பெயர்ஷெபாவிற்கு வந்து இறைவனுக்குப் பலி செலுத்தினார். இங்கு இறைவன் யாக்கோபுவின் எகிப்திய பயணத்திற்கு ஊக்கமளித்தார். ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீண்டும் புதுப்பித்தார்.

இவை அனைத்தும் மனிதனின் திறமையினாலோ, செயற்பாட்டினாலோ, பொருளாதாரத்தினாலோ, அரசியல் தாக்கத்தினாலோ நடப்பதல்ல, மாறாக இவை அனைத்தும் இறைவனின் செயற்பாடே என்பதை 'E' மரபின் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு எபிரேயர் எகிப்தில் மிகவும் வளம் வாய்ந்த பிரதேசமான நைல் நதிப்பள்ளத்தாக்கில் கோசேன் பகுதியில் நிலையாகக் குடியேறிய பொழுதிலும், இறைவன் கொடுக்க இருந்த வாக்களிக்கப்பட்ட பூமி இதுவல்ல. ஆனால் ஆபிரகாம், யாக்கோபு ஆகியோர் தமது ஆட்டு மந்தைகளுடன் மேய்ப்பர்களாக அலைந்து திரிந்த கானான் தேசமே அதுவாகும். எனினும் எகிப்திற்கு வந்த ஆபிரகாமின் சந்ததியினர் எகிப்தில் குடியேறி நான்கு நூற்றாண்டுகளுக்கு மேலாக அங்கு பலுகிப் பெருகியபோது இறைவனின் உடன்படிக்கையை மறந்தனர். மோசே இவர்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு செல்லும் வரையிலான காலப்பகுதி, இறைவனின் திட்டமானது உடனடியாக - கனப்பொழுதில் செயற்படுவதில்லை என்பதற்கு சான்றாக உள்ளது.

## 2.2 விடுதலைப்பயண நூல் பற்றிய அறிவு

### 2.2.1 விடுதலைப்பயண நூல் பற்றிய அறிமுகம்

நான்கு நூற்றாண்டுகள் அளவில் இஸ்ரயேலர் எகிப்தில் வாழ்ந்தார்கள். யோசேப்பு எகிப்தில் ஆளுநராக வந்தமையும், உணவுப் பஞ்சத்தின்போது யாக்கோப்பின் குடும்பத்தினர் நைல் நதிப்பகுதியில் குடியேறியமை யுமான செய்திகளைத் தொடக்க நூலின் இறுதிப் பகுதியில் காணலாம். இது வரலாற்று நிகழ்வாகும்.

கிறிஸ்துவுக்கு முன் 20ம் நூற்றாண்டளவில் செழிப்பான பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய அமோரிய ஆக்கிரமிப்பு, ஹுரிய குடிபெயர்வு என்பவற்றிற்குப்பின் ஹிக்சொஸ் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. ஹிப்சொஸ் என்ற எகிப்திய சொல்லின் கருத்து வெளிநாட்டு ஆட்சியாளர் என்பதாகும். இந்த ஆக்கிரமிப்பு எகிப்து வரை பரவியது. இவ்வாறு ஆக்கிரமிப்பாளர்களில் பெரும்பாலானோர் செமித்திய இன எபிரேயர்கள் ஆவர். யோசேப்பை எகிப்திற்கு அதிபதியாக நியமித்தவர் ஹிக்சொஸ் பார்வோன் மன்னனாவான். யாக்கோபின் பிள்ளைகள் மூலம் பரவிய மக்கள் செமித்திய இனத்தவராவர். இஸ்ரயேல் என்ற பெயரால் அறிமுகமானோர் இவர்களேயாவர். இவர்கள் எகிப்திற்கு வரும்பொழுது ஹிக்சொஸ் எனப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களான வெளிநாட்டு எபிரேயர்களும் இருந்தனர்.

கி.மு 1600ம் ஆண்டு காலப்பகுதியில் அங்கு ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியில் உள்நாட்டு ஆட்சியாளர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதன் விளைவாக ஆக்கிரமிப்பாளரான ஹிக்சொஸ் இனத்தவரை பலஸ்தீனா வரை விரட்டியடித்தனர். எனினும் எகிப்தில் கோசேன் பிரதேசத்தில் இருந்த இஸ்ராயேலரும், நாட்டின் பல பகுதிகளில் இருந்த எபிரேயரும் புதிய ஆட்சியாளருக்குத் தொல்லையாகினர். அவர்கள் வேகமாக வளர்ச்சிய டைந்ததாலும், நாட்டின் செழிப்பான பிரதேசத்தில் குடியேறி இருந்மையாலும் எபிரேயரின் தொல்லையை ஒழிப்பதற்கு புதிய ஆட்சியாளர்கள் கடும் நடவடிக்கை எடுத்தனர் அதன் விளைவாக எபிரேய அரசின் அடிமைகள் நிலைக்கு உள்ளானார்கள்.

எகிப்தில் குடியேறிய யாக்கோபுவின் சந்ததியினர் பலுகிப் பெருகினர். ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அவர்கள் வெளிநாட்டில் குடியேறியிருந்தபோதிலும் அவர்களுக்கே உரிய அடையாளத்து டன் வாழ்ந்தனர். எகிப்தியர்களை விட அவர்களின் நிலை வேறுபட்டது. அவர்கள் ஒரே கோத்திர மக்களாக வாழ்ந்தனர் (குழு – குடும்பம்). அவர்களது நம்பிக்கை எகிப்தியரைவிட வேறுபட்டது. அவர்களது மொழி வேறுபட்டது. எனினும் எகிப்தில் இருந்த காலத்தில் ஒரே மக்களினமாக அவர்கள் அடைந்த பலன்கள் பல. பிற்காலத்தில் பெரும் இனமாக விளங்க இருந்த இவர்களை எதிர்காலத்திற்கு ஆயத்தம் செய்த இறைதிட்டத்தின் ஒரு பகுதியாக இதனைக் கொள்ளலாம்.

உலக வரலாற்று விபரங்களின்படி எகிப்தின் சிறப்பான யுகமாக இக் காலப்பகுதி கருதப்படுகிறது. கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இலக்கியம், வணிகம், போர் என்பவற்றில் எகிப்து உயர் நிலையை அடைந்திருந்தது. எகிப்தியரின் கலைகள் தொடர்பாக இஸ்ராயேலர் நிறைந்த அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர். எனினும் அவர்கள் அடிமைகளாக்கப்பட்ட பின்னர் எகிப்து அவர்களுக்குத் தொடர்ந்து வாழத்தகுதியுடையதாக இருக்கவில்லை. அது இப்போது அடிமை நாடு என அழைக்கப்படுகிறது.

விடுதலைப்பயணம் என்பது அடிமைத்தன நாட்டிலிருந்து விடுதலை பெற்றுச் செல்வதாகும். இந் நிகழ்வு இஸ்ராயேல் வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும். இறைவன் மிகவும் வல்லமையுடன் கடலைப் பிரியச் செய்து மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் சென்றார். பழைய ஏற்பாட்டில் மைய நிகழ்ச்சியாக விளங்குவது விடுதலைப் பயணமாகும். இதன் மூலம் இறைவன்மீது பயபக்தியை ஏற்படுத்துவதே ஆசிரியரின் நோக்கமாகும். வாழ்வின் கசப்பான அனுபவம் வழியாக இறைவனின் அதியுயர் அன்பைக் கண்டுணர கொடுக்கப்பட்ட அனுபவமாகும். இவ் விடுதலைப் பயணமானது இன்று சில சமூகவாதிகள் கூறுவதுபோன்று இவ்வுலகத் துன்ப வேதனைகளைப் பொறுமையுடன் அனுபவித்து மரணத்தின் பின்னர் விண்ணுலகை அடையலாம் என்ற கருத்தல்ல, உண்மையான மானிட விடுதலை என்பது அரசியல், பொருளாதார அடிமைத்தனத்திலிருந்து மட்டும் விடுதலை பெறுதலும் அல்ல என்பதைக் காட்டும் சிறந்த நிகழ்வாகும்.

விடுதலைப் பயணம் நிகழும் காலம் ஆபிரகாம் வாழ்ந்த காலத்திலிருந்து ஐந்நூறு ஆண்டுகள் கழிந்திருந்தது. ஆபிராமின் பரம்பரையினர் நானூறு ஆண்டுகள் அளவில் எகிப்தில் இருந்தபோது அவர்களுக்கு உரிய நாடு எகிப்து அல்ல என்பதைக் கூட அவர்கள் மறந்த நிலையில் இருந்தனர். எனினும் இறைவனின்

திட்டம் ஆச்சரியமானது. யாவே இறைவன் தன் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார்.

### 2.2.2 விடுதலைப்பயணம் (1:2-22) எகிப்தின் அடிமைத்தனம்

யோசேப்பு எகிப்திலிருந்த காலப்பகுதியில் யாக்கோபுவுடனும் தத்தமது குடும்பத்தாரோடும் கோசேன் பிரதேசத்திற்கு வந்தோர் விபரமாவது:- ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன், பெஞ்சமின், தாண், நப்தலி, காத்து, ஆசேர் ஆவர். யாக்கோபின் வழிவந்த இவர்கள் அனைவரும் மொத்தம் எழுபது பேர் ஆவர் (விப 1:1-5). பிற்காலத்தில் இந்த மக்கள் பலுகிப் பெருகிப் பலம் வாய்ந்தவர்களானதுடன் அவர்களால் நாடு நிரம்பியது. இம் மக்கள் அந்நாட்டிற்கு அச்சுறுத்தலாகும் நிலையை அடைந்தனர்.

அக்காலத்தில் யோசேப்பைப் பற்றி ஒன்றும் அறியாத புதிய அரசன் (உள்நாட்டு ஆட்சியாளன்) இந்த வெளிநாட்டினர் தொடர்பாக கடுமையான கொள்கையைக் கடைப்பிடித்தான். இனவாதியான முதலாம் ஆக்மோன் என்ற எகிப்திய மன்னனின் மனதில் வெளிநாட்டு ஆட்சியாளர் தொடர்பாக அடைப்பட்டுக் கிடந்த பகைமைக்கு இஸ்ராயேலர் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர்கள் இஸ்ராயேலரை அடிமைகளாக்கி அவர்களிடம் வேலை வாங்கினார்கள். இஸ்ராயேலரின் உழைப்பை ரம்சேஸ் போன்ற நகரங்களை அமைப்பதற்கு உபயோகப்படுத்தினர். அதன் பொருட்டு கடினமான சாந்து செங்கல் வேலையாலும், அனைத்து வயல்வெளி வேலையாலும் மேலும் கொடுமைப்படுத்தினர். அதுமட்டுமன்றி அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளையும் கொன்றுவிடும்படி மருத்துவப் பெண்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எனினும் சிப்ரா, பூபா என்ற மருத்துவப் பெண்கள் அரச ஆணையை செயற்படுத்தவில்லை. அவர்கள் கடவுளுக்கு அஞ்சியிருந்ததால் அவ்வாறு செய்யவில்லை.

வரலாற்றில் சிறந்த ஆட்சிக் காலம் எனப்படும் காலகட்டத்தில் வாழ்ந்த ஆட்சியாளர்கள் பற்றி பொதுவாக கூறப்படுமேயொழிய அவர்களால் துன்பத்திற்கு உள்ளாகும் மக்கள் பற்றிக் கூறப்படுவது மிகவும் குறைவாகும். எனினும் திருவிவிலிய ஆசிரியர், இந்தத் துன்புறும் மக்களைப் பற்றிக் கூறியுள்ளார். துன்புறும் மக்கள்பால் சார்ந்திருந்த மருத்துவப் பெண்களுக்கு இறைவனின் கருணை கிடைத்தது. அவர்களது குடும்பங்களை ஆண்டவர் தழைக்கச் செய்தார். தனது ஆணை சரியாக செயற்படுத்தப்படாமையைக் கண்ட பார்வோன் தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆணை விடுத்து, பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்து விடுமாறும், பெண் மகவை வாழ விடுமாறும் கூறினான்.

அடிமை நாட்டில் அமைகளாக நூற்றாண்டுகள் அளவில் இஸ்ரயேலர் வாழ்ந்த வாழ்க்கை இறைவனின் மீட்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இஸ்ராயேல் எகிப்தில் அடிமைகளாக வேலை செய்ததன் மூலம் எகிப்திய பழங் கலைகளைக் கற்றுக் கொண்டனர். நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, முறையான அரசின் வல்லமையை அநுபவ ரீதியாகக் கண்டனர். விவசாய, நீர்ப்பாசனத் தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொண்டனர். அவ்வாறே எகிப்தில் நிலவிய பல கடவுள் கொள்கைக்கும் நம்பிக்கைக்கும் சில இஸ்ராயேலர் உட்பட்டிருக்கலாம். அதன் மூலம் அவர்களது ஒரே கடவுள் கொள்கை பாதிக்கப்பட்டிருக்கலாம்.

### 2.2.3 மோசேயின் அழைப்பு (வி.ப 3:1-4:17)

பார்வோனின் மரண அச்சுறுத்தலுக்கு உட்படாது ஒரு எபிரேயக் குழந்தை காப்பாற்றப்பட்டது. அக்குழந்தை மோசே ஆவார். இறைவனின் பிரதிநிதியாக செயற்பட்டவர் அவரே. உடன்படிக்கையின் நடுவரும் அவரே. அவர் யாக்கோபுவின் பன்னிரு கோத்திரத்தில் லேவியின் கோத்திரத்தைச் சேர்ந்தவராவார். எனினும் அவர் சிறு குழந்தை முதல் இளைஞராக வளரும் வரை பார்வோனின் அரச மாளிகையிலேயே வளர்ந்தார். அங்கு அவர் பல கலைகளையும் கற்றார். கட்டிடக் கலைகளையும் சட்டத்தையும் கற்றார். எதிர்கால தலைமைத்துவத்திற்கான அனைத்தையும் கற்று முதிர்ச்சி நிலையை அடைந்தார்.

மோசே பார்வோனின் மாளிகையில் வளர்ந்த போதிலும் தனது எபிரேய உறவினர்களைப் பற்றி அடிக்கடி விழிப்பாக இருந்தார். தானும் எபிரேயர் என்ற மனநிலையில் இருந்தார். ஒரு நாள் தம் இனத்தவனான எபிரேயன் ஒருவனை எகிப்தியன் ஒருவன் அடிப்பதைக் கண்டு அவர் செயற்பட்டவிதம் இதனைத் தெளிவு படுத்துகிறது. இரகசியமாகச் செய்த இக் கொலை தொடர்பான செய்தி அரசனை சென்றடையும் என்று பயந்த அவர், மிதியானுக்குத் தப்பியோடினார். மிதியான் தேசம் சீனாய்க் குடா நாட்டின் ஒரு பகுதியாகும். அதனை மிதியான் நாட்டு இடையர்கள் ஆட்சி செய்தனர். மோசே மிதியானின் அர்ச்சகரான இத்திரோவின் மகளைத் திருமணம் செய்து அங்கு வாழ்ந்தார். எனினும் எகிப்தில் தன் மக்கள் படும் துன்பங்களைப் பற்றி அடிக்கடி நினைவுகூருவார். அவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என அடிக்கடி எண்ணுவார். மிதியான்

நாட்டில் ஒரு மேய்ப்பனாக அலைந்து புற்றரைகளைத் தேடிச் சென்றதன் மூலம் பெற்ற அனுபவங்கள் எதிர்காலத்தில் மக்களைப் பாதுகாத்து வழிநடத்தக் கிடைக்கப் பெற்ற பயிற்சியாக விளங்கியது.

எகிப்தில் துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களின் வேண்டுதலுக்கு இறைவன் செவிசாய்க்கும் காலம் வந்தது. ஒரேப் மலையில் முட்புதரின் நடுவில் தீப்பிழம்பில் இறைவன் மோசேக்குக் காட்சி தந்தார். இந்த அற்புதக் காட்சியைக் காணச் சென்ற மோசேக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

*''இங்கே அணுகி வராதே, உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு, ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கும் இந்த இடம் புனிதமான நிலம்''*

இறைவன் இருக்கும் இடத்தை அடைய மோசே லௌகீகத்தை விடுத்துத் தூய்மை அடைய வேண்டும். லௌகீகத்தில் இருந்து கொண்டு இறைவனை அடைய முடியாது. பிதாபிதாக்களின் இறைவன் தம்மை அழைப்பதை உணர்ந்த மோசே தன் முகத்தை மூடிக் கொண்டார்.

**மோசே பெற்ற இறை வெளிப்பாடுகளின் மூலம் நாம் அறிந்துகொள்ள வேண்டியவை**

- மனிதர் துன்பத்திற்கும் வேதனைக்கும் உள்ளாகி இருக்கும்போது இறைவன் தூரத்தில் இருப்பதில்லை.
- இறைவன் தம் செயற்பாடுகளின் மூலமே தம்மை வெளிப்படுத்துகிறார்.
- அச் செயற்பாடுகள் வரலாற்று நிகழ்வாகும். விடுதலைப்பயண நூல் ஆசிரியர் இதனை விசேட மொழி நடையில் வெளிப்படுத்துகிறார்.
- என் மக்கள் படும் துன்பத்தை நான் கண்டேன்.
- அடிமை மேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்.
- அவர்களின் துயரங்களை நான் அறிவேன்.
- அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும், தேனும் பொழியும் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்.

என்பன அவற்றிற்கான எடுத்துக் காட்டுகளாகும்.

**இறைவனின் பெயரை வெளிப்படுத்துதல்**

''ஆபிரகாமின் கடவுளும் ஈசாக்கின் கடவுளும், யாக்கோபின் கடவுளும் நானே'' என்று கூறிய இறைவன் குலமுதுவர்கள் எப் பெயரால் தம்மை விளித்தாலும் அவர்கள் அனைவரும் வணங்கியது தன்னையே என்பதைக் காட்டினார். ''இருக்கின்றவர் நானே'' என்றார். இவ்வாறு கூறிய இறைவன் மோசேக்கு அவரின் பணி என்ன என்று விளக்கி, ''நான் உன்னோடு இருப்பேன்'' என்று தெளிவுபடுத்தினார்.

*''நான் உன்னோடு இருப்பேன்''* என்ற இறைவெளிப்பாடு சிறப்பான பணியின் பொருட்டு அழைக்கப்பட்டோருக்குக் கிடைத்ததென்பதை விவிலியத்தில் பல இடங்களில் காணலாம்.

*''இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்'' (மத். 28:20)*
*ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்.'' (லூக். 1:28)*

தமது பலவீனத்தை அறிந்த மோசே, இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு செல்வதற்கு முன்வராதிருக்கப் பல காரணங்களை முன்வைத்த போதிலும் இறுதியில் இறைவனின் தீர்மானத்திற்கு இணங்கினார். பார்வோனின் மனம் மோசேமீது திரும்புப்படி இறைவன் அவருக்கு புதுமைகள் செய்யும் அதிகாரத்தை வழங்கினார்.

## 2.2.4 விடுதலை

**(அ) விடுதலைக்காக நடுநிலைமை வகித்தல் (வி.ப 7:14-11:10)**

மோசே இறைவனின் சித்தத்திற்கேற்ப தனது சகோதரனான ஆரோனையும் அழைத்துக் கொண்டு எகிப்திலிருந்த இஸ்ரயேல் மக்களிடம் சென்றார். அம் மக்கள் மிகவும் அன்புடன் அவர்களை வரவேற்றனர். அவர்கள் இருவரும் பார்வோனிடம் சென்று தமது முக்கிய தேவையை முன்வைத்தனர். அதாவது இஸ்ராயேல் மக்களை அவரது நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு அனுமதி வேண்டினர்.

எனினும் பார்வோன் இந்த வேண்டுதலை நிராகரித்தார். கொள்ளை நோயால் (7:1-11, 11:10) நாட்டின் மந்திரவாதிகளின் வல்லமை வீழ்ச்சியுற்று இறைவனின் கரம் ஓங்குவதை மக்கள் கண்டனர். பார்வோன்

மக்களை விடுவிக்க முதலில் விரும்பினாலும் பின்னர் மீண்டும் நிராகரித்தார். தனது நாட்டின் தொழிலுக்கு இஸ்ராயேலரின் உழைப்பு அவசியம் என்பதே அதற்கான காரணமாகும். எனினும் இறுதி நிகழ்வு (தலைச்சன் பிள்ளை மரணம்) தீர்மானம் எடுக்க வேண்டிய நிலைமையை உருவாக்கியது.

அழிவின் தூதர் எகிப்தின் அனைத்து தலைச்சன் பிள்ளைகளையும் கொன்றார். பார்வோனின் தலைச்சன் பிள்ளையும் அதில் அடங்கும். இஸ்ரயேல் வீடுகளின் கதவின் மேல் சட்டத்திலும், இரு நிலைக்கால்களிலும் இரத்தத்தைக் கண்டதால் அழிவின் தூதர் அதனைக் கடந்து சென்றார் (பாஸ்கா). இச்சம்பவத்தினால் பார்வோனின் மனம் மாற்றமடைந்தது. அவன் மோசேயின் வேண்டுதலுக்கு இடமளித்தான்.

**எகிப்தில் ஏற்பட்ட கொள்ளை நோய் தொடர்பாக நாம் கருத்திற்கொள்ள வேண்டியவை:**

1. இந்த கொள்ளை நோய் உண்மையில் எகிப்தியருக்குத் துன்பம் விளைவிப்பதாக அமைந்ததா?
2. அவைகள் இயற்கை நிகழ்வுகளா? அவ்வாறாயின் இந்த அனார்த்தங்கள் இறைவனின் தண்டனை எனக் கொள்ளலாமா?
3. பார்வோன் எடுத்த பிடிவாதமான தீர்மானத்தால் எகிப்திய மக்கள் அனைவருக்கும் தண்டனை வழங்கியது நீதியான செயலா?

முதலாவது நிகழ்வை நோக்கின், சில சமயங்களில் இது எகிப்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களாக இருக்கலாம். எனினும் நேரகாலத்துடன் இது மோசேயினால் அறிவிக்கப்பட்டு விசேட சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தமையே இதன் சிறப்பம்சமாகும்.

இரண்டாவது நிகழ்வை நோக்கின், இவை இயற்கை நிகழ்வாக இருந்த போதிலும் அவை ஒரு வகையில் காலத்தின் அறிகுறியாக இருக்கலாம். ஆட்சியாளர் இந்த அடையாளங்களை விளக்கி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவது நிகழ்வைப் பார்க்கும்போது, விவிலிய ஆசிரியர் இதனை முன்வைக்கும் காலத்தில் நிலவிய சமகால பண்பாட்டுப் பின்னணியை மறக்க முடியாது. ஆசிரியரின் கருத்தின்படி எகிப்து இறைவனுக்கு எதிரான நாடு. அவ்வாறே பார்வோன் இறைவனின் பகைவன். ஆதலால் நாடு முழுவதற்கும் தண்டனை வழங்கியது நீதியான செயலாகும். விவசாயத் தொழிலாளிகளான நாட்டு மக்கள் இதற்கு விதிவிலக்கல்ல.

**(ஆ) பாஸ்கா விழாவும் விடுதலைப்பயணமும் (விப 12:1-14:31)**

விடுதலைப்பயணத்தை ஆசிரியர் அதன் இஸ்ரயேலரின் வீர காவியமாகவே முன்வைக்கிறார். விடுதலைப் பயண நூலில் காணப்படும் பாஸ்கா சடங்குகளை ஒத்த சம்பிரதாய சடங்குகள், எபிரேயர் எகிப்துக்கு வரும் முன்னர் நாடோடி இடையர்களாக அலைந்து திரியும்போது நடைபெற்றன. அவர்கள் வசந்த காலத்தில் முதல் முறை நிலவைக் கண்டபோது இந்தச் சடங்கை நிகழ்த்தினர். இஸ்ராயேல் எகிப்திய அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை பெற்றுச் செல்வத்திற்கு முன்னர் நிகழ்த்தியது இந்தச் சடங்கேயாகும்.

- குறைபாடற்ற கிடாயான ஆட்டைத் தெரிவு செய்தல்.
- அந்த மாதத்தின் 14 நாள் வரை அதனை வைத்துப் பேணுதல். அன்று மாலை அதனை வெட்டுதல்.
- அதன் இரத்தத்தில் சிறிதளவு எடுத்து, வீடுகளின் இரு கதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் பூசுதல்.
- நெருப்பில் அதன் மாமிசத்தை வாட்டி, புளிப்பற்ற அப்பத்தோடும், கசப்புக் கீரையோடும் உண்ணுதல்.
- எஞ்சியிருப்பதை நெருப்பால் சுட்டெரித்தல்.
- மக்கள் எகிப்திலிருந்து வெளியேறிச் செல்லும் நாளைத் திருநாளாகக் கொண்டாடுதல்.
- இதனைத் தலைமுறை தோறும் கொண்டாடுதல்.

**இவ்விடயங்கள் மட்டில் கவனம் செலுத்த வேண்டும்.**

எகிப்தியர்களிடம் பெற்ற அனைத்து செல்வங்களையும் சேகரித்துக் கொண்டு இஸ்ரயேலர் அந்த இரவில் புறப்பட்டு இராம்சேஸ் நகரிலிருந்து சுக்கோத்து நகர் வரை பயணித்தனர். ஆசிரியர் குறிப்பிடுவதற்கமைய பிள்ளைகளும், பெண்களும் தவிர்ந்த நடந்து சென்ற ஆண்களின் தொகை ஆறு இலட்சமாகும். இந்தப் பெருந்தொகையான இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் குடியேறி 430 ஆண்டுகளில் பலுகிப் பெருகிய வர்களேயாவர்.

எழுத்தாளர் இதனை சிறப்பாக கவிதை நடையில் முன்வைத்துள்ளார். வாசிப்போருக்கு இரசனையாக இருக்க வேண்டுமென்பதே அவரது நோக்கமாகும். அவ்வாறு செய்வதற்கு அவருக்கு சுதந்திரமுண்டு. விடுதலைப்

பயண நூலில் பல்வேறு சம்பவங்கள், எண்கள் என்பன காவிய மரபுகளுக்கு அமைய முன்வைக்கப் பட்டுள்ளன என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். பின்வரும் விடயங்களை அவதானிப்போம்.

- கோசேன் பிரதேசத்தில் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்வதற்கு இடமுண்டா?
- இவ்வாறான பெருந்தொகையான மக்களுக்குப் பணிபுரிய இரண்டு மருத்துவப் பெண்களே இருந்தனர்.

**செங்கடலைக் கடத்தல்:**
இறைவன் மக்களைப் பாலைநிலச் சுற்று வழியாக செங்கடலுக்குப் போகச் செய்தார் என்று கூறப்படுகிறது (வி.ப 13:18). வேறு சொல்லில் கூறுவதனால் அவர்கள் இராம்சேஸ் நகரிலிருந்து புறப்பட்டு, தற்போதைய சுயெஸ் கால்வாய் ஓரத்தில் இருக்கும் காட்டுப் பகுதியை அடைந்தனர். இங்கு செங்கடல் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகிறது. ஆசிரியர் கூறும் விபரத்தின்படி இஸ்ராயேலரால் செங்கடல் பக்கம் போக முடியாது. செங்கடல் அவர்கள் சென்ற பாதையில் இருந்து வெகு தூரத்தில் உள்ளது.

- மத்திய தரைக் கடலுக்கு அருகிலுள்ள சிர்போனிஸ் ஏரிப் பகுதியை நோக்கி அவர்கள் பயணித்திருக்கலாம் என சிலர் கூறுகின்றனர்.
- டில்ஷா ஏரிப் பகுதியில் சதுப்பு நிலத்திற்கு வந்திருக்கலாம் என்பது வேறு சிலரின் கருத்தாகும்.
- செங்கடல் என்ற மொழி பெயர்ப்பு ஒரு எபிரேய சொல்லாகும். அதன் உண்மையான பொருள் மேற்கு பபிரஸ் கடல் என்பதாகும்.

எவ்வாறெனினும் எகிப்திலிருந்து புறப்பட்ட மக்கள் செங்கடல் போன்ற பரந்த நீர்ப்பரப்பைக் கடந்தனர் என்று எண்ணுவது கடினம். ஆதலால் ஏரிப் பகுதியில் ஏற்பட்ட பெருக்கு, வற்றுதல் தொடர்பான சம்பவமாக இருக்கலாம் என சிலர் கருதுகின்றனர்.

நாட்டைவிட்டுச் சென்ற மக்கள் தேச எல்லையைக் கடந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும், அவர்கள் பாலைவனத்தில் நடமாடுவதாகவும் கேள்வியுற்ற பார்வோன் மன்னன் போர் இரதங்களால் மிக எளிதாகத் தன்னால் இஸ்ராயேலரைப் பிடிக்க முடியுமென எண்ணி, அவர்களைப் பிடிக்க விரைவாக வந்தான். எனினும் செங்கடல் நிலைமை வேறுவிதமாகியது.

இஸ்ரயேலர் இறையருளால் நீரைத் தாண்டி அடிமை நாட்டினின்று முழுமையாக விடுதலைப் பெற்றனர். அவர்கள் பகைவர்கள் அந்த நீரினாலேயே அழிவுற்றனர். ஒரே நீர்குமியலால் அடிமைத்தளை அழிவுறு வதையும், விடுதலையின் வல்லமை முன் நிற்பதையும் மக்கள் அனுபவரீதியாகக் கண்டனர். இது ஒருவகை யில் நாம் பெறும் திருமுழுக்கு எனும் அருளடையாளத்தின் முன்னடையாளமாகத் திகழ்கிறது எனக் கூறலாம். நாம் பெறும் திருமுழுக்கின்போது பயன்படுத்தப்படும் நீர் பாவத்தின் வீழ்ச்சியையும், இறை வாழ்வையும் அடையாளப்படுத்துகிறது. இது தொடர்பாகப் புனித பவுல் இவ்வாறு கூறுகிறார்:-

‘‘சகோதர, சகோதரிகளே நீங்கள் ஒன்றை அறிந்திருக்க வேண்டும் என விரும்புகின்றேன். நம் முன்னோர் அனைவரும் மேகத்தின் கீழ் வழி நடந்தனர். அவர்கள் அனைவரும் மோசேயோடு இணைந்திருக்கும்படி, மேகத்தாலும், கடலாலும் திருமுழுக்குப் பெற்றனர். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மீக உணவை உண்டனர். அவர்கள் அனைவரும் ஒரே ஆன்மீகப் பானத்தைப் பருகினர். தங்களைப் பின் தொடர்ந்து வந்த ஆன்மீகப் பாறையிலிருந்து அவர்கள் பருகினார்கள். கிறிஸ்துவே அப்பாறை, அப்படியிருந்தும், அவர்களில் பெரும்பான்மையோர் கடவுளுக்கு உகந்தவராய் இருக்கவில்லை. பாலைநிலத்திலேயே அவர்கள் கொல்லப்பட்டார்கள் (1கொரி. 10:1-5).

**(இ) பாலைவனத்தில் இறை பராமரிப்பு (வி.ப 16:1-17:7)**
அடிமை நாட்டிலிருந்து விடுதலை பெற்று வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்கையில், வழியில் பாலை வனத்தில் இறை பராமரிப்பை அனுபவித்ததை எழுத்தாளர் குறிப்பிடுகிறார்.

பாலைவனத்தில் உணவு, நீர் என்பன பெற்றுக் கொள்ளுதல் கடினம், எகிப்தில் அடிமைகளாக வேலை செய்த பொழுதிலும், அவர்களுக்கு அங்கு உண்ண உணவும், குடிக்க நீரும் கிடைத்தது. சிலர் தமது தன்மானமான சுதந்திரத்தைவிட உணவு, நீர் என்பவற்றைப் பெரிதாக மதித்ததால் அவை பாலைவனத்தில் குறைவுற்றபோது முறுமுறுத்தனர். இறைவன் இம் மக்கள்மீது இரக்கம் காட்டினார். அவர்களுக்கு உணவும், நீரும் கிடைக்கச் செய்தார்.

மன்னாவும், காடையும் தந்து அவர்களைப் போஷித்ததன் மூலமும், பாறையிலிருந்து நீர் கிடைக்கச் செய்ததன் மூலமும் மக்கள் இறைவனின் அன்பைக் கண்டனர். வாழ்வின் ஒளியான சந்தர்ப்பத்தில் மட்டுமல்ல இருளான சந்தர்ப்பதிலும் இறைவன் அவர்களுடன் இருப்பதை அவர்கள் உணர்ந்தனர்.

சில அறிஞர்களின் கருத்தின்படி பாலைவனத்தில் இவ்வாறான சம்பவங்கள் இயற்கை நிகழ்வுகளாகும். (படைப்பின் மூலம் படைத்தவரின் அன்பு வெளிப்படுத்தப்படுவது இதன் மூலம் வெளிப்படுகிறது)

மன்னா என்பது சீன் பாலைவனத்தில் எஷேல் புற்றைகளில் இளம் தளிர்களின் சாரத்தை உறிஞ்சும் சிறிய பூச்சிகளால் உருவாக்கப்பட்ட இனிப்பான ஒட்டக் கூடிய திரவமாக இருக்கலாம். இது அராபிய மக்களால் இறைச்சி எனப்பட்டது. மன்னா என்பது தேன் கலந்து ஆக்கிய பலகாரம் போன்றது.

‘‘இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து, அப்பம் உண்டு நிறைவடைந்து, எகிப்து நாட்டிலேயே ஆண்டவர் கையால் நாங்கள் இறந்திருந்தால் எத்துணை நலமாயிருந்திருக்கும். ஆனால் இந்த கூட்டத்தினர் அனைவரும் பசியால் மாண்டு போகவோ இப்பாலை நிலத்திற்குள் நீங்கள் எங்களைக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்,’’ என மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராக முறுமுறுத்தவர்களுக்கு வேண்டிய அளவு மன்னாவும், காடையும் கிடைத்தன என ஆசிரியர் கூறுகிறார்.

வசந்த காலத்தில் ஆயிரக்கணக்கான காடைகள் கூட்டமாக இப் பகுதிக்கு வருவது சாதாரண நிகழ்வாகும். அவைகள் களைப்படைந்திருப்பதாலும், சில சமயங்களில் மணல், சுழற்காற்று என்பவற்றிற்கு அகப்பட்டிருப்பதாலும் எளிதில் அவைகளைப் பிடித்துக் கொள்ள முடியும்.

இந்த நிகழ்வின்படி இறைவன் அவர்களுக்குத் தினமும் தேவையான உணவை அளித்துப் பாதுகாக்கிறார் என்பதே இஸ்ராயேலின் நம்பிக்கையாகும். எனினும் ஆரம்பத்தில் இவர்கள் இதனை உணரவில்லை.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் இன்று நாம் பெறும் செய்தி என்ன? எமது அன்றாட உணவு இறைவனி டமிருந்து கிடைக்கிறதென்பதையும், துன்ப வழியில் செல்வதற்கு எம்மை அழைத்துள்ள சகல சந்தர்ப் பங்களிலும் இறைவன் நமக்கு துணைபுரிந்து, வழிகாட்டி நமது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்கிறார் என்பதும் ஆகும். இணைச்சட்டம் 8:3 வாசிப்பதன் மூலம் இதனை நாம் அறியலாம். ‘‘அவர் உங்களை எளியவராக்கினார். உங்களுக்குப் பசியைத் தந்தார். ஆனால் மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர் வாழ்கிறார் என்று நீங்கள் தெரிந்துகொள்ளுமாறு, நீங்களும் உங்கள் மூதாதையரும் அறிந்திராத மன்னாவினால் உங்களை உண்பித்தார்.’’ இதனை மேலும் விளங்கிக் கொள்ளும் பொருட்டு மாற்கு 6ம் அதிகாரத்தில் காணப்படும் அப்பம் பலுகும் அருங்குறியை வாசிக்கவும்.

மனிதன் வாழ்வதற்கு தேவையான உணவு இறைவார்த்தையால் கிடைக்கிறது என்பது அதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இயேசு எல்லோரையும் பசும்புல் தரையில் அமரச் செய்யும்படி சீடர்களைப் பணித்தார்.

அவர்கள் நூறு பேராகவும், ஐம்பது பேராகவும் வரிசை வரிசையாக அமர்ந்தனர். இயேசு ஐந்து அப்பங்க ளையும், இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணார்ந்து பார்த்து, கடவுளைப் போற்றி, அப்பங்க ளைப் பிட்டு, அவர்களுக்குப் பரிமாறுவதற்காகத் தம் சீடரிடம் கொடுத்தார். அவ்வாறு இரு மீன்களையும் எல்லோருக்கும் பகிர்ந்தளித்தார். அனைவரும் வயிறாற உண்டனர்.

இதனை நோக்குகையில் தம் ஆடுகள் பசியில் வாடாது செழிப்புள்ள புற்தரைக்கு அவைகளை அழைத்துச் செல்லும் நல்லாயனாக இறைவன் செயற்படுவதை அறியலாம்.

*‘‘வாழ்வு தரும் உணவு நானே, என்னிடம் வருபவருக்கு பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது’’ (யோவா. 6:35)*

பாலைவனத்தில் நீர் இல்லை. விடுதலைப் பயணத்தின்போது இறைவனின் கட்டளைப்படி அவர்கள் இரபிதீம் என்ற இடத்தில் பாளையம் இறங்கினர். எனினும் அவர்களுக்குக் குடிக்க நீர் இருக்கவில்லை. ‘‘எமக்குக் குடிப்பதற்கு நீர் தாரும்’’ என்று மக்கள் குரல் எழுப்பினர். அதனை கேட்ட மோசே அவர்களது அவிசுவாசத்தைப் பற்றிக் குறை கூறினார். மக்கள் மோசேக்கு எதிராக மேலும், மேலும் முறுமுக்கத் தொடங்கினர். ‘‘நீர் எகிப்திலிருந்து எங்களை வெளியேறச் செய்தது எங்களையும், எங்கள் பிள்ளைகளையும், கால்நடைகளையம் தாகத்தால் சாகடிக்கவா?’’ என்று கேட்டனர்.

இந்த இக்கட்டான நிலையில் மோசே இறைவன் பக்கம் திரும்பினார். எவ்வளவு பலம் வாய்ந்த ஆட்சியாளனாக இருந்தாலும் அவனது பலத்திற்கும் அளவு உண்டு. நல்ல ஆட்சியாளர்கள் இதனை உணர்ந்து இறை உதவியை நாடுகின்றனர். மோசேயும் அவ்வாறே செய்தார். ‘‘இந்த மக்களோடு நான் என்ன செய்வேன்? இன்னும் கொஞ்சம் போனால் என்மேல் கல்லெறிவார்களே!’’ என்று மோசே கதறினார். அவருக்கு ஆண்டவர் பதிலளித்தார்.

ஆண்டவர் மோசேயிடம், ‘‘இஸ்ரயேல் தலைவர்கள் சிலரை உன்னோடு அழைத்துக் கொண்டு மக்கள் முன்செல், நைல் நதியை அடித்த உன் கோலையும் கையில் எடுத்துக்கொண்டு போ. இதோ நான் அங்கே ஒரேபில் உள்ள பாறையில் உனக்கு முன் நிற்பேன், நீ பாறையை அடி, மக்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்’’ என்றார். வேண்டிய அளவு குடித்துத் தாகம் தீர்க்கும் அளவிற்குப் பெருந்தொகையான நீர் பாறையிலிருந்து புறப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் ஆண்டவருக்கெதிராக முணுமுணுத்ததாலும், ஆண்டவர்

தம்மோடு இருக்கிறாரா இல்லையா என்று சந்தேகம் கொண்டதாளும் அவ்விடம் ''மாரா'' என்றும், ''மெரிபா'' என்றும் அழைக்கப்பட்டது.

இந்த பாறை மனிதரிடையே வாழும் இறைவனின் அடையாளமாகும். வாழ்வளிக்கும் ஊற்றும் அதுவாகும். புதிய ஏற்பாட்டில் தூய யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ''தாகமாயிருப்போர் என்னிடம் வந்து தாகம் தீர்த்துக் கொள்ளட்டும்''. (யோவா. 19:34) என்றதற்கமைய நம்பிக்கைக் கொள்வோரில் வாழ்வளிக்கும் நீர் பாய்ந்து வரும். சிலுவையில் அறையப்பட்டிருந்த இயேசுவின் விலாவை ஈட்டியால் குத்தியபோது அதிலிருந்து இரத்தமும், தண்ணீரும் வடிந்தது. இது வரவிருந்த பரிசுத்த ஆவிக்கு முன்ன டையாளமாகும்.

## 2.2.5 சீனாய் உடன்படிக்கை

**(அ) சீனாய் உடன்படிக்கைக்கு ஆயத்தம் (வி.ப 19:1-24:18)**

இரபிதீம் எனுமிடத்திலிருந்து இஸ்ராயேலர் புறப்பட்டு சீனாய் பாலைநிலத்தை வந்தடைந்தனர். இது அவர்க ளது வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்திய பல நிகழ்வுகளுக்குப் பின்னணியாக அமைந்தது. விடுதலைப் பயண நூல் 19:1லிருந்து எண்ணாகம் 10:11 வரை நடைபெறும் சம்பவங்கள் சீனாய் மலையை அண்மித்த நிகழ்வு களாகும். சாதாரண மேய்ப்பர்களாக இருந்த மக்கள் இறை மக்களாகும் நிலை இங்கிருந்தே ஆரம்பமானது. அதன் பொருட்டுத் தேவையான உடன்படிக்கைக்கு ஆயத்தமாகுதல், உடன்படிக்கையை உறுதி செய்தல் போன்ற நிகழ்வுகள் இங்கு நடைபெறுகின்றன. இறைவன் மோசேயை நோக்கி இவ்வாறு கூறினார். ''நான் எகிப்திற்குச் செய்ததையும், கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி என்னிடம் வந்து சேரச் செய்ததையும் நீங்களே கண்டீர்கள். நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும், நீங்களே எல்லா மக்களினங்களிலும் என் தனிச்சொத்தாவீர்கள். மேலும், எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்'' என்றார்.

இச் செய்தியை மோசே மக்களின் தலைவர்களுக்கும், அத்தலைவர்கள் மக்களுக்கும் அறிவித்தபோது மக்கள் ஒரே குரலாக ''ஆண்டவர் கூறிய அனைத்தையும் கடைப்பிடிப்போம்'' என்றனர்.

ஆண்டவர் கிறிஸ்தவர்களது மட்டுமன்றி அனைத்துலக மக்களினதும் இறைவன் ஆவார். அனைவரதும் மீட்பராவார். மனிதரிலிருந்து சிறப்பாக குழுவினரைத் தெரிவு செய்தல் இறை சித்தமாகும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் மக்கள் தூய இனமாவர். ஆண்டவருக்கு மட்டுமே அர்ப்பணிக்கப்பட்ட மக்கள் என்பதே அதன் பொருளாகும். ஆதலால் இஸ்ராயேல் இறைவனின் அரசாகும். அதன்படி இஸ்ராயேலரின் ஆட்சியாளர்கள் முன்மாதிரியான, நீதியின் கண்ணாடியாக இருக்க வேண்டும். இஸ்ரயேலர் சுதந்திர மக்களாக இருக்க வேண்டும். அவர்கள் இறைவனுக்கே சொந்தமானவர்கள். ஆதலால் அவர்களிடையே அஞ்ஞான நம்பிக்கை இல்லாதிருக்க வேண்டும். வேற்றுமை உணர்வு இருத்தலாகாது. லௌகீகத்தை முக்கியமானதாகக் கருதும் ஏனையோரைப் போல் இருத்தலாகாது.

இஸ்ரயேல் மக்கள் அரச குருத்துவ மக்கள். குரு என்பவர் இறை - மனித உறவை இணைப்பவர். இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே ஓர் தொடர்பூடகமாக செயற்படுபவர். இதன்படி சகல மக்களுக்காகவும் குருத்துவ நிலையை வரமாக பெற்றவர்கள் இஸ்ராயேலர். நீதியையும் இறைவனின் பரிசுத்த தனத்தையும் உலகிற்கு காட்ட வேண்டியவர்கள் அவர்களே.

உடன்படிக்கையை வெளிப்படுத்த மனிதரிடத்தில் வரும் இறைவனின் கம்பீரத்தையும், மகிமையையும் எடுத்துக் கூறுவதற்கு எழுத்தாளர் பாரம்பரிய மரபுகளையும், உவமைகளையும் பயன்படுத்தியுள்ளார். கர்ஜனை, மின்னல், மேகம், பூமி அதிர்வு, நெருப்பு என்பன இதற்கு எடுத்துக் காட்டாகும். மனித வாழ்வின் பெறுமதியற்ற தன்மையையும், நிலையற்ற தன்மையையும், இறைவனின் தூய்மையையும், மேன்மையையும், வல்லமையையும் எடுத்துக் காட்டவே இவைகள் பயன்படுத்தப்பட்டன.

இயேசு இறுதி இராவுணவின்போது வெளிப்படுத்திய இறை உடன்படிக்கை தொடர்பான பின்னணி மூலம் நாம் இதனை விளங்கிக் கொள்ளல் வேண்டும். இதன் பொருட்டு யோவான் 17ம் அதிகாரத்தில் உள்ள உன்னத குருவின் செபத்தில் காணப்படும் கருத்திற்கு அமையவும் பிதாவாகிய இறைவனுக்குப் பணிபுரியும் பொருட்டு அவர் நம்மை அரச, குருத்து இனமாக்கினார் (திரு.வெ 1:6) என்ற எண்ணக் கருவை நினைவிற் கொள்ள வேண்டும். இறை சித்தத்திற்கு அமைய இஸ்ராயேல் தெரிவு செய்யப்படுவதற்கு அவர்களைத் தகுதியுடையவர் களாக்குவது அவசியமாகும். அதன் பொருட்டு சட்டம் அவசியமாகும். சீனாய் மலையில் வெளிப்படுத்தப்பட்டது அந்த சட்டமாகும்.

**(ஆ) சீனாய் உடன்படிக்கை**

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட மக்கள் முன்னேற்ற வழியில் செல்வதற்கு அவர்களுக்கு வழிகாட்டல் அவசியம், சட்டங்கள் அவசியம். உயர் கல்வி கற்பதற்கு ஆயத்தமாகும் இளையவர்களுக்கு சரியான வழியில் செல்வதற்கான வழிகாட்டல் அவசியம். தீய வழியில் செல்லாது உரிய குறிக்கோளை அடைவதற்கு ஆலோசனை பெறல் வேண்டும். அவர்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு, பிறர் நலம் நாடல், பொறுமை என்ற பண்புகள் இருக்க வேண்டும். அவ்வாறே இதுவரை நாடோடி இடையர்களாக, சுயநலவா திகளாக வாழ்ந்த இஸ்ராயேலரை கட்டுப்பாட்டுடன், நல் மக்களாக உருவாக்கிட இறைவன் சட்டங்களைக் கொடுத்தார்.

முன்னேற்றமடைந்த சமூகமாகத் திகழ வேண்டுமாயின் எந்த மனிதரும் முழுமையாக இரு வழிகளில் முன்னேற்றமடைய வேண்டும். அவை ஆன்மீக, சமூக ரீதியாகும். இதற்காக இறைவன் இஸ்ராயேலருக்கு பத்துக்கட்டளைகளை அளித்தார்.

**அக்கட்டளைகளின் விபரமாவது**

1. அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர் நானே. என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் ஆகாது.
2. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்தல் ஆகாது.
3. ஆறு நாட்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாள் உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வு நாள்.
4. உன் தந்தையையும், தாயையும் மதித்து நட.
5. கொலை செய்யாதே.
6. விபச்சாரம் செய்யாதே.
7. களவு செய்யாதே.
8. பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே.
9. பிறர் வீட்டை, மனைவியை, அடிமைப் பெண் ஆகியோரை கவர்ந்திட விரும்பாதே.
10. பிறர்குரிய எதையும் கவர்ந்திட விரும்பாதே.

இவற்றில் முதல் மூன்று கட்டளைகளும் ஆன்மீக வளர்ச்சியின் பொருட்டு இறை உறவை ஏற்படுத்திடவும், ஏனைய ஏழு கட்டளைகளும் சமூக வளர்ச்சியின் பொருட்டும் நல்வாழ்வின் பொருட்டும் கொடுக்கப்பட்டன.

பழங்கால மன்னர்கள் தமது நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்யும் பொருட்டு பத்து அரச தர்மங்களைப் பின்பற்றியது போலவே சீனாய் உடன்படிக்கையும் பத்து அரச தர்மங்களாகும். பழைய ஆட்சி முறையின் சட்டத் தொகுப்பாக அமுராபின் நீதித் தொகுப்பைக் கொள்ளலாம். அதில் ''செய்தல், ''ஆனால்'' என்ற பதங்கள் இல்லை. சீனாய் உடன்படிக்கையும் நிறைவேற்று அதிகாரமுடைய நீதித் தொகுப்பாகும். அதில் செய்ய வேண்டியவை இரண்டு, கூடாதவை எட்டு.

**பத்துக் கட்டளைகள் பற்றி புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சில பின்வருமாறு**

i) ''உன் தந்தையையும், தாயையும் மதித்து நட'' என்றும், தந்தையையோ, தாயையோ சபிப்போர் கொல்லப்பட வேண்டும் என்றும் மோசே உரைத்திருக்கிறார். (மாற் 7:10)

ii) ''உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? விபச்சாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச் சான்று சொல்லாதே, உன் தாய் தந்தையை மதித்து நட''(லூக் 18:20)

iii) ''விபச்சாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறருக்குரியதைக் கவர்ந்திட விரும்பாதே என்னும் கட்டளைகளும், பிற கட்டளைகளைகளும், உன்மீது அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்னும் கட்டளையில் அடங்கியுள்ளன'' (உரோ 13:9)

iv) ''விபச்சாரம் செய்யாதே'' என்று கூறியவர் ''கொலை செய்யாதே'' என்றும் கூறியுள்ளார். நீங்கள் விபச் சாரம் செய்யாவிட்டாலும் கொலை செய்வீர்களென்றால் சட்டத்தை மீறியவர்களாவீர்கள்'' (யாக். 2:11)

இவற்றைவிட மலைப்பொழிவில் இயேசு சட்டத்தை நிறைவேற்றுவது பற்றிய விதத்தை குறிப்பிட்டுள்ள மையை மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் காணலாம்.

**(இ) உடன்படிக்கையை உறுதி செய்தல்.**

சீனாய் உடன்படிக்கை இரு கட்டங்களில் உறுதி செய்யப்பட்டது. அதில் முதலாவது கட்டம் மோசேயும், மக்கள் தலைவர்களும் சீனாய் மலையுச்சியில் அதனை ஏற்றுக் கொள்வதாகும். இரண்டாவது கட்டம் மலையடிவாரத்தில் அனைத்து மக்களும் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதாகும்.

இந்த உடன்படிக்கை அனைத்து இஸ்ராயேல் மக்களின் பொருட்டு மோயீசனுக்கே கொடுக்கப்படுகிறது. உடன்படிக்கையை ஏற்பது தொடர்பாகப் பிற்காலத்தில் எதிர்ப்புக்கள் ஏற்படாதிருக்க சாட்சிகள் தேவைப்பட்டன. மோசேயின் அனுபவத்திற்கு பங்காளிகள் தேவைப்பட்டனர். ஆதலால் மக்கள் தலைவர்கள் 70 பேர் இஸ்ராயேல் வம்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சீனாய் மலையில் மோசே பெற்ற உடன்படிக்கைக்கு சாட்சிகளாகினர்.

மேகங்கள் இல்லாத நீலவானம் சுடர்வீச, மகிமையோடும், வல்லமையோடும் ஒளிரும் சூரியன் இறை மகிமையை வெளிப்படுத்த அவர்கள் ஒருவகையில் இறைவனைக் கண்டனர். இரண்டாவது சந்தர்ப்பத்தில் மக்கள் பலி ஒப்புக் கொடுத்து உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளும்போது நிறைவேறியது.

அவர்கள் தகனப் பலி, நல்லுறவுப் பலிகளையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்தனர். மோசே மிருகங்களின் இரத்தத்தில் இரண்டில் ஒரு பாதியைக் கலசத்தில் ஊற்றினார். மறுபாதியை பீடத்தின்மீது தெளித்தார். (பீடம் இறைவனுக்கான அடையாளம்) பின்னர் அவர் உடன்படிக்கை ஏட்டை எடுத்து மக்கள் கேட்கும்படி வாசித்தார். அவர்கள் ''ஆண்டவர் கூறிய அனைத்தையும் செய்வோம்'' என்றனர். அப்போது மோசே இரத்தத்தை மக்கள்மேல் தெளித்து ''இவ்வனைத்து வார்த்தைக்கும் இணங்கும் ஆண்டவர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையின் இரத்தம் இதோ'' என்றார் (வி.ப 24:5-8).

இயேசு புதிய உடன்படிக்கையை நிகழ்த்தும்போதும் இவ்வாறு நிகழ்ந்தது. அதனைப் பற்றி நற்செய்தியாளர் மாற்கு தமது நூலில் இவ்வாறு கூறுகிறார். ''இது எனது உடன்படிக்கையின் இரத்தம், பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம்'' (மாற்கு 14:24).

கட்டளைகள் எழுதப்பட்ட பலகையானது இறைவன் தம்மோடு வாழ்கிறார் என்பதன் அடையாளமாகும் என இஸ்ராயேலர் நம்பினர். அதனை அவர்கள் உள்ளே வைப்பதற்கு உடன்படிக்கைப் பேழை செய்ததும் இதனாலேயாகும். ஏதாவது காரணத்தால் உடன்படிக்கைப் பேழை அவர்களை விட்டு விலகினால் இறை ஆசீர் அவர்களை விட்டு நீங்கியதாகவே அவர்கள் கருதினர். இறை வழிபாட்டுடன் கூடிய ஆரம்ப பண்பாட்டு இயல்பு இந்த உடன்படிக்கைப் பேழையாகும்.

# மூன்றாம் பாடம்

## 3. ஒத்தமை நற்செய்தி பற்றிய அறிமுகம்

### 3.1 ‘‘நற்செய்தி’’

புதிய ஏற்பாட்டில் 27 நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை வரலாற்று நூல் 5, திருமுகங்கள் 21, இறைவாக்கு நூல் 1 என பிரிக்கப்பட்டுள்ளன. வரலாற்று நூல்கள் 5 இல் முதல் நான்கும் கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி கூறியுள்ளன. இவை தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா, தூய யோவான் ஆகியோரால் எழுதப்பட்ட நற்செய்திகளாகும். 5ம் நூலில் (திருத்தூதர் பணி) குறிப்பிடப் பட்டிருப்பது தொடக்க கிறிஸ்தவ சபைகளின் வரலாறாகும்.

நல்ல செய்தி ‘‘நற்செய்தி’’ என்று சொல்லப்படும். அது கிரேக்க மொழியில் ‘‘எவ்’’ (நல்ல, நன்மை) அஞ்சலியொன் (செய்தி) என்ற சொல்லின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகிறது. உரோம சமூகத்தில் அரசர் ஒருவரின் பிறப்பிற்கு அல்லது அவரது முடிசூட்டுவிழா பற்றிய செய்திக்கு ‘‘எவான்ஜலியொன்’’ என்று சொல்லப்படுகின்றது. பேரரசர்களின் பிறப்பிற்கும் அவர்களின் அரசு வருகையைப் பற்றிய செய்திகளுக்கும் கிறிஸ்தவர் நற்செய்தி அல்லது ‘‘எவான்ஜலியொன்’’ எனக் கூறுவர்.

பழைய ஏற்பாட்டில் ‘‘நற்செய்தி’’ என்ற சொல் சில இடங்களில் எவ்வித கருத்தையும் காட்டவில்லை. 2 சாமு. 18:27ல் உள்ள கலகக்கார அப்சலோமின் மரணம் பற்றிய செய்தியை கொண்டு சென்ற அகிமாசர் பற்றி தாவீதினால் கூறப்பட்டவை அவர் நல்ல மனிதர். நல்ல செய்தியை கொண்டு வருபவர் போன்ற வார்த்தை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். (2 சாமு. 18:19-31), அரசர்கள் 1:42 என்ற விவிலிய பகுதிகளை வாசிக்கவும்).

இருப்பினும் இறைவாக்குகளில், நற்செய்தி என்பது நல்ல செய்திமட்டுமல்ல, சீயோனுக்கு மீட்பைக் கொண்டுவரும் நல்ல செய்தியுமாகும்.

சீயோனுக்கு செய்தியைக் கொண்டுவரும் தூதுரையாளரே!
சீயோனே! நற்செய்தி தருபவளே,
உயர்மலைமேல் நின்றுகொள்!
எருசலேமே! நற்செய்தி உரைப்பவளே!
உன்குரலை எழுப்பு, அஞ்சாதே! (எசாயா 40: 9)
(எசாயா 41:27, 52:7) என்னும் பகுதிகளை வாசித்தறிக.
புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் எழுதப்பட்டவை ஒன்றும் நற்செய்தி என அறிமுகப்படுத்தப்படவில்லை.

**ஒத்தமை நற்செய்தியில் கீழே தரப்பட்டுள்ளவை நற்செய்தியென குறிப்பிடப்பட்டுள்ளன.**

- திருமுழுக்கு யோவானின் பிறப்பை பற்றி செக்கரியாவுக்கு அறிவிப்பு. (லூக். 1:19)
- யேசுவின் பிறப்பு பற்றி அறிவிப்பு (லூக். 2:10)
- திருமுழுக்கு யோவானின் போதனை (லூக். 3:18)
- இயேசுவின் அறிவுரைகளும் இறையரசைப்பற்றிய போதனைகளும். (மத். 4:23, லூக். 4:43, 8:1)
- மாற்கு 10:29ல் குறிப்பிட்டுள்ளதின்படி இயேசுவுக்காகவும் நற்செய்திக்காகவும் தமது குடும்பத்தினரையும் கூட விட்டுவிட வேண்டும். இவ்வாறு கூறுவதால் இயேசுவுக்கும் நற்செய்திக்குமுள்ள தொடர்பு வெளிப்படுத்தப்படு கிறது.
- மத்தேயு 4:18, மாற்கு 1:15 என்ற பகுதிகளின்படி இறையரசைப்பற்றிய நற்செய்தி என்பது மனமாற்றத்திற்கான அழைப்பாகும்

- நற்செய்தியைப்பற்றி போதிப்பது தனது பணியென்றும், அதற்காக தூய ஆவியின் அருட்பொழிவு பெற்றிருப்பதாகவும் இயேசு கூறியுள்ளார். (எசா. 61:1, லூக் 4:18) மேலும் ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிப்பது மெசியாவின் அடையாளமாகும். (மத். 11:5)
- இறையரசு நெருங்கிவிட்டது என்பதைக் காட்டி நற்செய்தியை அறிவிப்பதற்கு கிறிஸ்துவாலேயே திருத்தூதர் அனுப்பப்பட்டனர். (லூக். 9:1-6)

மாற்கு 1:1ன்படி ''நற்செய்தி'' என்ற கருத்து சிறிது வேறுபடுகிறது. அதில் குறிப்பிட்டுள்ளதின்படி இறையரசை பற்றியல்ல, கிறிஸ்துவின் வருகை, அவரது வாழ்வு, மரணம், உயிர்ப்பு ஆகியவையாகும். பிற்காலத்தில் திருத்தூதர்கள் பணியாற்றியது இதைப்பற்றி அறிவிப்பதற்காகவே (திபணி 5:12, 11:20). இக்கருத்திற்கு ஏற்றபடி கிறிஸ்து நற்செய்தி போதிக்கும் பணியை திருத்தூதர்களுக்குக் கொடுத்தார். (மாற். 13:10, 14:9, 16:15)

தூய பவுலடியாருக்கு நற்செய்தியானது கிறிஸ்துவைப் பற்றியதாகும் (உரோ. 1:3-4). அதனைப் போதிப்பது இறைவனிடமிருந்து தான் பெற்ற அருள் என அவர் கருத்திற் கொண்டார். (எபே. 3:8, உரோ. 1:5) அவ்வாறே அது அவரது கடமையெவும் கருதினார். அதற்காகவே அவர் அர்ப்பணிக்கப்பட்டிருந்தார். அதை நிறைவேற்றா விட்டால் தான் கேடுக்குள்ளாகுவதாகக் கருதினார் (1கொரி. 9:16). இந்நற்செய்தியில் அடங்கியுள்ளவை முதலில் மறைபொருளாயிருந்தாலும் தற்போது அது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (உரோ. 16:25)

அதைப் பற்றிப் பார்க்கும்போது நற்செய்தியின் நோக்கம் கிறிஸ்துவாவார். போதிக்கப்படுவதும் அவரைப் பற்றியே. அதன் ஆசிரியரும் அவரேயாவார். அது கிறிஸ்துவைப்பற்றிய போதனை அல்ல, அது கிறிஸ்து மீட்பரென்றும், மெசியா என்றும் பழைய ஏற்பாட்டின் நிறைவு என்றும் முன்வைக்கிறது. திருச்சிலுவை நற்செய்தியின் மையமாக உள்ளது (1 கொரி. 1:17-25 2:2). நற்செய்தி கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனை, செயற்பாடு ஆகியவற்றை முன்வைப்பதோடு அதனை வாசிப்பவர்களுக்கு அது ஒரு சவாலாக இருக்கிறது. இதில் அடங்கியுள்ள மேன்மையான வெளிப்பாடுகளின்படி வாழ்வதற்கு அழைப்புவிடுக்கிறது. ''ஒன்றை மட்டும் மறந்துவிடாதீர்கள், கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஏற்றவாறு நடந்துகொள்ளுங்கள். நான் உங்களை வந்து பார்த்தாலும், நான் வரமுடியாத நிலையில் உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டாலும் நீங்கள் நற்செய்தியில் கொண்டுள்ள நம்பிக்கைக்காக ஒரு மனத்தோடு போராடி, ஒரே உள்ளத்தோடு நிலைத்து நிற்கிறீர்கள் என்றும், எதிரிகள் முன் சற்றும் மருளாமல் இருக்கிறீர்கள் என்றும் நான் அறிய வேண்டும். இவ்வாறு நீங்கள் மருளாதிருப்பது அவர்களது அழிவுக்கும் உங்களது மீட்புக்கும் அறிகுறியாகும். இதுவும் கடவுளின் செயலே'' (பிலிப். 1:27, 28)

### 3.2 ஒரே நற்செய்தியை 4 பேர் கூறும் விதம்

திருத்தூதர்கள் போதித்த ஒரே செய்தி. தூய மத்தேயு, தூய மாற்கு, தூய லூக்கா, தூய யோவான் ஆகிய நான்கு எழுத்தாளர்கள் மூலம் எமக்கு கிடைத்துள்ளது. எழுத்தாளர்கள் முன்னைய காலத்தில் நான்கு நற்செய்திகள் அல்ல "ஒரு நற்செய்தி 4 நூல்கள்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. (Muratorian Canons) நற்செய்தி 4 விதங்களில் உள்ளன என தூய அயிரேனிஸ் குறிப்பிட்டுள்ளார். அதனால் ஆதிக்கிறீஸ்தவர்கள்,

- தூய மத்தேயுவினால் எழுதப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி
- தூய மாற்குவினால் எழுதப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி
- தூய லூக்காவினால் எழுதப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி
- தூய யோவானால் எழுதப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி என குறிப்பிட்டனர்.

**நற்செய்தியை அடையாளப்படுத்தும் உருவகங்கள்.**

நற்செய்தி அடையாளப்படுத்தும் உருவகங்களின் அடிப்படையானது பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் (1:10)லும் புதிய ஏற்பாட்டில் திருவெளிப்பாடு (4:7)லும் காட்டப்படுகின்ற நான்கு விலங்குகளேயாகும். நற்செய்தி நான்கிற்கும் திருவிவிலியத்தில் விலங்குகளை பொருத்தியிருப்பது அந்தந்த நற்செய்தி தொடங்கும் விதத்திலாகும்.

## 3.3. தூய அம்புரோஸ் அடிகளாரின் வகைப்படுத்தலின்படி

| நற்செய்தி | தொடக்கம் | அடையாளம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| மத்தேயு | இயேசுவின் மூதாதையர் பட்டியல் | மனிதன் |
| மாற்கு | திருமுழுக்கு யோவானின் பாலைவன போதனை | சிங்கம் |
| லூக்கா | செக்கரியாசின் செம்மறியாட்டுப்பலி | எருது |
| யோவான் | இயேசுவின் தெய்வீகத்தன்மை | கழுகு |

இதன்படி பார்க்கும்போது நற்செய்திகள் நான்கிற்கும் தொடக்கத்திலிருந்தே மதிப்பு, மாண்பு கிடைத்தது என்ற தீர்மானத்திற்கு வரலாம்.

**ஒத்தமை நற்செய்தியின் சிக்கல்கள்**

நான்கு நற்செய்திகளில் முதல் மூன்றிற்கிடையே நெருங்கிய ஒத்தமைப்பு காணப்படுகிறது. இவற்றில் சில பகுதிகள் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கியதாகவும் அவற்றை ஒரே விதத்தில் பார்க்கக் கூடியதாகவும் உள்ளது. இதனால் இம் மூன்று நற்செய்திகளும் (சமநோக்கு) ஒத்தமைப்பு - நற்செய்தி என அழைக்கப்படுகின்றன. ஆங்கில மொழியில் அது ‘‘ஸ்நொப்டிக்’’ என பெயரிடப்பட்டுள்ளது. (இந்த ஸ்நொப்டிக் என்ற சொல் கிரேக்க சொல் இரண்டிலிருந்து தோன்றியுள்ளது) ‘‘சுன் ஒப்டேய்ன்’’ (to see together) க்கு ‘‘ஒன்றாகப் பார்த்தல்’’ என பொருள்படும். கீழே தரப்பட்டுள்ள உதாரணங்கள் வழியாக அதைப்பற்றி விளங்கிக் கொள்ள முடியும்.

**மத்தேயு 3:17**

அப்பொழுது, ‘‘என் அன்பார்ந்த மைந்தன் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

**மாற்கு 1:11**

அப்பொழுது, ‘‘என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

**லூக்கா 3:22**

தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது, அப்பொழுது ‘‘என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

இதன்படி ஒத்தமைப்பும், ஒத்தமைப்பற்ற நிலைகள் பலவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சிக்கல்களுக்கு சமநோக்கு நற்செய்தியின் சிக்கல்கள் என்று சொல்லப்படுகிறது.

### i) ஒற்றுமைகள்

**(அ) அடங்கியுள்ள காரணிகள் பற்றி**

பொதுவாக நோக்கும்போது இயேசுவின் வார்த்தை, செயற்பாடு, அருங்குறி, உவமை, போதனை போன்ற முக்கிய நிகழ்வுகள் நற்செய்தி மூன்றிலும் ஒரே விதமாக குறிப்பிடப்பட்டுள்ளது. சில பகுதிகள் நற்செய்தி மூன்றிற்கும் பொதுவானது. சில பகுதிகள் இரண்டு நூல்களில் மட்டும் அடங்கியுள்ளது. ஒன்றில் நற்செய்திக்கு வரையறுக்கப்பட்டதோர் பகுதி இருப்பதோடு நீண்ட இடைவெளிக்குப் பின் சில பகுதிகள் ஒரே நூலில் இரண்டு தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
**(உதாரணம் லூக் 8:16, 11:33, 9:48, 10:16)**

சமநோக்கு நற்செய்திகளில் மிகவும் சிறிய நற்செய்தியானது தூய மாற்கு எழுதிய நற்செய்தியாகும். அது முழுமையாகவே மத்தேயு, லூக்கா நற்செய்தியில் அடங்குகிறது. தூய மாற்குவிற்கு மட்டும் சொந்தமான நற்செய்தி மிகவும் சுருக்கமானதாகும். மாற்கு நற்செய்தியின் 90% அல்லது 600 சொற்களளவில் மத்தேயு நற்செய்தியில் அடங்கியுள்ளது. மாற்கு நற்செய்தியின் 50% லூக்கா நற்செய்தியில் அடங்கியுள்ளது. மத்தேயு நற்செய்திக்கு மட்டும் சிறப்பான பகுதி முழு நற்செய்தியிலும் 30% ஆகும். அதன்படி லூக்காவிற்கு 50% சொந்தமானது. கீழே குறிப்பிடப்பட்டிருப்பது அதைப்பற்றிய விளக்கமாகும்.

| முழு செய்திகள் | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|
| **தமக்கு மட்டும் சொந்தமானது** | **1070** | **677** | **1150** |
| **(Unique tradition)** | **330** | **70** | **520** |
| | **(1/3மட்டும்)** | **(1/10 மட்டும்)** | **(1/2 மட்டும்)** |
| **இரண்டு நூல்களிலும் அடங்கியுள்ளவை** | **170-180** | **170-180** | **230** |

| | | | |
|---|---|---|---|
| **(Two fold tradition)** | **மத்-மாற் 230** | **மாற்-மத் 50** | **லூக்-மத் 50** |
| **மூன்று நூல்களிலும் அடங்கியுள்ளவை** (Three fold tradition) | **மத்-லூக்** 350-370 | **மாற்-லூக்** 350-370 | **லூக்-மாற்** 350-370 |

**(ஆ) விடயங்களை ஒழுங்குபடுத்துவது பற்றி**

சமநோக்கு நற்செய்தியாளர்கள் கிறிஸ்துவின் வாழ்வையும் செயற்பாட்டையும் ஒரே முறையில் ஒழுங்கு செய்துள்ளனர். திருமுழுக்கு யோவானின் வருகை, திருமுழுக்கு அளித்தல், சோதனை, பகிரங்க வாழ்வு, பாடுகள், சிலுவையில் அறையப்படுதல், மரணம், உயிர்ப்பு ஆகியன கீழே தரப்பட்டுள்ளதின்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | மத்தேயு | மாற்கு | லூக்கா |
|---|---|---|---|---|
| * | பணிக்கு முன் ஆயத்தம் | 3:1, 4:11, | 1:1-13 | 3:1-4:13 |
| * | கலிலேயாவில் பணி | 4:12-18:35 | 1:14-9:15, | 4:14-9:50 |
| * | எருசலேம் பயணம் | 19:1-20:34 | 10:1-52 | 9:51-18:43 |
| * | பாடுகள், உயிர்ப்பு | 26 - 28 | 14 - 16 | 22 - 24 |

**(இ) மொழி**

பழைய ஏற்பாட்டிலிருந்து தொகுத்தெடுக்கும்போது நற்செய்தியாளர் மூவரும் பலவேளைகளில் ஒன்றிணைந்துள்ளனர். கிறிஸ்துவின் வார்த்தை கிரேக்க மொழியில் பலவேளைகளில் ஒரே விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலவேளை வாக்கியமும், அதிகாரமும், வசனத்திற்கு வசனம் ஒன்றுபடுகின்றது.

### ii) வேற்றுமைகள்

**(அ) உள்ளடங்கிய விடயங்கள்**

சிலவேளைகளில் விடையங்களை முன்வைக்கும்போது ஒரே விதத்தில் இருவரும் முன்வைக்கின்றனர். அவ்வாறு முன்வைக்கும்போது இருவரும் வேறுபடுகின்றனர். சிலவேளைகளில் ஒரு விடயத்தை ஒரேயொரு நூலில் மட்டும் காணலாம். இருவர் ஒரே விடயத்தை இருவிதங்களில் முன்வைக்கின்றனர். (உ+ம்) இயேசுவின் மூதாதையர் பட்டியலை மத்தேயுவும் லூக்காவும் முன்வைக்கின்றனர். ஆயினும் மாற்கு நற்செய்தியில் அது பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. கிறிஸ்துவின் பாலப்பருவம் பற்றியும் அவ்வாறே கூறலாம். இயேசுவின் மூன்று சோதனைகள் பற்றி மத்தேயுவும், லூக்காவும் இருவிதங்களில் முன்வைக்கின்றனர் (மத். 4:3-12, லூக். 4:3-12). உயிர்ப்பைப்பற்றிய நிகழ்வும் வேறுபட்ட விதத்தில் முன்வைக்கப்படுகின்றது.

**(ஆ) விடயங்களை ஒன்றுபடுத்தல்.**

பொதுவாக ஒத்தமை காலத்தை காணக்கூடியதாயிருப்பினும், ஒருவர் சில விடயங்களை ஒரே இடத்தில் தொகுத்து தரும்போது மற்றவர் அதனை அவ்வாறில்லாது இடையிடையே குறிப்பிடுகிறார்.

உவமைப்பகுதி மூவருக்கும் பொதுவானதாகும். இருப்பினும் மூவரின் உவமைகளின் அளவும் வேறுபட்டது. இயேசுவின் போதனைகளை மத்தேயுவும், லூக்காவும் குறிப்பிடுகின்றனர். மத்தேயு அதை 5 பிரதான போதனை பகுதிகளுக்குள் அடங்கியுள்ளார். ஆயினும் அதை லூக்கா இயேசுவை எருசலேமுக்கு கொண்டு சென்ற நீண்ட பயணத்திற்குள் அடக்கியுள்ளார் (9:51-18:14).

பரலோக மந்திர செபத்தில் அடங்கும் செபத்தின் அளவும் (மத். 6:9-15, லூக். 11:2-4) பேறுகள் பற்றிய வாக்கியங்களில் அளவும் (மத். 5:3-11, லூக். 6:20-22) வேறுபட்டுள்ளது. பொதுவான திட்டமிடுதலில் லூக்கா, மாற்கை பின்பற்றுவதையும் மத்தேயு அவ்வாறு செய்யாதிருப்பதையும் காணலாம்.

**சமநோக்கு பிரச்சினைகளுக்கான பல்வித தீர்வுகள்.**

இத்தகைய பிரச்சினைகளைப்பற்றி புனித அகுஸ்தீனார் (கி.பி 354-430)ல் எழுதிய நூலில் (De consensu Eangelistarum) குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் 18ம் நூற்றாண்டின் பாதி காலம்வரை அது நடைமுறைக்கு வரவில்லை. இந்த பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அன்றிலிருந்து பலர் பல்வித தீர்வுகளை முன்வைத்துள்ளனர்.

அவையனைத்தும் ஒரே மாதிரியிருப்பதால் அவற்றைப் பற்றி இங்கு குறிப்பிடாதிருப்போம். தற்போதைக்கு முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுகளின் அடிப்படையில் அவற்றை இரண்டு பிரிவாக பிரிக்கலாம். அவை:-

1. சமநோக்கு பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைவது, நற்செய்தி எழுதப்படுவதற்கு முன் நடைபெற்ற ஆதித்திருச்சபை போதனை வாழ்மொழி பாரம்பரியமாக்கப்பட்டமை.
2. நற்செய்தியாளர்கள் (முதலில் எழுதியவர்களைத் தவிர) தமக்கு முன் எழுதிய ஆசிரயர்களின் எழுத்துக்களில் தங்கியிருந்தமை.

இந்த இரண்டாம் பகுதியில் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருந்தவர்கள் இருந்தனர். வாய்மொழி பாரம்பரியம், எழுத்தமைப்புடன் தொடர்பு ஆகியன முழுமையான பதிலாக அமையாவிடினும் மேற் கண்ட இரு பகுதிகளிலுமுள்ளதும் பலர் ஏற்றுக் கொண்டதுமான கீழ்க்காணும் தீர்வுகளை நாம் முன்வைக்கிறோம்.

கிறிஸ்துவின் சொல்லும் செயலும் ஒரு நூலிலல்ல, பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதித் திருச்சபையின் போதனையாளர்களுக்கும், அறிவுரையாளருக்கும் அவை கைநூல்களாக விளங்கின. இவற்றை கிறிஸ்தவ ஒன்றியங்கள் பலவற்றில் காணலாம். முறையாக இவை ஒன்று சேர்க்கப்பட்டன. பின்னர் சமநோக்கு நற்செய்தியாளர்கள் இவற்றை ஒன்று சேர்த்து கதைகளைக் கட்டியெழுப்பியுள்ளனர். இதற்கிடையில் வாய்மொழி பாரம்பரியம் மூலம் நற்செய்தியாளர்கள் சில விடயங்களையும் சேர்த்து வடிவமைத்தனர்.

**கவனிக்க வேண்டியது**:- சமநோக்கு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பல ஆண்டுகளாக பலர் உழைத்தனர். அவர்களது முயற்சியினால் சகல தீர்வுகளுக்கும் நிறைவான விடை கிடைக்காவிடினும் அந்த விடைகளை நாம் நோக்குகிறோம். முழுமையான, திருப்தியான விடை இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை. சிலவேளை அவை கிடைக்காமலும் போகலாம்.

## 3.5 சமநோக்கு நற்செய்திகளின் வரலாறு

திருத்தூதரின் வாய்மொழி போதனை நற்செய்தியின் ஆரம்பமாக கொள்ளப்பட்டாலும் அவற்றை கண்களால் கண்ட சாட்சியாளர்கள் முன்வைத்த விடயங்களிலேயே அவை தங்கியுள்ளதை அறிகிறோம்.

திருத்தூதர், போதனையாளர், நற்செய்தி கதைகளை முன்வைத்து இடத்துக்கு இடம் சென்றவர்கள் ஆகிய எவரேனுமோ வரலாற்றை வாசிக்கவோ எழுதவோ முயற்சிக்கவில்லை. அவர்களின் இலக்கு அவற்றையும்விட மேன்மையானது. கிறிஸ்துவை அனுபவித்து அவரது செய்தியால் தம்மில் ஒரு வாழும் புரட்சியை ஏற்படுத்தி நேர்மை, அமைதி, தூய ஆவியினால் வரும் மகிழ்ச்சி ஆகியவற்றை அனுபவித்தவர்களுக்கு (உரோ. 14:17) தேவையாயிருந்தது யாதெனில் அந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதாகும். அதனால் மற்றவர்களின் மனமாற்றம், அவர்களுக்கு முன்மாதிரிகையாகுதல், நம்பிக்கை என்னும் இறை கொடைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இதயங்களை ஆயத்தம் செய்தல், அந்த நம்பிக்கைக்கு உயிரோட்டமளித்தல், அதனைப் பாதுகாத்தல் ஆகியன ஆரம்ப திருச்சபை கிறிஸ்தவர்களின் நோக்கமாயிருந்தது. இந்த காரணிகளால் அவர்கள் உண்மைவாதிகளானார்கள், உண்மை சான்றை முன்வைத்தார்கள்.

இறுதியாக நற்செய்தியை ஒழுங்கு செய்தவர்களுக்கும் அத்தகைய நேர்மை, நம்பிக்கையுடனான ஈர்ப்பு ஏற்பட்டது. நம்பிக்கையின் ஆரம்ப ஊற்றில் ஒரு மதிப்பு ஏற்பட்டது. சமநோக்கு நற்செய்திகள் மூன்றும் வரலாற்று நூல்காக இல்லாவிடினும் அவற்றில் வரலாற்று விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் குறிப்பிட்டுள்ள விடயங்கள் அவ்விதமாகவே நிகழ்வுற்றதாக கூறுவதற்கில்லை. சான்று பகர்வோர் சில விடயங்களை முன்வைக்கும் போதும் அந்த சான்று பரவும்போதும் பொதுவாக நடைபெறும் சட்டதிட்டங்கள், சம்பிரதாயங்களை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அவ்வாறே விடயங்கள் நிகழும்போது அவ்வேளையிலேயே அவை எழுதப்படாமையினால் அனைத்து விடயங்களும் குறிப்பிட்டுள்ள விதத்திலேயே நிகழ்ந்த என எண்ணுவது ஏற்றதல்ல. இவ்விடயங்கள் பற்றி மட்டுமன்றி அவற்றை முறையாக உள்ளடக்கிய விதமும் உண்மையாகும். ஆதிக்கிறிஸ்தவர்களின் நம்பிக்கை இத்தகையவற்றினால் குறைந்துவிடவில்லை. தூய ஆவியானவர் உண்மையானவர் என உறுதிப்படுத்துவதும் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவை நிகழ்ந்த வெறும் சந்தர்ப்பங்கள் அல்ல என்பதும் அந்த விடயங்கள் வழியாகத் தரப்படும் ஆன்மீக செய்தியாகும்.

## 3.6 நற்செய்தி ஒழுங்குபடுத்துதலின் படிமுறைகள் மூன்று:-

### 1. வரலாற்று கிறிஸ்துவின் காலம்

வரலாற்று கிறிஸ்துவினால், எதுவுமே எழுத்தாக்கம் பெறவில்லை. அவர் சீடர்களைத் தெரிவு செய்தார். அவர் கூறிய, செய்த அனைத்திற்கும் சீடர்கள் சான்று பகர்ந்தனர். இயேசு சீடர்களுக்கு பொருத்தமான


விதத்தில் (அவர்களுக்கு விளங்கும் வகையில்) பேசும்போது அவர்கள் அதனை விளங்கிக் கொண்டனர். இதற்காகவே யேசு உவமைகளைப் பயன்படுத்தினார்.

இயேசு போதித்ததும் அருங்குறிகள் செய்ததும் பலஸ்தீனாவிலேயே. $2^1/_2$, 3 வருடங்களாகிய குறுகிய காலத்திலேயே அப்பணியை ஆற்றினார். அவருக்கு செவிமடுத்த அனைவருமே யூத இனத்தவராவர்.

**2. திருத்தூதர்களின் போதனைக் காலம்**

கிறிஸ்து கூறிய, செய்த அனைத்தையுமே அவரது உயிர்ப்பினதும் தூய ஆவியின் வருகையின் பின்னருமே சீடர்கள் புரிந்து கொண்டனர். (யோவான் 14:16-17, 16:13-15) இந்த முழுமையான அறிவினால் வரலாற்று கிறிஸ்துவால் முன்னர் கற்பிக்கப்பட்ட சொல், செயல் பற்றிய அறிவு வேறுபடவில்லை. அவை உறுதிப்படுத்தப்பட்டது.

இவற்றை சீடர்கள் இடத்துக்கிடம் சென்று போதிக்கும்போது கிறிஸ்து செய்ததைப் போலவே அவர்களும் செவிமடுப்பதற்கு ஏற்றவிதத்தில் விடயங்களை ஒழுங்குபடுத்தினர். அவர்கள் 30-50 வருடங்கள் வரை போதித்தனர். அவர்கள் அறிந்த – உலகின் எல்லா இடங்களுக்கும் போதிப்பதற்காக சென்றனர். இந்த போதனைகளுக்கு யூதர்கள் மட்டுமன்றி வேறு இடங்களில், வேறு சூழலுக்கு முகம் கொடுத்த புற இனத்தவரும் கலந்து கொண்டனர். அவர்கள் முகம் கொடுத்த சில பிரச்சினைகள் தூய பவுலின் திருமுகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இக்காலத்தில் வரலாற்று கிறிஸ்துவுடனிருந்த தொடர்பில் மாற்றம் ஏற்படவில்லை.






**3. நற்செய்தியாளர்களின் காலம்**

கிறிஸ்து தம் சீடர்களுக்கு அவர்கள் கேட்ட, பார்த்தவற்றை எழுதுவதற்கு கட்டளையிடாவிட்டாலும் இரண்டு விடயங்களின் அடிப்படையில் அவை எழுதப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது.

- நாட் செல்லச் செல்ல நிகழ்வுகளைப் பார்த்த, கேட்டவர்களின் தொகை குறைந்தது.
- மறையைப் பரப்பும் தேவை ஏற்பட்டது.

தூய மாற்கு முதலில் நற்செய்தியை எழுதும்போது சீடர்கள் - சிறப்பாக தூய பேதுரு, தமது நற்செய்தியை வாசிப்பர்களுக்கு பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தியிருந்தார். அவ்வாறே தூய மத்தேயுவும் தூய லூக்காவும் தேவைகளுக்கு பொருத்தமானவிதத்தில் எழுதினர். இதனால் மூன்று நற்செய்திகளுக்குமிடையிலும் சிறு சிறு வேறுபாடுகளைக் காணலாம். ஆலயம் அசுத்தமாகும் நிகழ்வை கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வின் இறுதி செயற்பாடாக காட்டுகின்ற அதேவேளை, தூய யோவான் அதனை முதற் செயற்பாடாகக் காட்டுகிறார். அவ்வாறே உயிர்த்த கிறிஸ்து எருசலேமில் காட்சி கொடுத்ததாக தூய லூக்கா குறிப்பிடுகிறார். தூய மத்தேயு அதனை புற இனத்தாரின் - கலிலேயாவில் நடைபெற்றதாக குறிப்பிடுகிறார். (மத் 28:16) இவைய னைத்தையும் குறிப்பிடும்போது நற்செய்தியாளர்கள் வரலாற்றுக் கிறிஸ்துவை மறக்கவில்லை.






**கவனிக்க வேண்டியது**:- 2ம் வத்திக்கான் சங்கத்தில் திருச்சபையின் இறைவெளிப்பாடு பற்றிய மறைசட்டத்தில் (இல. 7, 8ல்) இவ்வாறு குறிப்பிடப்படுகிறது.

இவரே, நிறைவாழ்வளிக்கும் எல்லா உண்மைகளுக்கும் ஒழுக்கப்போதனைகளுக்கும் ஊற்றாக நற்செய்தியை எல்லோருக்கும் போதிக்கவும் அவர்களுக்குக் கடவுளின் கொடைகளை வழங்கவும் தம் திருத்தூதர்களுக்குக் கட்டளையிட்டார். ஆகவே, கடவுளின் ஏவுதலினால் எழுதப்பட்டுள்ள நூல்களில் சிறப்பான முறையில் காணப்படும் திருத்தூதர்களின் படிப்பினை இறுதிக்காலம் வரை இடைவிடாது காப்பாற்றப்பட வேண்டியிருந்தது. எனவே, திருத்தூதர்களும் தங்கள் பெற்றுக் கொண்டவற்றை தலைமுறைதோறும் அளித்தனர். வாய்மொழியா கவோ திருமுகம் வழியாகவோ தாங்கள் கற்றுக்கொண்ட மரபுகளைக் கடைபிடிக்க வேண்டுமென்றும் எல்லாக் காலத்துக்குமென ஒப்படைக்கப்பட்ட நம்பிக்கையைப் போரிட்டுக் காக்கவேண்டுமென்றும் கிறிஸ்தவர் களை எச்சரித்தனர்.

## 3.7 நற்செய்தி எழுதப்பட்ட காலம்

| | | |
|---|---|---|
| கி. பி. 27 | - | திருமுழுக்கு யோவானின் போதனை, கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வின் ஆரம்பம் |
| கி. பி. 30 | - | பாஸ்கா திருவிழாவிற்கு முன் கிறிஸ்துவின் மரணம், பெந்தகோஸ்தே தினம் |
| | - | தூய ஆவியை அளித்தல். |
| கி. பி. 36-37 | - | ஸ்தேவானின் மரணம், சவுலின் மனமாற்றம் |
| கி. பி. 45-49 | - | பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணம் |
| கி. பி. 50 | - | எருசலேம் பொதுச்சங்கம் (மத்தேயுவின் அழைப்புடன் நற்செய்தி) |
| கி. பி. 50-52 | - | பவுலின் 2ம் மறைத்தூதுப் பயணம் |
| கி. பி. 53-58 | - | பவுலின் 3ம் மறைத்தூதுப் பயணம் |
| கி. பி. 61-62 | - | பவுல் உரோமையில் சிறையிலடைக்கப்படுதல், எருசலேமில் தூய யாக்கோபுவை கல்லால் அடித்துக் கொல்லுதல். |
| கி. பி. 64 | - | தூய மாற்குவின் நற்செய்தி |
| கி. பி. 65 | - | தூய லூக்காவின் நற்செய்தி, தூய மத்தேயுவின் நற்செய்தி (கிரேக்க வடிவமைப்பு) |
| கி. பி. 67 | - | உரோமையில் தூய பவுலினதும் பேதுருவினதும் இறப்பு |
| கி. பி. 68-70 | - | உரோமை - யூதா யுத்தம் - எருசலேமின் அழிவு |
| கி. பி. 70-80 | - | தூய லூக்கா நற்செய்தியும், மத்தேயு நற்செய்தியின் இறுதி வடிவமைப்பும் |
| கி. பி. 95 | - | தூய யோவானின் நற்செய்தி |
| கி. பி. 100 | - | இறுதித் திருத்தூதரான தூய யோவான் எபேசில் இறப்பு |

## 3.8 நற்செய்தியும் இறையூக்கமும்:-

நற்செய்தியின் வழியாக இறைவன் எம்முடன் பேசுகிறார். அதனால் நற்செய்தி தூய ஆவியின் வழிகாட்டுதலில் எழுதப்பட்டது. இறைவனின் கருத்தை மட்டும் எழுதுவதற்கு இறைவன் மனித ஆசிரியருக்கு வழிகாட்டினார். அதனால் அந்நூல்களின் ஆசிரியரான இறைவனின் தலைமையின் கீழ் மனித அறிவும் மனித பண்பாடும் நற்செய்தி எழுதப்படுவதற்கு கருவியானது.

**நற்செய்தி எழுதும்போது இறையூக்கத்தின் படிமுறைகள் 3 ஐயும் நாம் அறிந்துகொள்வோம்.**

1ம் படிமுறை - கிறிஸ்து தம் தந்தை பற்றிய உண்மையை தம் சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். அவர் உவமைகள் வழியாகவும் போதனைகள் வழியாகவும் விசுவாசிக்கப்பட வேண்டியவற்றை யும், வாழ வேண்டிய முறையையும் கற்பித்தார். மேலும் செயல் மூலம், மீட்பு என்றால் என்ன என்பதையும் காட்டினார். மீட்பை எல்லா இடங்களிலும் போதிக்குமாறு தம் சீடர்களுக்கு கட்டளையிட்டார்.

2ம் படிமுறை - கிறிஸ்துவின் உயிர்ப்பு, தூய ஆவியின் வருகையின்பின் சீடர்கள் அக்கட்டளையை நிறைவேற்றினார்கள். தமது போதனை, முன்மாதிரிகை, அறிவுரைகளின் வழியாக இயேசுவின் படிப்பினை, செயற்பாடு, ஆகியவற்றைத் தமது பரம்பரையினருக்குப் பிரமாணிக்கத்துடன் அளிக்குமாறு தூய ஆவி திருத்தூதருக்கு அழைப்பு விடுத்தார். அந்த படிமுறைக்கு திருத்தூதரின் பாரம்பரியம் எனக்கூறுவோம். (APOSTOLIC TRADITION)

3ம் படிமுறை - சீடர்களினால், திருத்தூதரின் போதனை நூல் வடிவம் பெற்றுள்ளது. முதலாவதாக பொருத்தமான பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளது. 2வது இயேசுவின் செய்தி மேலும் முழுமையாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் நற்செய்தி எழுதப்படும்போது தூய ஆவி எழுத்தாளர் நால்வருக்கும் வழிகாட்டினார். இறையூக்கம் இறுதி நூலில் மட்டும் காணப்படுவதல்ல. அது இறுதி வடிவமைப்பை பெறுமுன் பகுதிகளாக அதில் பங்கு கொண்ட அனைவரும் இறையூக்கத்துடன் செயற்பட்டனர்.

**கவனிக்க வேண்டியது**

1) இந்த படிமுறைகள் மூன்றிலும் தூய ஆவி செயலாற்றுகிறார்.

(i) கிறிஸ்துவின் படிப்பினைகளை அறிந்து கொள்வதற்கு திருத்தூதருக்கு துணைபுரிந்தார்.

(ii) அவ்வாறு அறிந்து கொண்டவைகளை பிரமாணிக்கத்துடன் வெளிப்படுத்துவதற்கு ஆதித்திருச்சபைக்கு வழிகாட்டினார்.

(iii) அந்த செய்தியை எழுத்தாக்கம் செய்யும்போது நற்செய்தியாளருக்கு உதவினார். நற்செய்தி எழுதும் போது அனைத்து படிமுறைகளிலும் இறையூக்கம் காணப்பட்டது.

2) திருச்சபையின் படிப்பினைகளின் பிரதிபலனாக 4 நற்செய்திகள் உருவாகின. அதனால் நற்செய்தியாளர்கள் தமது தனிப்பட்ட கருத்தினால் இதனை எழுதவில்லை. ஆனால் திருச்சபையின் பிரதிநிதிகளாகவே எழுதினார்கள். மேலும் திருச்சபையிடமிருந்து பெற்றுக் கொண்ட நற்செய்தியையே எழுதினார்கள்.

3) இறை வெளிப்பாடு பற்றி 2ம் வத்திக்கான் சங்க ஏட்டில் இலக்கம் 7இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘கிறிஸ்துவே இந் நற்செய்தியை முழுமைப்படுத்தி அதனை தம் வாயாலேயே அறிக்கையிட்டார். கிறிஸ்துவின் வாய்மொழியாலும் அவரோடு நடத்திய வாழ்வாலும் அவர்தம் செயல்களாலும் தாம் பெற்றவற்றையும், தூய ஆவியின் தூண்டுதலாலும் தாம் கற்றவற்றையும் திருத்தூதர்கள் தம் வாய்மொழிப் போதனை, வாழ்வின் எடுத்துக்காட்டுகள், ஏற்படுத்திய அமைப்புக்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் வழிவழியாக வழங்கினர். அதுமட்டுமன்றி நிறைவாழ்வுச் செய்தியைத் திருத்தூதர்களும் அவர்கள் காலத்தில் வாழ்ந்த பிறரும் ஆவியின் ஏவுதலினால் எழுத்தில் வடிவம் தந்தனர்.

## 3.9 மாற்கு நற்செய்தியின் அறிமுகம்

### 1. பெயர்

திருத்தூதர் பணியில் (12:12,25)ல் குறிப்பிடப்படும் மாற்கு எனப்படும் யோவான்தான் மாற்கு நற்செய்தியின் ஆசிரியர் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர் யோவான் என்னும் யூத பெயரையும் மாற்கு என்ற கிரேக்க, இலத்தின் பெயரையும் கொண்டிருந்ததால் அவர் கிரேக்க மொழி பேசிய, எருசலேமுக்குச் சொந்தமான யூத இனத்தவராய் இருந்திருக்க வேண்டும். யோவான் என்பதன் கருத்து ‘யாவே’ (ஆண்டவர்) தாராள மனப்பான்மையுடையவர் என்பதாகும். மாற்கு என்பது பிரசித்தமான உரோமை பெயராகிய மாக்கஸ் ஆகும்.

### 2. ஆசிரியத்துவம்

மாற்கு தூய பேதுருவின் சீடராவார். பேதுருவின் மறைபோதனைகளை நினைவில் வைத்திருந்து அவற்றை எழுதினார். மாற்கு இயேசுவிற்கு செவிமடுத்ததில்லை. அவருடன் பழகியும் இல்லை. தூய பேதுரு தனது சீடரின் தேவைகளுக்கு பொருத்தமான விதத்தில் போதித்தார். மாற்கு அவற்றை எழுதும்போது தனது நினைவில் இருந்தவற்றை சரியாகவும் முழுமையாகவும் எழுதினார் என்பதற்கு கி.பி 130ல் வாழ்ந்த ஹியெரோபொலிஸ் ஆயர் பபியாஸ் சான்று பகர்கிறார்.

அவ்வாறே கி.பி 150 – 215ல் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த கிளமெனட், 160 - 240ல் வாழ்ந்த தேர்த்தூலியன், 186-254ல் வாழ்ந்த ஒரிஜின் ஆகியோர் உறுதி செய்கின்றனர். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மறைப்போதனைகளுக்கு செவிமடுத்து உண்மை மறையைத் தழுவிய உரோமை நாட்டவர்களை அந்த போதனைகளை எழுதுமாறு மாற்குவிடம் கேட்டனர். அதன் பயனாக அவரது நற்செய்தி தோன்றியது.

**3. ஆசிரியரின் வாழ்க்கை**

யோவானுக்கு (திப. 13:5) மாற்கு என்றும் பெயருண்டு. (திப. 12:12, 15:37) அவர் பர்னபாசின் ஒன்றுவிட்ட சகோதரர். (கொலோ. 4:10) அவர் லேவியராவார். அவரது வீடு சைபிரசில் இருந்திருக்கலாம். (திப. 4:36) அவர் பிள்ளை பருவத்தில் பலஸ்தீனாவில் இருக்காததால் கிறிஸ்துவின் போதனைக்கு செவிசாய்த்ததில்லை என பபியாசு கூறுகிறார். பிற்காலத்தில் இக்குடும்பம் எருசலேமுக்கு வந்து அங்கு பர்னபாஸ் கிறிஸ்தவ மறையைத் தழுவினார். அவர் தமது நிலத்தை விற்று அந்த பணத்தைக் கொண்டு வந்து திருத்தூதர்களின் காலடியில் வைத்தார் (திப. 4:36-37).

கி.பி 38ம் ஆண்டளவில் தூய மாற்கு தூய பேதுருவின் போதனையைக் கேட்டு மறையைத் தழுவியிருக்க லாம். (1 பேதுரு 5:13ல்) தூய பேதுரு "எனது மகன் மாற்கு" என குறிப்பிடுவதால் இது உறுதிப்படுத்தப் படுகிறது. இக் குடும்பம் பரிசுத்த கிறிஸ்தவ குடும்பம் எனவும் (திப. 9:27) மாற்குவின் தாயான மரியா தனது வீட்டை ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடும் இடமாக பயன்படுத்தினார் எனவும் பேதுரு சிறையிலிருந்து விடுதலையாகியதும் நேராக இந்த வீட்டுக்குத்தான் வந்தாரெனவும் குறிப்பிடப்படுகிறது (திப. 12:12-17).

கி.பி 45-49ல் பர்னபா – பவுல் ஆகியோரால் இந்த யுகத்தில் வட பலஸ்தீனாவில் உள்ள அந்தியோக்கியாவில் மறைபணி ஆரம்பிக்கப்பட்டது. மாற்கு எருசலேமின் அந்தியோக்கியா நகருக்கு சென்றார் என்பது தெளிவாகிறது (திப. 12:25). பின்னர் பர்னபாவும் பவுலும் ஆயர் பதவி பெற்று சைப்பிரஸ் தீவுக்கு சென்றார்கள். (திப. 13:1-5) அதன் பின் சைப்பிரசிலிருந்து வெளியேறி (சின்ன ஆசியாவில்) பம்பிலியாவிலுள்ள பெருகை நகருக்கு சென்றார்கள்.

அங்கு ஏதோ (குடும்ப பிரச்சினை அல்லது பணியின் சிரமத்தினால்) மாற்கு வேறாக எருசலேமுக்கு சென்றார். (திப. 13:13) இந்த பிரிதலை பவுல் விரும்பவில்லை. அதனால் பின்னர் மேலும் மறைத்தூது பயணம் செல்ல ஆயத்தமாகும்போது மாற்குவுடன் செல்வதற்கு பவுல் விரும்பவில்லை. ஆயினும் அவரையும் அழைத்துக் கொண்டு செல்வதற்கு பர்னபாஸ் விரும்பினார். இந்த முரண்பாடுகளினால் இரு பயணங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. பவுல், சீலா ஆகியோர் சின்ன ஆசியாவுக்கும் பர்னபாஸ், மாற்கு சைப்பிரசுக்கும் சென்றனர். (திப. 15:36-41)

கி.பி 60லிருந்து மாற்கு பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு போதிய விடயங்கள் இல்லை. பிற்காலத்தில் அவர் பேதுருவுக்கு உதவியாகவிருந்தார் என (1பேதுரு 5:13)ல் குறிப்பிடப்படுகிறது. (இதில் பபிலோன் சபை என்பது உரோமை திருச்சபையையே குறிக்கிறது)

கி.பி 61-63ல் பவுலடியார் உரோமையில் சிறை வைக்கப்பட்டார். அவருக்கு மாற்கு உதவியதாக கொலோ. 4:10, பில 1:24ல் குறிப்பிடப்படுகிறது. கி.பி 64ல் மாற்கு உரோமையில் தம் நற்செய்தியை எழுதியிருக்கலாம். கி.பி 66-67ல் நீரோ திருச்சபைக்கு எதிராக செய்த கலாபனை காலத்திலே தூய பேதுரு இறந்திருக்கலாம். பவுலடியார் இரண்டாம் முறையும் உரோமையில் சிறைவைக்கப்பட்டார். இக் காலத்திலே சின்ன ஆசியாவின் எபேசு நகர ஆயரான திமோதிக்கு பவுலடியார் எழுதிய இரண்டாம் திருமுகத்தில் லூக்கா மட்டும் தன்னோடு இருப்பதாகவும் மாற்குவை அவருடன் அழைத்து வரும்படியாகவும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து மாற்கு அக் காலத்தில் சின்ன ஆசியாவிலே மறைபணி ஆற்றிக் கொண்டிருந்தார் என்பது புலனாகிறது. அவரைப் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கான இறுதி சான்று இதுவாகும்.

மாற்கு 14:51, 52ல் கெத்சமணி தோட்டத்தில் ஆடையின்றி தப்பி ஓடிய இளைஞன் பற்றி குறிப்பிடப்படுகிறது. அவர் மாற்குதான் என சிலர் கூறுகின்றனர். ஆயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்படி அதனை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது.

**கவனிக்க வேண்டியது**

* மாற்குவின் குடும்பத்தினர் எருசலேமின் ஆரம்ப கிறிஸ்தவர்களாயிருந்தால் இயேசுவின் போதனை, செயல் பற்றிய அறிவு அவர்களுக்கு இருந்திருக்கலாம்.

* பர்னபா, பேதுரு, பவுல் ஆகிய முக்கிய திருத்தூதர்களுடன் 20 வருடங்களுக்கும் மேலாக பழகியதால் மாற்கு, ஆரம்ப திருச்சபையில் கிறிஸ்தவ மறை பற்றிய அறிவைப் பெற்றிருக்கலாம். இதனால் அவரது சாட்சி உண்மையானது என ஏற்றுக் கொள்ளலாம்.

**4. நற்செய்தியின் ஒழுங்கமைப்பு**

இயேசுவின் தூதுப்பணி நிகழ்ந்த இடங்களையொட்டி தூய மாற்கு தமது நற்செய்தியை பூகோள வரைபுக்குள் எழுதியிருப்பது தெளிவாகிறது. கீழே காட்டப்படும் அமைப்பு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

| | |
|---|---|
| முன்னுரை | - மாற்கு 1:1-13 |
| திருமுழுக்கு யோவானின் போதனை | - மாற்கு 1:1-8 |
| இயேசுவின் திருமுழுக்கும் சோதனைகளும் | - மாற்கு 1:9-13 |
| கலிலேயாவில் பணி | - மாற்கு 1:14-66 |

- திருத்தூதரின் அழைப்பு
- முதல் அருங்குறி
- பரிசேயரின் முதல் எதிர்ப்பு, முக்கிய படிப்பினை
- நசரேத்தில் இயேசு புறக்கணிக்கப்படுதல் (6:1-6)
- இயேசுவின் திருத்தூதுப் பயணம் (மாற்கு 6:6-10:52)
- பன்னிருவரை அனுப்புதல் ( 6:7-12)
- கலிலேயா கடல் மீது நடத்தல் (6:31-7:23)
- மூன்றாம் பயணம் (7:28-8:12)
- நான்காம் பயணம் (8:13-9:50)
- எருசலேமில் போதனை (11:1-13:37)
- இயேசுவின் துன்பப்பாடுகள் (14:1-15:47)
- கிறிஸ்துவின் உயிர்ப்பு – (16:1-8)
- காட்சி கொடுத்தலும் இறுதி அறிவுரையும்.

மாற்கு 16:19-20 இறுதி வாக்கியம் இந்த வாக்கியம் சிலவேளை மாற்குவினால் எழுதப்பட்டதல்ல. ஆயினும் இறையூக்கத்தினால் எழுதப்பட்டதென கொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியது**

இயேசுவின் தூதுப்பணி அனைத்தின் ஆரம்பத்திலும் உள்ள வாக்கியத்தில் சிறப்பம்சம் உண்டு. (மாற்கு 1:14. 6:6. 7:24. 8:13. 10:1)

**5. பேதுருவின் சாட்சி**

மாற்கு எழுதிய நற்செய்தியில் விசேடத்துவம் உண்டு. அது கிறிஸ்துவினாலேயே தலைமைச் சீடராக்கப்பட்ட பேதுரு யேசு குறித்து பகிர்ந்த சான்று. இந்த சான்று பகிர்தல் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்பட்டது.

**(அ) பேதுருவானவர் முதலாவதாக கிறிஸ்துவைச் சந்தித்த சந்தர்ப்பம்**

| | |
|---|---|
| 1:16-18 | பேதுருவை இயேசு அழைத்தல். |
| 1:21-22 | கப்பர்நகூமுக்கு வந்து அதிகாரத்துடன் போதித்தல். |
| 1:23-28 | தீய ஆவி பிடித்தவரை குணப்படுத்தல். |
| 1:29-32 | பேதுருவின் வீட்டில் தங்கியிருத்தல். |

1:32-34 அன்றைய தினம் பல நோயாளர்களைக் குணப்படுத்தியமை.

1:35 இயேசுவின் செப வாழ்வு

1:36-39 நற்செய்தியை பறைசாற்றி, பேய்களை ஒட்டி ஊர் ஊராகச் சென்றமை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளில் மாற்குவின் நினைவாற்றல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்பற்றி அவர் அதிக ஆர்வத்துடன் போதித்துள்ளார்.

**(ஆ) சில நிகழ்வுகளில் பேதுருவானவர் பெற்ற அனுபவம்**

திருத்தூதர்கள் 12 பேரிலும் பேதுரு முதலிடம் வகித்தார். (5:37) இதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளின்படி பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் இயேசுவுடன் நெருங்கிப் பழகினார்கள்.

5:42 - யாயிரின் மகளை உயிர்ப்பித்தல்.
9:2 - இயேசு தோற்றம் மாறுதல்
13:3 - வரப்போகும் கேடுபற்றி அறிவித்தல்
14:32-37 - கெத்சமனித் தோட்டத்தில் இயேசு செபித்தல்

இவற்றை தமது கண்ணால் பார்த்த ஒருவரைத் தவிர மற்றவர்களால் போதித்திருக்க முடியாது. மேலும் பேதுருவானவர் இதைப் பற்றி உயிரோட்டமான முறையில் திருத்தூதரின் காலத்தில் போதித்திருக்கலாம்.

**(இ) தூய பேதுரு கிறிஸ்துவை விளித்ததைக் காட்டும் வார்த்தைகள்**

பேதுரு தம் ஆண்டவராகிய இயேசுவை விளித்த சில மேன்மையான வெளிப்பாடுகளை மாற்கு எமக்கு தந்துள்ளார்.

- ''நீங்கள் என்னை யாரென்று சொல்லுகிறீர்கள்?'' என்ற வினாவுக்கு பேதுரு மறுமொழியாக ''நீர் மெசியா'' என்றுரைத்தார்! (மாற்கு 8:29).

(கிறிஸ்து என்ற கிரேக்க சொல்லின் அர்த்தம் அபிஷேகம் செய்யப்பட்டவர். எபிரேய மொழியில் அது மெசியா என பொருள்படும். அதனால் பேதுரு ''நீர் மெசியா'' என வெளிப்படுத்தியிருக்கலாம்)

- தோற்றம் மாறும்போது ''ரபீ நாம் இங்கேயே இருப்பது நல்லது. நாம் மூன்று கூடாரங்கள் அமைப்போம்'' (9:5)
- இறையரசைப்பற்றி பேசும்போது ''பாரும் நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே'' (10:28)
- பட்டுப்போன அத்திமரத்தை கண்ட பேதுரு ''ரபீ அதோ நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று'' (11:21)
- இறுதி இராவுணவின்போது பேதுருவானவர் ''எல்லோரும் ஓடிப் போய்விட்டாலும் நான் அவ்வாறு செய்ய மாட்டேன்'' எனக் கூறினார். (14:29)
- (இவ்வார்த்தைகள் திருத்தூதர் அனைவருக்கும் பொதுவானது என மத்தேயு (12:20) கூறினாலும் மாற்குவுக்கு அது பேதுருவினால் சொல்லப்பட்டதாகும்)

**(ஈ) பேதுருவானவர் தன் பிழையை ஏற்றுக்கொள்ளல்**

பேதுருவின் சாட்சி வேறுவிதத்தில் மாற்கு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தனக்கு புகழ்ச்சி யைக் கொண்டு வரும் சில நிகழ்வுகளை பேதுருவானவர் வெளிப்படுத்தவில்லை ஆயினும் கடல்மீது நடத்தல் போன்றதை (மத்தேயு 14:28-31ல்), குறிப்பிடுகின்ற அதேவேளை மாற்கு அதனைக் குறிப்பிடவில்லை. அதற்கு பதிலாக பேதுருவின் பலவீனங்கள் காட்டப்படுகின்றன. பேதுருவைக் கடிந்து கொள்ளுதல் (மாற்கு 8:32-33) பேதுரு மறுதலிக்க இருப்பதை விளக்கத்துடன் குறிப்பிடுதல். (14:66-72 மாற்கு) போன்றவற்றை நாம் உதாரணமாகக் கொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியது**

மேற் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் பேதுருவின் வாழ்க்கை அனுபவங்கள் அவரது போதனையை உள்ளடக்கியதாய் அமைந்ததை விளக்குகிறது. அவ்வாறே அவற்றின் வழியாக மாற்கு இயேசுவின் வாழ்க்கையை எமக்கு அறிமுகப்படுத்துவதாக நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

**6. நற்செய்தியாளர் மாற்கு முன்வைக்கும் கிறிஸ்து.**

முக்கிய படிமுறைகள் இரண்டின் மூலம் மாற்கு இயேசுவை அறிமுகப்படுத்துகிறார். இந்த இரண்டு படிமுறைகளிலும் பேதுருவின் வாழ்க்கை மிக முக்கியமான நிகழ்வாகும். இந்த விடயங்கள் மூன்றும் கீழே காட்டப்படுகிறது.

**I. முதலாவது படிமுறை - கிறிஸ்துவைப்பற்றி வியப்படைதல்.**

கிறிஸ்து யாரென்பதை மக்கள் அறிந்திருக்கவில்லை. அவரது மேன்மையைப் பற்றி அவர்கள் வியந்தார்கள். அவர், தான் மெசியா என்றோ, கிறிஸ்து என்றோ வெளிப்படுத்தவில்லை. அவரை அறிந்தவர்களுக்கும் கூட அதனை வெளிப்படுத்த வேண்டாமென அவர் கடுமையாக சொல்லியிருந்தார்.

**வியப்படைதல் பற்றி உதாரணங்கள்**

- 1:22 - போதனையைக் குறித்து மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள்.
- 1:27 - அவர்கள் அனைவரும் திகைப்புற்று ………..
- 2:12 - ………… அனைவரும் மலைத்துப்போய் ''இதைப்போல் நாம் ஒருபோதும் கண்டதில்லையே''........
- 4:41 - அவர்கள் பேரச்சம் கொண்டு ………….. ''இவர் யாரோ?'' என்றனர்.
- 5:20 - பேய் பிடித்தவர் சுகமானதை அறிந்து அனைவரும் வியப்புற்றனர்.
- 7:37 - அவர்கள் அளவுகடந்த வியப்பில் ஆழ்ந்தவர்களாய் ''இவர் ……. காது கேளாதோர் கேட்கவும் பேச்சற்றோர் பேசவும் செய்கிறாரே'' என்றனர்.

**தனது தனித்துவத்தை வெளிப்படுத்தாதிருக்குமாறு கட்டளை**

- 1:43 - தொழுநோயாளர் நலம் அடைந்ததும் ''யாருக்கும் சொல்ல வேண்டாம்'' என கண்டிப்பாக கூறினார்.
- 3:11-13 - தம்மை வெளிப்படுத்த வேண்டாமென மிக கண்டிப்பாய் சொன்னார்.
- 7:36 - ……….. இதை எவருக்கும் சொல்லவேண்டாமென அவர் கட்டளையிட்டார்.
- 8:26 - பெத்சாய்தாவில் பார்வையற்றவர் நலம் பெற்றபின் ''ஊரில் நுழைய வேண்டாம்''என கூறினார்.

**கவனிக்க வேண்டியது**

அரசியல் மீட்பரை அல்லது மெசியாவை யூதர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆயினும் தமது மறையை அவர்கள் அரசியல் நிலையாக கொள்ளாதிருந்தமை போற்றப்பட வேண்டியதே. மக்களின் ஆன்மீக நலனையும் அதற்கு துணைபுரியும் ஆன்மீக செய்தியையும் அவர்கள் சரியாக அறிந்து கொள்ளச் செய்வது யேசுவின் முக்கிய பணியாக இருந்தது. அதன் பின்னரே தமது தனித்துவத்தை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

**II. பேதுருவினதும் சீடர்களினதும் மனநிலையில் மாற்றம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள்**

இத்தகைய மாற்றத்தை அவர் பேதுருவுடனும், சீடர்களுடனும் கலந்துரையாடலை ஆரம்பித்த பின்னரே ஏற்படுத்துகிறார். அத்தகைய கலந்துரையாடலுக்கு ஒரு கேள்வியே காரணமாக இருந்தது. ''நான் யாரென மக்கள் சொல்கிறார்கள்?'' என இயேசு வினா எழுப்பியபோது தரப்பட்ட பல்வித பதில்களின் பின்னர் தன்னைப் பற்றி சீடர்கள் சிந்திப்பதற்கு இரண்டாவது வினாவை எழுப்புகிறார். ''நீங்கள் நான் யாரெனச் சொல்லுகிறீர் கள்?'' இதற்கு பேதுரு விடையளிக்கிறார். ''நீர் மெசியா'' இவ்வாறு தமது தனித்துவம் பற்றிய வெளிப்பாட்டை சீடர்களிடமிருந்தே பெற்றுக் கொள்ளும் நிகழ்வு மாற். 8:27-30ல் குறிப்பிடப்படுகிறது.

இத்தகைய நிகழ்வு பேதுருவின் நினைவில் எத்தகைய நிலையை ஏற்படுத்தியிருக்கலாம் என ஊகிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் கிறிஸ்து, தான் மெசியா என்பதைக் காட்டுகிறார். மேலும் பேதுருவின் அறிக்கை அவரது வலிமையினால் சொல்லப்பட்டதல்ல, அது இறைவெளிப்பாடு என மத்தேயு 16:27ல் குறிப்பிடப்படுகிறது. இயேசு அரசியல் மீட்பராக அல்ல அதற்கு நேர்மாறான மெசியா என சீடர் விளங்கிக் கொண்டனர்.

**III இரண்டாம் படிமுறை - தான் மானிட மகன் என வெளிப்படுத்தல்.**

மெசியாவின் தூதுப்பணியை விளக்குவதற்கு இயேசு ''மானிட மகன்'' என்ற சிறப்பு பெயரைப் பயன்படுத்துகிறார். (மானிட மகனுக்கு அரமாயிக் மொழியில் ''பார் எனோஸ்'' என கூறுவர்) தானியேல் இறைவாக்கினர் நூலில் 7:13ல் அவரைப்பற்றி குறிப்பிடப்படுகிறது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள மானிட மகன் வானத்தில் முகில்களுடன் வருபவர். ஆட்சி அதிகாரம் மதிப்பு, அரசு உடையவர், ஆயினும் கிறிஸ்து கூறும்

மானிட மகன் பல துன்பங்களை அனுபவிப்பவர், ஏற்றுக்கொள்ளப்படாதவர். மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தவர். (மாற். 8:31) மானிட மகனுக்கு இத்தகைய கருத்தை கிறிஸ்து இணைக்கக் காரணம் எசாயாவின் நான்காவது பாடலில் குறிப்பிடப்படும் துன்புறும் ஊழியன் பற்றிய இறைவாக்கிற்காகும். (எசா. 5:13, 53:12) இவ்வாறு கிறிஸ்து மானிட மகன் என்னும் சொல்லை பயன்படுத்தும்போது அதற்கு தானியேல் இறைவாக்கில் குறிப்பிடப்படும் மேன்மையான நிலை எசாயாவின் நான்காம் பாடலின் கருத்தான துன்புறும் ஊழியனின் இயல்பை உள்ளடக்குகிறது. மேலும் கிறிஸ்து ‘‘மனுமகன்’’ என்ற பெயரைத் தனக்கு மட்டும் பயன்படுத்துகிறார். ‘‘மானிட மகன் மிகுந்த வல்லமையோடும் … வருவதைக் காண்பார்கள்’’ என்பதாகும்.

கீழே காணப்படும் வாக்கியங்களில் ‘‘மானிட மகன்’’ என்னும் அடைப் பெயரை தனக்கே பயன்படுத்தி கிறிஸ்து எதனை முன்வைக்கிறார் என மாற்கு விளக்குகிறார்.

- 8:31 - மானிடமகன் மிகவும் துன்பப்படவும் ………….. உதறித்தள்ளப்படவும், கொலை செய்யப் படவும் ………. உயிர்த்தெழவும் வேண்டும்’’ என.
- 8:38 - ……… மானிட மகனும் ……….. மாட்சியோடு தூய வானதூதருடன் வரும்போது வெட்கப்படுவார்.
- 9:12 - ……….. மானிட மகன் பல துன்பங்கள் படவும் இகழ்ந்து தள்ளப்படவும் வேண்டும்.
- 9:31 - மானிட மகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார், அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள், …….. உயிர்த்தெழுவார்.
- 10:33 - நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார்.

(மாற்கு 10:45. 13:26, 14:41, 14:61-62 போன்ற அதிகாரங்களை வாசித்தறியவும்)

இதன்படி பார்க்கும்போது மாற்கு, முறையாக கிறிஸ்துவைத் தமது நற்செய்தியில் அறிமுகப்படுத்துவது காட்டப்படுகிறது. இந்த படிமுறைகள் இரண்டும் பேதுருவானவர் கிறிஸ்துவைப் பற்றி செய்த தியானமாக இருக்கலாம். முதலாவது அவர் கிறிஸ்துவையிட்டு மலைத்துப் போயிருக்கலாம். இரண்டாவது இயேசு உண்மையான மெசியா என புரிந்து கொண்டிருக்கலாம். (முக்கிய ஆன்மீக நிகழ்வு) பின்னர் தன் ஆண்டவரின் மறைத்தூதுப் பணியை (மேலே கூறப்பட்ட மானிடமகனின் தூதுப்பணி) படிப்படியாக புரிந்து கொண்டிருக்கலாம்.

### 7. தூய மாற்கு நற்செய்திக்கே உரித்தான சிறப்பான பகுதிகள்

தூய மாற்கு எழுதிய நற்செய்தி மற்ற அனைத்து நற்செய்திகளையும்விட மிகவும் குறுகியதாகும். அதில் அவர் கிறிஸ்துவின் சொல்லைவிட செயலுக்கு முதலிடம் கொடுக்கிறார். (மற்ற சமநோக்கு நற்செய்திகளில் இல்லாத பகுதி இங்கு மிக குறைவாக இருக்கிறது). இதிலுள்ள எல்லா விடயங்களும் பெரும்பாலும் மற்ற சமநோக்கு நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மட்டும் காணக்கூடிய நிகழ்வுகள் பின்வருமாறு.

- 3:20-21 இயேசுவின் உறவினரது கவலை.
- 4:26-27 முளைத்து தானாக வளரும் விதை உவமை
- 7:31-37 ஊமையும் செவிடுமான மனிதர் நலம் பெறுதல்.
- 8:22-26 பெத்சாயிதாவில் பார்வையற்றவர் நலம் பெறுதல்.
- 14:51-52 கெத்சமனியில் தப்பியோடிய இளைஞர்.

### 8. தூய மாற்கு நற்செய்தியின் விசேட பண்புகள்

**அ)** மற்றைய நற்செய்தியாளர்கள் குறிப்பிடுவனவற்றையே மாற்கு குறிப்பிட்டாலும், அவர் அதை நன்கு விளக்கியுள்ளார். மத்தேயு 9:1-8, மாற்கு 2:1-12 ஆகியவற்றில் குறிப்பிடப்படும் முடக்குவாதமுற்றவரை சுகப்படுத்தும் நிகழ்வை முதலில் ஒப்பிட்டுப்பார்ப்போம். சில சந்தர்ப்பங்களில் மாற்கு மேலதிக விடயங்களையும் தருகிறார்.

- காற்றையும், கடலையும் அடக்கியபோது இயேசு படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்ததாக (மாற்கு 4:38, மத்தேயு 8:24 லூக் 8:23)

- யாக்கோபு, யோவான் ஆகியோருக்கு ‘‘இடியைப் போன்றோர்’’ என்று கூறுவது. (மாற்கு 3:17, மத்தேயு 10:2 லூக் 6:14)
- எரிக்கோவில் பார்வையற்றவருக்கு பர்த்திமேயு என்ற பெயர் இருந்ததாக (மாற்கு 10:46, மத் 20:29 லூக் 18:35)
- கை சூம்பியவரை சுகப்படுத்தும்போது கிறிஸ்து சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப்பார்த்த தாக. (மாற்கு 3:5, மத்தேயு 12:11, லூக் 6:9)
- சிறு பிள்ளைகளுக்கு ஆசீர் வழங்கும்போது அவர்களை அரவணைத்து தம் கைகளை அவர்கள்மீது வைத்து ஆசி வழங்கியதாக (மாற். 10:13-16, மத். 19:13-15 லூக் 13:15-17)

**ஆ)** தூய மாற்கு தனது நற்செய்தியை சிறு குழந்தை ஒன்று, கதை கூறுவதைப்போல எழுதியுள்ளார். (‘‘அங்கே’’, ‘‘அப்பொழுது’’, ‘‘மேலும்’’ போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை நிறுத்தாது, சொல்வதற்கான ஆசையைக் காட்டுகிறார்.)

**இ)** இயேசுவின் வாழ்வில் - அவரது மனிதத்துவத்தை அழுத்திக் காட்டுகிறார். இந்த கருத்து அவரது நற்செய்தியில் எவ்வளவு தூரம் முனைப்பாக காட்டப்படுகிறதென்றால் மாற்குவிற்குப் பின்னர் எழுதிய நற்செய்தியாளர்கள் அவர் எழுதியவற்றை எழுதுவதற்கு பயந்தாற்போல் அப்பகுதியை எழுதும்போது சிற்சில மாற்றங்களைச் செய்தார்கள். உதாரணமாக மாற்குவிற்கு இயேசு சாதாரண தச்சர். (மாற்.6:3) மத்தேயுவிற்கு தச்சரின் மகன் (மத்தேயு 13:55). இயேசு சோதிக்கப்படும்போது ‘‘தூய ஆவியால் பாலை நிலத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்’’ என மாற்கு கூறுகிறார் (1:12). ஆனால் மத்தேயுவும் லூக்காவும் அதனை சிறிது மெருகூட்டி தூய ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார் என குறிப்பிடுகின்றனர். (மத். 4:1, லூக். 4:1)

மாற்குவைப்போல வேறெவருமே யேசுவின் உள் உணர்வுகளைக் குறிப்பிடவில்லை. ‘‘பெருமூச்சுவிட்டு’’ (7:34, 8:12) பரிவு கொண்டு (6:34), சினம், கடிந்துகொள்ளல், கோபம் (3:5, 8:33, 10:14) பற்றி குறிப்பிடுவ துடன் அன்புடன் (10:21) பரிவும் (6:34) உடையவர்களைப்போல மற்றவர்களின் பசி, பலவீனத்தை புரிந்து கொள்ளும் (8:2-3). எம்மைப் போன்ற ஒருவராகவே மாற்கு இயேசுவை முன்வைத்தார்.

## 3.10 மத்தேயு நற்செய்தியின் அறிமுகம்

### 1. பெயர்

மத்தேயு, சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்தபோது அழைக்கப்பட்டார். (மத். 9:9-13) மாற். 2:13-17, லூக் 5:25-32ன்படி அவரின் பெயர் லேவி. சீமோனின் பெயர் பேதுரு என மாற்றம் பெற்றதுபோல லேவியின் பெயரும் மாற்றம் பெற்றிருக்கலாம். எபிரேய மொழியில் ‘மதித்யாஹா’ அல்லது ‘மத்தன்யாஹா’ (ஆண்டவரின் அன்பளிப்பு) ஆகிய சொற்களின் சுருக்க பெயரான எபிரேய மொழியில் மத்தாய், கிரேக்க மொழியில் மத்தசியோஸ் என கொள்ளப்படுகிறது.

#### 2. ஆசிரியத்துவம்

##### அ) புறச்சான்று

திருத்தூதர் மத்தேயு இயேசுவின் போதனைகளை அரமேய மொழியில் எழுதினார் என ‘‘ஹியெரோபொலிஸ்’’ ஆயர் பாபியாஸ் (கி.பி 130ல்) குறிப்பிடுகிறார். தூய இரேனியுஸ் (கி.பி 180ல்) இவ்வாறு கூறுகிறார். தூய மத்தேயு பலஸ்தீனாவில் யூதருக்குப் போதித்தார். பேதுருவும் பவுலும் உரோமையில் போதித்து திருச்சபையை அங்கு ஏற்படுத்துகின்ற காலத்தில் தூய மத்தேயு யூதர்களின் மொழியில் நற்செய்தியை எழுதினார்.

தேர்த்தூலியன் (160-240) அலெக்சாந்திரியாவில் கிளமென்ட் (150-215) ஒரிஜன் (186-254) பென்டாவெயுஸ் (200) சக்கராயாவில் அயுசேபியஸ் (265-340) ஆரம்ப திருச்சபையில் பண்டைய எழுத்தாளர் பலரும் தூய இரனியசின் சான்றை உறுதிப்படுத்துகின்றனர்.

##### ஆ) அகச்சான்று

**நற்செய்தியை வாசிக்கும்போது கீழே காணப்படும் விடயங்கள் வெளிப்படுகிறது.**

* மத்தேயு இயேசுவின் நெருங்கிய சீடராவார்.

* அவருக்கு பலஸ்தீனா பற்றிய பரந்த அறிவுண்டு.
* யூத சடங்கு சம்பிரதாயங்கள் பற்றிய தனிப்பட்ட அறிவுண்டு.
* பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்திருந்த, திறமை மிக்க ஆசிரியர்.

**3. காலம்**

தூய இரனேயுஸ் மட்டும் காலம் பற்றி சாடையாக சொல்கிறார். பேதுருவும் பவுலும் உரோமையிலிருந்த காலத்தில் மத்தேயு நற்செய்தியை எழுதியதாக கூறுகிறார். அதனால் அவரது கருத்துப்படி கி.பி 68ம் ஆண்டுக்கு முன் நற்செய்தி எழுதப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் அகச் சான்றின்படி அது எருசலேம் அழிவுக்குப் பின் (கி.பி 70) எழுதப்பட்டிருக்கலாம் என்பது பலபேரின் கருத்தாக இருக்கிறது.

**4. இடம்**

பலஸ்தீனாவில் யூத சடங்கு சம்பிரதாயங்கள் பற்றிய பரந்த அறிவு தூய மத்தேயுவுக்கு இருந்தது தெளிவாகிறது. நற்செய்தியில் குறிப்பிட்டுள்ள பூகோள இடம் பெரும்பாலும் கலிலேயாவாகும். ஆனால் அது கி.பி 70க்கு பின்னர் எழுதப்பட்டிருந்தால் பலஸ்தீனாவுக்கு வெளியில் எழுதப்பட்டிருக்கலாம். பலரது எண்ணப்படி சிரியாவின் அந்தியோக்கியாவில் எழுதப்பட்டிருக்கலாம். இது யூதரும் பிற இனத்தவரும் சந்தித்த இடமாகும். அவ்வாறே சட்டத்திற்கும் நற்செய்திக்குமிடையில் பல முரண்பாடுகள், பிரச்சனைகள் உருவான இடமுமாகும். (இது பற்றி லூக்காவின் வாழ்க்கை கதையில் பின்னர் குறிப்பிடப்படுகிறது)

**5. நற்செய்தியின் பொதுவான அமைப்பு**

கிறிஸ்து, புதிய மோசே, எதிர்பார்த்திருந்த மெசியா, ஆசான் என முன்வைப்பதே மத்தேயுவின் தேவையாக இருந்தது. இதனால் அவர் விடயங்களை ஐந்து முக்கிய போதனைகளில் (மோசேயின் பஞ்ச நூல் போன்று) தொகுக்கிறார். அத்துடன் கிறிஸ்துவைப் பற்றிய விடயங்களை முன்வைக்கிறார்.

**I. முன்னுரை 1:1 - 2:23**

கதைகள் மூலம் போதனை

- மூதாதையர் பட்டியல் - 1:1-17
- இயேசுவின் பிறப்பு - 1:18-25
- ஞானிகளின் வருகை - 2:1-12
- எகிப்துக்கு தப்பியோடுதல்,
  குழந்தைகள் படுகொலை - 2:13-23

**II. முதல் நூல் - விண்ணரசு பறைசாற்றப்படல் 3:1 - 7:27**

- பணித் தொடக்கம் - 3:1-4:25
- மலைப் பொழிவு - 5:1-7, 29
- இறையரசின் புனிதத்துவம் -

**III.இரண்டாவது நூல் - கலிலேயவில் பணி 8:1 - 11:1**

- கிறிஸ்துவின் அதிகாரமும், அன்பும் வெளிப்படுத்தப்படல் - 6:19-34
- மறைப்போதனை, இறையரசை பரப்பும் மறைத்தூதுப் பணி - 9:35-11:1

**IV.மூன்றாம் நூல் - விவாதங்களும், உவமைகளும் 11:2-13:52**

- யூதர்களின் அவிசுவாசமும், எதிர்ப்பும் - 11:2-12:50
- இறையரசின் உவமை - 13:1-52

**V. நான்காவது நூல் - திருத்தூதரின் பயிற்சி 13:52-18:35**

- எருசலேம் பயணத்திற்கு முன்னைய நிகழ்ச்சி - 13:53-17:27
- திருச்சபையைப் பற்றிய போதனை - 18:1-35

**VI. ஐந்தாவது நூல் - யூதேயாவும் எருசலேமும் 19:1-25:46**

- எருசலேம் பயணமும் நிகழ்வுகளும் - 19:1-23:29
- உலக முடிவுபற்றிய போதனை - 18:1-35

**VII. புதிய ஏற்பாட்டில் விண்ணரசை ஆரம்பிப்பதற்காக தம் வாழ்வை அர்ப்பணித்தல் 26:1-27:66**

**VIII. உயிர்ப்பும் விண்ணரசின் ஆரம்பமும் 28:1-20**

**கவனிக்க வேண்டியது**

எல்லாப் போதனைகளும் ஒரு வாக்கியத்திலேயே முடிவடைகிறது. ''இவ்வாறு உரையாற்றி முடித்தபோது'' (7:28, 11:1, 3:53, 19:1, 26:1)

**6. நற்செய்தியின் நோக்கமும், அடிப்படைத் திருமறையும்**

பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்ட மெசியா, இயேசுவே என பலஸ்தீன யூதருக்கு காட்டுவதே தூய மத்தேயுவின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதனை பல்வேறு விதங்களில் அவர் காட்டுகிறார்.

**(i) இயேசு தாவீது வம்சத்திலிருந்து வந்தவர்** (2 சாமு 7:8 - 16, மத்தேயு 1:1,6, 17,20)
அவர் தாவீதின் மகன் (மத்தேயு 9:27, 12:23, 15:22, 20:30-32,, 2:9,15)

**(ii) இயேசு புதிய மோசே** (இச 18-15-19) பழைய சட்டங்கள் சீனாய் மலையில் கொடுக்கப்பட்டது போல புதிய சட்டம் மலையின்மேல் (மலைப் பொழிவு) அளிக்கப்பட்டது. (மத்தேயு 5:1) பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கையில் நிறைவுறுகிறது. (மத்தேயு 5:17-20,21) உருமாற்றத்தின்போது முன்னடையாளமாக மோசேயும் காட்சி அளித்தார். (மத்தேயு 17:3-4) மணவிலக்கு பற்றிய மோசேயின் சட்டத்தை கிறிஸ்து நிராகரித்தார். (மத் 19:3-9).

**(iii) மெசியா பற்றிய இறைவாக்கு இயேசுவில் முழுமை பெற்றது.**

**(iv) இயேசு வல்லமை கொண்ட மெசியா ஆவார்.**

- இறைவனுடன் சமமானவர் என பல விதங்களில் காட்டப்படுகிறது.
- இயேசு கோயிலிலும் (12:6) யோனா, சலமோனிலும் (12:42) தாவீதிலும் மேலானவர். (22:46)
- இறைவனால் மட்டும் செய்யக் கூடியதான காற்றையும் கடலையும் அடக்குதல். (8:23-27. யாயிரின் மகளை உயிர்ப்பித்தல் (9:23-25) இயேசு தன் மகனென தந்தை இறைவன் சான்று பகர்தல் (3:17, 17:5)
- தந்தை அறிந்த அனைத்தையும் இயேசுவும் அறிவார் (11:27)
- எல்லா மனிதரும் திருமுழுக்குப் பெறும்போது, இயேசு, தந்தை, தூய ஆவியுடன் ஒரே இறைவனாய் அங்கே இருக்கிறார். (28:19)

**(v) இறையரசை இயேசு ஆரம்பித்தார்**

யூத மரபின்படி ''தேவ'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாது அதற்கு ''விண்ணரசு'' என்று சொல்லப் பட்டது. இந்த அரசைப்பற்றி போதனைகள் ஐந்திலும் (1. விண்ணரசு பறைசாற்றப்படல், 2. விண்ணரசுப் பணி, 3. விண்ணரசின் தன்மை, 4. விண்ணரசின் அமைப்பு, 5. விண்ணரசின் வருகை) குறிப்பிடப்பட்டிருப் பதோடு அந்த அரசிற்குரியவர்களுக்கு இருக்க வேண்டிய மறைப் பண்புகளை இயேசு விபரித்தார்.

**கவனிக்க வேண்டியது**

1. தூய மத்தேயு 41 முறை பழைய ஏற்பாட்டிலிருந்து வசனங்களை எடுத்துக் காட்டியுள்ளார். இதில் 21 முறை தூய மாற்கும் தூய லூக்காவும் குறிப்பிட்டுள்ளனர். தூய மத்தேயு மட்டும் 20 முறை குறிப்பிட்டுள்ளார். இந்த 20ல் 10 புதிய ஏற்பாட்டில் வேறெந்த நூல்களில் குறிப்பிடப்படவில்லை.

2. தூய மத்தேயு பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துள்ள 41 வசனங்களில் 38 வசனங்கள் ''கூறியது நிறைவேறு வதற்காக'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் கருத்து ஏதாவது ஒரு உண்மை முழுமையை நோக்கி வருதலே ஒழிய முன்னர் கூறப்பட்டது நிறைவேறுதல் மட்டும் அல்ல.
(உ+ம் 1:22 ….. நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன.)

| இறைவாக்குகள் | | | நற்செய்தி |
|---|---|---|---|
| எசாயா | 7:14 | கன்னியிடமிருந்து பிறந்தார் | - மத்தேயு 1:22-23 |
| ஓசியா | 11:1 | எகிப்துக்கு தப்பியோடல் | - மத்தேயு 2:15 |
| எரேமியா | 31:15 | குழந்தைகள் படுகொலை | - மத்தேயு 2:18 |
| எசாயா | 9:1-2 | கலிலேயாவின் பணி | - மத்தேயு 4:15-16 |
| எசாயா | 53:4 | குணப்படுத்தும் புதுமை | - மத்தேயு 8:17 |
| எசாயா | 42:1-4 | அமைதியான தலைவர் | - மத்தேயு 12:17-21 |
| எசாயா | 6:9-10 | மக்களின் குருட்டுத்தன்மை | - மத்தேயு 13:17 |
| திருப்பாடல் | 78:2 | உவமைகளின் மூலம் போதனை | - மத்தேயு 13:18 |
| செக்கரியா | 9:9 | கழுதைக்குட்டியாகிய மறியின் மேல் | - மத்தேயு 21:4-5 |
| செக்கரியா | 11:12 | | அமர்ந்து வருகை தருதல் |
| எரேமியா | 32:6-15 | யூதாஸ் காட்டிக் கொடுத்தல் | - மத்தேயு 27:9-10 |
| எரேமியா | 18:1-2 | | |

7. **தூய மத்தேயு நற்செய்திக்கே உரித்தான விடே பகுதிகள்**

**அ) இயேசுவின் பகிரங்க வாழ்வைப் பற்றி**

9:27-31 - குருடர் இருவர் நலம் பெறல்
16:17-19 - பேதுருவுக்கு தலைமைத்துவம் வாக்களிக்கப்படல்
17:24-28 - இயேசு வரி செலுத்துதல்
27:3-10 - யூதாசின் தற்கொலை
27:62-66 - இயேசுவின் கல்லறையை காவல் செய்யுமாறு கட்டளை
1:2 - இயேசுவின் குழந்தைப் பருவம்
28:9-20 - உயிர்ப்பைப்பற்றிய சான்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆ) உவமைகள்**

5:14 - மலைமேல் இருக்கும் நகர்
7:6 - முத்துக்களை பன்றிகளுக்கு முன் வீசுதல்
7:15 - போலி இறைவாக்கினர்
13:24-30 - வயலில் தோன்றிய களைகள்
13:44 - புதையல் உவமை
13:45-46 - முத்து உவமை
13:47-48 - வலை உவமை
13:52 - வீட்டு உரிமையாளரும் கருவூலமும்
18:23-35 - மன்னிக்க மறுத்த பணியாளன்
20:1-16 - திராட்சைத் தோட்டத்து ஊழியன்.
21:28-31 - இரு புதல்வர்கள் உவமை
25:1-13 - பத்துக்கன்னியர் உவமை
25:31-46 - மக்களினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு.

**இ) அறிவுரை**

5:23-24 - பலிக்கு முன் ஒற்றுமையாகுதல்
5:33-37 - ஆணையிடுதல்
6:1-8, 16-18 - அறச்செயல்கள், நோன்பு இருத்தல்
11:28-30 - இயேசு தரும் இளைப்பாறுதல்
18:15-20 - திருச்சபையினுள் அதிகாரம் பலம்
19:10-12 - மணவிலக்கு

**8. நடைமுறை**

இயேசுவின் வாழ்க்கை நிகழ்வுகளைவிட அவரது படிப்பினைகளை முனைப்பாக காட்டுவதில் தூய மத்தேயு அக்கறை காட்டுகிறார். அவரது நற்செய்தியில் இயேசுவின் போதனைகளுக்கே முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளது. அதற்கான பின்னணியை ஒழுங்கமைப்பதற்காக மட்டும் கதை பகுதியை எடுத்து புகுத்தியுள்ளார்.

கிறிஸ்து பல சந்தர்ப்பங்களில் கூறியவற்றை ஒன்றிணைத்து மத்தேயு மலைப் பொழிவாக முன்வைக்கிறார். நிகழ்வுகளைக் குறிப்பிடும்போது அவர் சுருக்கமாக விளக்குவதற்கு முயற்சிக்கிறார். உதாரணமாக முடக்குவாதமுற்றவரை குணப்படுத்தும் நிகழ்வை தூய மாற்கு விளக்கமாக கூறுகின்ற அதே வேளை (மாற் 2:1-12) தூய மத்தேயு நான்கு வாக்கியங்களில் சுருக்கமாக விளக்குகிறார் (மத் 9:1-8). அந்த அருங்குறியின்போது மக்கள் திரண்டிருந்ததாகவும் நால்வர் நோயாளியை சுமந்து கொண்டு வந்ததாகவும் அவரைக் கீழே இறக்கியதாகவும் தூய மத்தேயு குறிப்பிடவில்லை.

**அவ்வாறே கீழ் காணும் நிகழ்வுகளை ஒப்பிட்டு பார்க்கலாம்**

| நிகழ்வுகள் | | மத்தேயு | மாற்கு |
|---|---|---|---|
| • யாயிரின் மகளை குணப்படுத்தல். | - | 9:18-26 | 2:1-12 |
| • கதரேனர் பகுதியில் பேய் பிடித்த இருவர் நலமாகுதல் | - | 8:28-34 | 5:2-20 |
| • திருமுழுக்கு யோவான் கொல்லப்படுதல் | - | 14:1-12 | 6:14-29 |
| • பேய் பிடித்த சிறுவனைக் குணமாக்கல் | - | 17:14-21 | 9:14-29 |
| • முதன்மையான கட்டளை | - | 22:35-40 | 12:28-34 |
| • பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தல் | - | 26:17-20 | 14:17-21 |

தூய மத்தேயு கிறிஸ்துவின் வாழ்க்கை பற்றிய முழுமையான அறிவை முன்வைக்கிறார். ஆனால் கிறிஸ்து, எல்லா மக்கள் சமூகத்திலும் மேன்மையான ஆசிரியர் என காட்டுவதிலேயே மத்தேயு முனைப்பாக இருக்கிறார். இவர் யூத மக்களுக்காக தன் நற்செய்தியை எழுதியதால் யூதரின் மொழி நடையை இவரது நற்செய்தியில் பயன்படுத்துகின்றார். யூதர், ஆண்டவரின் பெயருக்கு மதிப்பளிப்பதற்காக (இச 5:11) அவரது பெயரை உச்சரிக்காது, தேவையான வேளைகளில் வேறு விதத்தில் அவரைப் பற்றி கூறினார்கள். தூய மத்தேயுவும் அத்தகைய மொழி நடையைப் பயன்படுத்தி 'ஆண்டவர்' என்று கூற வேண்டிய இடத்தில் 'விண்ணரசு' என்றும் (4:17, 17:11, 21:25), வல்லவர் என்றும் (26:64), மாட்சியுடன் வந்து ஆண்டவரின் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பவர் என்றும் (25:31), ஆண்டவர் போற்றப் பெறுவாராக என்பதற்கு பதிலாக "உமது பெயர் போற்ற.." (6:9) என்றும், ஆண்டவருக்கு ஓசானா என்பதற்குப் பதிலாக "உன்னதத்தில் ஓசானா" (21:9) என்றும் குறிப்பிடுகிறார். இது முற்றிலும் யூத மொழி நடையாகும்.

ஆண்டவரின் பெயரை உச்சரிக்காதிருப்பதற்கும் யூதர் இன்னும் ஒரு முறையைப் பயன்படுத்தினானார்கள். அது குறிப்பிட்ட வாக்கியத்தை செயற்பாட்டு வினையாக மாற்றினார்கள். அவ்வாறு மாற்றப்படும்போது அந்த வாக்கியத்தின் ஆசிரியர் ஆண்டவரே என அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

**கீழே காணப்படும் உதாரணங்கள் வழியாக அது காட்டப்படுகிறது.**

| வாக்கியம் | | கருத்து |
|---|---|---|
| • துயருறுவோர் போறு பெற்றோர். அவர்கள் ஆறுதல் பெறுவர். (5:4) | - | இவ்வுலகில் துயருறுவோருக்கு ஆண்டவர் ஆறுதல் தருவார். |
| • இரக்கமுடையோர் பேறு பெற்றோர் அவர்கள் இரக்கம் பெறுவர். (5:7) | - | இரக்கமுடையோருக்கு ஆண்டவர் இரக்கம் காட்டுவர். |
| • அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்பொழுது இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும். (6:33) | - | ஆண்டவரின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, தூய்மையான வாழ்வு வாழ்வதற்கு முதலிடமளித்தால் மற்ற அனைத்தும் உங்களுக்கு கொடுக்கப்படும். |

| | |
|---|---|
| • தீர்ப்பு அளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள் (7:1) | - நீங்கள் பிறரை தீர்ப்பிடும் விதத்திலேயே ஆண்டவரும் உங்களைத் தீர்ப்பிடுவார். |
| • நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். (7:2) | - நீங்கள் மற்றவர்களுக்கு தாராள மனப்பான்மையுடன் கொடுக்கும் அளவுக்கு ஆண்டவரும் உங்களுக்கு கொடுப்பார். |

# நான்காம் பாடம்

## 4. தூய லூக்கா நற்செய்தி

### 4.1 அறிமுகம்

நற்செய்தி நூல்களின் தொடர்வரிசையின்படி தூய லூக்கா நற்செய்தி மூன்றாம் நற்செய்தியாக அறிமுகப் படுத்தப்படுகிறது. தூய லூக்கா இந்த நூலை எருசலேம் ஆலய அழிவின் பின்னரே தொகுத்து எழுதியிருக்கக் கூடும் என ஆராய்சியாளர்கள் பலர் எடுத்துக்காட்டி உள்ளனர். அதன்படி கி. பி. 80-85ல் எழுதப்பட்டிருக் கலாம். பலஸ்தீனாவிற்கு அப்பால் புறவினத்தார் வாழ்ந்த சூழலில் எழுதப்பட்டிருக்கலாம் என நற்செய்தி நூலிலும், திருதூதர்பணியிலும் காட்டப்படுகிறது. இதற்கான சூழல் அந்தியோக்கியா நகருக்கு அண்மையில் அமைந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

**ஆசிரியர் இந்நூலை எழுதியதற்கான நோக்கங்கள் இரண்டினை இங்கு காண்கிறோம். அவை,**

1. கிறிஸ்துவைப் பற்றிய வரலாறு முன்வைக்கப்படுகிறது. அதில் பிற இனத்தவரும் விளங்கக்கூடிய விதத்தில் வரலாற்றுடன் தொடர்புடைய கருத்துக்களை இணைத்து அந்த பின்னணியில் விளக்கம் முன்வைக்கப் படுகிறது. அது கிறிஸ்வுவைப்பற்றிய வரலாற்று கண்ணோட்டத்தை முன்வைக்கிறது.
2. இயேசுவைப் பற்றி எழுதப்படாத விடயங்களை முன்வைத்தலாகும். இயேசுவின் தூதுப் பணியை ஒரு பயணமாக காட்டுகிறார். ‘‘தொடக்கத்திலிருந்தே கருத்தாய் ஆய்ந்து நீர் கேட்டறிந்தவை உறுதியானவை எனத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அவ்றை ஒழுங்குபடுத்தி உமக்கு எழுதுவது நலமெனக் கண்டேன்.’’ (லூக் 1:1-4)

பழைய ஏற்பாட்டு வாக்குறுதியை நிறைவேற்றி இவ்வுலகில் அனைவருக்கும் விடுதலையை பெற்றுக் தந்த இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் போதிப்பதோடு அவரது முன்மாதிரிகையான வாழ்வை காட்டுதலுமே இந் நற்செய்தியின் நோக்கமாகும். இயேசு அனைவரினதும் மீட்பர் என்ற கருத்தை இந் நற்செய்தி மூலம் தூய லூக்கா முன்வைக்கிறார்.

### 4.2 தொடக்கம்

தூய பவுலடியார் சைப்ரஸ் தீவில் சிறைப்பட்டிருந்த 2 வருட அளவிலான காலத்தில் கிறிஸ்துவைக் கண்டு அவருடன் பழகிய பலரை சந்திக்கக் கூடிய வாய்ப்பு புனித லூக்காவுக்குக் கிடைத்தது. சமாரிய நாட்டு திருத்தூதரான திருத்தொண்டர் பிலிப்புவை அவர் சந்தித்திருக்கலாம். சமாரியாவைப் பற்றி தூய லூக்காஸ் மட்டும் குறிப்பிடும் சில விடயங்களை (9:52-56, 17:11-19) அவர் வழியாக அறிந்திருக்கலாம். அவ்வாறே மனஸ்தாபப்பட்ட பாவிப் பெண்ணை பற்றிய செய்தியை (7:36-50) இச்சொற்ப காலத்திற்குள் அவர் பெற்றிருக் கலாம் என நம்பப்படுகிறது.

மேலும் தகவல்களை லூக்கா பெற்றுக் கொள்வதற்கும் அவரது எண்ணங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் முக்கிய காரணியாய் அமைந்தது, தூய பவுலுடன் பழகக் கிடைத்தமையேயாகும். அதனை நற்செய்தியில் பல இடங்களில் காண்கிறோம். (7:9, 10:7-39, 11:13, 17:7-10, 18:1, 14.21:19, 28:34) மீட்பு யூதர்களுக்கு மட்டுமல்ல அனைத்து மக்களுக்குமே என்பது லூக்கா நற்செய்தியில் காட்டப்படுவதன் பின்னணியில் தூய பவுல் உள்ளார் என்பது தெளிவாகிறது.

வாய்மொழி பாரம்பரியத்தால் மட்டும் தூய லூக்கா ஊட்டம் பெறவில்லை. பல எழுத்துக் கோர்வைகளில் இருந்தும் விசேடமாக தூய மாற்கு எழுதிய நற்செய்தியில் இருந்தும் பல முக்கிய விடயங்களை அவர்

பெற்றிருந்தார். லூக்கா நற்செய்தியில் அடங்கி உள்ள வாக்கியங்கள் 150ல் மூன்றில் ஒரு பகுதி மாற்கு நற்செய்தியில் இருந்து பெறப்பட்டவையாகும்.

தூய லூக்கா நற்செய்திக்கு ஆதாரமான நூல் மத்தேயுவின் நற்செய்தியாகும். சிறப்பாக – கிறிஸ்து கூறியவற்றை சொல்லும்போது பலவேளைகளில் மத்தேயுவும் லூக்காவும் வசனத்திற்கு வசனம் ஒரே மாதிரி குறிப்பிடுகின்றனர். இதிலிருந்து மத்தேயும் லூக்காவும் ஒரே ஊற்றிலிருந்து விடயங்களைப் பெற்றிருப்பதை அறிகிறோம்.


**சில உதாரணங்களை இங்கு குறிப்பிடலாம்.**

| **லூக்கா** | **மத்தேயு** |
|---|---|
| 9:7-9 | 14:1-12 |
| 4:1-11 | 4:3-11 |
| 4:19-35 | 11:4-19 |

நற்செய்தியாளர் மாற்குவிக்கும், மத்தேயுவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. மாற்கு நற்செய்தியில் அடங்கி உள்ள பகுதிகள் 677ல் 170 அல்லது 180 மத்தேயு நற்செய்தியிலும் அடங்கியுள்ளது. எனவே மறையுரையாளருக்கும், போதனையாளருக்கும் ஆதார நூலாக அமைந்த கைப்புத்தகத்தில் (M) விடயங்களைப் பெற்றிருக்கலாம்.

இவ்வாறாக பார்க்கும்போது நற்செய்தியாளர் லூக்கா தனது நற்செய்தியை எழுதுவதற்கு மூன்று ஊற்றுக் களிலிருந்து விடயங்களைப் பெற்றிருக்கலாம். அவை:-

- மாற்குவினதும் மத்தேயுவினதும் நற்செய்திகளில் காணக் கூடிய பொதுவான போதனை, படிப்பினைகளுக்கு "M" என்று கூறுவோம்.
- தூய மத்தேயு பயன்படுத்திய கிறிஸ்துவின் வசனங்கள் அடங்கிய மரபுவழி ஜெர்மனி மொழியில் ஆரம்பமாகியிருப்பதால் அதற்கு "Q" என்று கூறுவோம்.
- லூக்கா மட்டும் அறிந்திருந்த பரம்பரை அல்லது பாரம்பரிய கருத்துகளுக்கு "L" என்று கூறுவோம்.




தூய லூக்கா "M" என்பதை பின்பற்றி நற்செய்தியை தொகுத்தமையால் புனித மாற்கு தமது கருத்துக்களை தொகுக்கும்போது பின்பற்றிய அதே முறையையே நாம் லூக்கா நற்செய்தியிலும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் பல சந்தர்ப்பங்களில் அவர் "Q" "L" மரபுகளிலிருந்து பெற்ற விடயங்களையும் இதில் புகுத்தி உள்ளார். அவரது பிரதான இணைப்பாக அமைவது "Q" "L" என்ற மரபுகளிலிருந்து பெறப்பட்ட எருசலேம் பயணமாகும். தூய மாற்கு 6:45 லிருந்து 8:26 வரை பயணிக்கும் சிறு பயணத்தை லூக்கா குறிப்பிடவில்லை.

"M" "Q" "L" மரபுகளில் அடக்கிய லூக்கா நற்செய்தியை பின்வரும் தலைப்புக்களின் கீழ் எடுத்துக் காட்டலாம்.

| | | |
|---|---|---|
| 1:1-4 | - | அர்ப்பணம் |
| 1:5, 2:2 | - | கிறிஸ்துவின் குழந்தைப்பருவம் "L" பகுதியைச் சார்ந்தது. |
| 3:1, 9:1-5 | - | இயேசுவின் கலிலேயப் பணி (மாற்கு நற்செய்திக்கு சமமானது என காட்டப்படுகிறது.) "M" பகுதிக்குரியது. |
| 9:51-19-28 | - | இயேசுவின் எருசலேம் பயணம், இயேசுவின் வார்த்தைகள். "Q" பகுதிக்குரியது. இது லூக்கா நற்செய்திக்கு சிறப்பானது. ("L" பகுதிக்குரியது). |
| 19:28-23:56 | - | இயேசு எருசலேமில் ஆற்றிய தூதுப்பணியின் இறுதிப்போதனை, பொதுவான போதனை, திருப்பாடுகள் ("L" பகுதிக்குரியது). |
| 24:1-53 | - | இயேசுவின் மறுவாழ்வு, உயிர்த்தெழுதல், விசேடமாக ''M" பகுதிக்குரியது. |

## 4.3 அமைப்பு

**புனித லூக்காஸ் நற்செய்தியின் 24 அதிகாரங்களையும் 6 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்**

1. மீட்பின் - வாக்குறுதி (குழந்தைப் பருவத்துடன் தொடர்புடைய நிகழ்வு) அதிகாரம் 1-2
2. மறைப்பணி அல்லது பகிரங்க வாழ்விற்கு தயார் செய்தல் (3:1 - 4:13)
3. கலிலேயப்பணி (4:14 - 9:50)
4. எருசலேம் நோக்கி செல்லும்போது ஆற்றிய மறைதூதுப் பணிகள் (9:51 - 19-28.)
5. எருசலேமில் ஆற்றிய மறைதூதுப் பணிகள் (19:29 – 21:31)
6. இயேசுவின் மரணமும் வெற்றிவாகையும் (அதிகாரம் 22-24)

## 4.4 நோக்கம்

கிறிஸ்துவின் மீட்பு அனைவருக்கும் பொதுவானது என்பது நற்செய்தி முழவதிலும் பிரதான தலைப்பாக காட்டப்படுகிறது. யூத இனத்தைச் சேராத திருத்தூதராக இருந்தாலும் தமது ஆயரான பவுலின் மறையை தூய லூக்கா உறுதியாக வெளிப்படுத்துகின்றார்.

அ) முழு மனித இனத்தினதும் தந்தையாகிய ஆதாமின் பரம்பரையில் இயேசு பிறந்தார் என்பதை பரம்பரை வழி மூலமாக எடுத்துக் காட்டி அவரது மனித அவதாரம் உலக வரலாற்றின் கேந்திரஸ்தானமாக அமைகிறது என்பதை தூய லூக்கா எடுத்துக் காட்டுகிறார். அதனால் கிறிஸ்து யூத இனத்துக்காக மட்டுமல்ல முழு மனித குலத்துக்குமே மனிதாவதாரம் எடுத்தார் என்பது விளங்குகிறது (3:23-38), இவ்வாறு தூய லூக்கா நற்செய்தி உலக வரலாற்றுடன் இணைகிறது.

ஆ) கிறிஸ்துவின் பிறப்பு உரோமை பேரரசில் அனைத்துப் பிரஜைகளினதும் கணக்கெடுப்பு நடைபெற்ற காலத்திலேயே நிகழ்ந்தது. (2:1-5) அதேபோல் கிறிஸ்துவின் பகிரங்க வாழ்வு திபேரியு சீசர் பேரரசன் ஆட்சி செய்த காலத்திலேயே (15ம் ஆண்டில்) ஆரம்பமானது (3:1). இவ்வாறாக தூய லூக்கா தன் நற்செய்தியை உரோமைப் பேரரசுடன் இணைக்கிறார்.

இ) தூய லூக்கா எழுதிய இரண்டாவது நூல் ''திருத்தூதர் பணி'' ஆகும். (தி. பணி 1:1-2) இரண்டாம் நூல் ஆரம்ப திருச்சபையின் வரலாறாகும். இவ்வாறாக முழு திருச்சபையிலும் அவரது நற்செய்தி ஒரு கேந்திரஸ்தானத்தைப் பெறுகிறது.

ஈ) அவரது நற்செய்தி முழு மனித இனத்துக்காகவாகும்.

- கிறிஸ்து பிறந்தபோது வானதூதரின் வாழ்த்து, யூத இனத்தவருக்கே மட்டுமல்ல ''உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக'' என (2:14) அவர்கள் பாடினார்கள்.
- எருசலேமில் வாழ்ந்த இறைவாக்கினர் சிமியோன் 40 நாட்கள் நிரம்பிய பாலகனை கையில் ஏந்தி ''…….. மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்பாடு செய்த மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்படும் அருள் ஒளி.. உம் மக்களாகிய இஸ்ராயேலருக்கு பெருமை…..'' என்றார். (2:30-32)
- திருமுழுக்கு யோவானின் மறைப்பணியை விபரிக்கும் தூய லூக்கா(எசாயா 40:3-5) வசனங்களிலிருந்து எடுத்துக்காட்டுகிறார். இச்சந்தர்ப்பத்தில் மாற்கு, மத்தேயு நற்செய்தியாளர்களைப் போலல்லாது மேலதிகமாக ஒரு பகுதியையும் குறிப்பிடுகிறார். ''மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர் என பாலைவனத்தில் குரல் ஒன்று முழங்குகிறது'' (3:6).
- இயேசு தமது சீடர்களுக்கு இறுதி அறிவுரைகளை வழங்கும்போது ''பாவ மன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்'' என எல்லா மக்களுக்கும் பறை சாற்றப்பட வேண்டும் எனக் கூறினார் (24:47).

உ) சமாரியரைப் பற்றிய கிறிஸ்துவின் சொல், செயல்களை எமக்கு பாதுகாத்துத் தந்துள்ளவர் தூய லூக்கா ஆவார்.

- சமாரிய நகரை அழிப்பதற்கு உத்தரவுகேட்ட யாக்கோபையும், யோவானையும் இயேசு கடிந்து கொண்டதாக தூய லூக்கா கூறுகிறார். (9:52-55)
- தொழுநோயிலிருந்து குணம் பெற்ற நோயாளர்களுள் அவருக்கு நன்றி சொல்ல சமாரியன் ஒருவன் மட்டும் வந்தார். (17:12-19)
- அயலவனின் அன்பு பற்றிய உவமையில் முன்மாதிரிகையாக சமாரியர் ஒருவரை இயேசு முன்வைக்கிறார். (10:25-34)

**கவனிக்க வேண்டியது**

மேலே குறிப்பிட்டபடி லூக்கா, யூதர் அல்லாதவர்கள் மட்டில் கொண்டிருந்த கண்ணோட்டத்தையே பவுலும் கொண்டிருந்தார் என்பதை (எபே 2:11-14:17) வசனங்கள் தெளிவுபடுத்துகின்றது.

## 4.5 நூலின் (அர்ப்பணம்)

புராதன காலத்தில் வாழ்ந்த சிறந்த கிரேக்க நூலாசிரியர்களான டியொஸ்குரிடேஸ், ஜோசபாஸ், அரிடெயாஸ் போன்றோர் தமது சிறந்த நூல்களுக்கு முன்னுரை அளித்ததுபோல் தூய லூக்காவும் தனது நற்செய்திக்கு முன்னுரை புனைந்துள்ளார். அதில் உள்ள இலக்கண நடை, சொல் அமைப்பு போன்றன பெரும்பாலும் பிரசித்தி பெற்ற கிரேக்க நூல்களுக்கு சமமாக அமைந்துள்ளது.

**1ம் வசனம்**

“மாண்பு மிகு தியோபில் அவர்களே” என்று அறிமுகப்படுத்தப்படுவதை அவதானிக்கும்போது இவர் ஒரு கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது. இவருடைய பெயரின் கருத்து “இறைவனால் அன்பு செய்யப்படுவர்” அல்லது “இறை அன்பர்” என்பதாகும். பலர் இதனை எழுத முயன்றனர். இங்கே லூக்காவின் கருத்து மத்தேயு, மாற்கு ஆகியோர் தமக்கு முன்னர் பல கைநூல்களை எழுதியிருக்கலாம் என்பதாகும்.

**2ம் வசனம்**

இவருக்கு முன்னால் நற்செய்தியை எழுதியவர்கள்.... கிறிஸ்துவை நேரில் கண்டு அவருடன் நெருங்கிப் பழகியவர்களாவர். (மாற்குவைத் தவிர) இவற்றில் திருத்தூதர்களின் மறை செய்தி அடங்கியுள்ளது.

**3ம் வசனம்**

“நான் நேரில் கண்ட ஒரு சாட்சியாளர் அல்ல. ஆனாலும் தொடக்கத்திலிருந்தே கருத்தாய் ஆய்ந்து திருத்தொண்டர்களின் போதனைகளுக்கேற்ப ஒழுங்குபடுத்தி தொகுத்து எழுத முயன்றுள்ளேன்.”

**4ம் வசனம்**

“நீர் இதுவரையும் பல மறையுரைகளைக் கேட்டறிந்திருப்பீர். நீர் கேட்டறிந்தவை உறுதியானவை எனத்தெரிந்து கொள்ளும் பொருட்டு இதனை எழுதுவது நலமெனக்கண்டேன்.”

**கவனிக்க வேண்டியவை:-**

இம் முன்னுரையில் (1:1-4) முக்கிய கருத்துக்கள் இரண்டு வெளிக்கொணரப்படுகின்றன.

1. லூக்கா நற்செய்தியை எழுதுவதற்குமுன் நற்செய்தி பற்றிய அறிவுறுத்தலும், கற்பித்தலும் (பகுதி 4) இருப்பதாக காட்டப்படுகிறது. போதிப்பதற்கும் ஒரே சபையாய் ஒன்றுகூடி திருவழிபாட்டில் இறைவார்த்தையை (செய்தியை) வாசிப்பதற்கும் மாற்கு, மத்தேயு நற்செய்திகள் பயன்படுத்தப்பட்டன.
2. தூய லூக்காவின் கருத்துப்படி யூதரல்லா கிரேக்க நாட்டவரான தியோபில் நற்செய்தியைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தாலும், அது அவருக்கு திருப்தியளிக்கவில்லை. பிற மதத்திலிருந்து வந்த ஒருவர் நற்செய்தியை இதற்கும் மேலாக அறிந்திருக்க வேண்டும். எனவே பழைய படிப்பினைகளை உறுதிசெய்யும் நோக்குடனும் அவற்றை விளக்கும் நோக்குடனும் லூக்கா இந்நற்செய்தியை எழுதுகின்றார்.

## 4.6 லூக்கா நற்செய்திக்கு பயன்படுத்தப்படும் வேறுபெயர்கள்.

1. எருசலேம் நற்செய்தி
2. தூய ஆவியின் நற்செய்தி
3. செபத்தின் நற்செய்தி
4. இரக்கத்தின் நற்செய்தி
5. பெண்களின் நற்செய்தி
6. மன்னிப்பின் நற்செய்தி
7. அர்ப்பணிப்பின் நற்செய்தி
8. கிறிஸ்தவ மகிழ்ச்சி, நன்றியின் நற்செய்தி.

**எருசலேம் நற்செய்தி**

இந் நகரம் நற்செய்தியில் 33 இடங்களில் குறிப்பிடப்படுகிறது. பலவேளைகளில் வேறு நகரங்களின் பெயர்கள் குறிப்பிடாது ஒரு நகரின் பெயர் மட்டும் குறிப்பிடப்படுகிறது. தனது நற்செய்தியின் வழியாக “எருசலேம்” முக்கியமான நகரம் என காட்டுவதற்கு லூக்கா முயற்சிக்கிறார். அதாவது முழு மனித இனத்துக்கும் மீட்பைத் தந்தது எருசலேம் நகரம் என காட்டுகிறார்.

- நற்செய்தி (1:9ல்) ஆரம்பமாகி (24.52ல்) எருசலேமுடன் முடிவடைகிறது.
- லூக்கா நற்செய்தியின்படி எருசலேமில் மெசியா யுகம் ஆரம்பமாகிறது. (1:25)
- இயேசுவின் குழந்தை பருவம் 3 முறை குறிப்பிடப்பட்டுள்ளது.(1:8, 2:22, 41)
- இயேசுவின் குழந்தை பருவ நிகழ்வுகள் இரண்டு எருசலேம் நகருடன் தொடர்புபட்டுள்ளது.
- அன்னா என்ற பெண் எருசலேம் மீட்பு பற்றி கூறுகிறார் (2:28)
- கடைசி சோதனை எருசலேமுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. (4:9-12)
- இயேசுவின் உருமாற்றத்தின்போது எருசலேமைப் பற்றி இவர் மட்டும் குறிப்பிடுகிறார். (9:31)
- இயேசுவின் மரணத்தையும், மகிமையையும் எருசலேமுடன் தொடர்புபடுத்திக் காட்டுகிறார்.
- இயேசு எருசலேமுக்காக புலம்புகிறார். (13:34)

- இயேசுவின் துன்பப்பாடுகள் எருசலேமில் நடை பெறுவதாக (18:31-33) கூறப்பட்டுள்ளது.
- எருசலேமுக்கு வெற்றியோடு, ஆர்ப்பரிப்போடு நுழைதல் (19:28-48)
- உயிர்த்த பின் சீடரை மீண்டும் எருசலேமுக்கு அனுப்புதல் (21:13-35)
- உயிர்ப்பின் பின் எருசலேமில் தோன்றுதல் (24:15)
- இறுதி போதனையை எருசலேமில் வழங்க தீர்மானம் (24:17, 50-53
- அடிக்கடி எருசலேம் பயணம் (13:22, 14:11,18:31)
- **தூயாவியின் நற்செய்தி**

- ஏனைய நற்செய்திகளைவிட தூய ஆவி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ''இறை ஆவி'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பதினேழு முறை தூய ஆவி என்றும் இருமுறை ஆவி என்றும் காட்டப்படுகிறது. (2:7, 4:1) ஒரு முறை ஆண்டவருடைய ஆவி என்றும் (4:8) குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஆரம்ப அதிகாரங்களில் நான்கு முறை தூய ஆவியால் ஆட்கொள்வது பற்றி கூறப்பட்டுள்ளது. (திருமுழுக்கு யோவான், எலிசபேத், சக்கரியா, இயேசு, மரியாள்)
- தூய லூக்கா இயேசுவை தூய ஆவியின் ஆயுதமெனவும் புது யுகத்தில் தூய ஆவியை மற்றவர்களுக்கு அளிப்பவராகவும் முன்வைக்கிறார். (24:49, 2:26)
- தூய ஆவியின் தூண்டுதலால் சிமியோனுக்கு இயேசு வெளிப்படுத்தப்படல். (2:27)
- திருமுழுக்கு யோவானின் வெளிப்பாடு ''நீரினாலும் தூய ஆவியாலும் …….''
- தூய ஆவியின் வல்லமை, வழிகாட்டுதலில் பகிரங்க வாழவு ஆரம்பம் (3:22, 4:14-18)
- தூய ஆவியில் இயேசுவின் மகிழ்ச்சி (10:21)
- தூய ஆவியை வேண்டுவோருக்கு தருவதாக வாக்குறுதி அருளப்படும் (11:13)
- நற்செய்தியின் இறுதியில் மீண்டும் தூய ஆவியைப் பற்றிய வாக்குறுதி (24:49)

**செபத்தின் நற்செய்தி**

செபத்தைப் பற்றி தம் சீடருக்கு கற்பிப்பதற்கு முன் இயேசு செபித்து, முன்மாதிரிகை அளித்தார்.

- செபிப்பதற்கு ஒரு மலையைத் தேர்ந்தெடுத்தல் (6:12,9:28, 22:39)
- தமது வாழ்வின் முக்கிய வேளைகளில் செபித்தார் (3:21)
- திருத்தூதர் 12 பேரையும் தெரிவு செய்யுமுன், (6:12)
- உருமாறும்போது (லூக்கா மட்டும் இதனைக் குறிப்பிடுகிறார்.) (9:29)
- பரலோக மந்திர செபத்தை கற்றுத் தருவதற்கு முன் (11:1)
- பேதுருவின் அறிக்கையின்முன் (22:32)
- துன்பப் பாடுகளின் முன் (22:39)
- ஒலிவ மலையில் (22:41)
- சிலுவை மரத்தில்(22:46)
- இயேசுவின் மறைப்பணி முழுவதும், இறைபுகழ்ச்சி, செபத்துடன் நிகழ்ந்தது.(1:5, 2:52)
- அவரது மறைதூதுப்பணி ஆரம்பம், முடிவு செபத்துடன் (3:21,23:46)
- மற்றவர்களுக்காக செபிக்குமாறு கட்டளை (6:28)
- பகைவருக்காக (10:27)
- மறைபரப்பாளருக்காக செபித்தார்(10:2)
- அனைவரும் செபிக்க வேண்டும் என (22:40)
- சோதனைக்குட்படாது செபிக்க வேண்டும் என (22:46)
- மக்கள் செபித்த சந்தர்ப்பங்களாக, சக்கரியா (1:10) அன்னா (2:37), திருமுழுக்கு யோவானின் சீடர்கள் (5:33)
- செபிக்க வேண்டிய முறையை சீடருக்கு கற்பித்தல். (11:1-4, 11:5-12, 18:1-7, 18:10-14)

**இரக்கத்தின் நற்செய்தி**

- இயேசுவின் மறைதூதுப்பணி சிறப்பாக ஏழைகளுக்கும் (உடல், உள, ஆன்மீக ரீதியில் தாக்கத்திற்குட் பட்டோர், சமூகத்தால் ஒதுக்கப்பட்டோர் ஆகியோருக்கும் என காட்டப்படுகிறது.)
- தாழ்மை உயரிய பண்பாக காட்டப்படுகிறது. (1:48, 9:47,10:21 14:11, 18:14-17, 22:26)

- செல்வந்தருக்கு உண்டாகும் கேடுகளும் ஏழைகளுக்கு உண்டாகும் பேறுகளும் குறிப்பிடப்படுகிறது. (6:20-26)
- அவரது பிறப்பு முதலாவதாக ஏழை இடையருக்கே அறிவிக்கப்பட்டது. (2:10)
- ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். (4:18-19)
- இறையாட்சி ஏழைகளுக்கு உரியது. (6-20)
- செல்வத்தால் உண்டாகும் கேடுகள் - நிகழ்வுகள், உவமைகள் மூலமாகவும் எடுத்துக் கூறப்படுகிறது. (16:19)

**உவமைகள்**

- அறிவற்ற செல்வன் (12:16)
- பெரிய விருந்து ( ஏழைகளுக்கும் அழைப்பு விடுப்பதாக லூக்கா காட்டுகிறார்.) (14:15-24)
- செல்வரும் இலாசரும் (16:19-31)
- செல்வரான தலைவர் (18:18-23)
- செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது கடினம் (18:25)
- இயேசுவும் சக்கேயுவும் (19:1-10)

**இயேசுவின் இரக்கம் அருங்குறிகள் மூலம் காட்டப்படுகிறது**

- நயீன் ஊர்க் கைம் பெண் மகன் உயிர் பெறுதல் (7:11-15)
- கூன் விழுந்த பெண் (13:10-17)
- நீர்க்கோவை நோயாளி குணமடைதல் (14:1-6)
- தொழுநோயாளர் குணமடைதல் (17:11-19)

**ஏழைகள் பற்றி**

- ஏழைகளுக்கு உதவுதல் அனைவரினதும் கடமை என (3:10, 14:12-14)
- ஏழைகளுக்கு உதவாதவர்களுக்கு உண்டாகும் கேடு (16:15)

**இயேசுவுக்கும் திருத்தூதருக்கும் இருந்த உறவை தூய லூக்கா தமது நூலில் மிகத் தெளிவாக விளக்கி உள்ளார்.**

- தூய மாற்குவைப் போல் யேசு சினம் ‘‘கொண்டதாக’’ லூக்கா நற்செய்தியில் குறிப்பிடப்படவில்லை. (3:5)
- கை சூம்பியவர் நலமடைதல் 6:6-10
- இயேசு கோவிலைத் தூய்மையாக்கிய நிகழ்வில் வியாபாரிகளைத் துரத்தத் தொடங்கியதாக மட்டும் குறிப்பிடப்படுகிறது. 19:45-48
- யேசுவுக்கு துப்புதல், யூதாஸ் முத்தமிடுதல் பற்றி குறிப்பிடப்படவில்லை. 22:47-65
- திருமுழுக்கு யோவானின் சிரச்சேதம் பற்றி குறிப்பிடப்படவில்லை. 9:7-9

**பெண்களின் நற்செய்தி**

பெண்களுக்கு யேசு இரக்கம் காட்டியதாக லூக்கா குறிப்பிடுகிறார். அன்றைய கால யூத மனநிலையிலிருந்து மாறுபட்டு ஆண்களும், பெண்களும் சமமானவர்கள் என்ற நிலையை முன்வைக்கிறார். மற்ற நற்செய்திகளை விட இதில் பெண்களுக்கு இடமளித்து சிலருக்கு பொறுப்பான இடமும் அளிக்கப்பட்டுள்ளது. அன்று ஹெல னிஸ்த உலகில் (கிரேக்க) யூத சமூகத்தை விட பெண்களுக்கு உயர்ந்த இடம் அளிக்கப்பட்டிருந்ததால் அந்த மனநிலையை இவர் பின்னற்றியிருக்கலாம். மீட்புத் திட்டம் செயற்படும்போது மரியாளும் மற்ற பெண்களும் ஆற்றிய பணியை விளக்குகிறார். யேசுவின் தாய் மற்ற எல்லா பெண்களிலும் ஆசீர்வதிக்கப்பட்ட வர் எனக் கூறுகிறார். (1:42, 11:27)

- எலிசபேத்தம்மாள் (1:5-6)
- அன்னா மேன்மையானவராய் காட்டப்படுகிறார். (2:37-38)
- பாவியான ஒரு பெண்ணின் மனமாற்றம் (7:36)
- நயீன் ஊர் கைம்பெண்ணுக்கு காட்டிய இரக்கம் (7:11)
- சில பெண்கள் யேசுவின் மறைத்தூதுப் பணியில் பங்கு கொள்ளல் (8:1-3)
- மார்த்தா மரியா வீட்டில் இயேசுவின் படிப்பினை (13:38-41)
- உடல் ஊனமுற்ற பெண் குணமடைதல் (13:10-13)

- எருசலேம் மகளிரைத் தேற்றுதல் (23:27-29)

**மத்தேயு, மாற்கு நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.**

- சீமோன் பேதுருவின் மாமியார் குணமடைதல் (4:38)
- இரத்தப்போக்கினால் வருந்திய பெண் (8:43)
- ஏழைக் கைம் பெண்ணின் காணிக்கை (21:1-4)
- துன்பப்பாடுகளுக்கு சாட்சியான பெண்கள் (23:49)
- உயிர்ப்புக்கு சான்று பகர்ந்த பெண்கள் (24:1-10)

**உவமைகள் மூலம் விளக்குதல்**

- காணாமற்போன திராக்மா (15:8-9)
- கைம் பெண் பற்றிய உவமை (18:1-8)

**மன்னிப்பளிக்கும், அமைதியின் நற்செய்தி**

"இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" என லூக்கா மட்டுமே குறிப்பிடுகிறார் (19:10). ஏனைய நற்செய்திகளைவிட பாவிகளைப் பற்றி (22) முறையும் மன்னிப்பைப் பற்றி (18) முறையும் இறைவனின் இரக்கத்தைப் பற்றி (8 முறையும்) குறிப்பிடுகிறார். மன்னிப்பளிப்பது பற்றிய பல்வித நிகழ்வுகளும், உவமைகள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

- பாவிப் பெண் (7:36-50)
- சக்கேயு (19:1-10)
- சிலுவையில் அறைந்தவர்களுக்கு மன்னிப்பளித்தல் (23:34)
- வலப்புற கள்வனுக்கு மன்னிப்பளித்தல் (23:39-43)

- மன்னிப்பு என்னும் சொல்லை அதிகமாக (16முறை) பயன்படுத்தியிருப்பவர் தூய லூக்கா ஆவார்.

**நிறைவான அர்ப்பணிப்பின் நற்செய்தி**

அர்ப்பணிப்பைப் பற்றியும் அது பற்றிய கருத்துக்கள் தொடர்பான சொற்கள் 14 முறை குறிப்பிடப்படுகிறது. யேசு பாடுபட வேண்டும் என்பதை மற்ற நற்செய்தியாளர்களைவிட அதிகமாக காட்டுகிறார்.

- பேதுருவினதும் மற்றவர்களினதும் அழைப்பு (அனைத்தையும் விட்டுவிட்டு) (5:11)
- லேவியின் அழைப்பு (அனைத்தையும் விட்டுவிட்டு) (5:28)
- சமவெளிப் பொழிவு (6:20-26)
- பேதுருவின் அறிக்கையின் பின் (9.22)
- பேய் பிடித்த சிறுவனை குணப்படுத்திய பின் (9:42)
- இறையாட்சி பற்றி கூறிய சந்தர்ப்பங்கள் (17:25)
- செல்வரான தலைவரின் நிகழ்வு (யாவற்றையும் விற்று) (18:22)
- சீடரை தம்மிடம் அழைத்து, அறிவுரையளிக்கும்போது (18:31)
- ஏழை கைம் பெண்ணின் அர்ப்பணிப்பு – "எல்லாவற்றையும்" என்று தூய லூக்கா மட்டுமே கூறுகிறார். (21:4)
- இயேசுவை பின்பற்றத் தகுதியற்றோர் (கலப்பையில் கைவைத்த பின் திரும்பிப் பார்ப்பவர்) பற்றி லுக்கா நற்செய்தியில் மட்டுமெ உள்ளது. (9:57-62)
- ஆண்டவரை எல்லாவற்றிலும் மேலாக கருதி தனக்கு நெருங்கியவர்களை தியாகம் செய்தல். இதுவும் லூக்கவில் மட்டுமே உள்ளது. (14:26)
- இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது (16:13)
- கிறிஸ்துவை பின்பற்றுவர் இறையாட்சிக்காக அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என (12:33, 14:33, 18,29)
- செல்வர் இறையாட்சிக்கு உட்படுவது கடினம் (18:25)
- சக்கேயுவின் நிகழ்விலுள்ள தியாக நிலை (19:8)

**கிறிஸ்தவ மகிழ்ச்சி, புகழ்ச்சியின் நற்செய்தி**

லூக்கா நற்செய்தியின்படி மீட்பின் காலத்துடன் மகிழ்ச்சி, அமைதி, புகழ்ச்சியின் காலம் உண்டாவது பற்றி காட்டுகிறார்.

- இயேசுவின் பிறப்புப் பற்றிய மகிழ்ச்சியைக் கொண்டு வரும் நற்செய்தியாகும்.(1:14-2:11)
- சீடர்கள் 72 பேரும் மகிழ்வுடன் திரும்பி வருதல் (10:17)
- இயேசு செய்த, கூறியவற்றினால் மக்கள் மகிழ்ச்சியடைதல் (13:7)
- பாவி ஒருவரின் மனமாற்றத்தினால் விண்ணுலகில் மகிழ்ச்சி (15:76)
- யேசுவின் மேன்மை மிகு செயல்களால் அவரது மகிமையும் தந்தையின் மகிமையும் (19:37)
- விண்ணேற்றத்தின் பின் அவரது சீடர்களின் பெரு மிழ்ச்சியும் அதனை அவர்கள் வெளிப்படுத்தலும் (24:52)

**மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பாடல்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

- மரியாளின் புகழ்ச்சிப் பாடல் (1:46)
- செக்கரியாவின் புகழ்ச்சிப் பாடல் (1:68)
- வானதூதரின் புகழ்ச்சிப் பாடல் (2:11)
- சிமியோனின் புகழ்ச்சிப் பாடல் (2:29)

## 4.7 லூக்கா நற்செய்தியின் சிறப்பியல்புகள்.

- கிறிஸ்தவ மதம் பல்வித இனம், வரையறைகளைக் கடந்து செல்லும் முழுமையான மறையாக முன்வைக்கப்படுகிறது.
- தூய ஆவியின் செயற்பாடு முதலில் இயேசுவின் பணியிலும் பின்னர் திருத்தூதர் பணியிலும் தொடர்ந்து ஆற்றப்பட்டதாக காட்டப்படுகிறது.
- ஏழைகளின் பரிவிரக்கமும் செல்வந்தரின் இரக்கமற்ற நிலையும் காட்டப்படுகிறது.
- கிறிஸ்தவ ஒன்றியங்களில் பெண்களின் பங்களிப்பு பற்றி சிறப்பாக காட்டப்படுகிறது.
- செபத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.
- பாவ மன்னிப்புப் பற்றி குறிப்பிடபட்டுள்ளது.
- லூக்கா நற்செய்தி திருத்தூதர்பணி நூலுடன் ஒன்றிணைந்த நீண்ட நூலின் முதல் பகுதியாய் உள்ளது.

லூக்கா நற்செய்தியில் முன்னுரையில் குறிப்பிடப்படும் (விளக்கும்) தியோபில் என்பவர் தூய லூக்காவுடன் நெருங்கிப் பழகிய மக்கள் சமூகத்தை பிரதிநிதிப்படுத்திய, முக்கியமான ஒருவராக இருக்கலாம். அவர் அந்தியோக்கியாவில் வாழ்ந்த ஒரு செல்வந்தனாக இருக்கலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது.

## 4.8 ஆசிரியத்துவம்

**மூன்றாம் நற்செய்தியின் ஆசிரியர் தூய லூக்கா**

இவர் சிரியாவின் அந்தியோக்கியா நகரில் வாழ்ந்த கிரேக்க யவன பண்பாட்டு (எலனிஸ்த) குடும்பத்தைச் சேர்ந்தவராவர். அந்தியோக்கியா, பலஸ்தீனாவை அடுத்து அக்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் முக்கிய நகரமாகும். அந்தியோக்கிய சபையில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய இவர் ஒரு வைத்தியரும் திருத்தூதரின் சீடருமாவார். தூய பவுலுடன் இணைந்து பணியாற்றியவர்.

லூக்கா பற்றி புதிய ஏற்பாட்டில் மூன்று முறை குறிப்பிடப்பட்டுள்ளது. ‘‘அன்பார்ந்த வைத்தியர் லூக்காவும் தோமாவும் உங்களை வாழ்த்துகின்றனர்’’ (கொலோ. 4:14). ‘‘என் உடன் உழைப்பாளர்களான மாற்கு, அரிஸ்தர்க்கு, தோமா, லூக்கா ஆகியோர் உமக்கு வாழ்த்து கூறுகின்றனர்’’ (பிலமோ. 1:24). ‘‘என்னுடன் லூக்கா மட்டுமே இருக்கிறார்’’ (2திமோத் 4:11). சிலரின் கருத்துப்படி ‘‘கடவுள் எம்மை அழைத்துள்ளதாக (தீர்மானித்துள்ளதாக) பவுல் கண்ட காட்சியின்படி புரிந்து கொண்டு அங்கு செல்ல வழி தேடினோம்.’’ (திப 16:9-10) ‘‘நாங்கள் எருசலேம் சென்று…. (தி.ப 21:17-18), நாங்கள் கப்பலேறி ….’’ (தி.ப 27:1-28) இவ்வாறு திருத்தூதர்பணியில் ‘‘நாங்கள்’’ என பவுல் குறிப்பிடுவது லூக்காவையும் தன்னுடன் இணைத்தே என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தூய லூக்கா ஒரு யூதர் அல்ல. அந்தியோக்கியாவில் வாழ்ந்து கிறிஸ்தவ மதத்தை தழுவிக் கொண்ட ஒரு பிற இனத்தவராவார். மேன்மையான மனிதரான அவர் ஒரு மருத்துவர். அவர் தமது நற்செய்தியை கிரேக்க நாகரீகம் பரவியிருந்த சூழலில் அதாவது அகியா நகரிலிருந்தே எழுதினார்.

**புனித லூக்கா இந்த நற்செய்தியை எழுதியமைக்கான சாட்சிகள் உள்ளன.**

**(அ) புறச்சான்று**

- இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் திருச்சபையானது லூக்கா நற்செய்தியின் ஆசிரியர் தூய லூக்காதான் என ஏற்றுக்கொள்கிறது.
- பண்டைய திருச்சபை தந்தையர்கள் சான்றுகளும் உண்டு (கி. பி. 177-189)
  - கலிலேயாவில் தூய இரனேயுஸ்
  - அலெக்சாந்திரியாவில் தூய கிளமெண்ட் (கி. பி. 195)
  - வட ஆபிரிக்காவில் தூய தேர்தூலியன் (கி. பி. 200)

- சிரியாவின் தூய எப்சேபியுஸ். (கி.பி 325)
  இவர் தூய லூக்காவை அந்தியோக்கியாவிலிருந்து வந்த வைத்தியர் என்றும், திருத்தூதர்பணி நூலை எழுதியவர் எனவும் அறிமுகப்படுத்துகிறார்.
- எருசலேமில் தூய எரோம் (கி. பி. 400)
- ‘‘முரதோரியன்’’ பெயர் பட்டியலில் (கி. பி. 175) தூய லூக்கா ஒரு வைத்தியர் எனவும் தூய பவுலுடன் மறைபணியாற்றியவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(ஆ) நற்செய்தியில் முன்வைக்கப்படும் சான்று**

லூக்கா நற்செய்தியின் ஆசிரியரான லூக்கா ஒரு புறவினத்தவராவார். இந்நூல் மாண்புமிகு தியோபில் என்பவருக்கு (1:1) அர்ப்பணிக்கப்படுகிறது. அவரும் ஒரு புறவினத்தவரே. ”மாண்பு மிகு” என்பது உரோம அரச காலத்தில் உயர் பதவி வகித்த ஒருவருக்கு பயன்படுத்தப்படும் மதிப்புமிக்க பெயராகும். இத்தகைய ஒருவருக்கு இந்நூல் அர்ப்பணிக்கப்படுவதன் காரணம் கிறிஸ்தவம் உலகுக்கு மட்டுமன்றி முழு உலகுக்கும் என காட்டுவதற்காகும். நற்செய்தி எழுதியவர் ஒரு வைத்தியர் என குறிப்பிடப்படுகிறது. பொதுவாக யூதர் வைத்தியர்களை தாழ்நிலையில் உள்ளவர்களாக கருதினர். அதனால் அவர் யூதராக இருக்க முடியாது. யூத பழக்க வழக்கங்கள் (விருத்தசேதனம் 2:21, மோசேயின் சட்டம் 2:22, பலி பற்றிய சட்டம் 1:9, 5:14, விருந்தோம்பல் 7:44) நகர்கள், (நாசரேத், கப்பர்நாகூம் அரிமத்தியா, எம்மாவு) பற்றி தெளிவான விளக்கம் நற்செய்தியில் உண்டு. இங்கு கிரேக்க சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**பிற இனத்தவரை புகழ்ந்த சந்தர்ப்பங்களும் உண்டு**

யூத சமூகத்தில் மிகவும் தாழ்ந்தவர்கள் என ஒதுக்கப்ட சமாரியரை சகோதர இரக்கத்திற்கும், நன்றியுணர் விற்கும் மாதிரியாக முன்வைக்கிறார் (10:25, 17:11). புறவினத்தவரின் நற்பண்புகளையும் (நல்நடத்தை) முன்மாதி ரிகையாக முன்வைக்கிறார். (7:9)

- சாரிபாத்தில் வாழ்ந்த கைம் பெண்ணிடம் எலியா அனுப்பப்பட்ட நிகழ்வும், சிரியாவை சார்ந்த நாமானின் நோய் நீங்கிய சம்பவமும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4:25-27)
- நயீம் ஊர் கைம் பெண்ணின் மகன் உயிர் பெறுதல். (7:11-17)
- நூற்றுவர் தலைவனின் நம்பிக்கையை புகழ்தல் (7:9)
- நல்ல சமாரியர் உவமை (10:30-35)
- பத்து தொழுநோயாளர்கள் நோய் நீங்கப் பெறுதல் (17:11-19)
- பரிசேயரும் வரிதண்டுபவரும் (18:10-14)

**இந்நூலின் ஆசிரியர் ஒரு வைத்தியர்**

- இந் நற்செய்தியில் ‘‘நோய்’’ அல்லது ‘‘சுகவீனம்’’ என்ற சொல் (10 முறை) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்து நலமளிக்கும் வைத்தியர் என (14 முறை) குறிப்பிடப்பட்டுள்ளது.

**உதாரணம்:-**

- பற்பல பிணிகளால் நலம்குன்றி இருந்தோர் அவரிடம் கூட்டிவரப்பட்டார்கள். (4:40)
- நோய்கள் நீங்கி நலம் பெற பெருந்திரளான மக்கள் அவரிடம் கூடி வந்தார்கள். (5:15)
- கைசூம்பியவர் நலமடைதல். (6:8)
- அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு அனைவர் பிணியையும் போக்கியது. (6:19)
- நூற்றுவர் தலைவனின் பணியாளன் குணமடைதல் (7:3)

- பல்வித நோய்கள் குணமாக்கப்படுதல். (7:21)
- அசுத்த ஆவி, நோய்களிலிருந்து நலம் பெற்ற பெண் (8:2)
- இரத்தப் போக்குடைய பெண் நலம் பெறுதல். (8:47)
- குணமாக்க வேண்டியவர்களை குணமாக்கல் (9:11)
- கூன் விழுந்த பெண் நலம் பெறுதல். (13:12)
- நீர்க்கோவை நோயாளி குணமடைதல் (14:4)
- பத்து தொழுநோயாளர் நோய் நீங்கப் பெறுதல் (17:14)
- தலைமைக் குருவின் பணியாளரது காது நலம் பெறுதல். (22:51)

**இயேசு ஆன்மீக நலம் தருபவராக ஏழு முறை குறிப்பிடப்பட்டுள்ளது.**
**உதாரணம்:-**

- கப்பர்நகூம் தொழுகைக் கூடத்தில் தீய ஆவிபிடித்த ஒருவரை குணப்படுத்தல் (4:35)
- பேய்களும் "நீர் இறைமகன்" என்று கத்திக்கொண்டு வெளியேறின (4:41)
- தீய ஆவி பிடித்தவர்கள் குணப்படுத்தப்பட்டனர் (6:18)
- பொல்லாத ஆவியால் பீடிக்கப்பட்டிருந்தோர் குணமடைந்தனர் (7:21)
- கெரசேனர் பகுதியில் பேய் பிடித்த ஒருவர் குணமடைதல் (8:33)
- வலிப்பு நோயாளி குணமடைதல் (9:42)
- இயேசுவின் பெயரால் பேய் நீங்கப் பெறல். (9:49)

**மத்திய கிழக்கு சம்பிரதாயப்படி வைத்தியர் நோயாளியிடம் நல்ல உறவை – தொடர்பை ஏற்படுத்திக் கொள்பவராயிருக்கிறார். இயேசுவும் அவ்வாறே நோயாளியைத் தொட்டு குணமாக்கினார். (6 முறை)**
**உதாரணம்:-**

- ஒவ்வொருவர் மேலும் கைவைத்து (4:40)
- கையை நீட்டி அவரைத் தொட்டு (5:13)
- அருகில் சென்று பாடையைத் தொட்டார் (7:14)
- அவளுடைய கையைப் பிடித்து (8:54)
- தம் கைகளை அவர்மீது வைத்து (13:13)
- அவருடைய காலைத் தொட்டு (22:51)

**பலர் இயேசுவைத் தொடமுயன்ற சந்தர்ப்பங்கள் பல உண்டு (6:9) திருத்தூதர்களும் நோய்களை சுகப்படுத்திய சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடப்படுகின்றன (9:6, 10:9). நூலாசிரியர், வைத்திய துறையில் உள்ள பல ஆதாரச் சொற்களை நோயாளிகளை குணமாக்கும் வேளைகளில் பாவித்துள்ளார்.**
**உதாரணம்:-**

- கடும்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர் (4:38)
- உடலெல்லாம் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் (5:12)
- வலக்கை சூம்பியவர் (6:6)
- இரத்தப் போக்கினால் பீடிக்கப்பட்டவர் (8:43)
- வலிப்புண்டாகி நுரைதள்ளி நொறுக்கிவிடப்படுபவர். (9:39)
- நிமிர முடியாதவாறு கூன் நிலையில் இருந்தவர் (13:11)
- நீர்க்கோவை நோயினால் பீடிக்கப்பட்டவர் (14:2)

**நோய்களை குணமாக்கும்போது அயலில் இருந்தவர்களது பிரதி கிரிகைகளை ஆசிரியர் காட்டுகிறார்.**
**உதாரணம்:-**

- அனைவரும் திகைப்படைந்து (4:36)
- அவர்கள் கோபவெறி கொண்டு (6:11)
- அனைவரும் அச்சமுற்று (7:16)
- அவளுடைய பெற்றோர் மலைத்துப் போயினர் (8:56)
- அனைவரும் அச்சம் மேலிட்டவர்களாய் (8:37)

- கூட்டத்தினர் வியர்ந்து நின்றனர் (11:14)
- மக்கள் அவர் செய்த மாட்சிக்குரிய செயல்களையிட்டு மகிழ்ச்சியடைந்தனர் (13:17)
- மக்கள் யாவரும் கடவுளைப் புகழ்ந்நனர் (18:43)

**இந்த நற்செய்தியை எழுதிய ஆசிரியர் ஒரு திறமையான எழுத்தாளராவார்.**

தூய லூக்கா கிரேக்க மொழியிலே தேர்ச்சி பெற்றவர். அம்மொழியில் எழுதும் திறனைக் காட்டுகிறார். தனது எழுத்து நடையிலே உயரிய கிரேக்க சொற்களைப் பயன்படுத்தினார். (1:1-4). அவர் அன்று கிரேக்க இலக்கியத்திலே பயன்படுத்திய இலக்கிய நடைமுறையை நற்செய்தியை எழுதும்போதும் கையாண்டுள்ளார்.

பல கருத்துக்களை ஒரே சிறப்பான தலைப்பின் கீழ் கொண்டு வந்து காட்டுவது கிரேக்க இலக்கியத்தின் பண்பாகும்.

**உதாரணம்:-**

- பாவிப் பெண் தைலம் பூசுதல் (7:36:50)
- பரிசேயர், மறைநூல் அறிஞர் கண்டிக்கப்படல் (17:37-54)
- விருந்தினருக்கும் விருந்தளிப்போருக்கும் போதனை (14:7-24)
- இறுதி உரை (ஆண்டவரின் திருவிருந்து) (22:14-38)

**ஒரு ஆசிரியருக்கே உரிய சட்டங்களை, விழுமியங்களைத் தனது நூலில் பின்பற்றுகிறார்.**

- திருமுழுக்கு யோவானது வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தையும் ஒரு இடத்தில் தொகுத்து கூறியுள்ளார்.
- இயேசுவின் நாசரேத் மறைத்தூதுப் பணியையும் அங்கு அவர் வந்த சந்தர்ப்பங்களையும் ஒரே இடத்தில் முன்வைக்கிறார் (4:16)
- இயேசுவின் வாழ்க்கை வரலாறு முழவதையும் ஒரு கதை வடிவில் மற்ற நற்செய்திகளைவிட அதிகமாக முன்வைக்கிறார்.

**கிரேக்க இலக்கியத்திலிருந்த பிரசித்தம் வாய்ந்ததும் திறமையானதுமான ஒருவரைப் பற்றி எழுதும்போது அவர் பயணம் செல்தல் அல்லது பயணமாக முன்வைத்தல்.**

- தேவதாய் எலிசபேத்தம்மாளை சந்தித்தல் (1:39)
- யோசேப் மரியாளுடன் பெத்லகேம் செல்லல் (2:4)
- எருசலேம் ஆலயத்திற்கு குழந்தையை அர்ப்பணிப்பதற்காக கொண்டு செல்லல் (2:22)
- திருத்தூதருடன் எருசலேம் நோக்கி பயணம் (9:15-53)
- எம்மாவு பயணம் (24:13)

**தூய லூக்கா குறிப்பிடும் பயணங்களின் தலைப்புக்கள்.**

- இறைவன் மனிதனிடம் வரும் சந்தர்ப்பங்கள் (மனித வரலாறு என)
- யூதரும், பிற இனத்தவரும் யேசுவிடம் செல்லல் (அவர்களின் கலாச்சாரம், விதியை முழுமையாக்க அவரால் மட்டுமே முடியும்.)
- இயேசுவும் திருத்தூதரும், அவரின் மரணம், உயிர்ப்புக்காக எருசலேம் நோக்கி செல்லுதல்.
- லூக்காவின் கூற்றுப்படி உலகின் கேந்திரமான உரோமையை நோக்கி முழுத் திருச்சபையும் பயணம் செல்லுதல்.
- முழு மனித இனமுமே பயணம் செய்கிறது. அதன் இறுதியில் அவர்கள் மானிட மகன் முன்னிலையில் நிற்பர் (21:36).

**இந்நூலின் ஆசிரியர் ஒரு வரலாற்றாசிரியர்**

யேசுவின் வாழ்க்கை வரலாற்று கதையிலுள்ள இடைவெளியை நிரப்புவதற்கு லூக்கா மட்டுமே முயற்சிக்கிறார். அதனால் லூக்கா நற்செய்தியில் ஒரு வாழ்க்கை கதையைப்போல் இருப்பதோடு அங்கே பாய்ந்தோடும் ஓர் இயல்பைக் காணலாம். இவ்வாறு குறைபாடுகளை முழுமையாக்கிய சந்தர்ப்பங்கள்.

- எருசலேம் ஆலயத்தில் காணாமற்போய் பின்னர் ஆலயத்தில் காணுதல், நாசரேத்தில் பணிந்து வாழ்தல் (2:4-50)
- நாசரேத்தில் மறைவான வாழ்வின் சாராம்சம் (2:51-52)

**இயேசுவின் வரலாற்று வாழ்வு நிகழ்வுகளை அறிமுகம் செய்வதற்கு அவற்றை உவமைகளாக முன்வைக்கிறார்.**

- நல்ல சமாரியன் (10:30-37)
- விருந்தினருக்கு போதனை (14:7-11)
- காணமற் போன ஆடு (15:1-7)

**காலத்துடன் தொடர்புடைய பல வரலாற்று விடயங்களை முன்வைக்கிறார்.**

- செக்கரியாவுக்கு ஆண்டவரின் தூதுர் வெளிப்படுதல். (1:5)
- இயேசுவின் பிறப்பை மரியாளுக்கு அறிவித்தல். (1:26)
- இயேசுவின் பிறப்பு (2:1-5)
- திருமுழுக்கு யோவானின் மறைத்தூதுப்பணி (3:1-2)
- இயேசுவின் மூதாதையர் பட்டியல் (3:23)

**பல தனிப்பட்டவர்களின் பிண்ணணி பற்றி அறிமுகப்படுத்தப்படுகிறது.**

- செக்கரியா (1:5)
- சிமியோன் (2:25)
- இயேசுநாதர் (3:23)
- அன்னா (2:36)
- யோசேப்பு (1:27, 2-4)
- யாயீர் (8:41)
- சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் (23:26)
- எலிசபெத் (1:5)
- நூற்றுவத் தலைவன் (7:2)
- யோவான் (3:2)
- ஏரோது (9:7)
- அரிமத்தியா யோசேப்பு (23:50)

**பிரசித்தமில்லாத சிறிய ஊர்களை அறிமுகப்படுத்துகிறார்.**

- நாசரேத் (1:26)
- கப்பர்நாகும் (4:31)
- அரிமத்தியா (23:51)
- எம்மாவு (24:13)

இந்த நற்செய்தி, திருத்தூதர் பணி நூலுக்கும், பவுலின் படிப்பினைகள், திருமுகங்கள் ஆகியவற்றுக்கும் ஒத்ததாக உள்ளது.

## 4.9 லூக்கா நற்செய்திக்கும் ஏனைய நற்செய்திகளுக்குமிடையே உள்ள தொடர்பு.

**திருத்தூதர் பணியுடன் தொடர்பு**

**உதாரணம்:-**

- ஒரே நபருக்கே நூல் அர்ப்பணிப்பு
- மொழி, நடை, வாக்கியங்கள் ஒரே மாதிரி அமைந்துள்ளன.
- தலைப்பான மீட்பு அனைத்து மக்களுக்கும் விளக்கமாயுள்ளது.
- பயணம் தொடர்பான தலைப்பு இரண்டும் உண்டு.
- உரோமை தொடர்பு பற்றி திருத்தூதர் பணியில் உண்டு.

**பவுலடியாரின் திருமுகங்களுக்கும் படிப்பினைகளுக்குமிடையே உள்ள தொடர்பு**

**உதாரணம்:-**

- இரண்டும் புறவினத்தவருக்காக எழுதப்பட்டது.
- இயேசுவை ஆண்டவர் என காட்டுதல்
- லூக்கா பவுலடியாரின் சீடர் என
- மீட்பு அனைவருக்கும் பொதுவானது.
- ஆண்டவரின் திருவிருந்து (1 கொரி 15:5)

## 4.10 லூக்கா நற்செய்தியில் அரும் அடையாளங்கள்

- திருமுழுக்கு யோவானினதும் இயேசுவினதும் பிறப்பு (1:5, 2:52)
- மார்த்தா, மரியா (10:38-42)
- மனம் மாறாவிடின் ஏற்படும் கேடு (13:1-5)

**அருங்குறிகள்**

- மீன்கள் நிறைய பிடிபடுதல் (5:1-11)
- நயீம் ஊர் கைம்பெண்ணின் மகன் உயிர்பெறுதல். (7:11-17)
- உடல் ஊனமுற்ற பெண் குணமடைதல் (13:10-17)
- நீர்க்கோவை நோயாளி குணமடைதல் (14:1-6)

- பத்து தொழுநோயாளர் நோய் நீங்கப் பெறுதல். (17:11-19)
- தலைமைக் குருவின் பணியாளர் குணமடைதல் (22:50-51)

**உவமைகள்**

- கடன்காரர் இருவர் (7:41-43)
- இடைவிடாது கேட்ட நண்பர் (11:5-8)
- விழிப்பாயிருக்கும் பணியாளர்கள் (12:35-40)
- தாழ்மை பற்றிய உவமை (14:7-14)
- காணாமற்போன மகன் (15:11-32)
- செல்வரும் லாசரும் (16:19-31)
- நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் (18:1-8)
- நல்ல சமாரியன் (10:30-37)
- அறிவற்ற செல்வன் (12:13-21)
- காய்க்காத அத்திமரம் (13:6-9)
- காணாமற்போன திராக்மா (15:8-10)
- முன்மதியோடு செயற்பட்ட வீட்டுப்பொறுப்பாளர் (16:1-13)
- பொறுப்புள்ள பணியாளர் (17:7-10)
- பரிசேயரும் வரிதண்டுபவரும் (18:1-14)

# ஐந்தாம் பாடம்

## 5. அருளடையாளங்கள்

### 5.1 அருளடையாளங்களைப் பற்றிய பொது அறிமுகம்

அருளடையாளம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு பதில் அளிப்பதாயின் ''கிறிஸ்தவ வாழ்வுக்கு இறையருள் பாய்ந்தோடி வரும் ஊற்றாகிய சடங்கு என கொள்ளலாம்.'' அது மட்டுமன்றி இச் சடங்கின் பண்புகள் வெளியே தெரியும் அடையாளம், உள்ளே மனிதனுக்கு தரப்படும் அருள், இயேசுவினால் நிறுவப்படுதல் ஆகியனவாகும்.

துன்பப்பட்டு, இறந்து, உயிர்த்த இயேசு அருளடையாளங்களில் செயற்பட்டு அவரது மீட்கும் வல்லமையை செயற்படுத்துகின்றார். இந்த அருளடையாளத்தினால் மனிதன் உயிர்த்த கிறிஸ்துவுடனும் அவரது மீட்பளிக்கும் செயற்பாட்டுடனும் தொடர்பு கொள்கின்றான்.

அருளடையாளத்திற்கு பயன்படுத்தப்படும் வேறொரு பெயர் ''திருவருட்சாதனம்'' ஆகும். இது ''சக்ரமெந்தும்'' என்ற இலத்தின் சொல்லிலிருந்து வெளிப்படுகிறது. மேலும் இச்சொல் ''மிஸ்டெரிடின்'' என்ற கிரேக்க சொல்லின் மொழி பெயர்ப்பாகும். அதன் கருத்து ''மறைபொருள்'' என்பதாகும். திருவருட்சாதனம் பற்றிய தொடக்க மனநிலை திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே திருவருட்சாதனத்துடன் இணைந்துள்ள சில சடங்குகள் டிடாக்கேயிலும் (கி.பி 100), ஹிபிபொலிடஸ் என்பவரின் ''அப்போஸ்தலிக்க பாரம்பரியம்'' (கி.பி 215) என்ற நூலிலும் உள்ளன. இவற்றிலே திருச்சபையின் ஆரம்ப காலத்தில் இச் சடங்குகள் மிகவும் எளிமையாகப் பயன்படுத்தப்பட்டு பின்னர் அவை அதிகமாக பயன்படுத்தப்பட்டதாக காட்டப்படுகின்றன. கி.பி 207-212ம் ஆண்டளவில் திருவருட்சாதனம் என்ற சொல் முதலில் தேர்த்தூலியனால் பயன்படுத்தப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

#### 5.1.1 அருளடையாளங்களின் (திருவருட்சாதனங்களின்) நோக்கம்

1. மனிதனைத் தூய்மைப்படுத்தல்
2. கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை வளர்தல்.
3. இறைவனை ஆராதித்தல்

அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அடிப்படைத் தேவை நம்பிக்கையாகும். அதனால் அருளடையாளம் நம்பிக்கையின் அருளடையாளம் எனவும் அறியப்படுகிறது. மேலும் அருளடையாளங்களை முறையாகப் பெற்றுக் கொள்வதால் இறையருளை நம்பிக்கையுடன் அனுபவிப்பதோடு மிகவும் கருத்துடன் இறை ஆராதனை, இறை மாட்சி ஆகியவற்றை அவருக்கு அளிக்கலாம். இதனால் அருளடையாளங்களை அடிக்கடி பெற்றுக் கொள்வதோடு அவ்வருளடையாளங்களின் அடையாளத்தைப் புரிந்து கொள்வதால் கிறிஸ்தவ வாழ்வுக்கு ஊட்டமளிக்கலாம்.

#### 5.1.2 அருளடையாளங்களிலுள்ள அடையாளங்களும் குறியீடுகளும்

அடையாளம், குறியீடுகள் பற்றி சரியாக அறிந்துகொள்ள வேண்டும். அடையாளம் குறியீட்டிலும் வேறுபட்டது. குறியீடு எமக்கு ஒரு செய்தியை அளிக்கிறது. அடையாளம் செய்தி மட்டுமன்றி அதனையும் விட மேலும் பல விடயங்களைக் கொண்டு வருகிறது. பல அனுபவங்களை நினைவுறுத்துகிறது. (வரலாற்றுடனும்

சமூகத்துடனும் எம்மை இணைக்கிறது. அதனால் அருளடையாளங்கள் மூலம் இறைவன் எம்முடன் பேசுகிறார்) அருளடையாளம் - அடையாளங்களையும் குறியீடுகளையும் பயன்படுத்துகிறது.

உ+ம் திருமுழுக்கின்போது நீர் பயன்படுத்தப்படுகிறது.

**நீர்:- அடையாளங்கள், குறியீடுகள் பலவற்றை நினைவுபடுத்துகிறது.**

- உலக படைப்பின்போது ஆண்டவரின் ஆவி நீர்மேல் அசைந்தாடிக் கொண்டிருந்தது.
- நோவாவின் காலத்தில் வெள்ளத்தின் மூலம் புதிய வானமும் புதிய பூமியும் படைத்தல்.
- செங்கடலைக் கடந்து அடிமைத்தனத்தை தோற்கச் செய்து சுதந்திர மக்களைத் தோற்றுவித்தல்.
- திருமுழுக்கு நீரினால் பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறுதல்.
- யேசு யோர்தான் நதிக்கரையில் திருமுழுக்கு பெற்றமை/ போன்ற விடயங்களை எமது திருமுழுக்கு நீர் நினைவுறுத்துகிறது.

அதனால் திருமுழுக்கு வெறும் தண்ணீர் அல்ல, பல கருத்துக்களைக் கொண்ட, காலாகாலமாக ஒன்றிணைக்கின்ற, பலபேரை நினைவுகூருகின்ற கருத்துக்களை நினைவுறுத்துகின்றது. பழைய ஏற்பாட்டிலே மக்கள், தமது திருவழிபாட்டு வாழ்விலே முக்கியமான - இந்த அடையாளங்கள், அருங்குறிகளைக் கொண்டிருந்தார்கள். உ+ம் அரசர்கள், குருக்களுக்கு எண்ணெய் பூசுதல், திருப்பொழிவு செய்தல், தலைமீது கைவைத்தல். பழைய ஏற்பாட்டில் இந்த அடையாளம் புதிய ஏற்பாட்டின் அருளடையாளங்களுக்கு முன்னடையாளமாக இருக்கிறது. யேசு இந்த முன்னடையாளத்திற்கு புதிய கருத்தொன்றை அளித்தார். இதன் மூலம் விடுதலைப்பயணத்திற்கும், பாஸ்காவிற்கும் புதிய கருத்து கிடைத்தது. இதனால் அருளடையாளங்களை நிறைவேற்றும்போது மீட்பின் வரலாற்றை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

மேலும் அருளடையாளங்களில் இறந்த, நிகழ், எதிர்காலங்கள் மூன்றுமே அடங்கியுள்ளன. அருளடையாளம் குறியீட்டல்ல. ஆனால் குறியீடு மூலம் செய்தியை வெளிப்படுத்துகிறது.

உ+ம்:-

- முச்சந்தியில் உள்ள பாதை குறியீட்டில் சிவப்பு வெளிச்சமிருந்தால் வாகனங்கள் நிறுத்தப்படுவதோடு பச்சை வெளிச்சமிருந்தால் வாகனங்கள் மீண்டும் பயணத்தை தொடரும்.
- நீதிமன்றத்தின் முன்னால் குழல் ஊதாமலிருப்பதற்கு அளிக்கப்படுகின்ற குறியீடு நீதிமன்றத்திற்கு முன்னால் மட்டுமே செல்லுப்படியாகும். அந்த வரையறையைக் கடந்த பின்னர் குழல் ஊதலாம்.

ஆயினும் அருளடையாளம் என்பது குறியீடு அல்ல. அருளடையாளம் மனித வாழ்வின் இறுதிவரை தொடர்ந்து காரியமாற்றுகிறது. உ+ம் - மெய்விவாக அருளடையாளம், திருமண நாள் மட்மன்று, அன்றைய நாள் அவ்வருளடையாள வாழ்வின் தொடக்கம் மட்டுமே. மெய்விவாக அருளடையாளத்தில் இணைக்கப்படும் பெண்ணும் ஆணும் இறக்கும் வரை அவ்வருளடையாள வாழ்வில் வாழ்கிறார்கள். இறக்கும் வரை அவர்கள் ஒரே குடும்பமாய் இருக்கிறார்கள். ‘‘இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்.”

**அருளடையாளங்களிலுள்ள அடையாளம் காணக்கூடியது. ஆனால் அதன் பிரதிபலன் புலப்படாதது.**

**உ+ம்:-**

- அப்பமும் இரசமும் காணக்கூடியது. ஆயினும் நற்கருணையில் இருக்கும் இயேசு எமக்கு புலப்படுவதில்லை.
- மேலும் திருவழிபாட்டின் குறியீடும், அடையாளமும் திருச்சபையின் குறியீடாயிருப்பதால் அவை நபருக்கு நபர், நாட்டுக்கு நாடு மாறுபடாதது. ஆயினும் திருவழிபாட்டின் அடையாளத்தை தமது அடையாளமாக கொள்ளும்போது அருளடையாளத்தில் இறைவனை வணங்குவதற்கு இலகுவாக இருப்பதோடு அருளடை யாளத்தின் மூலம் உண்மையான கருத்தை புரிந்துக்கொள்ளவும் இயலுமானதாக உள்ளது.
- இதனை சிறப்பான செய்வதற்கு, அருளடையாளத்தை வழங்குமுன் விசுவாசிகளை அறிவுறுத்த வேண்டியது ஒரு சிறந்த செயன்முறையாக உள்ளது. இது தேவையானதாகவும் உள்ளது. நம்பிக்கையுடனும் சுறுசுறுப்பு டனும் வாழ்வதற்கான திறனை இதில் அனுபவமாக பெறலாம்.

### 5.1.3 அருளடையாளங்கள் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தூய தோமஸ் அக்குவைனஸ் கூறியுள்ளதன்படி அருளடையாளங்கள் யேசுவால் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு அது நேரடியாகவும் மறைமுகமாகவும் அருளடையாளங்களில் பரவியுள்ளது.

**அருளடையாளங்கள் 07**

அருளடையாளங்கள் 07 இருப்பதாக திருச்சபை ஆணித்தரமாக உறுதிப்படுத்துகிறது. திருச்சபையின் ஆரம்ப காலத்திலே இந்த எண்ணிக்கையில் மாற்றம் இருந்ததாக திருச்சபையின் வரலாறு சான்று பகர்கிறது.

## 5.2 திருமுழுக்கு

இவ்வுலகில் பிறக்கும் எல்லா மனிதருக்கும் பிறப்பு வாழ்வின் தொடக்கமாயிருப்பதுபோல திருமுழுக்கு, இறைவாழ்வில் பிரவேசித்தலாக அல்லது தொடக்கமாக உள்ளது. திருமுழுக்கு அருளடையாளம் மனிதனை சென்ம பாவத்திலிருந்து விடுவித்து இறை பிள்ளையாகவும் திருச்சபையில் அங்கத்தினராகவும் உயர்த்துகிறது.

1. விண்ணரசில் பிரவேசிப்பதற்கு திருமுழுக்கு அவசியமானது என இயேசு கூறியுள்ளார். இயேசு நிக்கதேமுவைப் பார்த்து ‘‘ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்’’ என்றார். (யோவான் 3:5)
2. இயேசு அவ்வாறு போதித்தது மட்டுமன்றி மக்களுக்கு அவர் திருமுழுக்கு அளித்தார். ‘‘இயேசுவும் அவர் தம் சீடரும் யூதேயப் பகுதிக்குச் சென்றனர். அங்கே அவர் அவர்களோடு தங்கித் திருமுழுக்குக் கொடுத்து வந்தார்’’. (யோவான் 3:22)
3. அவ்வாறே அவர் தம் சீடருக்கு அளித்த இறுதி கட்டளையும் திருமுழுக்குப் பற்றியதேயாகும். ‘‘எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்’’. (மத்தேயு 28:19)

**திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே:-**

- திருச்சபையின் தொடக்கத்திலிருந்தே அவரது கட்டளைகளை சீடர் கடைப்பித்தனர். ஆண்டவரில் நம்பிக்கைக் கொண்டோர் திருமுழுக்குப் பெற்றனர். பேதுரு தூய ஆவியின் வரம் பெற்று ஆற்றிய முதல் போதனையின்பின் ‘‘அவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.’’ (திப. 2:14)
- திருச்சபையின் ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பெயரால் திருமுழுக்கு பெற்றுக் கொண்டதை பேதுரு இவ்வாறு கூறுகிறார். ‘‘நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள்’’ (திப 2:38, 10:48, உரோ 6:3, கலா. 2:17)
- திருச்சபையில் திருத்தூதரின் காலத்திலிருந்தே திரித்துவத்தின் பெயரால் திருமுழுக்கு அளிக்கப்பட்டதோடு இன்றும் அந்த பழைய படிப்பினைக்கும், முறைக்கும் ஏற்ப திருமுழுக்கு அளிக்கப்படுகிறது. மேன்மையான அருளடையாமாகிய இயேசுவில் வேரூன்றி திருத்தூதர் காலத்தினால் ஊட்டம் பெற்று இன்றைய விசுவாசிகள் இறை பிள்ளைகள் ஆக்கப்படுகிறார்கள்.
- ஒருவர் திருமுழுக்கு பெறுவதற்குத் தேவையான அடிப்படைத் தகுதி ஆண்டவரிலுள்ள நம்பிக்கையாகும். அதுமட்டுமன்றி இயேசுவைப் பின்பற்றுவோருக்கு திருமுழுக்கு அளிப்பதற்கான அதிகாரம் - திருத்தூதருக்கு மட்டுமன்றி வேறு சிலருக்கும் அளிக்கப்பட்டிருந்தது.

  உ+ம் திப. 9:10-19 - அனனியா சவுலுக்கு திருமுழுக்களித்தல்.
  திப. 8:26-39 - பிலிப் எத்தியோப்பிய அலி ஒருவருக்கு திருமுழுக்களித்தல்.
- ஆண்டவரில் விசுவாசம் கொண்டு மனம் மாறிய மக்கள் திருமுழுக்கு பெற்று திருச்சபையில் அங்கத்தின ராகி இறைபிள்ளைகள் ஆனார்கள். அந்த இறை பிள்ளை என்ற நிலையில் நம்பிக்கை வாழ்க்கை மூலம் அவர்களின் முறைசார் அர்ப்பணிப்பும் அனைத்து விசுவாசிகளுடனுமான அன்பு வாழ்க்கை முறையும் கிறிஸ்தவ ஒன்றியத்தைத் தோற்றுவித்தது. அதாவது திருமுழுக்கு ஒன்றியத்தைத் தோற்றுவித்தது.
- இந்த ஒன்றியத்தில் பிள்ளைக்கு அல்ல. வளர்ந்தோருக்கு திருமுழுக்கு அளிப்பது ஆரம்ப காலத்தில் நிகழ்வற்றது.
- டிடாக்கே (திருத்தூதரின் படிப்பினைகள் அடங்கிய நூலில்) குறிப்பிட்டுள்ளதன்படி கலாபனை காலத்தில் துன்ப, வேதனைகளைத் தாங்கிக்கொள்ள முடியாதோருக்கு திருமுழுக்கு அளிப்பது தவிர்க்கப்பட்டது.
- அவ்வாறே திருமுழுக்கு பெறுவோரும் அருளடையாளத்தை வழங்குபவரும் ஒன்றியத்தில் இருப்போரும் திருமுழுக்கிற்கு முன்னர் ஒருசந்தி அனுசரிக்க வேண்டும்.

- பாய்ந்தோடும் ஊற்று, திருமுழுக்கு அளிப்பதற்கு தேர்ந்து கொள்ளப்பட்டது. அச் சடங்கு ஆயரின் ஆலயமான மேற்றிராசன கோயிலில் (எட்டு இதழ்களுடன் கூடிய) திருமுழுக்கு தடாகம் அமைக்கப்பட்டதன் பின்னர், ஆலயத்தின் உள்ளே கொண்டு வரப்பட்டது.

**இரண்டாம் நூற்றாண்டளவில்…**

- திருச்சபையின் தொடக்க காலத்தில், இயேசுவில் நம்பிக்கை இருப்பதாக அறிக்கையிட்டவர்களுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது.
- மூன்றாம் நூற்றாண்டளவில் ஆண்டவரின் நம்பிக்கை மட்டுன்றி ஆயத்தமாகும் காலமும் திருமுழுக்கிற்கு அவசியம் என்பதைத் திருச்சபை புரிந்து கொண்டது. அதனால் அந்த விசுவாசிகள் 2 அல்லது 3 வருட காலம் திருமுழுக்கிற்கு ஆயத்தமாக்கப்பட்டார்கள். (Period of Catechumenate) அக்காலத்திற்குள் மறையைக் கற்பித்து சாத்தானை மறுத்து ஒரே இறைவனில் நம்பிக்கை வாழ்வு வாழ்வதற்கு பயிற்றுவிக்கப்பட்டார்கள். இவ்வாறு ஆயத்தப்படுத்திய பின்னர் அவர்களுக்கு அல்லேலூயா சனி நள்ளிரவு திருவழிபாட்டின்போது திருமுழுக்கு அளிக்கப்பட்டது. வளர்ந்தோருக்கும் அன்றைய தினம் திருமுழுக்கு வழங்கப்பட்டதோடு தவக்காலத்திலே – விசேஷமாக அவர்கள் ஆயத்தப்படுத்தப்பட்டார்கள்.

### 5.2.1 திருமுழுக்கினால் கிடைக்கும் அருள்

- சென்ம பாவத்திலிருந்து விடுதலையடைதல்.
- திருமுழுக்கின் மூலம் பரிசுத்த திரித்துவம் திருமுழுக்கு பெறுபவரில் இறங்கி வருவதால் அவர் புதிய மனிதன் ஆகிறார். இந்த அருளடையாளத்தினால் இப் புதிய மனிதர் பெறும் புதுவாழ்வு இறைவனால் தரப்படும் புதிய அருள் வாழ்வாகும். இந்த புதிய வாழ்வு இயேசுவின் மரணம் என்ற வெகுமதி காரணமாக திருமுழுக்கு பெற்ற புதிய மனிதனுக்கு உரிமையாகிறது. அது அருள் வாழ்வாகும் (உரோ 3:24)
- மேலும் திருமுழுக்கின்போது தூய ஆவியானவர் திருமுழுக்கு பெறுபவரின் உடலைத் தூய்மைப்படுத்தி தூய ஆவி தங்கும் கோயிலாக மாற்றுகிறார். "உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூய ஆவி தங்கும் கோயில் என்று தெரியாதா?" (1கொரி 6:19).
- இந்த புது வாழ்வினால் திருமுழுக்கு பெற்றவர் இறைவனின் பிள்ளையாகிறார். அதாவது தூய திரித்துவத்துடன் ஒன்றுபட்ட வாழ்வில் இணைவதால் நிலை வாழ்விற்கு உரிமை உடையவராகிறார்.

### 5.2.2 திருமுழுக்கு யாருக்கு வழங்கப்படுகிறது?

**1. குழந்தைத் திருமுழுக்கு**

திருச்சபையின் ஆரம்ப காலத்தில் வளர்ந்தோர் திருமுழுக்குதான் நடைமுறையிலிருந்தது. பெருக்கெடுத்தோடும் நீரில் (ஆற்றில்) அவர்களை அமிழ்த்தியெடுத்து திருமுழுக்கு அளிப்பது அப்போது வழக்கத்திலிருந்தது. பின்னர், குழந்தை பருவத்தில் திருமுழுக்களித்து, இறைவனின் அன்பிலும் மாதிரிகையிலும் பெற்றோர், ஞான பெற்றோர் ஆகியோரின் நம்பிக்கையிலும், திருச்சபையின் வலிமையிலும் ஞானத்திலும் வளர்வதற்காக பிள்ளைப் பருவத்திலே பிள்ளைகளுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது.

- திருச்சபை சட்டத் தொகுப்பின்படி (867/1) குழந்தை பிறந்து, ஆரம்ப வாரங்களுக்குள் குழந்தைக்கு திருமுழுக்கு வழங்கப்பட வேண்டும்.
- குழந்தைக்கு திருமுழுக்கு அளிப்பதற்கு பெற்றோரின் விருப்பம் இருக்க வேண்டும்.
- குழந்தை கத்தோலிக்க மறை நம்பிக்கையில் வளர்க்கப்படுவதற்கான வாய்ப்புண்டு என்ற எதிர்பார்ப்பு திருமுழுக்கு வழங்கும் குருவானவருக்கு இருக்க வேண்டும்.
- குழந்தையின் பெற்றோர் மெய்விவாகம் என்னும் அருளடையாளம் பெற்றிருக்க வேண்டும்.

**ஆன்மீக பெற்றோர்**

- இவர்கள் பிள்ளையின் பெற்றோருடன் இணைந்து பிள்ளை திருமுழுக்கு பெறுவதில் ஆர்வம் காட்டுதல்.
- திருமுழுக்கில் பெறும் இறைவாழ்வுக்கேற்ப பிள்ளை வளர்வதற்குத் துணைபுரிய வேண்டும்.
- பெற்றோருக்கு பிள்ளை மட்டில் பொறுப்பு இருப்பதுபோல ஞான பெற்றோருக்கும் பிள்ளையின் ஆன்மீக வாழ்வு வளர்ச்சியில் பொறுப்பு உண்டு.

- பிள்ளை குழந்தையாயின் திருமுழுக்கு அளிப்பதற்கு பெற்றோர், ஞான பெற்றோருக்கு இறை விசுவாசம் இருக்க வேண்டும்.
- ஆயினும் திருமுழுக்கு பெற்று அந்த பிள்ளை நன்மை, தீமை அறிந்து கொள்ளும் வயது வரை பெற்றோரும் ஞான பெற்றோரும் பிள்ளையின் நம்பிக்கையைப் பாதுகாத்து ஊட்டமளிக்க வேண்டும். அது அவர்களின் முக்கிய கடமையாகும்.
- வளர்ந்தோர்/குழந்தை திருமுழுக்கின்போது ஞான பெற்றோர் திருமுழுக்கு பெறுபவரின் ஆன்மீக வாழ்வில் கவனம் செலுத்த வேண்டியது அவர் உறவினர், அறிமுகமாயிருப்பவர் என்பதற்காக அல்ல, மாறாக கத்தோலிக்க திருச்சபையில் பிரதிநிதி என்ற ரீதியிலாகும். திருச்சபையின் ஒருமைப்பாடு இவ்வாறு காட்டப்படுகிறது.
- ஆயினும் பெற்றோர் தம் பிள்ளையின் ஞான பெற்றோரைத் தெரிவு செய்யும்போது இறைவன் முன்னிலையில் ஞான பெற்றோர், பிள்ளை மட்டில் பொறுப்பு, கடமைகளை நிறைவேற்ற வேண்டியவர்கள் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

**ஞான பெற்றோர் ஆவதற்கான தகுதிகள்**

- வளர்ந்தோர் திருமுழுக்கின்போது திருமுழுக்கு பெறுபவர் ஞான பெற்றோரை தெரிவு செய்ய வேண்டும்.
- குழந்தை திருமுழுக்கின்போது பெற்றோர் குழந்தையின் ஞான பெற்றோரைத் தெரிவு செய்வர். அவ்வாறு இல்லாத விடத்து, குருவானவர் ஞான பெற்றோரைத் தெரிவு செய்வார்.
- மறைமாவட்ட ஆயர், ஞான பெற்றோருக்கான வயதெல்லையைக் குறித்திராவிடினும் ஞான பெற்றோர் புகுமுக அருளடையாளங்களைப் (திருமுழுக்கு, நற்கருணை, உறுதிப்பூசுதல்) பெற்றவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞானப் பெற்றோர் தமது நம்பிக்கை வாழ்வை வாழ்ந்து தமது பொறுப்புகளை புரிந்துகொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

**2. வளர்ந்தோர் திருமுழுக்கு**

- திருச்சபையின் ஆரம்ப காலத்தில் வளர்ந்தோர் திருமுழுக்கு வழக்கத்திலிருந்தது.
- வளர்தோர் திருமுழுக்கிற்குத் தேவையான அடிப்படைத் தகுதிகள்:-
  - திருமுழுக்கு பெற இருப்போரின் சுதந்திரமான விருப்பு
  - கிறிஸ்தவ மறை பற்றிய சரியான அறிவு
  - ஆயத்த நிலையினர் என்ற ரீதியில் கிறிஸ்தவ மறை மட்டில் ஆர்வம்
  - தனிப்பட்ட ரீதியில் பாவங்களுக்காக மனம் வருந்துதல்

**I வளர்ந்தோர் திருமுழுக்கின் படிநிலைகள்**

- முதலாவது நிலை யாதெனில் திருமுழுக்கு பெற இருப்பவர் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருப்பதால் அவரை வரவேற்கும் சடங்கு.
- திருமுழுக்கு கட்டளை – திருமுழுக்கு பெற இருப்பவரை திருச்சபையில் ஏற்று பல்வித படிநிலைகளில் பயிற்சியளிக்க வேண்டும். கிறிஸ்தவ மறையைக் கற்பித்தல், நம்பிக்கை கொள்ள வேண்டிய கிறிஸ்து வின் சரிதையை, மறையுண்மைகளைத் தெளிவுபடுத்தும்போது அவை கிறிஸ்துவை, கிறிஸ்துவின் சரிதையை அறிமுகப்படுத்த வேண்டும்.

**II வளர்ந்தோருக்கு திருமுழுக்கு அளித்தல்**

திருமுழுக்கு பெற இருப்பவர், தான் கற்றுக்கொண்ட கிறிஸ்தவ மறையிலும் இயேசுவிலும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளார் என்பதை திருச்சபையை ஆள்பவர்கள் புரிந்து கொண்டபின் அவருக்கு திருமுழுக்கு அளிப்பர். அச் சடங்கை நிறைவேற்றுவதற்கு மிகவும் பொருத்தமான நாள் அல்லேலூயா சனி இரவாகும்.

**III ஞான பெற்றோர்**

திருமுழுக்கு பெற இருப்பவருக்கு கிறிஸ்தவ வாழ்வைத் தொடங்குவதில் துணை புரிவது ஆன்மீக பெற்றோரின் கடமையாகும். திருமுழுக்கு பெற இருப்பவர் அதற்கான தகுதி பெற்றுள்ளார் என்பதற்கு ஞான பெற்றோர் சான்று பகர்வர். உ+ம்:- தூய பவுல் திருமுழுக்கு பெறுவதற்கு முன் கிறிஸ்துவின் சீடர் முன்னிலையில் பர்னபா சான்று பகர்தல். (திப 9:26-27)

**3. இரத்தத்தினால் திருமுழுக்கு**

திருமுழுக்கு பெறுமுன் ஒருவர் மறைசாட்சியாக தம் வாழ்வை நம்பிக்கைக்காக (விசுவாசத்திற்காக) இழக்க நேரிடின் விண்ணரசில் அவர் மறைசாட்சியாகிறார். காரணம், அந்த நபரின் இரத்தத்தினால் திருமுழுக்கு பெற்று புதிய இரத்தத்தினால் தூய்மையாக்கப்- படுவதால்தான் அவர் மறைசாட்சியாகிறார். அது இரத்தத்தின் திருமுழுக்கு எனப்படுகிறது.

**4. ஆசைத் திருமுழுக்கு**

இறைவனில் உள்ள அன்பினால் ஒருவர் தன் பாவங்களுக்காக மனம் வருந்தும் காலத்தில், திருமுழுக்கு பெறுமுன் திடீரென இறந்தால் அவர் ஆசை திருமுழுக்கினால் மீட்பைப் பெற்றுக் கொள்கிறார்.

**5.2.3 திருமுழுக்கின்போது பயன்படுத்தப்படும் அடையாளங்கள்.**

**1. தண்ணீர்**

- திருமுழுக்கின் முக்கிய அடையாளம் (தண்ணீர் - வாழ்வின் ஊற்று)
- உலக ஆரம்பத்தின்போது நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தார். (தொநூ. 1:2)
- இயேசு நிக்கதேமுவிடம், ''ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன்''(யோவா. 3:5)
- திருச்சபைத் தந்தை தேர்த்தூலியன் கூறியுள்ளதன்படி தண்ணீர் ஆரம்பத்தில் படைக்கப்பட்டதைப் போல திருமுழுக்கில் மனிதன் புதிய படைப்பாவதற்கு உதவுகிறது.
- உலக ஆரம்பத்தில் நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்ததைப்போல யோர்தான் நதி நீரிலே இயேசுவின் திருமுழுக்கின்போது கடவுளின் ஆவி புறாபோல் இறங்கினார் (மத் 3:16). இதனால் முதல் படைப்பும், புதிய படைப்பும் தண்ணீரால் இணைக்கப்படுவதாக அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த டிடிமுஸ் கூறுகிறார். ஆயினும் தண்ணீர் படைப்பின் உண்மைக்கு அடையாளமாய் இருக்கிறது.
- தண்ணீர் படைப்புக்கும் வாழ்வுக்கும் அடையாளமாயிருப்பதுபோல அழிவுக்கும் அடையாளமாயிருக்கிறது. நோவாவின் கால பெருவெள்ளம் இதற்கு உதாரணமாக உள்ளது. அது ஒருவிதத்தில் அழிவைவிட தூய்மைப்படுத்துவதற்கு அடையாளமாயிருக்கிறது. திருமுழுக்கு, மனிதனின் பாவத்தை அழித்து அவனை புதிய மனிதனாக்குகிறது.
- செங்கடலிலே அடிமைத்தனத்தின் எதிரியை அழித்ததுபோல திருமுழுக்கிலே தண்ணீரினால் எமக்கும் இறைவனுக்குமிடையேயுள்ள பகைமை அழிந்துவிடுவதாக தூய பெசில் காட்டுகிறார்.
- பாஸ்கா திருவிழிப்பு இரவில் திருமுழுக்கு நீர் ஆசீர்வதிக்கப்படும்போது இவ்வாறு சொல்லப்படுகிறது. ''இறைவா, பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற ஆபிராமின் மக்கள், செங்கடலைக் கால் நனையாமல் கடக்கச் செய்து திருமுழுக்குப் பெற்ற மக்களுக்கு அடையாளமாக இருக்கச் செய்தீர்."
- இயேசுவின் திருமுழுக்கு பற்றிய இவ் வாசகங்களை வாசிக்கவும் (மத்.3:13-17, லூக்3:21-22, மாற்.1:9-11)

**2. வெள்ளை ஆடை**

- வெள்ளை ஆடை தூய்மையை எமக்கு நினைவுறுத்துகிறது. அசுத்தமின்றி, தூய்மையடைதல், இந்த தூய்மை ஆன்மீக தூய்மைக்கு அடையாளமாயிருக்கிறது. திருச்சபையின் ஆரம்ப காலத்தில் திருமுழுக்கு பெறுபவர் வளர்ந்தோராய் இருந்ததோடு அவர்களை நீரில் அமிழ்த்தி மேல் எடுத்து வெள்ளை ஆடை அணிவிப்பது வழக்கமாயிருந்தது. தூய பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில், ''கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்.'' என குறிப்பிடப்பட்டுள்ளது (கலா. 3:27). இங்கு அணிவிக்கப்படும் வெள்ளை ஆடை, பாவத்தில் வீழ்ந்த மனிதன் திருமுழுக்கு மூலம் கிறிஸ்தவ வாழ்விற்கு பிரவேசிப்பதை அடையாளப்படுத்துகிறது. வெள்ளை ஆடை

கிறிஸ்துவின் அடையாளமாகிறது. பழைய பாவ நிலையை களைந்து புதிய நிலை அதாவது புதிய மனிதராகிய கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல் எனப்படுகிறது. இதனை கொலோசியர் திருமுகத்தில் 3:10ல் காண்கிறோம். ''நீங்கள் பழைய இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்து விட்டு, புதிய இயல்பை அணிந்திருக்கிறீர்கள்….''

- 5ம், 6ம் நூற்றாண்டுகளில் துர்நடத்தையுடைய மக்களுக்கு திருமுழுக்கு அளிக்கும்போது அவர்களின் நெறிகெட்ட வாழ்வை விட்டு கிறிஸ்துவில் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பது இங்கு காட்டப்படும் மேலும் ஒரு கருத்தாகும்.
- இயேசுவின் உருமாற்றத்தின்போது சீடர் கண்ட இயேசுவின் உருவத்தைத் தூய மாற்கு இவ்வாறு முன்வைக்கிறார். ''அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளி வீசின (மாற். 9:3). அவ்வாறே திருமுழுக்கின்போது பிள்ளைக்கு அணிவிக்கும் வெள்ளை ஆடை, கிறிஸ்துவின் உருமாற்றத்தின்போது அவர் அணிந்திருந்த வெள்ளை ஆடையை நினைவுறுத்துகிறது, அடையாளப்படுத்துகிறது. கிறிஸ்துவின் உருமாற்றம் அவரது உயிர்ப்பின் முன்னடையாளமாகும். பாவத்தில் இறந்து திருமுழுக்கினால் புதிய மனிதனாகும் கிறிஸ்தவன் உயிர்த்த கிறிஸ்துவின் மகிமையில் பங்குதாரராகிறான்.

**3. திருப்பொழிவு**

- திருப்பொழிவு செய்யப்படுவதை பழைய உடன்படிக்கையில், தெளிவாக காணக் கூடியதாயிருப்பதோடு அதன் ஆழ்ந்த கருத்தும் வெளிப்படுத்தப்படுகிறது. பழைய உடன்படிக்கையில் அரசரும் இறைவாக்கினரும் திருப்பொழிவு (அபிஷேகம்) செய்யப்பட்டார்கள். அவ்வாறு திருப்பொழிவு செய்யப்படுவதால் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் என்ற கருத்து காட்டப்படுகிறது. அவ்வாறே இறைவனுக்கு அர்ப்பணிக்கபட்டவர் இறைவனுக்கும் மக்களுக்கும் பணியாற்ற வேண்டும்.
- திருமுழுக்கின்போது திருப்பொழிவு செய்யப்படுபவர்கள் இறைவனுக்கும் மக்களுக்கும் பணியாற்ற வேண்டும். அப்பணி அரச, குருத்துவ, இறைவாக்கு என மூவிதத்தில் ஆற்றப்படுகிறது.

**திருப்பொழிவு செய்யப்படும்போது பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகள்:-**

1. ஆயத்த எண்ணெய் - திருமுழுக்கு – முதல் படி O.C (Oleum catechumenorum) – oil of catechumens
2. கிறிஸ்மா எண்ணெய் - (Sacurum Chrisma – S.C) (சக்ரும் கிறிஸ்மா) பூசப்படுகிறது.
3. நோயாளர் எண்ணெய் - O.I - நோயில்பூசுதலின்போது பயன்படுத்தப்படுகிறது.

I. பிள்ளைக்கு புண் ஏற்படும்போது பெற்றோர் அதில் எண்ணெய் ஊற்றி சுகம் பெறச் செய்வது பண்டைய மக்களிடையே பிரசித்தமாயிருந்தது. அவ்வாறே ஆயத்த எண்ணெயை திருமுழுக்கின்போது பூசுதல் (O.C) உயிர்த்த கிறிஸ்து எமது ஆன்மீக புண்ணை சுகப்படுத்துகிறார் என்பதை நினைவுறுத்துகிறது.

II. திருமுழுக்கின்போது கிறிஸ்துவின் பெயரால் அர்ப்பணிக்கப்படுகிறார் என்ற கருத்தை தரும் கிறிஸ்மா (Chrisma) எண்ணெய்யால் திருப்பொழிவு செய்யப்படுகிறார். அதன் கருத்து வலிமைப்படுத்துதல் ஆகும். திருமுழுக்கு பெறுபவர் இவ்வாறு வலிமைப்படுத்தப்படுவது தமது இறை நம்பிக்கையின்படி வாழ்வதற்கும் இறை நம்பிக்கைக்கு எதிராக ஏதும் ஏற்படின் அதற்கு எதிராக போராடுவதற்கு வலிமைப் பெறுவதற்குமாகும்.

III. திருமுழுக்கு பெறுபவர் அரச, குருத்துவ, இறைவாக்காளராயிருப்பதால் இறைவனுக்கும் மனிதனுக்கும் பணியாற்றுவதற்கு இந்த திருப்பொழிவினால் இறை வலிமையைப் பெறுகின்றார். (திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவத்திற்கு இவ் எண்ணைய் பயன்படுத்தப்படுகிறது)

**4. பாஸ்கா மெழுகுவர்த்தி**

விளக்கின் முக்கிய பணி இருளை நீக்கி ஒளியைத் தருவதாகும். பாஸ்கா மெழுகுவர்த்திக்கு மற்ற விளக்குகளையும்விட சிறப்பம்சம் உண்டு. அது உயிர்த்த கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறது. ஆதலால் திருமுழுக்கு அளிக்கப்படும் இடத்தில் ஏற்றியிருக்கும் விளக்கு பாஸ்கா மெழுகுவர்த்தியாருப்பதால் அது திருமுழுக்கு பெறும் பிள்ளையின் உள்ளார்ந்த வாழ்வுக்கு கிடைக்கும் உயிர்த்த யேசுவின் ஒளியாகும். இந்த ஒளியில் பயணிப்பவருக்கு ஒருபோதும் இருள் ஏற்படாது.

‘‘ஒரு காலத்தில் இருளாயிருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள். ஏனெனில் ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையும் விளைவிக்கிறது.’’ (எபே 5:8-9)

## 5.3 தேவநற்கருணை என்னும் அருளடையாளம்

திருப்பலி வேளையிலே அப்பமும் இரசமும் இயேசுவின் திரு உடலாகவும் திரு இரத்தமாகவும் மாற்றம் பெறுகிறது. இந்த திரு உடலை தேவநற்கருணை (திவ்விய சற்பிரசாதம்) என்கிறோம். திவ்விய சற்பிரசாதம் என்ற பெயரை அறிமுகப்படுத்தியவர் கொன்சால்வேஸ் அடிகளார் என பண்டைய நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளது. ‘‘திவ்விய’’ என்றால் ஆண்டவர் ‘‘சற்’’ என்பது முழுமையைக் காட்டுவதற்கு திருவிவிலிய ஆசிரியர் பல முறை பயன்படுத்தியிருந்தார். ‘‘பிரசாதம்’’ என்றால் வரப்பிரசாதம். இந்த மூன்று சொற்களும் இணைந்து ‘‘திவ்விய சற்பிரசாதம்’’ என அழைக்கப்படுகிறது. அவ்வாறாயின் திவ்விய சற்பிரசாதம் (தேவ நற்கருணை) இறைவனிடமிருந்து கிறிஸ்தவன் பெற்றுக் கொள்ளக் கூடிய அனைத்து வரங்களையும் கொண்டுவரும் அருளடையாளமாகும். இறைவனின் ஆசீரை நாம் பெற்றுக் கொள்வதற்காக எம்மிடையே வந்த ஆண்டவராகிய இயேசுவை நற்கருணை வாயிலாக பெற்றுக் கொள்வதன் மூலம் நற்கருணை பெறுபவரில் இயேசு வாழ்கிறார்.

திருமுழுக்கு மூலம் அரச, குருத்துவ, இறைவாக்கினர் நிலைக்கு உயர்த்தப்பட்டு, உறுதிப்பூசுதல் மூலம் அபிஷேகம் செய்யப்பட்டு, கிறிஸ்துவுடன் நெருங்கி உறவாடும் கிறிஸ்தவன் தேவநற்கருணை வழியாக கிறிஸ்தவ ஒன்றியத்துடன் இணைந்து அவரது பலியில் நிரந்தர பங்குதாரனாகிறான். ஆதலால் இந்த அருளடையாளம் மற்ற அருளடையாளங்களிலும் மேன்மையானதாக உள்ளது. இது இயேசுவினால் நிறுவப்பட்டு எந்நாளும் அவரை நினைவுகூருவதற்கு கட்டளையிடும் அருளடையாளமாகும்.

### 5.3.1 கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உன்னதமுமான தேவநற்கருணை

**தேவநற்கருணையை வகைப்படுத்தி கூறுவதாயின் அது ஒரு,**

1. அருளடையாளம்
2. உணவு
3. பலி
4. உடன்படிக்கை
5. நன்றிகூரல்
6. நினைவுகூரல்

**1. அருளடையாளம்**

இந்த அருளடயைாளம், இயேசுவினால் அவரது இறுதி இராவுணவின்போது ஏற்படுத்தப்பட்டது. அவரை நினைவுகூருவதற்காக இதனை நிறைவேற்றுமாறு அவர் கட்டளையிட்டார். (மத். 26:26-28, மாற். 14:22-24, லூக். 22:19-20, 1கொரி. 11:23-26) இவ்வாறு இவ்வருளடையாளத்தை இயேசு ஏற்படுத்தி அவரது இரண்டாம் வருகை வரை இதனைத் தொடர்ந்து நடாத்துவதற்கு (சிலுவை பலி) வழிகாட்டப்பட்டுள்ளது. நற்கருணை பலி மற்ற எல்லா ஆராதனைகளிலும் மேன்மையான ஆராதனையாகும்.

**2. உணவு**

நற்கருணை ஒரு உணவு என்பதை தூய யோவான் நற்செய்தியை வாசித்து அறிந்து கொள்ளலாம். ‘‘உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள். எனது தசையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு, எனது இரத்தம் உண்மையான பானம். (யோவா 6:53-56). இங்கு மேலும் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். திருப்பலியிலே உட்பொருள் நிலை மாற்றத்தின்போது அப்பமும் இரசமும் உண்மையாகவே இயேசுவின் திருஉடலாகவும் திரு இரத்தமாகவும் மாற்றம் பெறுகிறது.

‘‘எனது உடலை உண்ணுங்கள். எனது இரத்தத்தை அருந்துங்கள்.......’’ என்ற வார்த்தையை மனிதர் ஏற்றுக் கொண்டாலும் மனித இரத்தத்தை குடித்தலையும் மனித மாமிசத்தை உண்பதையும் சாதாரண

மனிதர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அத்துடன் இறுதி இராவுணவின்போது அவர் அப்பத்தை எடுத்து அதை ஆசீர்வதித்து ‘‘இதை வாங்கி உண்ணுங்கள். என் நினைவாக இதைச் செய்யுங்கள்’’ என்றார்.

திருப்பலியின்போது குருவானவர் அப்பத்தை எடுத்து இயேசு கூறிய வார்த்தைகளைக் கூறி, ஆசீர்வதித்து மக்களுக்கு அளிக்கிறார். அவ்வேளையிலே அந்த ஆசீர்வாதத்துடன், மாவினால் செய்யப்பட்ட அப்பம், இயேசுவின் திரு உடலாக மாற்றம் பெறும் அருங்குறி (புதுமை) நடைபெறுகிறது. நற்கருணை என்பது ஒரு அடையாளத்துடன் கூடிய உணவு அல்ல. உண்மையாகவே அது இயேவை எம் வாழ்விற்கு அளிக்கும் ‘‘வாழ்வளிக்கும் உணவா’’கும்.

**3. பலி**

இயேசு இறுதி இராவுணவின்போது அப்பத்தை எடுத்து ‘‘இது என் உடல். இதை வாங்கி உண்ணுங்கள்’’ என்று கூறிய பின் இரசத்தை எடுத்து, ‘‘இது என் இரத்தம், இதை வாங்கி அருந்துங்கள்’’ என்றார். இதிலிருந்து அவ்வுணவின் உண்மை நிலையைக் காண்கிறோம். ஆயினும் அத்துடன் நிறுத்தாது, ‘‘இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல்... இந்த கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகிற, எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை’’ (லூக். 22:19-20) என்றார். இதனால் உடலை அவர்களுக்காக கொடுக்கப்படும் உணவாகவும் இரத்தத்தை அவர்களுக்காக சிந்தப்படும் பலியாகவும் காட்டுகிறார்.

திருப்பலியிப்போது பீடத்திலே மீண்டும் இயேசுவின் இறப்பு நடைபெறுவதில்லை. அதனைத் தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலே தெளிவாகக் காட்டுகிறார். ‘‘இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார். இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல’’ (உரோ 6:9). ஆயினும் கல்வாரி மலையிலே அன்று நடைபெற்ற உயிர் பலி இன்று பீடத்திலே நடைப்பெறும்போது அது நற்கருணைப் பலி, அருளடையாளப் பலி, அன்று கல்வாரியில் பெறப்பட்ட பயன், பீடத்திலே அப்ப, இரசம் வாயிலாக இன்று எமது வாழ்க்கையோடு இணைகிறது. இன்று கத்தோலிக்கர் பீடத்திலே ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் - அன்று இயேசு நிகழ்த்திய இறுதி இராவுணவையும், கல்வாரி மலையிலே ஒப்புக்கொடுத்த வாழ்க்கைப் பலியையும் ஒன்றிணைத்து வாழ்வளிக்கும் திருப்பலியிலே அருளடையாளமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நற்கருணை விருந்தில் பங்கு கொண்டு இயேசுவின் திரு உடலையும் திரு இரத்தத்தையும் அருந்தி இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றில் பங்கு கொள்வதோடு அதனால் கிடைக்கும் மீட்பின் அருளை நம் வாழ்விலே பெற்று அனுபவிக்கலாம்.

**4. உடன்படிக்கை**

தூய லூக்கா கூறுவதன்படி ‘‘அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து, ‘‘இந்த கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை’’ (லூக். 22:20, 1கொரி 11:24-25). இந்த உடன்படிக்கை பற்றி எரேமியா இறைவாக்கினரும் வெளிப்படுத்தியுள் ளார். (எரே 31:31-34) இந்த உடன்படிக்கையையும் பழைய உடன்படிக்கையையும் ஒப்பிட்டு அறிந்து கொள்ளலாம்.

- ***பழைய உடன்படிக்கை சீனாய் உடன்படிக்கையாகும். சீனாய் உடன்படிக்கை தகனப் பலியினால் உறுதி செய்யப்பட்டது. (வி.ப 24:4-8)***
- ***புதியஉடன்படிக்கை இயேசுவின் இரத்தத்தினால் உறுதி செய்யப்பட்டது. (1கொரி 11:25, எபி 9:14-22)***

**5. நினைவுகூரல்**

இறுதி இராவுணவின்போது இயேசு நற்கருணை சடங்கை ஏற்படுத்தி ‘‘இதை என் நினைவாகச் செய்யுங்கள்’’ என்று சீடருக்குக் கட்டளையிட்டார். அந்த கட்டளை அன்று சீடரில் தொடங்கி, இன்றும் நாளையும் (என்றும்) அவரது துன்பப்பாடுகள், மரணம், உயிர்ப்பு – திருப்பலியில் - திருவழிபாட்டு சடங்கில் நினைவுகூரப்படுகிறது. ஆண்டவரின் கட்டளையும் எதிர்பார்ப்பும் இவ்வாறு நிறைவேற்றப்படுகிறது.

இந்த கட்டளை ஆரம்ப கிறிஸ்தவர்கள் காலத்தில் முழுமையாக நிறைவேற்றப்பட்டதைத் திருத்தூதர் பணி தெளிவாக எமக்குக் காட்டுகிறது. ‘‘அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.’’ (திப 2:42-46, 20:7) அன்றிலிருந்து அவரது இரண்டாம் வருகை வரை அவரது பாஸ்கா மறைபொருள் நினைவுகூரப்படுகிறது.

**5.3.2 உட்பொருள் நிலைமாற்றம்**

திருப்பலியிலே காணிக்கை ஒப்புக் கொடுக்கும்போது ஒப்புக்கொடுக்கப்படும் அப்பமும் இரசமும் தேவநற்கருணை அல்ல. பீடப்பரிசாரகர் அறையிலே ஒஸ்தி(அப்பம்) பெட்டியிலுள்ள ஒஸ்தி நற்கருணையல்ல. ஆயினும் திருப்பலியிலே காணிக்கை ஒப்புக் கொடுத்த பின்னர் செய்யும் உட்பொருள் நிலை மாற்றத்தின் பின்னர் (வசீகரத்தின் பின்) பீடத்தில் இருப்பது ஒஸ்தி, இரசம் அல்ல. அது இயேசுவின் திரு உடலும் திரு இரத்தமும் ஆகும். அது தேவநற்கருணையாகும். இந்த மாபெரும் மாற்றம் என்ன? இது எவ்வாறு அழைக்கப்படுகிறது? இதுதான் உட்பொருள் நிலை மாற்றம்.

***(Transubstantiation** - Cardinal Ratzinger explains the abstract notion this: "The lord taken possession of the bread and wine and so to speak raises them from their baric everybody reality to a new made of being" (The Seven Sacraments. By Anselm Grium Tramlaed By jhon cumming, p.60)*

பல பொருட்களுக்கு உள்ளே ஒரு கருத்து அல்லது உட்பொருள் (Substance) உண்டு. மேலும் அந்த கருத்துக்கு உட்பொருள் மட்டுமன்றி வெளித் தோற்றமும் (Appearance) உண்டு. அல்லாவிடின், இயற்கைப் படைப்புக்களை பார்க்கும்போது சிலவற்றில் வெளித்தோற்றம் மாறுபட்டாலும் அதன் உள்ளார்ந்த நிலை மாற்றம் அடையாது.

உதாரணமாக களிமண்ணினால் பல்வித உருவங்களை வடிவமைத்தாலும் (வெளித் தோற்றம் எவ்வளவுதான் மாறினாலும்) அதன் உள்ளார்ந்த கரு, களிமண் ஆகும்.

அதுபோல பலகையை எரிக்கும்போதும், வெளித் தோற்றம், உள்ளார்ந்த இயல்பு ஆகியவை அழிக்கப்படும்போதும் அங்கே மீதப்படுவது சாம்பல். இயற்கையும் அவ்வாறே அமைகிறது. உள்ளார்ந்த நிலை (கரு) மாறுபடும்போது வெளித் தோற்றமும் மாற்றம் பெறுகிறது.

நற்கருணையின் உள்நிலை மாற்றம் பெறும்போது இதனையும்விட வேறுபடுகிறது. அதுவே அங்குள்ள சிறப்பம்சமும், மேன்மையுமாய் இருப்பதுபோல, உட்பொருள் மாற்றத்தின் நிலைகள் - குருவானவர் திருப்பலியின்போது உட்பொருள் நிலை மாற்றமடையச் செய்வதுடன் (இயேசுவின் நன்றி செபத்தின் பின்) அப்ப, இரசத்தின் உருவம், நிறம், சுவை ஆகியவை தோற்றத்தில் மாற்றம் பெறாது, அதன் உள்ளார்ந்தம் மட்டும் மாற்றம் பெறுகிறது. அங்கே உள்நிலையில் அது உயிர்த்த இயேசுவின் திரு உடலும் திரு இரத்தமுமாக மாற்றம் பெறுகிறது. மேலும் நற்கருணையில் இந்த உள்ளார்ந்த மாற்றம் உண்மையில் நிகழ்வதாக வரலாறு உறுதிப்படுத்துகிறது. உதாரணம் லாங்சியோ நகரில் நிகழ்ந்த அருங்குறி இதற்கு சான்று பகர்கிறது. அதுபோல நற்கருணை அருங்குறி (புதுமை) உலகெங்கும் நிகழ்ந்துள்ளது.

**5.3.3 பழைய ஏற்பாட்டில் தேவநற்கருணை பற்றிய அடையாளம்**

1. சாலேம் நகர (எருசலேம்) அரசன் மெல்கிசதேக்கு அப்பமும் திராட்சை இரசமும் கொண்டு வந்தார். அவர் உன்னத கடவுளின் அர்ச்சகராக இருந்தார். அவர் ஆண்டவருக்கு பலி ஒப்புக் கொடுத்து ஆபிரகாமை ஆசீர்வதித்தார். (தொநு 14:18-21)
2. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி பாலைவனத்தினூடாக பயணிக்கும்போது அவர்களுக்கு மன்னா உணவளித்து ஊட்டமளித்தல்.
3. பார்வோன் அரசனது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு எகிப்திலிருந்து தப்பிச் சென்றதை வருடந்தோறும் நினைவுகூருவதற்கு பாஸ்கா உணவு சடங்கை நிகழ்த்துதல்.

**5.3.4 புதிய ஏற்பாட்டில் தேவநற்கருணை பற்றிய அடையாளம்**

1. ஐயாயிரம் பேருக்கு அப்பம் அளித்த அருங்குறி (புதுமை)
2. இறுதி இராவுணவு

போன்ற விடயங்களின் வழியாக, புதிய ஏற்பாட்டிலே தேவநற்கருணை, இறை மக்களின் பசியை நீக்குவதற்கு மட்டுமன்றி அவர்கள் நிலைவாழ்வை அடைவதற்கு தேவையான உணவாகவும் இருப்பதும் நினைவுறுத்தப்படுகிறது.

தூய யோவான் ஆண்டவரின் திருவிருந்து பற்றி ஒன்றும் குறிப்பிடாது உணவின் பின் இயேசு பாதம் கழுவுவது பற்றி விளக்கமாக கூறுகிறார். அதில் ஆழமான இறையியலும் நற்கருணையின் முக்கியத்துவமும் காட்டப்படுகிறது.

யோவான் நற்செய்தி கி.பி 100ம் ஆண்டளவில் எழுதப்பட்டதாக விவிலிய அறிஞர்கள் கூறுகின்றனர். அக் காலப்பகுதியளவில் ஆண்டவரின் இறுதி இரா உணவு நிகழப்பெற்று 65-70 ஆண்டுகளளவில் ஆகின்றன. இக் கால கட்டத்தில் கிறிஸ்தவனுக்கு மீண்டும் ஆண்டவரின் திருவிருந்து பற்றி அறிவுறுத்த வேண்டியது தேவை இருக்கவில்லை. ஆயினும் அவன் அது பற்றிய விடயங்களை நன்கு அறிந்து நற்கருணை ஆண்டவராலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதை விசுவாசிப்பதால் நற்கருணை சடங்கு அவனது ஆராதனை சடங்குகளில் முக்கியமானதாக இருக்கிறது.

இருப்பினும் அவர்களுக்கு மறந்திருந்த ஒரு விடயத்தை தூய யோவான் மிகுந்த அவதானத்துடன் பாதம் கழுவும் நிகழ்வு வழியாக நினைவுறுத்துகிறார். நற்கருணையானது தொடர்ந்து நிகழ்த்த வேண்டிய சடங்கு மட்டுமன்றி அன்பு, ஒற்றுமையின் அருளடையாளம் என்பதும் நினைவுறுத்தப்படுகிறது, ஆதலால் நற்கருணை, ஆண்டவரின் விருந்து மேசையில் அமர்ந்து, கிறிஸ்தவ அன்பில் மற்றவர்களுக்கு பணிவிடை செய்து ‘‘போதகரே’’, ‘‘ஆண்டவரே’’ என அழைக்கப்பட்டும் கூட, சீடரின் பாதம் கழுவும் அளவுக்கு தாழ்மையாவதன் வழியாக மற்றவருக்கு பணிவிடை செய்யவும், ஆண்டவரில் தாழ்மை, அன்புடன் வாழ்வது பற்றியும் காட்டப்படுகிறது.
நற்கருணை, அன்பின், சகோதரத்துவத்தின் அருளடையாளம் என காட்டுவதற்கு தூய யோவான் முயற்சிப்பதன் காரணம், அன்று யோவானின் கிறிஸ்தவ ஒன்றியமும் கொரிந்து கிறிஸ்தவ திருச்சபையும் அன்பில் மற்றவர்களுக்கு பணிவிடை செய்து, பணி (சேவை) ஆகியவற்றை மறந்து வாழ்ந்து நற்கருணையை உட்கொண்டதாலாகும்.

தூய பவுல் 1 கொரி. 11:17-21ல் இது பற்றி ஆழமாக விளக்குகிறார். கீழ் காணும் விடயங்களை அங்கு காணலாம்.
- கொரிந்திய மக்கள் ஒன்றுகூடி வரும்போது நன்மையை விடத் தீமையே மிகுதியாக விளைகின்றமை.
- அவர்களிடையே பிளவுகள் இருந்தமை.
- பிளவுகள் இருப்பதால் திருச்சபையாக ஒன்றாகக் கூடி வந்து உண்பது ஆண்டவரின் திருவிருந்தல்ல.
- உண்ணும் நேரத்தில் ஏனையோரைப் பற்றி சிந்தியாமல் உண்டு விடுதல்.
- இதனால் சிலர் பசியாய் இருக்க, வேறு சிலர் குடி வெறியில் இருக்கின்றமை.
- இது கடவுளின் திருச்சபையை இழிவுப்படுத்துதல்.

இதனால் நற்கருணைநாதரின் முன்னால் நாம் அனைவரும் ஒரே சரீரமாக இல்லாவிடினும் அது தேவநற் கருணையில் வெளிப்படுத்தப்படும் உண்மையை மறப்பதாகும். தேவநற்கருணை பெற்று நன்றி கூறி, வெளி அலங்காரங்களால் விழாக் கொண்டாடுவது தவறல்ல, ஆனால் தேவநற்கருணை மூலம் வெளிப்படும், இரக்கம், அன்பு, ஒற்றுமை போன்றவை தேவநற்கருணை பெறுவோரிடம் காணப்படாமையே தவறாக உள்ளது. ஆதலால் தேவநற்கருணை கிறிஸ்தவ வாழ்வில் நம்பிக்கை கொள்ள வேண்டிய வேத சத்தியங்கள் மட்டுமல்ல அது வாழ்க்கை முறையுமாகும். தம் சகோதரருடன் ஒற்றுமையாக வாழ்ந்து இறைவனுக்கு சான்று பகர்ந்து வாழும் வாழ்வாகும்.

### 5.3.5 யூத பாஸ்காவும் இறுதி இராவுணவும்

யூதரின் பாஸ்கா, அவர்களது பொது வாழ்விலே மேன்மையான திருநாளாகும். காரணம் ‘‘பாஸ்கா’’ – என்பது கடத்தல் ஆகும். அது எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்தை நோக்கி கடத்தல். அது யூத மக்களின் மேன்மையான பிறப்பாகும். விடுதலையின் பிறப்பான அந்நிகழ்வு, மிகவும் மாண்பு, மதிப்புடன் ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது. கொண்டாடுதல் என்று கூறி மீண்டும் நினைவுறுத்துவதை விட அந்த மேன்மையான நிகழ்வை உயிரோட்டம் பெறச் செய்வதாகும். அதனை நிகழ்காலத்திற்கு கொண்டு வருவதாகும். அந்நிகழ்விலே வாழ்வதாகும்.

### 5.3.6 யூத பாஸ்கா விழாவில் இரண்டு சடங்குகள் உண்டு

1. ஆட்டுக் குட்டி பற்றி சடங்கு
2. புளியாத அப்பம் பற்றிய சடங்கு

### 1. ஆட்டுக் குட்டி பற்றிய சடங்கு

இது பண்டைய காலத்திலே ஆயர் யுகத்திலேயிருந்து நடைமுறையிலிருப்பதாகும். ஆயருக்கு மிகவும் கஸ்ட காலமான குளிர் காலத்தில் புதிய புல் தரையை நோக்கி செல்வதற்கு முன்னர் இறை பராமரிப்பை வேண்டி, ஆட்டு மந்தையிலிருந்து ஒரு ஆட்டுக் குட்டியைக் கொன்று அதன் இரத்தத்தை தமது கூடாரத்தூணில் பூசினார்கள். அது அவர்களின் பழைய சம்பிரதாய வழக்கமாக இருந்தது. இறை பராமரிப்பை அவர்கள் அனுபவித்தார்கள்.

பார்வோனின் கொடுமையிலிருந்து இறை மக்களை விடுவித்து பாலும் தேனும் பொழியும் நாட்டுக்கு அவர்களைக் கொண்டு செல்லும் பயணத்திலே இறைவன் அந் நாட்டிற்கு வரச் செய்த (10வது பெருந்துன்பமான எகிப்திலே தலைமகன் சாவின்போது) இறை மக்களைப் பாதுகாப்பதற்காக அவர்களது ஆயர் இன வழக்கத்தின்படி ஆட்டைக் கொன்று அதன் இரத்தத்தைக் கூடாரத்தின் மேற் சட்டத்தில் பூசினார்கள் (அந்த இரத்தத்தை காணும்போது) "இஸ்ராயேல் மக்கள் அனைவரையும் பொறுத்த மட்டில் அங்குள்ள மனிதர் முதல் விலங்கு வரை எவருக்குமே எதிராக எந்த நாயும் குரைக்காது" (வி.ப 11:7). நாட்டில் ஏற்பட்ட இந்த துன்பங்களினால் கலக்கமுற்ற பார்வோன் அரசன் இஸ்ராயேல் மக்களை விடுவித்தார்.

**2. புளியாத அப்பம்**

புளியாத அப்பம் பற்றிய கதை விவசாய கைத்தொழில் காலம் வரை காணப்படுகிறது. அன்று கமத் தொழில் செய்வோர் பார்லி என்ற தானியத்தை பறித்த பின், பழைய புளித்த மாவை தமது வீடுகளிலிருந்து அகற்றி புதிதாக புளிப்பு மா அமைத்துக் கொள்ளும் வரை புளியாத அப்பத்தை உண்டனர். வருடத்திலே வசந்த காலத்தில் முதலாவது நிலவைக் கண்டவுடன், 14, 15ம் திகதிகளின் இரவிலிருந்து 7நாள் வரை அவ்வாறு செய்தனர்.

இந்த சம்பிரதாய வழக்கத்தை விவசாய கைத்தொழில் காலத்திலிருந்த பழையவர்கள் பின்பற்றினாலும் புளியாத அப்பத்திற்கும் விடுதலைப் பயணத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு அதைவிட வேறுபட்டது. அதாவது இஸ்ராயேல் மக்கள் அவசரமாக எகிப்திலிருந்து வெளியேறியதால் அவர்கள் பிசைந்தமா புளிப்படைந்திருக்கவில்லை அதனால் அவர்கள் புளியாத அப்பத்தை உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் இரவிலேயே கூப்பிட்டு அவர்களிடம், "நீங்களும் இஸ்ராயேல் மக்களும் எழுந்து என் மக்களிடமிருந்து வெளியேறிச் செல்லுங்கள். போங்கள், நீங்கள் சொன்னபடியே ஆண்டவருக்கு வழிபாடு செய்யுங்கள். நீங்கள் கேட்டபடியே உங்கள் ஆட்டுமந்தையையும் உங்கள் மாட்டு மந்தையையும் கூட்டிக்கொண்டு செல்லுங்கள். போய்விடுங்கள், எனக்கும் ஆசி கூறுங்கள்" என்றான். நாட்டிலிருந்து விரைவில் போய்விடுமாறு எகிப்தியர் இஸ்ராயேல் மக்களை அவசரப்படுத்தினர். "நாங்கள் எல்லோருமே சாகிறோம்" என்றனர். மக்கள், பிசைந்த மாவு புளிக்கும் முன்னரே அதை எடுத்து, மாவு பிசையும் பாத்திரத்தில் வைத்து, தங்கள் போர்வைகளில் கட்டித் தோள்கள் மேல் எடுத்துச் சென்றனர். (விப12:31-34)

விடுதலைப்பயண பெருவிழா கொண்டாடும்போது இந்த சம்பிரதாய வழக்குகள் இரண்டையும் ஒன்றிணைத்து தேசிய சமய விழாவாகக் கொண்டார்கள். பாஸ்கா ஆட்டுக் குட்டியை ஒப்புக்கொடுத்தலும் உண்பதும் அதன்பின் 7 நாட்கள் புளியாத அப்பத்தை உண்பதும் அக்கால வழக்கமாக இருந்தது.

## 5.4 உறுதிப்பூசுதல்

திருமுழுக்கு அருளடையாளம் வழியாக இறை மகனாகும் / மகளாகும் உரிமை பெற்ற பிள்ளை, உறுதி பூசுதல் மூலம் வலிமை பெறுவதோடு கிறிஸ்தவ நம்பிக்கையில் முதிர்ச்சி நிலையையடைகிறது. அதனால் இவ்வருளடையாளம் முதிர்ச்சியின் அருளடையாளம் எனப்படுகிறது. இது ஆன்மீக முதிர்ச்சியாகும். இங்கே, உடல் முதிர்ச்சியையும் கருத்திற் கொள்கிறோம். இறைவனில் உள்ள ஆழ்ந்த நம்பிக்கைக்கு உலகினர் முன்னிலையில் தமது வாழ்க்கையால் சான்று பகர்ந்து வாழ வேணடும் என்ற கட்டாயம் இங்கே நினைவுறுத்தப்படுகிறது. நன்மை – தீமை / உண்மை – பொய் ஆகியவற்றின் முன்னிலையில் செயற்படும் விதத்தை அளவிடும் அளவுகோல் இந்த முதிர்ச்சி நிலையாகும்.

**உ+ம்:- மறை சாட்சியினரின் வாழ்க்கை**
**தூயவர்களின் வாழ்க்கை**

கிறிஸ்தவர்கள் அனைவருமே அவர்களின் திருமுழுக்கின்போது தூய ஆவியின் வரத்தினால் நிரப்பப் படுகிறார்கள். திருமுழுக்கின்போது தமதிரித்துவம் திருமுழுக்கு பெறுபவரில் எழுந்தருளுகிறார். உறுதிப்பூசு தலினபோது ,திருமுழுக்கு பெற்றவர் கிறிஸ்தவ முதிர்ச்சி நிலையில், சமூகத்திலே மேலும் செயன்முறையில் செயலாற்றுவதற்கு இரண்டாம் முறையாக தூய ஆவியின் வல்லமையால் விசேஷமாக முழுமைப்படுத்தப் படுகிறார். இதனை, தூய ஆவி திருத்தூதரில் எழுந்தருளிய சம்பவத்தின்போது பார்க்கிறோம். (திப 2:1-13) அந்த தூய ஆவியின் வருகையுடன் திருத்தூதரின் செயற்பாட்டிலே பெருமாற்றம் ஏற்படுகிறது. மனமாற்றமும், திருமுழுக்கு பெற்றோர் ஏறக்குறைய 3000 பேருமாவர்.

இக்காலத்தில் அளிக்கப்படும் உறுதிப்பூசுதல், அன்று திருத்தூதர் பெந்தக்கோஸ்தே நாளன்று தூய ஆவியின் வல்லமையைப் பெற்ற நிகழ்வுக்கு ஒத்தாக உள்ளது. பெந்தகோஸ்தே நாளன்று தூய ஆவியினால் முழுமை பெற்ற திருத்தூதர் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக துணிவுடன் தமது மறைபணியைத் தொடங்கியதுபோல உறுதிப்பூசுதல் பெறுபவரும், செயற்பாடுடைய நம்பிக்கையில் வாழ அழைக்கப்படுகிறார்.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலின்படி உறுதிப்பூசுதல் திருமுழுக்கை உறுதிப்படுத்துகிறது. திருமுழுக்கு அருளை முழுமைப்படுத்துகிறது. (க.தி.ம 1285, திப 8:14, 19:5-7) உறுதிப்பூசுதல் வழியாக தூய ஆவியின் வரங்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ளும் கிறிஸ்தவன், கிறிஸ்துவுடன் மேலும் ஒன்றுபடுகிறான். விண்ணரசைக் கட்டியெழுப்பவும் திருச்சபையின் மறைபணியில் பங்கு கொள்ளவும் தேவையான வலிமை, தைரியம் பெறுகிறான். திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் ஒன்றிணைந்து அவற்றைப் பெற்றுக் கொள்வோருக்கு திருச்சபையில் முழுமையான அங்கத்துவத்தையளிக்கிறது. இந்த அருளடையாளங்கள் இரண்டும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று ஆழமான தொடர்புடையவை. உறுதிப்பூசுதல் அளிக்குமுன் திருமுழுக்கு வாக்குறதியைப் புதுப்பித்தலானது, இவ்வருளடையாளங்களுக்கிடையில் உள்ள தொடர்பை விளக்குகிறது. அவற்றின் மையம் கிறிஸ்துவே (2கொரி 2:15). இந்த அருளடையாளங்கள் வழியாக அவற்றைப் பெற்றுக் கொள்வர், தூய ஆவியின் முத்திரையைப் பெற்றுக் கொள்கிறார் (எபே 1:13).
கிறிஸ்து இறைதந்தையினால் முத்திரையிடப்பட்டதைப் போன்று இறைதந்தை எம்மையும் கிறிஸ்துவால் முத்திரையிட்டு தூய ஆவியினால் நிறைவு பெறச் செய்கிறார் (2கொரி 1:21-22, எபே 1:13). தூய ஆவி எமக்கு அளிக்கும் இந்த அழியாத முத்திரை, நாம் முழுமையாக கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. அவருக்கு என்றும் பணி செய்வதற்கான ஆதாரமாயிருக்கிறது. அவ்வாறே எம் வாழ்வில் இறுதியில் நடைபெறும் நடுத்தீர்வின்போது இறை பாதுகாப்பு கிடைப்பதற்கும் ஆதாரமாயுள்ளது.

“நிலத்தின் புற்பூண்டுகளுக்கோ, மரங்களுக்கோ தீங்கு இழைக்காமல் தங்கள் நெற்றியில் கடவுளின் முத்திரை இல்லாதவர்களுக்கு மட்டும் தீங்கு செய்யுமாறு அவற்றுக்குக் கட்டளையிடப்பட்டது” (திருவெளிப்பாடு 9:4, எபே 9:4-6)

பெந்தகோஸ்தே தினத்தன்று ஒன்று கூடியிருந்தோரையும், அனைத்து கிறிஸ்தவர்களையும், தூய ஆவியின் அருளாலும், கொடைகளாலும் நிரப்பி, அவர்களை பலப்படுத்தவே கிறிஸ்துநாதர் இந்த அருளடையாளத்தை ஏற்படுத்தினார்.

திருவிழாவின் இறுதியான பெருநாளில் இயேசு எழுந்து நின்று உரத்த குரலில் “யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும், என்னிடம் நம்பிக்கைக் கொள்வோர் பருகட்டும், மறைநூல் கூறுவதுபோல் அவருடைய உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும்” என்றார். தம்மிடம் நம்பிக்கை கொண்டிருப்போர் பெறப்போகும் தூய ஆவியைக் குறித்தே அவர் இவ்வாறு சொன்னார். தூய ஆவி இன்னும் அருளப்படவில்லை. ஏனெனில் இயேசு மாட்சிபடுத்தப்படவில்லை. (யோவா 7:37-39) யேசு எம்மைத் தூய ஆவியின் வரங்களினால் நிரப்புகிறார். முதிர்ச்சியடையச் செய்கிறார்.

இயேசு வாக்களித்தபடியே, அவர் உயிர்ப்பின் சீடருக்கு முதன் முறையாக தோன்றும்போது தூய ஆவியை அளித்தார். அவர் அவர்கள் மேல் ஊதி “தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்…….” (யோவா. 20:22). இது, சீடர் தூய ஆவியைப் பெற்றுக் கொண்ட முதல் சந்தர்ப்பமாகும். அவர்களைத் தூய ஆவியில் நிறைவு பெறச் செய்து, அவர்களின் பாவங்களை மன்னித்து அவர்களை இறை பிள்ளைகளாக்கினார். அவர்கள் அந்த உண்மையைப் புரிந்து கொண்டு அதனை உலகிற்கு வெளிப்படுத்தும் அளவிற்கு அவர்களை வல்லமை பொருந்தியவர்களாக்குவதற்கும் அதனால் முதிர்ச்சிப் பெற்ற சாட்சியாளர்களாக அவர்களை மாற்றுவதற்கும் பெந்தக்கோஸ்து நாளிலே தூய ஆவியை அவர்களுக்குப் பொழிந்தார் (திப 2:1-4). இவ்வாறு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட பின், சீடர் ஆண்டவரின் மாபெரும் செயல்களைப் போதித்தனர். (திப 2:11, 2:17-18) திருத்தூதரின் போதனையை ஏற்றுக்கொண்டவர்கள். ஏறக்குறைய மூவாயிரம் பேர் திருமுழுக்கு பெற்றார்கள் (திப 2:41).

திருத்தூதர்கள், திருமுழுக்கு பெற்றவர்கள் மீது தம் கைகளை வைத்து தூய ஆவியின் அருளை அளித்தனர். அவ்வாறு கை வைப்பதிலிருந்து உறுதிப்பூசுதல் சடங்கு ஆரம்பமானது (திப 6:2). அவ்வாறு கை வைப்பது, தூய ஆவியை அளித்தல் அல்லது உறுதிப்பூசுதல் என அழைக்கபடுகிறது (தி.ப 19:5-6)

இந்த கை வைக்கும் சடங்குடன் (உறுதிப்பூசுதல்), கிறிஸ்மா எண்ணெய் பூசுவதும் இணைக்கப்பட்டது. இந்த, எண்ணெய் பூசும் சடங்கு கீழைத்தேய சபைகளில் கிறிஸ்மா எண்ணெய் பூசப்படுதல் என அழைக்கப்பட்டதோடு மேலைத்தேய சபைகளில் உறுதி செய்தல் (conformation) என்ற கருத்தைத் தருகிறது. அதில் இரண்டு கருத்து நினைவுகூரப்படுகிறது.

1. திருமுழுக்கை ஏற்படுத்தல்.
2. திருமுழுக்கு அருளை வலிமைப்படுத்தல்.

### 5.4.1 உறுதிப்பூசுதலினால் கிடைக்கும் தூய ஆவியின் வரங்கள்

**தூய ஆவியின் கொடைகள் (07)**

| | |
|---|---|
| 1.ஞானம் | 5. திடம் |
| 2.புத்தி | 6. பக்தி |
| 3.அறிவு | 7. தேவபயம் |
| 4.விமரிசை | |

**தூய ஆவியின் கனிகள் (12)**

| | |
|---|---|
| 1. பரம அன்பு | 7. சகிப்பு |
| 2. மகிழ்ச்சி | 8. சாந்தம் |
| 3. அமைதி | 9. விசுவாசம் |
| 4. பொறுமை | 10. அடக்க ஒடுக்கம் |
| 5. இரக்கம் | 11. இச்சையடக்கம் |
| 6. நன்னயம் | 12. நிறை கற்பு |

### 5.4.2. உறுதிப்பூசுதல் அளித்தல்

**ஆயர்**

திருச்சபை சட்டத்திற்கமைய (தி.ச.882), மறைமாவட்ட ஆயர் அல்லது அவரது அனுமதியுடன் வேறு ஆயர் உறுதப்பூசுதல் வழங்குவார். பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியானவரால் முழுமை பெற்ற திருத்தூதர் தமது கைகளை விசுவாசிகள் மீது வைத்து அவர்களுக்கு தூய ஆவியை அளித்தனர். பின்னர், அந்த திருத்தூதரின் பணியைத் தொடர்ந்தாற்றும் ஆயரினால் உறுதிப்பூசுதல் அளிக்கும் நிகழ்வு முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

❖ **உறுதிப்பூசுதல் வழங்கும் சடங்கு**

- இறைவாக்கு வழிபாட்டின் பின் உறுதிப்பூசுதல் பெற இருப்பவர்கள் அதனைப் பெற்றுக் கொள்வதற்காக அழைக்கப்படுவர்.

**ஆயர்** :- இவர்கள் தகுதியானவர்களென நீர் அறிந்திருக்கிறீரா?

**பங்குத் தந்தை** :- இந்த அருளடையாளத்தைப் பெறுவதற்கு தகுதியானவர்கள் என நான் உறுதிப்படுத்துகிறேன்.

**ஆயர்** :- எம் ஆண்டவரும் மீட்பருமான இயேசுவின் துணையால் எமது இந்த பிள்ளைகளை, உறுதிப்பூசுதல் பெற்றுக்கொள்வதற்காகத் தேர்ந்து கொள்வோம்.

- ஆயரின் மறையுரை
- திருமுழுக்கு வாக்குறுதியைப் புதுப்பித்தல்.
- ஆயர் உறுதிப்பூசுதல் பெற இருப்பவரில் கைகளை விரித்து செபித்தல்.
- ''கிறிஸ்மா'' எண்ணெய் பூசுதல்.

ஆயர், உறுதிப்பூசுதல் பெற இருப்பவரின் நெற்றியில் கிறிஸ்மா எண்ணெயினால் சிலுவையடையாளம் வரைந்து ''தூய ஆவியின் முத்திரையைப் பெற்றுக் கொள். பரம தந்தையின் உன்னத கொடை அவரே'' என கூறி உறுதிப்பூசுதல் அளிப்பார்.

இந்த மேன்மையான அருளடையாளத்தை அளிப்பதற்கு பயன்படுத்தப்படும் கிறிஸ்மா எண்ணெய், வருடாந்தம் பரிசுத்த வாரத்தில் ஓர் நாள் ஆயர் தம் மறைமாவட்ட குருக்களோடு நடாத்தும் எண்ணெய்

ஆசீர்வதிக்கும் சடங்குடன் கூடிய திருப்பலியில் ஆசீர்வதிக்கப்பட்டதாகும். ஆயர் உறுதிப்பூசுதல் பெறுபவரில் கிறிஸ்மா எண்ணைய் பூசும்போது உறுதிப்பூசுதல் பெறுபவரின் தோள்மீது அவரது ஆன்மீக பெற்றோர் தமது வலது கையை வைக்க வேண்டும்.

**கிறிஸ்மா எண்ணெய்**

கிறிஸ்மா எண்ணெய் பூசப்படுவது ஒரு விதத்தில் முத்திரையிடுதலாகும். ''அவரில் நீங்களும் உண்மை மறையை உங்களின் மீட்பைத் தரும் நற்செய்திக்கு செவிமடுத்து அதனைப் பின்பற்றி வாக்களிக்கப்பட்ட தூய ஆவியால் அவருக்குள் முத்திரையிடப்பட்டுள்ளீர்கள்'' (எபே 1:13). ஆரம்ப காலத்திலே கிறிஸ்தவர்கள் சிலுவையடையாளத்தை, கிறிஸ்துவுக்குச் சொந்தமாவதற்குரிய அடையாளமாக ஏற்றுக் கொண்டார்கள் என்பது இன்றும் சிலுவையை அணிந்து கொள்வதன் மூலம் காட்டப்படுகிறது.

கிறிஸ்மா தைலத்திற்காக ஒலிவ் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. நல்ல சமாரியன் உவமையில், ''அவர், அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின்மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரை கவனித்துக் கொண்டார்'' (லூக் 10:34) என குறிப்பிடப்பட்டுள்ளது. விளையாட்டு விரர்கள், கை, கால்களில் எண்ணெய் பூசி வலிமையைப் பெற்றுக் கொண்டனர். மேலும் அரசர்களை அபிஷேகம் செய்யும்போது எண்ணெய் பூசுதல், அக்காலத்தில் வழக்கத்திலிருந்தது. உறுதிபூசுதலால் விசேஷ வலிமை, வல்லமை, உயிரோட்டம் பெற்றுக் கொள்வதோடு மன புண்கள் சுகம் பெற்று ஆன்மீக நலம் பெறுகிறுகிறோம் எனபது நினைவுறுத்தப்படுகிறது.

## 5.5 பச்சாத்தாபம் அல்லது ஒப்புரவு அருளடையாளம்

பாவமன்னிப்பின் அல்லது ஒப்புரவின் அருளடையாளம் என்பது, திருமுழுக்கின் பின்னர் ஒருவர் செய்யும் அனைத்து பாவங்களுக்கும் மன்னிப்பை பெற்றுத் தரும் அருளடையாளமாகும். இது பாவ மன்னிப்பை – ஆன்மீக நலனை அளிக்கும் அருளடையாளமாகும். இதனை மனம் வருந்தி, பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்ளும் ஒப்புரவின் அருளடையாளம் எனவும் கூறுவர். இறைவனின் அளவற்ற இரக்கத்தையும் மன்னிப்பையும் இவ்வருளடையாளம் வழியாக பாவியான மனிதன் பெற்றுக் கொள்கிறான்.

இவ்வருளடையாளம் வழியாக முறிந்த இறை – மனித உறவு மீண்டும் இணைக்கப்படுவதோடு மனிதன் மனிதனாக இருப்பதற்கான தடைகள் அல்லது ஆழமான உறவுக்கான தடைகளை வலுவிழக்கச் செய்கின்றது. உண்மையான மனமாற்றத்தினால், மனிதரிடையே முறிவுபடும் உறவு மீண்டும் உறுதி பெறுவதோடு இறைவனின் பராமரிப்பைப் பெறுவதற்கு புதிய மனிதனாக இறைவனுடன் இணைகிறான்.

**இறைவன் அளிக்கும் மன்னிப்பு**

இறைவனுக்கு சமமாகவும் அவரது சாயலாகவும் மனிதனைப் படைத்து, அவனுக்கு ஒரு துணையையும் படைத்து மகிழ்ச்சியாக அவன் வாழ்வதற்கு நல் நிலத்தையும் அளித்த இறைவனை எதிர்த்து செயற்பட்டமை ஆதாம், ஏவாள் செய்த முதல் பாவமாகும். அதனால் இறைவன் - மனிதரிடையே முறிந்த உறவை மீண்டும் ஏற்படுத்துவதற்கு - இறைவன் மனிதனுக்கு சாபமிடாது அவரது மன்னிப்பை அளித்தார். யாவே இறைவன், அன்பின் இறைவன் என்பதைக் காட்டி, தவறிய மனிதனை பல்வித வெளிப்படுத்தல்கள், உடன்படிக்கைகள் மூலம், மனமாற்றம் பெறுவதற்கு அழைப்பு விடுக்கிறார். இதனை பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் நூல்களில் தெளிவாகக் காண்கிறோம்.

உ+ம்:- எசேக்கியேல் 37:1-10

1. ''ஆண்டவரின் ஆற்றல் என்மீது இறங்கியது. அவர் என்னைத் தம் ஆவியால் தூக்கிக் கொண்டு போய்ப் பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தினார். அங்கே எலும்புகள் மிகுதியாய்க் கிடந்தன. அவர் எனக்குக் கட்டளையிட்டவாறு இறைவாக்குரைத்தேன். உடனே அவர்களுக்குள் உயிர் மூச்சு புகுந்தது. அவர்கள் உயிர் பெற்று, காலூன்றி, மாபெரும் படைத்திரள்போல் நின்றனர்.''

   பாவிகளின் உலர்ந்த எழும்பு, ஆவியின் அனுசரணையினால் அபிஷேகம் பெற்று ஆண்டவரின் உயிர் மூச்சை பெற்று, புதிய வாழ்வையும் மன்னிப்பையும் பெறுவதன் அடையாளமாகியது.

2. சிதறுண்ட இஸ்ரயேல் மக்களை மனமாற்றத்தின் (ஒப்புரவின்) மூலம் ஒரே இனமாக ஒன்று சேர்ப்பது, ஆண்டவரின் மன்னிப்பளிக்கும் செயற்பாட்டின் ஒரு கேந்திர நிலை என எரேமியா மூலம் விவிலிய ஆசிரியர் காட்டுகிறார். ''ஒரே இதயத்தையும் ஒரே நெறி முறையையும் நான் அவர்களுக்குக் கொடுப்பேன். இதனால்

அவர்கள் தங்கள் நலனையும், தங்களுக்குப் பின் தங்கள் பிள்ளைகளின் நலனையும் கருதி, எந்நாளும் எனக்கு அஞ்சி நடப்பார்கள்.''(எரே 32:39)

3. பாவியை ஆண்டவர் மன்னித்து, பராமரிப்பதை எசேக்கியேல் இறைவாக்கினர் இவ்வாறு கூறுகிறார்.
   ''தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார். நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக் காப்பேன். ஓர் ஆயர் தன் மந்தையினின்று சிதறுண்ட ஆடுகளைத் தேடிச் செல்வதுபோல நானும் என் மந்தையைத் தேடிப்போவேன்... அலைந்து திரிவதைத் திரும்பக் கொண்டு வருவேன்…'' (எசே. 34:11-16)
4. தாவீது அரசன் தன் பாவத்தை எண்ணி வருந்தி ஆண்டவரை நோக்கி மன்னிப்பு கேட்டு பாடிய பாடலை (திபா 51) விவிலிய ஆசிரியர் முன்வைக்கிறார்.

இறைவன் பாவிக்கு அளிக்கும் மன்னிப்பு, இரக்கத்தை கீழ்க்காணும் வாசகங்களில் காண்கிறோம்.

- எசாயா 53:8-12
- எசேக்கியேல் 9:9-11
- எசாயா 58:6-7
- தானியேல் 9:4-19

### 5.5.1 புதிய ஏற்பாட்டில் ஆண்டவரின் மன்னிப்பு

எமது பாவங்களுக்கு மன்னிப்பளிப்பதற்கு மிகவும் ஆவலோடு இறைவன் ஆயத்தமாக இருக்கிறார். ''மனம் மாறுங்கள். ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்து விட்டது'' (மத். 4:17). பாவியை மன்னிப்பதற்கு – பாவியின் மனமாற்றத்தை எதிர்பார்த்திருக்கும்'' ஆண்டவர் பற்றி லூக்கா நற்செய்தியில் காட்டப்பட்டிருக்கும் மூன்று உவமைகள்:-

- காணமற்போன ஆடு
- காணாமற்போன திராக்மா
- காணாமற்போன மகன்

இறைவனின் எல்லையற்ற இரக்கத்தை இவ்வுவமைகளிலே காண்கிறோம். இதனால் ஆண்டவர் இவ்வாறு கூறியுள்ளார். ''மனம் மாறத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது பேரைவிட மனம் மாறுகின்ற ஒரு பாவியைக் குறித்து விண்ணகத்திலே மகிழ்ச்சி உண்டாகும். (மத். 18:13-14)

அடிக்கடி பாவத்தில் விழுகின்ற மனிதனை மீட்க வேண்டியது யேசுவின் முக்கிய மறை பணியாக இருந்தது. கலிலேயாவில் அவரது முதல் மறை போதனையில் இதனை பார்க்கிறோம்.''காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற். 1:15). மனிதனின் பாவத்திற்கு பரிகாரமாக தனது வாழ்வையே பலியாக்கி இறை மன்னிப்பை மனிதனுக்கு தந்த இயேசு, அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி, அதைப் பிட்டுச் சீடர்களுக்குக் கொடுத்து ''இதைப் பெற்று உண்ணுங்கள். இது என் உடல்'' என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து ''இதில் உள்ளதைப் பருகுங்கள். இது எனது உடன்படிக்கையின் இரத்தம்…'' (மத் 26:26-28) என்றார்.

மனிதன் தனிப்பட்ட ரீதியில் பாவம் செய்தாலும் அது சமூகத்தையும் தாக்குகிறது. மனிதன், தான் வாழுகின்ற சமூகத்தில் பாவம் செய்கிறான். அதனால் சமூகத்தில் பிறருடன், தாக்கப்படுகின்ற மற்ற சகோதர, சகோதரிகளுடன் அவன் இணைக்கப்படுகிறான். அதனால் இறைவனுக்கு காணிக்கை ஒப்புக்கொடுக்கும் முன் தன் சகோதரருடன் ஒப்புரவாக வேண்டியதன் அவசியத்தை இயேசு காட்டுகிறார்.

''ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங் கேயே பலி பீடத்தின்முன் உங்கள் காணிக்ககையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவருடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையை செலுத்துங்கள் (மத். 5:23-26).

பாவத்தினால் இறைவனிலிருந்து தூர விலகிச் செல்லும் மனிதன் மற்ற மனிதரிலிருந்தும் விலகிச் செல்கிறான். பிழையை ஏற்று மனமாற்றம் பெறுவதால் தன் சகோதரருடன் ஒப்புரவாகி பின் இறைத்தந்தையுடன் ஒன்றுபடுகிறான். கிறிஸ்து வழியாக அந்த இணைப்பு உறுதி செய்யப்படுகிறது.

''உலகினரின் குற்றங்களைப் பொருட்படுத்தாமல் கடவுள் கிறிஸ்துவின் வாயிலாக அவர்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்'' (2கொரி 5:18-19).

திருமுழுக்கின் மூலம் சென்ம பாவத்திலிருந்து விடுதுலை பெறும் மனிதன், கிறிஸ்துவில் முழுமை பெறுவதற்கு ஆழமான, தொடர்ச்சியான மனமாற்றம் தேவை. ஆயினும் இந்த இணைப்பு பிளவுறும் சந்தர்ப் பங்களில் பாவத்திலே விழும் மனிதன், பச்சாத்தாபத்தின் வழியாக உண்மையான மனமாற்றம் பெற வேண்டி

யது அவசியம் என இயேசு கற்பிக்கிறார். பாவத்தில் விழுந்த மனிதன் வெளியளவில் அல்லாது உள்ளார்ந்த மனமாற்றத்தினால் ஆண்டவருடன் ஒப்புரவாக வேண்டும். யோவேல் இறைவாக்கினர் இவ்வாறு கூறுகிறார்.

***"இப்பொழுதாவது உண்ணா நோன்பிலிருந்து, அழுது புலம்பிக் கொண்டு,***
***உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" என்கிறார் ஆண்டவர்.***
***நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம்.***
***இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்***
***அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர், நீடிய பொறுமையுள்ளவர். பேரன்பு மிக்கவர்.***
***செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர்" (யோவேல் 5:12-14)***

இந்த இறை பண்புகளைக் கிறிஸ்து தம் வாழ்க்கை முறையில் காட்டினார். ''பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன். நீதிமான்களையல்ல, பாவிகளையே மீட்க வந்தேன்'' என்று கூறிய இயேசு பாவிகளைத் தேடிச் சென்றார். அவர்களுடன் உணவு உட்கொண்டார்.

### 5.5.2 ஒப்புரவு அருளடையாளத்தை இயேசு ஏற்படுத்தினார்

பச்சாதாப அருளடையாளத்திலே, இறையுறவை முறித்துக் கொண்ட மனிதனுக்கு மீண்டும் புதுவாழ்வு அளிப்பதற்காக இறைவனின் அன்பு உணர்த்தப்படுவதோடு அந்த அருளை அளிப்பதற்காக இயேசுவினால் இவ்வருளடையாளம் ஏற்பத்தப்பட்டது.

இயேசு உயிர்த்த தினமான பாஸ்கா நாளிலே திருத்தூதர் மேல் ஊதி ''தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா'' என்றார் (யோவா 20:22-23).

இதனால் இவ்வருளடையாளம் இயேசுவினால் ஏற்படுத்தப்பட்டது என்பதைத் தெளிவாகக் காண்கிறோம். அது மட்டுமன்றி இயேசு, பாவியை மீட்பதற்கு செயற்படுகிறார். ஆகவே இந்த ஒப்புரவு அருயளடையாளத்தின் மூலம் இறைவனை அனுபவத்தில் காண்பதற்கும் மீட்பு பெறுவதற்கும் ஒரு சந்தர்ப்பம் தரப்படுகிறது.

### 5.5.3 ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தம் ஆகுதல்

ஆகவே மனித பலவீனத்தால் செய்து கொண்ட தவறுகளுக்காக ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக,

- பாவங்களை நினைத்து
- அதற்காக மனம் வருந்தி
- மீண்டும் பாவம் செய்வதில்லை என உறுதி கொண்டு
- பாவங்கள் அனைத்தையும் இறைவனின் பிரதிநிதியான குருவானவரிடம் அறிக்கையிட்டு, பின்
- குரு குறிப்பிடும் பரிகாரத்தை நிறைவேற்ற வேண்டும்.

#### குருவானவரிடம் பாவத்தை அறிக்கையிடல்

இந்த (மனம் வருந்தும்) மனஸ்தாப செயற்பாட்டில் நமது இதயத்திற்கு செவிமடுத்து, பாவங்களை நினைவுகூர்ந்து, அவற்றிற்காக மனம் வருந்தி பாவங்களைக் குருவானவரிடம் அறிக்கையிடுவது, கத்தோலிக் கரின் பாவசங்கீர்த்தனம் செய்தல் - ஒப்புரவு சடங்காகும்.

''நம் பாவங்களை நாம் ஒப்புக் கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார்'' (1யோவா 1:9).

பாவசங்கீர்தனத்தின்போது குருவானவரிடம் எமது பாவங்களை அறிக்கையிடுகிறோம். அவ்வேளையிலே குருவானவரின் இடத்தில் இயேசுவே இருப்பதாக விசுவாசிப்பதால் - இயேசுவின் பிரதிநிதியாக குருவானவர் இருப்பதால் - அவ்வாறே செயற்படுவதால் - குருவானவரின் பலவீனங்கள், குறைபாடுகளைக் கருத்திற் கொள்ளாது, அவரில் இயேசுவை சந்தித்து எமது பாவங்களை எவ்வித அச்சமுமின்றி திறந்த மனமாக உண்மையாக மனம் வருந்தி அறிக்கையிடுகிறோம். அதனால் இறைவனின் மன்னிப்பையும் ஆசீரையும் குருவானவர் மூலமாக பெறுகிறோம்.

இயேசுவின் பெயரால் கீழ்காணும் வார்த்தைகளை சொல்லி பாவசங்கீர்த்தனத்தின்போது குருவானவர் பாவமன்னிப்பு தருகிறார்.

''இரக்கம் நிறைந்த தந்தையாகிய இறைவன், தம் திருமகனின் இறப்பினாலும் உயிர்ப்பினாலும் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிய இறைவன், திருச்சபையின் திருப்பணி வழியாக உமக்கு மன்னிப்பும் சமாதானமும்

அருள்வாராக. நானும் பிதா, சுதன், தூய ஆவியின் பெயரால் உம் பாவங்களிலிருந்து உம்மை விடுவிக்கிறேன்.''

# ஆறாம் பாடம்

## 6. திருச்சபை பற்றிய 2ம் வத்திக்கான் சங்கக் கண்ணோட்டமும் இன்றைய உலகில் திருச்சபை பற்றிய வத்திக்கான் சங்க வெளியீடு பற்றிய அறிவும்

### 6.1 திருச்சபை, கிறிஸ்துவின் தூய உடல் மற்றும் திருச்சபை பற்றிய வத்திக்கான் சங்க வெளியீடு விடுதலையின் அடையாளமான திருச்சபை

கிறிஸ்துவே உலகின் ஒளி (யோவா 9:5). இது உண்மை நிலைப்பாடாகும். இதனால் இன்றைய நவீன உலகிற்கு கிறிஸ்துவாகிய ஒளியை அளிக்கும் பொறுப்பு திருச்சபையையே சாரும். இறைவனுடனும் மனித சமூகத்துடனும் உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம் திருச்சபை அப்பணியை நிறைவேற்றுகிறது. இன்றைய உலகிலே காணப்படும் சமூக, கைத்தொழில், பண்பாடு ஆகியவற்றை ஒன்றிணைத்து, அமைதியின் - ஒருமைப்பாட்டின் புதிய சமூகத்தை உருவாக்குவது திருச்சபையின் கட்டாய தேவையாக பணியாய் அமைகிறது.

திருச்சபையானது கிறிஸ்துவை வழிபடும் ஒரு சமூகமாகும். இச் சமூகம் பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல ருடன் தொடர்புடையது. இன்று ஒரு உறுதியான நிறுவனமாக மிளிரும் இத் திருச்சபை பெந்தகோஸ்தே நாளன்று உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. உயிர்த்த கிறிஸ்துவின் மாட்சியுடன் முழுமை பெறும் இந்த தூய சமூகத்தில் அனைத்து நல்லவர்களையும் அவர் ஒன்று சேர்ப்பார். இது இறைதந்தையின் சித்தமும் திட்டமுமாகும். இந்த இறை சித்தத்தையும் திட்டத்தையும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக கிறிஸ்து இவ்வுலகிலே இறையாட்சியை அல்லது திருச்சபையை ஏற்படுத்தினார். அந்த திருச்சபையிலே இறை தந்தையின் மறை உண்மையை வெளிப்படுத்தினார். தனது கீழ்ப்படிவினால் மனிதனுக்கு மீட்பைப் பெற்றுக் கொடுத்தார்.

இன்று இறை வல்லமையினால் வளர்ச்சி பெறுகின்ற திருச்சபையில்,
- திருப்பலி மூலம் கல்வாரி பலி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.
- பாஸ்கா செம்மறி (கிறிஸ்து) பலியாக்கப்படுகிறார்.
- அதன் மூலம் எமது மீட்பு பணி செயலாற்றப்படுகிறது.
- திருவிருந்தின் மூலம் விசுவாசிகளின் ஒருமைப்பாடு காட்டப்படுகிறது, செயற்படுகிறது.
- இதனால் கிறிஸ்துவின் மறையுடல் வெளிப்படுகிறது, செயற்படுகிறது.

திருச்சபையின் வாழ்வில் தூய ஆவி, நிலை வாழ்வளிக்கும், பொங்கி எழுகின்ற ஊற்றாக இருக்கிறார் (4:14). அவரது அருளினால் மனிதனுக்கு பாவ மன்னிப்பு, புது (இறை) வாழ்வும் கிடைக்கிறது. அதுமட்டுமன்றி மனிதன் கிறிஸ்து வழியாக உயிர்ப்பு நோக்கிப் பயணிக்கிறான். தூய ஆவி விசுவாசிகளின் உள்ளங்களில் வாழ்ந்து (1கொரி 3:16, 6:19) அவர்களில் செபித்து அவர்கள் இறை பிள்கைள் என்பதற்கு சான்று பகர்கின றார். திருச்சபையை உண்மையை நோக்கி கொண்டு சென்று பங்கு கொள்தலிலும், பணியிலும் ஒருமைப் பாட்டை அளிக்கின்றார். பல்வித கொடைகளையளித்து பல்வேறு பணிகளை அளிக்கிறார். நற்செய்தியின் உள்ளார்ந்த வல்லமையினால் திருச்சபையை முன்னேற்றி அதில் எப்போதும் ஒரு புது வாழ்வை தோற்றுவிக்கி றார். கிறிஸ்துவின் மணப்பெண்ணான திருச்சபையைத் தனது ஆண்டவராகிய கிறிஸ்துவுடன் நிறைவான

உறவை நோக்கி கொண்டு செல்கிறார். இவ்வாறு தூய ஆவியும் திருச்சபையும் இணைந்து ''வாரும்'' என இயேசுவை அழைக்கிறார்கள். இவ்வாறு முழு திருச்சபையும் ''கிறிஸ்துவின் காலத்து புதிய சமூகமானது'' பரிசுத்த திருச்சபையுடன் இணைக்கப்பட்ட மக்களாக வெளிப்படுகிறார்கள்.

இந்த மீட்பின் சமூகம் திருவிவிலியத்திலே பல்வித உருவகங்களில் காட்டப்படுகிறது. அவற்றை வாசித்து அதன் உட்கருத்தை விளங்கிக் கொள்ளுங்கள். நீங்களும் இந்த சமூகத்திற்குரியவர்களாயிருப்பதால் அத்தகைய அறிவினால் உங்களுக்கு, உங்களை விளங்கிக் கொள்ளவும் நீங்கள் பெற்றுள்ள திருமுழுக்கு அழைப்பை மேலும் புரிந்து கொள்ளவும், உண்மைக் கிறிஸ்தவ வாழ்வு வாழவும், செய்பாடுடைய மறைபணியாளராவதற்கும் அது வழிசமைக்கிறது.

திருச்சபை இறைவனின் தோட்டம் (1கொரி 3:9). இதில் வளரும் ஒலிவ் மரத்தின் வேர் ஆதி பிதாபிதாக்கள். யூதர் - புறவினத்தாரிடையே அமைதி வளரக் காரணம், அந்த ஒலிவ் மரம் (இறைவார்த்தை அல்லது இயேசு) ஆவார்.

திருச்சபை இறை தந்தையின் திராட்சைத் தோட்டமாகும் (எசா 5:1). கிறிஸ்து உண்மையான திராட்சைத் தோட்டம் ஆவார். அதன் கிளைகளாகிய நாம் அவரிடமிருந்து வாழ்வும், வளமும் பெறுகிறோம். திருச்சபை வழியாக அவரில் வாழ்வோம். அவரின்றி எம்மால் ஒன்றும் செய்ய முடியாது (யோவா 15:5).

திருச்சபை இறைவனின் கட்டிடமாகும். அதன் மூலைக்கல் கிறிஸ்துவே. அந்த அடித்தளத்தின் மீது திருத்தூதரால் திருச்சபை கட்டப்பட்டுள்ளது (1கொரி 3:11). திருச்சபை உறுதியும் வலிமையும் பெறுவது இந்த மூலைக் கல்லினாலாகும். இவ்வாறு கட்டப்பட்ட திருச்சபையாகிய கட்டிடத்திற்கு பல்வித பெயர்கள் உண்டு.

- ஆண்டவரின் கோயில் - ஆண்டவரின் குடும்பம் அங்கு வசிப்பார்கள். (எபே 2:19 - 22)
- ஆண்டவரின் இல்லம் - ஆண்டவர் அங்கு வசிக்கிறார். (இன்று கோயிலில் நற்கருணையிலே இயேசு பிரசன்னமாயிருக்கிறார்.)
- தூய நகரமாகிய எருசலேம் - நாம் இந்நகரில் உயிருள்ள கல்லாக கட்டியெழுப்பப்படுகிறோம். (1பேதுரு 2:5)
- எமது அன்னை - தூய ஆவி வழியாக நாம் பிறக்கிறோம். (கலா 4:26)
- மாசற்ற செம்மறி - கிறிஸ்து அவளை (திருச்சபையை) அன்பு செய்து அவளைத் தூய்மைப் படுத்துவதற்காக தம்மையே ஒப்புவித்தார். (எபே 5:25) அந்த திருச்ச பையைஉடன்டிபக்கையுடன் தொடர்புபடுத்தி அதனைப் போஷித்து நடாத்துகிறார். (திவெ 19:7)

இந்த திருச்சபை அன்பினாலும் நம்பிக்னையினாலும் கிறிஸ்துவுக்குட்படுகிறது. இறையன்பின் அடையாளங் களினால் முழுமை பெறுகிறது. உயிர்த்த தம் ஆண்டவரை நோக்கி திருச்சபை பயணிப்பது, இவ்வுலகில் நாடு கடத்தப்பட்டவரைப்போல காலம் கடத்தியாகும். ஆன்மீகத்தை நாடிச் செல்லும் திருச்சபை எதிர்காலத்தில் உயிர்த்தவர்களின் மகிமை, மாட்சியைக் காணும்வரை அதனை நோக்கி பயனிக்கிறது.

இன்று உலக விடுதலைக்கு அடையாளமாக திருச்சபை துன்பம் இன்னல்களை சகித்து ஏழ்மையை அனுப வித்து கிறிஸ்துவின் வழியில் பயணிக்கிறது. துன்புறுவோருக்கு நற்செய்தியைப் போதிக்கிறது. மனம்வருந்து வோருக்கு (ஆன்ம) நலம் அளிக்கிறது. காணாமற்போன ஆடுகளை மீட்பை நோக்கி கொண்டு செல்கிறது, தூய்மையாக்குகிறது. இரக்க செயல்களில் ஈடுபடுகிறது. திருவழிபாடு மூலம் மனிதனை இறைவன்பால் கொண்டு செல்கிறது. அருளடையாளங்கள் வழியாக அவர்களைத் தூய்மைப்படுத்துகிறது. இவ்வாறு ''இறை – மனித'' தொடர்பை ஏற்படுத்துகிறது. அமைதியின் சமூகத்தை வளர்க்கிறது. உலகிற்கு உயிர்ப்பின் எதிர்பார்ப்பைத்தருகிறது. இயேசுவின் விடுதலையின் அடையாளமாகவே திருச்சபை இவையனைத்தையும் செய்கிறது.

**இறைவனின் மக்களாகிய (வீர) திருச்சபை**

இறைமக்களாகிய நாம் வீரர்கள். நாம் தோல்வியடைபவர்கள் அல்ல. லௌகீகத்தை வென்று ஆன்மீகத்தை மானிட குடும்பங்களை உயர்த்துகின்ற அதிசயமான மறைதூது வீரர். இந்த வீர மக்களைப் பற்றி 2ம் வத்திக்கான் சங்கம் கூறுபவற்றை அறிந்து கொள்ள வேண்டும். நாம் பெற்றுள்ள தூய ஆவிக்கு சான்று பகர வேண்டும். தைரியத்துடன் சான்று பகர வேண்டிய காலம் இப்போது வந்துள்ளது. ''திரளான மக்களுக்கு போதிக்கவும் அப்போஸ்தல பணியை செயற்படுத்தவும் குருக்கள் சொற்ப அளவிலே இருக்கும் இக் காலத்தில் மறைபணியாளரின் சேவை மிகவும் தேவையாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறது''.

ஆண்டவர் எல்லா காலத்திலும் வாழ்ந்த, வாழுகின்ற நல்லவர்களை ஏற்றுக் கொள்கிறார். அவர் விரும்புவது, குழுவாக விடுதலை பெறுவதையாகும். இந்த விடுதலை வரலாற்றை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இறைவன், கிறஸ்து வழியாக யூதரையும் புறவினத்தவரையும் ஒன்றிணைத்து கல்வாரி உடன்டிபக்கையை முழு உலகினருடனும் ஏற்படுத்தினார் .இன்று இறை மக்கள் மனித பிறப்பினால் மட்டுமன்றி நீரினாலும் தூய ஆவியினாலும் பிறந்து,

- தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக
- அரச, குருத்துவ மக்களாக
- தூய இனமாக
- இறைமக்களாக - இருக்கிறார்கள்.

ஆயினும் அவர்களின் நிலைப்பாடு "இறை மக்களின் மதிப்பும் சுதந்திரமுமாகும்" அவர்களின் இதயங்களில் தூய ஆவி வாழ்கிறார். அவர்களது கொள்கை கிறிஸ்துவின் அன்பு – புதிய கட்டளை (யோவா 13:34). அவர்களின் விருப்பு, "மண்ணுலகில் ஆரம்பமாகும் உலக முடிவின்போது முழுமையைப் பெறுவதும் அதுவரை பரப்ப வேண்டியதுமான விண்ணரசு - இறையாட்சியாகும்." அது நிறைவேறும்போது "படைக்கப்பட்டுள்ள இந்த உலகத்தை அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவித்து கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெறுவர்" (உரோ. 8:21).

இறை மக்கள் இன்று குறைந்த அளவினராக இருந்தாலும் அனைத்து குடும்ப ஒன்றியத்தினதும் விடுதலையினதும் வளர்ச்சியின் அடிப்படையாக இருக்கிறது. கிறிஸ்தவ மக்கள் அன்பு, உண்மை, சகோதரத்துவத்துடன் வாழ வேணடியவர்கள். கிறிஸ்துவின் கருவியாக செயற்பட வேண்டியவர்கள். அம் மக்கள் உலகில் ஒளியாக, உப்பாக செயற்பட வேண்டும்.

புதிய எருசலேமை நோக்கி பயணிக்கும் இம் மக்கள் புதிய இஸ்ரயேலராவர். கிறிஸ்து அம் மக்களை இரத்தப் பலியால் விலைக்கு வாங்கி தனது ஆன்மாவினால் முழுமையாக்கி காணக்கூடிய சமூக ஒருமைப்பாட்டுக்கு அவசியமானவைகளை அவர்களுக்குக் கொடுத்தார். அதனால் நேர காலம், பூகோள வரையறைகளைக் கடந்து செல்லும் திருச்சபை (இறை மக்கள்) உலகிலே பரவி மனித வரலாற்றுக்குட்பட வேண்டும். துன்புறுத்தல்கள், வேதனைகள் மத்தியில் பயணிக்கும் இம்மக்கள் இறை வல்லமையினால் வலிமை பெறுகின்றனர். நம்பிக்கை குறைந்து போகாவண்ணம் காத்துக் கொள்ளப்படுகின்றனர். கிறிஸ்துவின் மணப்பெண்ணாக தூய்மை நிலையிலிருந்து சிலுவையின் வழியாக மறைந்து செல்லாத ஒளியை நோக்கி (உயிர்த்த கிறிஸ்துவை நோக்கி பயணிக்கின்றனர்). தொடர்ந்து புது வாழ்வை பெற்றுக் கொள்வர்.

இறை மக்களின் (திருமுழுக்கு) பொது குருத்துவ பணியானது, பணி குருத்துவத்தின் அளவில் மட்டுமல்ல அர்த்தத்திலும் வேறுபடுகிறது. ஆயினும் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குதாரராவதால் திருச்சபையின் பொது குருத்துவமும், பணி குருத்துவமும் ஒரே அடிப்படையைக் கொண்டுள்ளது.

**பணி குருத்துவம்**

குருக்கள், இறை மக்களை ஒழுங்கமைப்பர், நிர்வகிப்பர், கிறிஸ்துவின் பிரதிநிதியாக செயற்படுவர். நற்கருணை பலியை மக்களிக் பெயரால் இறைவனுக்கு ஒப்புக்கொடுப்பர்.

தமது பிறப்பு (பொது) குருத்துவத்தினால் விசுவாசிகள் தேவநற்கருணை பலி ஒப்புக் கொடுப்பதற்கு ஒன்றிணைவர். திருமுழுக்கு பெற்று, செபித்து, இறைவனைப் புகழ்ந்து அவருக்கு நன்றி செலுத்தி, நல்வாழ்வுக்கு சான்று பகர்ந்து, தியாகத்துடனும், செயற்படும் இரக்கத்துடனும் ஆன்மீக பலி ஒப்புக் கொடுப்பர்.

பல்வித அருளடையாளங்கள் வழியாகவும் வலிமை பெறும் இறை மக்கள் உண்மை நம்பிக்கையை பாதுகாப்பர். அதனை உலகிற்கு வெளிப்படுத்துவர். அதற்கேற்ப தமது வாழ்வை அமைத்துக் கொள்வர். தூய ஆவியின் கொடைகளைப் பெற்று மறைபணியாற்றி (திருச்சபை ஆட்சியாளரின் கீழ்) விண்ணரசுக்கு சான்று பகர்வர். தாம் நினைத்தபடியல்லாது திருச்சபையின் வழிகாட்டுதலுக்கேற்ப பல்வித பணிகளில் ஈடுபடுவர்.

எல்லா மக்களினத்தாரும் ஒரே இறை மக்களாவர். அவர்கள் விண்ணரசின் பிரஜைகளாவர். பல்வித உலக பண்பாட்டை வளப்படுத்தும், தூய்மைப்படுத்தும், இறை மக்கள் உலக சமாதானத்தின் (அமைதியின்) முன்னடையாளமாகின்றனர். அந்த அமைதிக்கு துணைபுரிகின்ற ஒருமைப்பாட்டில் பங்குகொள்வதற்கு அனைத்து இறை மக்களும் அழைக்கப்படுகின்றனர்.

கத்தோலிக்க மக்கள் ஒரே இறைவனை, ஒரே திருமுழுக்கை, ஒரே நம்பிக்கையை ஏற்றுக் கொள்கின்றனர். வெளிப்படுத்துகின்றனர். திருச்சபையின் அனைத்து சடங்கு முறைகளையும், அதில் உண்டாகும் விடுதலைக்கு ஏதுவானவற்றையும் ஏற்று, திருத்தந்தை, ஆயர்கள் வழியாக திருச்சபையை ஆண்டு நடாத்தும் கிறிஸ்துவுடன் சேர்ந்து புலப்படக்கூடிய அமைப்பாக ஒன்றிணைகின்றனர்.

**இந்த ஒன்றிணைப்பின் முக்கிய பண்புகள்**

- நம்பிக்கையை வெளிப்படுத்தல்
- அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ளல்
- பாப்பிறை ஆட்சிக்குக் கீழ்ப்படிதல்
- திருச்சபையுடன் பங்கு கொள்ளல் ஆகும்

அன்பினதும் விடுதலையினதும் வாழ்வை இறை மக்கள் தமது தகுதியினால் அல்லாது கிறிஸ்துவின் விசேட அருளினாலேயே பெற்றுக் கொள்கின்றனர்.

பல்வித சீர்திருத்த சபைகளும் இதுவரை நற்செய்தியைப் பெற்றிராதவர்களும் இறை மக்களுடன் பல்வேறு விதங்களில் தொடர்பு கொள்கின்றனர். உண்மையைத் தேடும் அவர்களுக்கு, ''ஆசை திருமுழுக்கு'' கிடைப்பதாக திருச்சபை ஏற்றுக் கொள்கிறது. அத்தகையவர்கள் பல்வித வழிகளில், தமது பண்பாட்டு பின்னணிக்கேற்ப நற்செய்தியைக் கற்பிப்பர். அவர்களுக்கு நல்வழி காட்டுவதற்கு கத்தோலிக்க மக்கள் உழைக்க முயற்சி செய்ய வேண்டும்.

நற்செய்தி அறிவிப்பு உரையாடல் வழியாக பல்வித மக்களிடையே மனிதவதாரம் எடுத்து பல்வித, கிறிஸ்த வமற்ற பண்பாடுகளுக்கிடையே மிருதுவாகச் சென்று அங்கே காணப்படும் நல்லவைகள் அனைத்தையும் ஏற்று அவற்றைத் தூய்மைப்படுத்தல் இன்றைய இறை மக்களின் பொறுப்பாக இருக்கிறது.

இந்த பொறுப்பிற்கு நீங்கள் காட்டும் பதில் (பங்களிப்பு) என்ன? இது பற்றி சிந்தியுங்கள். ''கதிரவன் தோன்றும் திசை தொடங்கி மறையும் திசை வரை வேற்றினத்தாரிடையே என் பெயர் புகழ் மிக்கது. எல்லா விடத்திலும் என் பெயருக்குத் தூபமும் தூய காணிக்கையும் செலுத்தப்படுகின்றன'' (மலா 1:11). ஆண்டவரின் இந்த வாக்கு நிறைவேறுவதற்கு நீங்கள் உங்கள் சகோதர இறை மக்களுக்கு துணை புரியுங்கள்.

**இறை மக்கள் மின்னும் ஆபரணங்கள்**

பொதுநிலையினர், குருத்துவம் ஆகிய இரு நிலையிலும் துறவியாவதற்கு பலர் அழைப்பு பெற்றுள்ளனர். அவர்கள் பல்வேறு துறவற சமூகங்களில் (சபையில்) இணைந்து கொள்கின்றனர்.

**- ஏழ்மை – தூய்மை – கீழ்ப்படிவு**

ஆகிய வார்த்தைப்பாடுகளைச் செயற்படுத்தி, எட்டு பேறுகளுக்கேற்ப வாழ்வதற்கும் வரவிருக்கும் மகிமைமிகு புதிய எருசலேம் அல்லது பெருமை நிறை விண்ணரசிற்கு சான்று பகரவும் முன்வருகின்றனர். அவர்களது இந்த செயற்பாட்டினால் திருச்சபையின் மீட்புக்கான முயற்சி முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. மேலே காட்டப்பட்ட மூன்று வாழ்த்தைப்பாடுகள் வழியாக வலிமை பெறும் இந்த துறவறத்தாரின் அர்ப்பணம் கிறிஸ்துவுக்கும் அவரின் மணப்பெண்ணான திருச்சபைக்குமிடையே ஏற்படும் முறிவுபடாத அன்பு, இணைப்பின் அடையாளமாயிருப்பதால் அது ஒரு முழுமையான அர்ப்பணிப்பாகும். அதுமட்டுமன்றி துறவு நிலை திருச்சபை யின் ஆட்சி அமைப்பின் ஒரு பிரிவாக இல்லாவிடினும் அது பிரிக்க முடியாதவாறு திருச்சபை வாழ்வுடனும் தூய நிலையுடனும் தொடர்புபடுகிறது.

துறவற சபையின் சட்ட திட்டங்களை அனுமதிக்கும் திருச்சபை துறவிகளை ஏற்று அதனை பாப்பிறை சட்ட பூர்வ நிலைக்கு உயர்த்தி மதிப்பளிக்கிறது. துறவறத்தாரின் வார்த்தைப்பாடுகளை ஏற்றுக் கொள்கிறது. உத்தியோகபூர்வமான செபங்களில் துறவறத்தாருக்காக இறை ஆசீரை வேண்டுகிறது. அவர்களை இறைவனிடம் ஒப்புகொடுத்து அவர்களுக்கு ஆசீர் அளிக்கிறது. அவர்களது ஆன்ம பலியில் நற்கருணை பலியை இணைக்கிறது.

திருச்சபையின் விருப்பு யாதெனில், துறவறத்தார் மூலம்

- மலைமீதிலிருந்து தியானித்த
- மக்களினத்தாருக்கு விண்ணரசைப் போதித்த
- நோயாளர், அங்கவீனர்களைக் குணமாக்கிய
- பாவிகளை நல்லவர்களாக மாற்றிய
- சிறுவர்களுக்கு ஆசீர் அளித்த
- அனைவருக்கும் நல்லதையே செய்த
- இறை தந்தைக்குக் கீழ்ப்படிந்த, கிறிஸ்துவை அறிவிப்பதேயாகும்.

கிறிஸ்துவின் மணப்பெண்ணாக சுடர்விடும் துறவறத்தாரில் மறைப் பண்புகள் மணம் பரவி அது பல மடங்கு அழகு பெறுவது, துறவறத்தார் உலகிலுள்ள சில பெறுமதியானவற்றைத் துச்சமாக மதித்து அவற்றைத்

தியாகம் செய்யும்போதேயாகும். இந்த தியாகம் மனித ஆளுமை வளர்ச்சிக்குத் தடையாக இராது. மாறாக துணைபுரிகிறது. வார்த்தைப்பாடுகள் இதயத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கு, ஆன்மீக விடுதலை பெறுவதற்கு துணைபுரிகிறது. அதன் மூலம் அன்பின் ஆர்வம் பெருகுகிறது. உயிர்த்த நிலையை ஒத்த வாழ்க்கை முறை தெளிவாக காட்டப்படுகிறது. இது அனைத்து இறை மக்களுக்கும் ஒரு முன்மாதிரிகையாக இருக்கிறது. மனித சமூகம் பெற்றுள்ள ஆன்மீக அழைப்பு துறவறத்தார் மூலம் காட்டப்படுகிறது.

அதனால் பல்வித பணிகளில் ஈடுபடும் கிறஸ்துவின் மணப்பெண்ணுக்கு (திருச்சபைக்கு) அணிகலன்களாயி ருக்கும் ஆண் - பெண், சகோதரர், சகோதரிகள் போற்றப்பட வேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என 2ம் வத்திக்கான் சங்கம் கற்பிக்கிறது.

அந்த படிப்பினையின் முன்னிலையில், மறையாசிரியரின் பொறுப்பு இவ்வாறு காட்டப்படுகிறது.

- துறவறத்தாரைப் பற்றி சரியாக அறிந்து கொள்ளுதல்
- துறவறத்தாரை வலிமைப்படுத்தல்
- தகுதியான மாணவரை துறவறத்திற்குத் தூண்டுதல்.
- துறவற சமூகத்தினருக்கு பொருளாதார, கல்வி ரீதியில் துணைபுரிதல்.
- துறவறத்தாருக்காக செபித்தல் ஆகியனவாகும்.

## 6.2 இன்றைய உலகில் திருச்சபை

கத்தோலிக்க சமூக கண்ணோட்டம் பற்றிய கொள்கை விளக்கம் பல உள. ''இன்றைய உலகில் திருச்சபை'' அவற்றில் ஒன்று மட்டுமே.

தொழில் புரட்சியின் காரணமாக உலகில் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளினால் ஏழைகளைப் பாதுகாக்க வும் தொழிலாளர் உரிமையைப் பாதுகாக்கவும் தனிப்பட்ட சொத்துக்களைப் பாதுகாக்கவும் தொழிலாளர், முதலாளிமாரின் கடமைகளைக் காட்டுவதற்கும் கிறிஸ்தவ ஒழுக்க நிலையை விளங்கிக் கொள்வதற்கும் திருத்தந்தை 13ம் சிங்கராயர் 1891ல் ''உழைக்கும் மக்கள்'' என்ற சுற்று மடலை வெளியிட்டார்.

திருத்தந்தை இரண்டாம் பத்திநாதர் 1931ல் ''நாற்பது ஆண்டுகள்'' என்ற சுற்றுமடலை வெளியிட்டார். அதற்குப் பின்னணியாய் அமைந்தவை 1914 – 1919ல் ஏற்பட்ட முதலாவது உலக மகா யுத்தம், 1917ல் ரஷ்ய புரட்சி, 1929ல் லாத்தரன் உடன்படிக்கை என்பவையாகும். 1929 – 1931ற்கிடையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை மதிப்பீடு செய்து ''உழைக்கும் மக்கள்'' என்ற சுற்றுமடலின் 40 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு ''நாற்பது ஆண்டுகள்'' என்ற சுற்றுமடல் வெளியிடப்பட்டது.

1961ல் ''அநீதிக்குப் பதில்'' என்ற மேலுமொரு சுற்றுமடல் திருத்தந்தை 23ம் அருளப்பரினால் வெளியிடப் பட்டது. மனித உரிமைகள், கடமைகளைக் காட்டுவதற்கும் அரச ஆட்சியாளர்களிடையே உள்ள உறவைக் காட்டுவதற்கும் அரசுகளுக்கிடையேயுள்ள உறவைக் காட்டுவதற்கும் அரச – உலக சமூகங்களுக்கிடையே யுள்ள உறவைக் காட்டுவதற்கும் திருச்சபையை ஊட்டம் பெறச் செய்வதற்கும் மறை அறிவுரையாக இது வெளியிடப்பட்டது.

1965ல் திருத்தந்தை 6வது சின்னப்பரின் தலைமையில் 2ம் வத்திக்கான் சங்கத்தினால் ''இன்றைய உலகின் திருச்சபை'' என்ற கொள்கை விளக்கம் வெளியிடப்பட்டது.

**2ம் வத்திக்கான் சங்கத்தின் பின்னர் திருச்சபையின் வெளியீடு**

திருத்தந்தை 6ம் பவுல் 1967ல் ''மக்கள் முன்னேற்றம்'' என்ற சுற்றுமடல் மூலம் மனிதனின் முழுமை யான அபிவிருத்தி பற்றிய கருத்துக்களை முன்வைத்தார். புதிய சமூகப் பிரச்சனைகளுக்குக் கிறிஸ்தவ செயற்பாட்டைக் காட்டுவதற்காக 1971ல் ''சமூக நீதியும் அபிவிருத்தியும்'' என்ற வெளியீடு முன்வைக்கப்பட்டது. அதே வருடத்தில் உலக ஆயர் பேரவை ''உலகில் நீதி'' என்ற வெளியீட்டையும் முன்வைத்தது.

திருத்தந்தை 6ம் பவுல் 1975ல் ''மறைக்கல்வி'' என்ற பெயரில் வெளியிட்ட நற்செய்தியை வெளிப்படுத்தும் வழிமுறைகள், விதிகள், மற்றும் மறையை அளித்தல், பண்பாடு பற்றிய அறிவுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

உலகிலிருந்து மீட்கப்பட்ட மனிதனின் நிலை, மீட்பின் மறைபொருள் பற்றி விளக்கி திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் ஒரு புதிய பார்வையை (கண்ணோட்டத்தை) முன்வைத்தார். பின்னர் 1981ல் ''மனித உழைப்பு'' என்ற பெயரிலும் மக்கள் முன்னேற்றத்தின் இருபதாம் ஆண்டையொட்டி ''சமூக கரிசனை'' என்ற பெயரிலும் 1991ல் ''உழைக்கும் மக்கள்'' சுற்றுமடலிலும் முதலாம் நூற்றாண்டையொட்டி ''நூற்றாண்டும்''

வெளியிடப்பட்டது. இந்த வெளியீடுகள் மூலம், மாற்றமடையும் இன்றைய உலகிலே பல்வித அரசியல் கருத்துக்களின் மத்தியிலும் திருச்சபையின் நிலைப்பாட்டில் கவனம் செலுத்துமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

**இன்றைய உலகில் மனிதனின் நிலை**

**வேகமாக மாறுகின்ற இன்றைய உலகிலே உள்ள முக்கிய பண்புகள் சில.**

கட்டுப்பாடற்றதும் வேகமான மாற்றங்களும் உலகெங்கும் பரவியுள்ளன. இந்த மாற்றங்கள் மனிதனில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக, பண்பாட்டு மாற்றங்களினால் மனிதனின் மறை வாழ்வில் பல கேடுகள் ஏற்பட்டுள்ளது.

**அதுவரை மனிதனின் எண்ணங்கள் இவ்வாறிருந்தாலும் கீழே காணப்படும் வினாக்களுக்கு அவன் சரியான விடைகளைத் தேடுகிறான்.**

- துன்பம், வேதனை, கவலை, மரணம் இவற்றின் கருத்து என்ன?
- அதிக நட்டங்களை அனுபவித்து பெறப்படும் வெற்றியினால் கிடைக்கும் பயன் யாது?
- மனிதன் தனது சமூகத்திற்கு எவற்றைக் கொடுக்கலாம்?
- மனிதன் சமூகத்திலிருந்து எவற்றை எதிர்பார்க்கலாம்?
- இவ்வுலக வாழ்வின் பின் நிகழ்வதென்ன?

**இதுபற்றிய திருச்சபையின் படிப்பினைகள்**

மனிதன் தனது மேன்மையான அழைப்புக்கேற்ப வாழ்வதற்குத் தேவையான வலிமையையும் ஒளியையும் மரணத்தை வென்ற கிறிஸ்துவினாலேயே அளிக்க முடியும். கிறிஸ்துவில் மனித வாழ்வின் திறப்பு, கேந்திரம், வெற்றித்தூண் அவரே. திருச்சபையானது கிறிஸ்துவின் ஒளியில் எல்லா மக்களுடனும் உரையாடுகிறது.

**மனிதத்துவத்தின் மாண்பு**

மனிதனைப் பற்றிய பல்வேறு எண்ணங்கள் உண்டு. சிலநேரங்களில் அவன் அனைத்தையும் ஆட்சிசெய்கின் றான். சிலவேளைகளில் ஒன்றுமே செய்ய முடியாத பலயீனமானவனாக இருக்கின்றான். அவனது உண்மை நிலையை இறைவெளிப்பாடுகளின் ஒளியில் திருச்சபை எமக்குக் காட்டுகின்றது.

**அதன்படி மனிதன்**

- இறை சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான்
- படைத்தவரை அறிந்து அவரை அன்பு செய்ய முடியும்.
- இவ்வுலகில் அனைத்தையும் ஆண்டு கொண்டு இறை மகிமையை திட்டமிட முடியும்.
- அவன் ஒரு சமூக விலங்கு.
- ஆண், பெண் என படைக்கப்பட்டுள்ளான்.
- ஒருமைப்பாடும் ஒற்றுமை வாழ்வும் அவனது வாழ்வின் அடித்தளமாகும்.
- மனிதன் உன்னதமான படைப்பாவான்.

**பாவம்**

தொடக்கத்திலேயே பசாசின் தூண்டுதலினால் தனது சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திய மனிதன் இறை சித்த்திற்கு எதிராக - இறை மகிமையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக – படைத்தவருக்குப் பணிபுரிவதற்குப் பதிலாகப் படைப்புக்குப் பணிபுரிந்தான். அதனால் படைத்தவரிடமிருந்து அல்லாத தீய விளைவுகளுக்கு மனிதன் முகம் கொடுக்க நேர்ந்தது. அதுமட்டுமன்று தனது ஆரம்பம் இறைவனிடமிருந்தே என ஏற்றுக் கொள்வதற்கு விரும்பாததால் இறை உறவை முறித்துக் கொண்டான்.

அதனால் மனிதன் தனக்குள்ளேயே பிளவுபட்டான். அவனது தனிப்பட்ட, சமூக வாழ்வு – நல்லது, தீயது ஆகியவற்றுக்கிடையே ஏற்படும் முடிவில்லாத போராக மாறியது. ஆயினும் தீயவற்றிற்கு எதிராகப் போரிட்டு அதனை தனது வலிமையினால் வெற்றி கொள்வதற்கு மனிதனுக்கு இயலவில்லை. தான் ஏதோ ஓர் அடிமைத்தனத்தில் கட்டுண்டு இருப்பதாக அவன் உணர்ந்தான். இந்தக் கட்டுக்களை உடைத்தெறிந்து மனிதனுக்கு சுதந்திரம் அளித்து உலகின் தலைவர்களிடமிருந்து அவனை விடுவித்தவர் இவ்வுலகிற்கு வந்த இயேசுவேயாவார்.

**மனிதன் உருவாக்கப்பட்டுள்ள விதம்**

1. மனிதனுக்கு உடல், ஆன்மா மட்டுமன்றி அறிவு, குறிக்கோள், இருதயம், மனச்சான்று ஆகியவையும் உள. அவனது உடலியல் உருவாக்கத்தில் உலகின் மூலப்பொருள் அனைத்தும் ஒன்றாக அடங்கியுள்ளன. அதனால் மனிதன் தமது உடலின் இயக்கத்தை அற்பமாக எண்ணக் கூடாது. அவ்வாறே மனிதனின் உடலும் இறைவனின் வடிவமைப்பாகும். இறுதிநாளில் மீண்டும் உயிர்ப்பிக்கப்படும். மனித செயற்பாடுகள் அனைத்திற்கும் அடித்தளம் சரீரம் ஆகும். பாவத்தினால் மனித உடலில் இயல்பாகவே சண்டையிடும் குணம் உண்டு. ஆகவே மனிதன் என்பவன் சமூகத்தில் படைக்கப்பட்ட ஒரு அங்கம் மட்டுமல்ல மனிதனின் இதயத்துள் இறைவன் அவன் மட்டில் எதிர்பார்ப்புடன் இருக்கிறார்.
2. மனிதன் தன் அதிகாரத்தை எல்லா இடங்களிலும் பரப்பினாலும் மானிட நலனுக்காக அந்த அதிகாரத்தை பயன்படுத்துவதில் பின்தங்கியிருக்கிறான். மறைவான விடயங்களில் அக்கறை காட்டினாலும் தன்னைப்பற்றிய சந்தேக நிலையிலேயே இருக்கிறான். பல்வித சட்டங்களை வெளியிட்டாலும் அவற்றை செயற்படுத்து வதில்லை.
3. செல்வம், அதிகாரம் ஏராளமாக இருந்தாலும் பெரும்பாலானோர் பட்டினி, வறுமையால் துன்புறுகின்றனர். சுதந்திரம் பற்றி அதிகமாக பேசினாலும் வேறுவிதத்தில் அடிமைத்தனத்துக்குள் இருக்கிறான். ஒற்றுமை, ஒருமைப்பாட்டில் அக்கறை காட்டினாலும் பொருளாதார, சமூக, அரசில் ரீதியான பிளவுகள் மேலெழுந்துள்ளன. அமைதி பற்றிக் கதைத்தாலும் எல்லா இடங்களிலும் யுத்தத்தைக் காண்கிறோம்.

   இத்தகைய காரணங்களினால் மனிதனின் ஆன்மீகத்திலும் வாழ்க்கை முறையிலும் கடுமையான வேறு பாடுகள் தோன்றி புரட்சியான ஒரு நிலை மனித வாழ்வைத் தாக்கியுள்ளது. விஞ்ஞானம், தொழில் நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகளினால் வளி மண்டலத்தையும் கூட வெற்றி கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மனிதன் காலத்திற்கும் சவாலாக இருக்கிறான். காலத்தினால் மறைத்து வைக்கப்பட்ட நீண்ட இறந்த காலத்தை இன்றைய காலத்திற்குக் கொண்டு வருவதற்கு மனிதன் இன்று வளம் நிறைந்தவனாய் உள்ளான். அதுமட்டுமன்றி நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்தைக் காண்பதற்கும் அவன் திறமை பெற்றுள்ளான்.

தந்தை வழி குடும்பங்கள், குலங்கள், இனங்கள், சிற்றூர்கள் போன்ற வெவ்வேறு மரபுவழிச் சமூகங்கள் எல்லாருமே மாற்றங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். வேகமான மாநகர்ப்படுத்துதல், கிராமங்கள் எல்லாமே பரவியுள்ளன. தொடர்பாடல் காரணமாக முழு உலகமுமே ஒரு கிராமமாக மாறியுள்ளது. மேலும் மனிதர் தமது பாரம்பரிய நாட்டை விட்டு வேறு இடங்களுக்குச் சென்று குடியேறி உள்ளனர். ஒவ்வொரு மக்களினத்தாருக்குமுரிய பண்பாடு இன்று உலக பண்பாடாக மாறியுள்ளது.

சமய, சமூக உள்ளார்ந்த மாற்றங்களினால் ஒழுக்கம், சமூக சார்பு இன்று அழிந்துபோயுள்ளது. இந்த நிலையை இன்று இளைஞரிடையே காணக்கூடியதாய் உள்ளது. சமூக வாழ்விலே தமது அதிகாரத்தை அறிந்து அதனை செயற்படுத்துவதில் பேரார்வத்துடன் அவர்கள் இருக்கின்றனர். இதனால் பெற்றோர், ஆசிரியர் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். பாரம்பரியமாக நடைமுறை யில் இருந்துவரும் சமூகத் துறையைப் ''பழைமை வாய்ந்தவை'' ''காலம் கடந்தவை'' என எண்ணுகின்றனர். பொதுவாகப் பார்க்கும்போது லௌகீக ரீதியாக முழுமையாக உலகத்தை விரும்புகிற அவர்கள் ஆன்மீக முன்னேற்றத்தில் அத்தகைய அக்கறை காட்டுவதில்லை. அதனால் வெளி அலங்காரமாக இருந்தாலும் உள்ளார்ந்த முன்னேற்றத்தைக் காணமுடிவதில்லை.

மக்கள் தொகை அதிகரிப்பதால் - பொருளாதார மற்றும் சமூக தாக்கத்தினால் - பரம்பரைகளுக் கிடையேயுள்ள இடைவெளியினால் - ஆண், பெண் இடையேயுள்ள புதிய சமூகத் தொடர்புகளினால் இன்று குடும்ப வாழ்வின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் அழிந்து- போயுள்ளன.

உலகில், அமைதி, சமாதானம் ஏற்படுத்தும் போர்வையில் தத்தம் கண்ணோட்டத்தைப் பரப்பும் உள்ளார்ந்த நோக்குடனும் அதிகார பேரார்வத்துடனும் பிரபல்யம் வாய்ந்த நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இவற்றினால் சந்தேகம், குரோதம், கோபம், எதிர்ப்பு ஆகிய துன்புறுத்தல்கள் பரவியுள்ளன.

ஆயினும் பலர் அநீதியாக அல்லது சமனற்ற விதத்தில் பகிர்ந்தளித்தல் அல்லது தமக்கு கிடைக்காத இலாபத்தை – பயனை கலகங்கள் மூலம் பலவந்தமாகப் பெற முயற்சிக்கின்றனர். பட்டினியால் வாடும் நாடுகள் வளமான நாடுகளின் துணையை நாடுகின்றன. பெண்கள் சட்டபூர்வமாகவும், பழக்கவழக்கமாகவும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளைக் கேட்கின்றனர். விவசாய, தொழிலாள மக்கள், வாழ்வில் கட்டாயமானவை மட்டுமன்றி தனிப்பட்ட உரிமைகளையும் தேடிச் செல்கின்றனர். பண்பாட்டின் பயன் யாவருக்கும் பொதுவானதாய் இருக்க வேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளது. தமக்குப் பணியாற்ற அல்லது தாம் அடிமை நிலையை அடைவதற்கு அதிகாரமுள்ள தம்மாலேயே அதனை அவிழ்த்து விடும்

வலிமையும் சரியான விதத்தில் அவற்றை பயன்படுத்தும் பொறுப்பிற்கு தாம் கட்டுண்டு இருப்பதையும் மனிதன் இப்போது புரிந்துகொண்டுள்ளான்.

**வேறு பிரச்சினைகள்**

மனிதனில் பலவீனங்கள் உண்டு. அவ்வாறே எல்லையற்ற ஆசையும் மேல் நிலைக்கான அழைப்புப் பெற்றுள்ளதையும் விளங்கிக்கொள்கின்றான். பலவீன பாவியாகிய அவன் பலவேளைகளில் தான் விரும்பா ததை செய்கிறான், விரும்புவதை செய்யாது இருக்கிறான். லௌகீகத்தைப் பற்றிப் பலர் அளிக்கின்ற விளக்கங்களையும் ஏற்றுக்கொள்கிறான். தனது முயற்சியால் மட்டும் உண்மை, நன்மை, முழுமை, சுதந்திரம் பெற்றுக் கொள்ள முடியும் என எண்ணுகிறான். மனித செயற்பாட்டில் எல்லா ஆசைகளையும் நிறைவுவேற்ற முடியும் என எதிர்பார்க்கின்றான். ஆனால் சிலர் மனித வாழ்வு அர்த்தமே இல்லாதது என எண்ணி சோர்ந்து விடுகின்றனர்.

**புத்தியின் மாண்பு**

புத்தி காரணமாக மனிதன் எல்லா பௌதீகத்தையும் கடந்து செல்கிறான். இறை அறிவின் ஒளியை அவன் பெற்றுள்ளான். அதனால் செய்முறை அறிவில், தொழில் நுட்பமுறை, அறிவுவளதுறை ஆகியவற்றில் அவன் தேர்ச்சி பெற்றுள்ளான். ஆயினும் பாவம் காரணமாக அவனது அறிவின் ஒளி குறைந்துள்ளது. அதனால் இறை கொடையான ஞானம் வழியாக அறிவு சரியாக பயன்படுத்த வேண்டும். இல்லாவிடின் மனிதனது அறிவினால் மேற்கொள்ளும் தீர்மானம், உருவாக்கம் எல்லாமே உலகின் எதிர்காலத்திற்கு குந்தகமாகலாம் (அணு ஆயத உற்பத்தி)

**மனச்சான்றின் மாண்பு**

நன்மை, தீமை பற்றி இறைவனால் எழுதப்பட்ட சட்டம் மனிதனின் இதயத்திலே உள்ளது. அது மனச்சான்றாகும். அதற்கு அமைந்து நடப்பது மனிதனின் மாண்பாக இருக்கிறது. அதற்கேற்ப அவன் தீர்ப்பிடப்படுகிறான். சரியான மனச்சான்றினால் ஆட்கொள்ளப்படும் அளவுக்கு மனிதன் தவறான தீர்மானம் எடுப்பதிலிருந்து விலகி, ஒழுக்க நியமனங்களுக்கேற்ப வாழ முயற்சிக்கின்றான். ஆயினும் மனச்சான்று, அறியாமையினால், தவறான பாதையில் செல்லக் கூடுமாதலால் கவனமாக இருக்க வேண்டும்.

**சுதந்திரத்தின் மாண்பு**

உண்மையான சுதந்திரம் என்பது இறை உருவின் ஒரு சிறந்த அடையாளமாகும். மனிதன் தானாகவே இறைவனைத் தேடிச் சென்று அவரைப் பற்றிக் கொண்டிருப்பதாலே மகிழ்ச்சியான முழு நிறைவை சுதந்திரமாக அடைய வேண்டும். உண்மையைத் தேடி செல்லவும் அதனை ஏற்றுக் கொள்ளவும் வெளிப்படுத்தவும் மனிதனுக்குள்ள உரிமையை சுதந்திரம் என கொள்ளலாம். ஆயினும் மானிட சுதந்திரம் பாவம் காரணமாக ஓர் இடைவெளியைக் கொண்டிருப்பதால் இறை அருளின் துணையினால் மட்டுமே இறைவனுடனான அவனின் உறவை முழுமையாக்கிக் கொள்ள முடியும்.

**சாவு எனும் மறைபொருள்**

சாவின் முன்னிலையில் மனித நிலையில் புதிர் மிகவும் புரியாததாய் இருக்கிறது. நிரந்தரமாக அழிந்துவிடுவோம் என்ற அச்சம் மனிதரை வதைக்கிறது. மரணத்தினால் மனிதன் எல்லா பௌதிக தொடர்புகளிலிருந்தும் பிரிகிறான். மனிதன் மரணத்தை விரும்பாவிடினும் அதனை தடுப்பதற்கான மருந்து இல்லை. மனிதனது உயிரை நெடுங்காலம் நீடிக்கச் செய்தாலும் அதன்பின் வரும் வாழ்விற்காக மனிதரின் இதயத்தில், உறைந்திருக்கும் தாகத்தை அதனால் தணிக்க முடியாது என்பது மனித நிலைப்பாடாகும்.

மரணம் பற்றிய மறைபொருள் கிறிஸ்துவினால் காட்டப்பட்டுள்ளது. கிறிஸ்து மரணத்தை வெற்றி கொண்டதன் மூலம் மனிதன் தனக்குரிய உண்மை நிலையை பெற்றுள்ளான். அவர் தனது இறப்பினால் மனிதனை சாவினின்று விடுவித்தார். ஆகவே மரணம் பற்றி மனிதன் கவலை கொள்ளத் தேவையில்லை. இறைவனுடன் நிலை வாழ்வை பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அவனுக்கு உண்டு.

**கடவுள் மறுப்புக் கொள்கை**

மனிதருடைய மாண்பின் சிறப்பம்சம் யாதெனில் கடவுளோடு ஒன்றித்து உறவாடுவதற்கு அவன் அழைக்கப்பட்டிருப்பதாகும். மனிதன், தான் தோன்றியதிலிருந்தே கடவுளோடு உரையாட அழைக்கப்பட்டுள் ளான. கடவுளின் அன்பால் படைக்கப்பட்டு, என்றும் அதே அன்பால் காப்பாற்றப்படும் மனிதன் அவ்வாறு இல்லாவிடின் முழுமையாக வாழ முடியாது. ஆயினும் இன்று பெரும்பாலானோர் கடவுளோடு கொண்டுள்ள இந்த உயிரோட்டமான ஒன்றிப்பைக் கண்டுகொள்வதில்லை. அதனை மறுத்துத் தள்ளிவிடுகின்றனர். ஆகவே இந்த கடவுள் மறுப்புக் கொள்கை பற்றி கருத்துடன் ஆராய வேண்டும்.

சிலர் கடவுள் இல்லை என கூறுகின்றனர். சிலர் இறைவன் பற்றிய மனநிலையை (கொள்கையை) மறுக்கின்றனர். மேலும் சிலர் கடவுளைப் பற்றிய ஆய்வுகளின்படி இறை நம்பிக்கைக்கு இடமில்லை என்கின்றனர். அப்படியே கடவுள் இருந்தாலும் அவரைப் பற்றி சிந்திக்கத் தேவையில்லை என்பர். இன்றும் சிலர் மனிதத்துவம், இறைத்துவத்தைவிட மேலானது என்போரும் உள்ளனர். உலகிலுள்ள அநீதி அக்கிரமங் களினால் இறைவன் என்றொருவர் இருக்க முடியாது என்பது மேலும் சிலரின் விவாதம். லௌகீகத்தில் உழலும் இன்றைய நடத்தைகள் இறை நம்பிக்கைக்கு ஒரு தடையாக உள்ளது. மறை விசுவாசத்திற்கு எதிராக உள்ள எதிர் செயற்பாடுகளினால் கடவுள் மறுப்புக் கொள்கை மேல் எழுகிறது. விமர்சிக்கப்படும் இந்த எதிர் செயற்பாடுகளுக்கு முகம் கொடுப்பதற்கு விசுவாசிகள் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**கோட்பாடு அமைப்பு பெற்ற கடவுள் மறுப்புக் கொள்கை**

மனிதன் தன்னாட்சி உரிமை பற்றிய வேட்கையினால் இறை பாதுகாப்பை அவன் விரும்புவதில்லை இவ்வாறு கடவுள் மறுப்புக் கொள்கையுடையோரின் எண்ணமாயிருப்பது மனிதனின் குறிக்கோள் மனிதனேயா வான் என்பது. மனிதர் தாமே தம் இறுதிக்கதி, தாம் மட்டுமே தம் வரலாற்றின் சிற்பி, அதை ஆக்கியோர் தாமே என எண்ணுகின்றனர். இத்தகைய மனநிலைக்கு முரண்பாடாயிருப்பதால் இறைவன் என்றொருவர் இருக்கிறார் என எண்ணுவதில்லை. விஞ்ஞானம், தொழிநுட்பத்தினால் இந்த மறுப்புக் கொள்கை கோட்பாட்டை உறுதி செய்வதற்கு முயற்சிக்கின்றனர். மனிதனின் பொருளாதார, சமூக, சுதந்திர நிலைப்பாடு பற்றிய கருத்தில் அனைத்தும் தங்கியிருப்பதை ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டின்படி சமயம் என்பது ஒரு மாயையாகிய சிந்தனை என்போரும் உண்டு. இதன்படி காரியமாற்றுவோர் அரச அதிகாரங்களைப் பெறும்போது அந்த அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி கடவுள் மறுப்புக் கொள்கையை பரப்புவர்.

**கடவுள் மறுப்புக் கொள்கை பற்றிய கருத்து**

மனிதனின் இயல்புக்குரிய மேன்மையை அழிக்கத்தேடும் கடவுள் மறுப்புக் கொள்கையை திருச்சபை வெறுத்து ஒதுக்குகிறது. அதனால் திருச்சபை கொண்டிருக்கும் சிந்தனையை (கொள்கையை) மனதிற் கொள்ளவும்.

கடவுளை ஏற்பது கொள்கைக்கு உண்மையான பதிலாயிருப்பது, திருச்சபையின் கற்பித்தலின்படி அங்கத்தினர் வாழும் முழுமையான வாழ்வாகும். திருச்சபை, இறைதந்தை - இறைமகன் - மனிதன் இடையில் ஒருவிதத்தில் புலப்படுதல் செய்யும் தூய ஆவியின் வழிகாட்டுதலின் கீழ் இறைதந்தையையும் மனிதனாக பிறந்த அவருடைய மகனையும் நம்மிடையே ஒருவிதத்தில் காணக்கூடிய முறையிலே இருக்கச் செய்வது திருச்சபை பெற்றுள்ள பணியாகும். இப்பணியை நிறைவேற்றுவதற்கு உயிரோட்டமுள்ளதும் முதிர்ச்சியடைந்தது மான நம்பிக்கைச் சான்று தேவைப்படுகிறது. மறைசாட்சிகள் இத்தகைய நம்பிக்கைச் சான்றுகளாவர். நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய இன்னொரு விடயம் யாதெனில், எல்லா மனிதரும் - நம்பிக்கைக் கொண்டோரும், கடவுள் நம்பிக்கை இல்லாதவரும் தாங்கள் ஒருங்கிணைந்து குழுவாக வாழும் இந்த உலகைச் செவ்வனே வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்பது. அதனால் நாட்டு ஆட்சியாளர் சிலர் மனிதரின் அடிப்படை உரிமைகளை ஏற்காதவராய் கடவுள் நம்பிக்கை கொண்டோரையும் கடவுள் நம்பிக்கையில்லாத வரையும் அநீதியாக வேறுபடுத்திக் காட்டுவது பற்றித் திருச்சபை வருத்தம் தெரிவிக்கின்றது.

**புது மனிதர் கிறிஸ்து**

முதல் மனிதராம் ஆதாம் ஆண்டவர் கிறிஸ்துவின் முன் அடையாளமாக இருந்தார். புதிய ஆ.தாம் கிறிஸ்துவில் இறை அன்பின் மறையுண்மை வழியாக மனிதனின் மேன்மையைக் காட்டுகிறார். கட்புலனாகாத கடவுளின் சாயல் கிறிஸ்து. அவர் பாவத்தினால் உருகுலைந்த மனித இயல்பை இறை சாயலுக்கேற்ப மாற்றினார். அவர் மனிதனாக பிறந்ததால் ஒவ்வொரு மனிதரோடும் ஒரு வகையில் தம்மையே ஒன்றித்துள்ளார். அவர் மனித கையினால் வேலை செய்தார். மனித உள்ளத்தால் செயல்பட்டார். மனித இதயத்தால் அன்பு செய்தார். கன்னிமரியாவிடமிருந்து பிறந்த அவர் உண்மையில் நம்மில் ஒருவரானார். பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் நம்மைப்போல் ஒருவரானார்.

கிறிஸ்துவின் மரணத்தினால் நாம் சாத்தானுடையவும் பாவத்தினுடையவும் அடிமைத்தளையினின்று விடுவிக்கப்பட்டுள்ளோம். ''இறந்த யேசுவை உயிர்த்தெழச் செய்தவரின் ஆவி உங்களுக்குள் குடிகொண்டிருந் தால் கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்த அவரே ................ ஆவியினால்........... உங்களையும் உயிர் பெறச் செய்வார்'' - (உரோ. 8:12). இக் கருத்து கிறிஸ்தவர்களுக்கு மட்டுமன்றி நல் மனம் கொண்ட அனைத்து மனிதருக்கும் பொருந்தும். பாஸ்கா மறைபொருளில் இணைக்கப்பட்ட தூய ஆவி எல்லோருக்கும் வாய்ப்பளிக்கிறார்.

**மனிதனின் சமூக இயல்பு**

சமூகத்தில் ஒருவராக வாழ்வதற்காக மனிதன் படைக்கப்பட்டுள்ளான். கிறிஸ்தவ (இறை) வெளியீடுகள் வழியாக மனிதனின் நெருங்கிய, தனிப்பட்ட தொடர்புகளை வளர்க்கக் கூடியதாயுள்ளது. திருப்பீடம் வெளியிட்டுள்ள பல்வித சுற்றுமடல்கள் இதனை விளக்குகின்றன.

அனைவரிடத்திலும் தந்தைக்குரிய அக்கறை கொண்டுள்ள கடவுள் எல்லோரும் ஒரே குடும்பமாக, அமைந்து ஒருவரையொருவர் சகோதர மனப்பான்மையோடு நடத்த வேண்டுமென விரும்பினார். இதற்கான முதல் கட்டளை அன்பாகும். இறை அன்பை அடுத்தவர் அன்பிலிருந்து பிரிக்க முடியாது. உண்மை அன்பு திருச்சட்டத்தை நிறைவு செய்வதாகும். பரிசுத்த திரித்துவத்தின் ஒருமைப்பாடு அன்பின் இறை பிள்ளைகளுக்கு மாதிரிகையாக இருக்க வேண்டும்.
சமூகத்திலே மக்கள் அனைவரும் ஒருவரையொருவர் சார்ந்து நிற்கிறார்கள். இன்றைய உலகமும் நாளுக்கு நாள் அதிகமதிகம் ஒன்றித்து வருகிறது. மற்றவரோடு தம் கொள்ளும் தொடர்பாலும் ஒருவர் ஒருவருக்கான கடமைகளை ஆற்றுவதாலும் சகோதர உரையாடலாலும் மனிதர் தம் திறமைகளை வளர்க்கின்றனர்.

சமய வாழ்வை உள்ளடக்கிய தம் அழைத்தலைச் செயற்படுத்துவதற்கு சமூக வாழ்வு பேருதவியாக இருக்கிறது. இருப்பினும் சமூக சூழலையே சீர்குலைக்கும் மனிதரின் தற்பெருமை, தன்னலம் குறித்து விழிப்பாயிருக்க வேண்டும். பாவத்தின் விளைவுகளால் பிறப்பிலிருந்தே தீமையில் நாட்டமுள்ளவர்களாக துலங்கும் மனிதர்கள், இன்றும் பாவத்திற்கான புதிய தூண்டுதல்களைக் காண்பதை மறக்கக் கூடாது.

**பொதுநலனை வளர்த்தல்**

பொதுநலன் என்பது குழுக்களும் தனி உறுப்பினர்களும் தத்தம் நிறைவை அடைவதற்கு உதவுகின்ற சமூக வாழ்வுச் சூழ்நிலைகளின் தொகுப்பே ஆகும். மனிதர்கள் எல்லாப் பொருட்களுக்கும் மேலானவர்களானதால் அவர்களுடைய உரிமைகளும் கடமைகளும் எல்லோருக்கும் பொதுவானவையாகவும் மீறக் கூடாதவையாகவும் உள்ளன. உணவு, உடை, உறைவிடம், வாழ்க்கை நிலையை சுதந்திரமாக தேர்ந்து கொள்ளவும், குடும்பம் அமைக்கவும் உரிமை, கல்வி, தொழில், நன்மதிப்பு, மரியாதை. சரியான தகவல் பெறும் உரிமை, மனச்சான்றின்படி பிழையின்றி செயற்பட உரிமை, தனிவாழ்வுப் பாதுகாப்பு, உரிமை, சமயம் சார்ந்தவை உட்பட எல்லா விடயங்களிலும் நீதிக்குகந்த சுதந்திரம் ஆகியன மனித வாழ்வின் நன்மைக்கான திட்டங்களாகும்.

**தனிநபருக்கு செலுத்த வேண்டிய மரியாதை**

கிறிஸ்தவன் எப்போதும் தன் அயலானில் அக்கறை கொள்ள வேண்டும். ஏழை லாசரை கருத்திற் கொள்ளாத செல்வந்தராக (லூக். (16:19-31) இருக்கக் கூடாது. அனைவராலும் கைவிடப்பட்டவர், அயல் நாட்டு உழைப்பாளி, அகதி, முறையற்ற புணர்கையில் பிள்ளை, பசியால் வாடுகிறவர் ஆகியோருக்கு செயற்பாட்டுடன் உதவ வேண்டும்.

அனைத்து வகைகளையும் சார்ந்த கொலை, கருச் சிதைவு, மனித வாழ்வுக்கு எதிரான அனைத்துவித செயற்பாடுகள், உடல் அல்லது உள்ளத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகள், உள்ளத்தை வன்முறையால் மாற்ற முயலுதல், மனித மாண்புக்கு ஏற்காத வாழ்க்கை முறை, காரணமின்றி சிறைப்படுதல், நாடு கடத்தல், அடிமை நிலை, பரத்தமை, பெண்களையும் இளைஞரையும் விற்றல், மனிதரை கருவிகளாக பாவித்தல் ஆகிய அனைத்தும் வெட்க கேடானவை, தீமையானவை. அதனால் இவற்றை வெறுத்து ஒதுக்க வேண்டும்.

**பகைவருக்கு அன்பும் மரியாதையும்**

‘‘உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக, பகைவரிடம் வெறுப்பு கொள்வாயாக என்பதைக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு சொல்கிறேன். உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்’’ (மத். 5:43-44). இப்படிப்பினையைக் கிறிஸ்தவன் பின்பற்ற வேண்டும். பிறரைத் தீர்ப்பிடுவதற்கு எம்மால் முடியாது. அது இறைவனுக்குரியது.

**மனிதரிடையே நிலவும் அடிப்படை சமத்துவம், சமூக நீதி**

பகுத்தறிவு, இறை சாயல், ஒரே இயல்பு, ஒரே அழைப்பு, ஒரே மீட்பு ஆகியன இருப்பதால் மனிதர் அடிப்படையில் சம நிலையினராய் உள்ளனர். மனிதனின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக பால், இனம்,

நிறம், சமூக நிலை, மொழி, சமயம் ஆகியவை காரணமாக பாகுபாடு காட்டும் எந்த முறையும் இறை திட்டத்திற்கு முரணானது. மனித அமைப்புகள் அனைத்தினதும் கடமை மக்களுக்கு பணியாற்றுவதே. ஆயினும் இவை எல்லா இடங்களிலும் இன்னும் மதிக்கப்படவில்லை. பெண்கள் ஆண்களைவிட குறைந்தவர்களாக மதிக்கப்படுவது இதற்கொரு உதாரணமாகும். தம்மை மட்டும் கவனித்துக் கொள்ளும் நிலைப்பாட்டையொட்டி யாருக்குமே திருப்திகொள்ள முடியாது. சிலர் சமூகத்திற்கான சட்டம், ஆணைகளைக் கவனிப்பதில்லை. (உ +ம் வரி செலுத்துதல், வாகனத்தின் வேகம்). ஒரு நபர் அல்லது ஒரு குழு முதலில் தம்மில் சமூக பண்புகளை வளர்த்து அவற்றை சமூகத்தில் பரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**பொறுப்புணர்வும் பங்குகொள்ளலும்**

எமது காலத்தின் தேவைகளுக்கேற்ப அறிவு சார்ந்த பண்பாடு மட்டுமன்றி பரந்த ஆளுமைப் பண்புடைய ஆடவரையும் பெண்டிரையும் தோற்றுவிக்கும் வகையில் ஒவ்வொரு இளைஞருக்கும் - அவர்கள் எத்தகைய சமூக நிலையினராயினும் சரி - கல்வியும் அளிக்கப் பெற வேண்டும். இத்தகைய மக்களே இக்காலத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

அவ்வாறே எல்லா மனிதருக்கும் தமது அழைப்பிற்கேற்ப வாழ்வதற்குத் தேவையான வசதிகள் இருக்க வேண்டும். கொடிய வறுமையின் பிடியில் உழல்கிற மனிதரின் சுதந்திரம் வலுவிழந்ததாக இருக்கும். அதே போன்று பல இன்ப நலன்களில் வாழ்வோர் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களின் சுதந்திரமும் வாடி வதங்கிவிடும். பொது முயற்சிகளில் பங்கு கொள்வோரைப் பாராட்ட வேண்டும். பலர் பங்கு கொள்ளக்கூடிய தேசிய செயல்முறை போற்றற்குரியது. வரவிருக்கும் தலைமுறைகள் வாழவும் எதிர்நோக்குக் கொள்ளவும் தூண்டுதல் அளிக்க வல்லவர்களின் கைகளிலேயே மனித குலத்தின் எதிர்காலம் உள்ளது என உண்மையிலேயே நாம் கூறலாம்.

**மனிதராகப் பிறந்த வாக்கும், மனித ஒற்றுமையும்**

தனித்தனியாக ஒருவருக்கொருவர் தொடர்பு ஏதும் அற்ற முறையில் மக்களைத் தூய்மைப்படுத்தவும் ஈடேற்றவும் கடவுள் விரும்பவில்லை. மாறாக தம்மை உண்மையில் ஏற்றுக்கொண்டு தூய்மையாய்த் தமக்கு ஊழியம் செய்யும் ஒரு மக்கள் குலமாக அவர்களை நிறுவ விழைந்தார். மீட்பு வரலாற்றில் தொடக்கத்திலிருந்தே காணக்கூடிய விசேஷட பண்பு யாதெனில் தனித்தவராக மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் உறுப்பினர்கள் என்ற முறையில் மனிதரைத் தேர்தெடுத்துள்ளார் என்பதாகும்.

இந்த பண்பை கிறிஸ்து செயல்முறைப்படுத்தினார். திருமணத்தில் (கானா ஊர்) பங்குகொள்ளல், சக்கேயுவின் வீட்டிற்குச் செல்லல், பாவிகளோடும் வரிதண்டுபவர்களோடும் விருந்துண்ணல் இதற்கு உதாரணங்களாகும். ‘‘பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே’’ என விளிப்பதையும் சிந்திக்கவும் இறுதியில் மனிதருக்காக தன் வாழ்வையே பலியாக்கினார். தூய ஆவியின் வழியாக நம்பிக்கையும் அன்பும் கொண்ட சகோதர சமூகத்தை ஏற்படுத்தினார். இச் சமூகம்தான் அவரது உடலாகிய திருச்சபை. இந்த ஒற்றுமையானது தன்னுடைய நிறைவைக் காணும் கடைசி நாள்வரை இடையறாது வளர வேண்டும். அதனை எவ்வாறு செய்யலாம் என சிந்திக்கவும்.

**இன்றைய உலகின் திருச்சபையின் பணி**

திருச்சபையின் குறிக்கோள் ஈடேற்றத்தையும் நிறைவு காலத்தையும் சார்ந்ததாகும். இக் குறிக்கோளை வரவிருக்கும் யுகத்தில்தான் அது முழுமையாக அடைய முடியும். கண்களுக்குப் புலப்படும் குழுவாகவும் ஞானச் சமூகமாகவும் ஒரே நேரத்தில் அமைந்துள்ள திருச்சபை மனித குலம் அனைத்தோடும் வழிநடக்கிறது. மனித சமூகத்தின் ஆன்மா திருச்சபையாகும். அதனால் திருச்சபை மனிதனின் மாண்பை மேன்மையுறச் செய்கிறது. மனித சமூகத்தின் பிணைப்பை உறுதிப்படுத்துகிறது. மனிதரின் அன்றாட செயற்பாடுகளுக்கு ஆழ்ந்த பொருளையும் சிறப்பையும் தருகிறது. இவ்வாறு தான் தனித்தனி உறுப்பினர்கள் வழியாகவும் மனித குலத்தையும் அதன் வரலாற்றையும் இன்னும் அதிகம் மனிதத்தன்மை வாய்ந்ததாய் ஆக்குகிறது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உழைக்கும் மற்ற எல்லா கிறிஸ்தவ சபைகளையும் திருச்சபை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறது.

**ஒவ்வொரு மனிதனுக்கும் திருச்சபை அளிக்க விழையும் உதவி**

மனிதன் வாழ்வதன் பொருளை திருச்சபை மனிதனுக்கு உணர்த்துகிறது. மனிதர் தமது வாழ்க்கை, தமது ஈடுபாடு, தமது இறப்பு ஆகியவற்றின் பொருளை சற்றேனும் தெரிந்து கொள்ள விரும்புவர், முயற்சிப்பர். இறைவனால் மட்டுமே இதற்கான விடைகளை அளிக்க முடியும். மனுவுரு எடுத்த இறைமகன் வழியாகவே அவர் இதைச் செய்கிறார். இதன்படி பல்வித கருத்துத் தடுமாற்றங்களிலிருந்தும் மனித இயல்பின் மாண்பைக் காப்பதற்கு திருச்சபையால் இயலுமானதாக இருக்கிறது.

இறைச் சட்டத்தின் எல்லா விதிகளிலிருந்தும் நாம் அகன்று சென்றால்தான் நமது சொந்த உரிமைகள் காக்கப்படும் எனும் சோதனை எழலாம். அத்தகைய நிலை ஏற்படின் மனிதரில் மாண்பு அழிந்து விடுமேயொழிய காக்கப்படாது.

**திருச்சபை மனித சமூதாயத்திற்கு அளிக்க முயலும் உதவி**

கிறிஸ்து திருச்சபைக்கு ஒப்படைத்த பணி அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய துறைகளைச் சார்ந்த பணியன்று. ஆனால் சமயத்துறை சார்ந்த பணியாகும். கடவுளின் சட்டத்திற்கேற்ப மனித சமூகத்தை அமைத்து உறுதிப்படுத்துவது தேவையாக இருக்கிறது. காலம், இடம், சூழலுக்கேற்ப அத்தகைய அமைப்புக்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இத்தகைய பணியின்போது திருச்சபை தனக்குரிய பணி தவிர்ந்த குறிப்பிட்டதொரு பண்பாட்டு அமைப்புக்கோ, அரசியல், பொருளாதார, சமூக அமைப்பிற்கோ கட்டுப்பட்டதாகாது. மனிதருடையவும் குடும்பத்தினருடையவும் அடிப்படை உரிமைகளையும் பொதுநல கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் எவ்வகை ஆட்சியின் கீழும் அனைவரின் நலனுக்காகவும் செயற்படும் சந்தர்ப்பத்தை திருச்சபை ஆர்வத்துடன் விரும்புகிறது.

**திருச்சபை (கிறிஸ்தவர் வழியாக) மனித ஈடுபாட்டிற்கு அளிக்க முயலும் உதவி**

உலகில் நமக்கு நிலையான இடம் இல்லை. வரவிருக்கும் இடம் ஒன்றைத் தேடுகிறோம் என்னும் எண்ணத்தில் தமது உலகக் கடமைகளைச் செய்யாதிருப்பது தவறு. வழிபாட்டு செயல்களையும் அறநெறி சார்ந்த ஒரு சில கடமைகளையும் நிறைவேற்றுவதில் மட்டுமே சமய வாழ்வு அடங்கியிருக்கிறது எனவும், மண்ணுலகக் காரியங்கள் சமய வாழ்வுக்கே முற்றிலும் புறம்பானவை எனக் கருதி செயலாற்றாமல் விடுவதும் தவறாகும். நம்பிக்கைக்கும் அன்றாட வாழ்வுக்குமிடையே இடைவெளி இருக்கக் கூடாது. மண்ணுலகப் பொறுப்புக்கள், கடமைகளை நிறைவேற்றுவதில் கிறிஸ்தவப் பொதுநிலையினர், சமூகத்திற்கு முன்மாதிரிகையாய் இருக்க வேண்டும். அந்த மாதிரிகை முறையாக உருவாக்கப்பட்ட மனச்சான்றினால் ஒளிபெற வேண்டும். அதனால் பொதுநிலையினர் திருச்சபை கற்பிக்கும் மறைக்குக் கவனமாக செவிமடுத்து அதன்படி செயற்பட வேண்டும். அவ்வாறாயின் சமூகத்தில் எவ்வேளையிலும் சான்று பகர்வதற்கு பொதுநிலையினரால் முடியும்.

திருச்சபையின் உருவை உலகினர் அதன் திருப்பணியாளர்களின் வாழ்வின் வழியாகவே காண்கிறார்கள். கிறிஸ்தவ செய்தியின் வல்லமை, வலிமையை மக்கள் அவற்றின் மூலமே அளந்து கொள்கிறார்கள். இன்றைய மனிதன் அரச, சமூக, நிலையிலே ஒருமைப்பாட்டுடன் இருப்பதால் குருக்கள், ஆயர்கள், திருத்தந்தையுடன் தமது திறமையாலும் முயற்சியாலும் ஒன்றுபட்டு மனித இனத்தை இறை மக்களாக ஒன்றுபடுத்துவதற்காக தம்மிடையே உள்ள வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும். இன்றைய உலகில் இடைவெளி நற்செய்திக்கும் அதற்கு பொறுப்பாயுள்ளோரின் வாழ்க்கை மாதிரிகைக்குமிடையேயுள்ள திருச்சபையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. அதனால் திருச்சபை தன் தோற்றத்திலே கிறிஸ்துவின் அடையாளம் சுடர்விட்டு ஒளிருமாறு தூய்மையையும் புதுக்கோலத்தையும் பெற தம் மக்களை இடையறாது தூண்டுகிறது.

**இன்றைய உலகிலிருந்து திருச்சபை பெறும் உதவி**

மனித வரலாற்றிலும் வளர்ச்சியிலுமிருந்து திருச்சபை பல பயனைப் பெற்றுள்ளது. வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு மக்களின் சிந்தனை முறைகள், மொழி வழக்குகள், கண்ணோட்டம், பகுத்தறிவு வழியாக நற்செய்தியை வெளிப்படுத்த முயற்சிப்பதால் மனிதன் பெற்றுள்ள அனுபவங்கள் அறிவியலின் வளர்ச்சி, பண்பாட்டு முறைகளிலுள்ள வளம் ஆகியன திருச்சபைக்குப் பயனுள்ளதாயுள்ளது. அனைத்துமே, சிறப்பாக மானிட சிந்தனைகள் வேறுபடுகின்ற இன்றைய காலத்திலே இறை மக்களின், விசேடமாக அருட்பணியாளர்கள், இறையியலாளர்கள் கடமையாயிருப்பது யாதெனில் தூய ஆவியின் உதவியினால்

இன்றைய கால மொழி வழக்குகளுக்கு செவிசாய்ப்பதும் அவற்றை இறைவார்த்தையின் ஒளியில் மதிப்பீடு செய்வதுமாகும்.

**அகரமும் னகருமுமான கிறிஸ்து (ஆதியும் அந்தமுமான கிறிஸ்து)**

உலகிற்கு உதவும் திருச்சபை உலகிலிருந்தும் பல உதவிகளைப் பெறுகிறது. அவ்வாறு பெற்று கடவுளாட்சியின் முழுமைக்கும் மனித குல விடுதலைக்கும் செயற்படுகிறது.

அனைத்தையும் படைத்த இறைவாக்கு, அனைவரையும் மீட்கவும் அனைத்தையும் ஒன்று சேர்க்கவுமே மனிதனாகப் பிறந்தார். ஆண்டவரே மனித வரலாற்றின் இறுதி குறிக்கோளாவார். பண்பாட்டின் அடிப்படையும் மனித குலத்தின் மையமும் அவரே. இறை தந்தை அவரை இறந்தோரிடமிருந்து எழுப்பினார். இறந்தோருக்கும் வாழ்வோருக்கும் தீர்ப்பிடுபவராக ஆக்கினார். தூய ஆவியினால் அனைத்தையும் ஒன்று சேர்த்தார்.

இந்த இறை மக்கள் சமூகம் அவரது அன்பின் திட்டத்திற்கேற்ப நிறைவை நோக்கிப் பயணம் செய்கிறது. விண்ணுலகம் மண்ணுலகம் அனைத்தையும் கிறிஸ்துவில் ஒன்று சேர்ப்பதற்காக இவ்வாறு பயணிக்கிறது. (எபே 1:10)

**திருமணத்தினதும் குடும்பத்தினதும் தூய தன்மை**

திருமணம், குடும்பத்தில் ஏற்படும் நன்நிலையானது மனித ஆள், கிறிஸ்தவ சமூகம் ஆகியவற்றின் நன்நிலையோடு தொடர்புடையதாகும். ஆரம்ப சமூகத்தில் பலதாரபழக்கம், மணமுறிவு, சுதந்திரக் காதல் மற்றும் பிற சீர்கேடுகளால் திருமணம் மற்றும் குடும்ப அமைப்புக்களின் மாண்பு மங்கியுள்ளது. மேலும் தன்னலம், இன்ப வெறி, தவறான முறைகளால் பிள்ளைப் பேற்றினைத் தடுத்தல், பொருளாதார, சமூக - உளவியல் அரசியல் வாழ்வு சூழ்நிலை மற்றும் லௌகீக தேவைகளை முதன்மையாகக் கொள்வதால் குடும்ப அன்பு குலைந்து போயுள்ளது.

திருமணம் இறை திட்டத்தின் ஒரு பகுதியாகும். அது முறிவுபடாத உடன்படிக்கையாகும். அது அவ்வாறு அமைவது பிள்ளைகளினதும், சமூகத்தினதும் நன்மைக்காகவாகும். அதன் நன்மை பிள்ளைகள் பிறப்பிலும் அவர்களுக்கு கல்வியளித்து பயிற்றுவிப்பதிலும் திட்டமிடப்படுகிறது. அதனால் கணவன் - மனைவி ஆளோடு ஆள் நெருங்கி இணைகின்ற ஒன்றிப்பு நிலையைக் காத்துக்கொள்ள வேண்டும்.

பண்டைய காலத்திலே இறைவன் அன்பு, நம்பிக்கை உடன்படிக்கையில் மக்கள் முன்தோன்றினார். திருமண அருளடையாளம் வழியாக இணைந்த கிறிஸ்தவ வாழ்வில் கிறிஸ்து பிரவேசித்து அவர்களது வாழ்வைத் தூய்மைபடுத்துகின்றார். அன்பினால் நிரப்புகின்றார். பொறுப்புக்களை நிறைவேற்ற வலிமையளிக் கிறார். அதன் வழியாக இறை மகிமை வெளிப்படுவதற்கு இடமளிக்கிறார்.

பெற்றோர் - குடும்ப செபம், முன்மாதிரிகையால் பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டும் பிள்ளைகளுக்கு கல்வி, மறைக்கல்வி புகட்டுவதற்கு அவர்கள் கடமைபட்டுள்ளார்கள். பிள்ளைகளும் பெற்றோர் தூய்மையடைய உதவுகிறார்கள். பெற்றோர் புரியும் நன்மைகளுக்கு கைமாறு புரிவதன் வழியாக தமது அன்பை வெளிபடுத்த வேண்டும். பெற்றோரின் துன்பம், முதுமை, தனிமையின்போது அவர்களுக்கு பிள்ளைகளின் பாதுகாப்பு தேவை.

**திருமண அன்பு**

மண உறுதி செய்தவர்கள் களங்கமற்ற அன்பினாலும் திருமண தம்பதியர் பிளவுபடாத நட்பாலும் தமது அழைப்பைப் பேணி வளர்க்க வேண்டும். எல்லா இன மக்களும் கணவன் - மனைவி அன்பை உயர்வாக மதிக்கின்றனர். தன்னலம், காம உணர்ச்சியினால் தூண்டப்பட்ட அன்பு விரைவாக மறைந்து போகும். சாதாரண அன்பை விட உண்மையான, திருமண அன்பு மேன்மை வாய்ந்தது. இந்த அன்பு திருமணத்திற்கே உரிய செயலாகிய தாம்பத்திய உறவில் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகிறது. முழுமையடைகிறது. மணமக்கள் நெருங்கி ஒன்றிக்கும்போது அது மேலும் வெளிப்படுத்தப்படுகிறது.

உண்மையான திருமண அன்பானது இன்பத்திலும், துன்பத்திலும் உடலாலும் உள்ளத்தாலும் முறிவுபடாத பண்புடையது. அதனை புரிந்து கொண்டால் அங்கே பிறர்மனை நயத்தலுக்கும் (திருமணத்திற்கும் அப்பாற்பட்ட பாலியல் உறவாகும்.) மண முறிவுக்கும் இடமில்லை. அதனால் கிறிஸ்தவர்கள் உண்மையான திருமண அன்பிற்கு சாட்சி பகர வேண்டும். அவ்வாறாயின் உலகினர் அதன் மேன்மையைக் காண்பர். இளைஞர், இளம் பெண்கள் ஏற்ற வயதில் சொந்த விருப்பம், உண்மை அன்பு கொண்டு மனவாழ்வில் இணைவதற்கு அது பற்றி அவர்களை அறிவுறுத்த வேண்டும்.

**திருமணத்தின் இனப் பெருக்க வளம்**

திருமணமும் திருமண அன்பும் தம்மியல்பிலேயே பிள்ளைகளைப் பெற்று அவர்களைப் பயிற்றுவிப்பதற்கென்று அமைக்கப்பட்டுள்ளன. அதனால் மணமானவர்கள் கிறிஸ்தவ பொறுப்புடன் நல்லுறவில் வாழ்வு தந்து பிள்ளைகளைப் பெற்று ஆளாக்க வேண்டும். பிள்ளைகளின் நன்மை, காலத்துக்கேற்ற லௌகீக, ஆன்மீக நிலை, சமூக நலன், திருச்சபையின் நலன் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். பிள்ளை பெற்றுக்கொள்ள ஆசையாக இருந்தும் குழந்தை கிடைக்காவிட்டாலும் அதனால் அவர்களது திருமணம் பிளவுபடாத தன்மையைக் கொண்டுள்ளது.

**திருமண அன்பும் மனித உயிர் மட்டில் மதிப்பும்**

எத்தகைய தடைகள், இடர்கள் வந்தாலும் மனித மாண்பை பாதிக்கும் விதத்தில் தீர்மானம் எடுக்கக் கூடாது. கரு உருவான நேரம் முதல் அந்த உயிரைப் பாதுகாக்க வேண்டும். கருச் சிதைவு, குழந்தை கொலை ஆகியவை கொடிய கொலைக் குற்றங்களாகும். திருமணத்தினால் ஏற்படும் தாம்பத்திய வாழ்வும் உறவும் மிக மரியாதையுடன் மதிக்கப்பட வேண்டும். திருச்சபை அனுமதிக்காத முறைகள் வழியாக குடும்பக் கட்டுப்பாடு செய்யக் கூடாது. மனித வாழ்வை நிலை வாழ்வு பற்றிய சிந்தனையுடனேயே கணக்கிட வேண்டும்.

**திருமணத்தையும் குடும்பத்தையும் பேணி வளர்த்தல்**

குடும்பம் மனிதப் பண்பை வளமுறச் செய்கிற ஒரு பள்ளியாகும். பிள்ளைகளைப் பெற்று வளர்க்கும்போது தந்தையின் செயற்பாடும் தாயின் கரிசனையும் முக்கியமானதாகும். வளர்ந்த பிள்ளைகளைப் பயிற்றுவிக்க வேண்டும். அழைப்பை ஏற்றுக் கொள்ளவும் நல்ல வாழ்வு நிலையைத் தேர்ந்து கொள்ளவும் அந்தப் பயிற்சி அவர்களுக்குத் துணை புரிகிறது. திருமண வாழ்வைத் தேர்ந்து கொண்டால் தம் குடும்பத்தைக் கட்டியெழுப்பும் திறமை அவர்களுக்கு இருக்க வேண்டும். அது பற்றிய அறிவுரையைப் பெற்றோர் வழங்கலாமேயொழிய அவர்களைப் பலவந்தப்படுத்தக் கூடாது.

சமுதாயத்தின் அடித்தளம் குடும்பமாகும். குடும்ப நிலையை மேம்பாடு அடையச் செய்வது அரசின் கட்டாய கடமையாக உள்ளது. அதனால் அரசு, குடும்ப நிலைப்பாட்டிற்காக சட்டங்களை செயற்படுத்துவது அவசியம். அறிவியலில் சிறப்பாக உயிரியல், மருத்துவ இயல், சமூக இயல், உளவியல், சட்டம் போன்றவற்றில் தேர்ந்தவர்கள் மூலம் திருமணமானவர்களை அறிவுறுத்துவதற்கு அரசு முன்வரலாம்.திருப்பணியாளர்கள் குடும்பத்தைப் பற்றிய காரியங்களைக் கற்றறிந்து போதனை, திருவழிபாடு, பிற அருள் வாழ்வு, உதவிகள் மூலம் திருமண அழைப்பை முன்னெடுத்துச் செல்ல வழிகாட்ட வேண்டும்.

மணமானவர்கள் அன்பாலும் மன ஒற்றுமையாலும் ஒருவரை ஒருவர் தூய்மைப்படுத்தி துன்பத்திலும் இன்பத்திலும் கிறிஸ்துவைப் பின்பற்றி அவரது சாவும் உயிர்ப்பும் உலகிற்கு வெளிப்படுத்திய அன்பின் மறைபொருளுக்கு சான்று பகர வேண்டும்.

**பண்பாட்டு வளர்ச்சியில் கிறிஸ்தவனின் பங்கு**

பண்பாடு பற்றி பல்வித கருத்துக்கள் உள. மக்களினத்தின் தனித்துவத்தை அவர்களின் பண்பாட்டின் வழியாக விளங்கிக் கொள்ளலாம். மக்களது வாழ்வின் இதயத் துடிப்பு, பண்பாடு வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. பண்பாடு என்பதன் பொதுவான கருத்து நன்கு ஒழுங்கமைப்பதாகும். மனித நாகரீகம் வளர்ச்சியடைந்த நாளிலிருந்து ஒன்று சேர்ந்த பல அனுபவங்கள் பண்பாடு என கொள்ளப்படுகிறது. விஞ்ஞானம், தொழில் நுட்பம் வளர்ச்சியின் முன்னேற்றத்தினால் பண்பாட்டின் வளர்ச்சியில் மனிதனுக்குரிய நற்பண்புகளும் பெறுமதியும் மேன்மையான நிலையை அடைகிறது. அதனால் பழக்க வழக்கங்களும் சமூகமும் நன்நிலையையடைகிறது.

இருப்பினும் உண்மையை வெளிப்படுத்துவதற்கு விஞ்ஞான முறைகளை மட்டும் பயன்படுத்துவது அபாயமானதாகும். காரணம் விஞ்ஞானத்தினால், ஐம்புலன்களால் உணரக்கூடியவைகளை அறியலாம். காரணம் ஆன்மீகம் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. அதனால் கட்புலனுக்கு அல்லது லௌகீகத்திற்கு ஈர்க்கப்படும் நிலை ஏற்படலாம்.

**நற்செய்தியும் பண்பாடும்.**

ஆண்டவர் தம்மை மக்களுக்கு வெளிப்படுத்தி இறுதியில் தம் மகன் கிறிஸ்துவின் மூலம் தம்மை வெளிப்படுத்தும்போது அவர் அந்தந்த காலத்தில் நடைமுறையிலிருந்த பண்பாட்டின்படியே பேசினார். இன்று

திருச்சபை நற்செய்தியை போதிக்கவும் அதனை விளக்கவும் திருவழிபாடு, கிறிஸ்தவ வாழ்வு மூலம் அதனை வெளிப்படுத்தவும் பல்வித பண்பாட்டு வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. நற்செய்தி எந்த ஒரு நாட்டிலும் மக்கள் வாழ்விலும் வேரூன்ற முடியுமாயிருப்பது, அது அந்த நாட்டின் பண்பாட்டுடன் இணையும் போதாகும். உலகம் முழுவதிலுமுள்ள அனைத்து மக்களுக்கும் நற்செய்தி அறிவிக்க வேண்டிய நியதி இருப்பதால் திருச்சபை ஒரு நாட்டிற்கோ அல்லது ஒரு மக்கள் பிரிவிற்கோ மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பல்வித பண்பாடுகளில் செயற்படுவதால் அது வளம் பெறுகிறது, உயர்வடைகிறது. பாவத்தினால் வீழ்ந்த மனித வாழ்வும் பலவீனமடைந்த பண்பாடும் நற்செய்தியினால் புதிய தன்மையைப் பெறுகிறது. பாவத்தினால் உண்டான பாவதோஷம் குறைகிறது. இவ்வாறு திருச்சபை தன் மறைத்தூது ஆர்வத்தின்போது மனித நடத்தையைக் கட்டியெழுப்பவும் மனிதனின் உள்ளார்ந்த சுதந்திரத்திற்கு வழிகாட்டுவதற்கும் பயிற்றுவிக்கிறது.

**மனித பண்பாட்டு பணிகளுள் வெவ்வேறு அம்சங்களை முறையாக ஒழுங்கிணைத்தல்**

பண்பாட்டில் மனிதனின் முழு நிறைவையும் சமூகத்தின் நன்மையையும் காணக் கூடியதாயிருக்க வேண்டும். அதற்காக விழிப்புணர்வு கொள்ளல், உள்ளூர அறிதல், ஆழ்ந்து தியானித்தல், சொந்தமாக மதிப்பீடு செய்தல், சமய உணர்வு, அறநெறி உணர்வு, சமூக உணர்வு ஆகியவற்றை அறிந்து அவற்றை வளர்க்க வேண்டும். இதற்காக நம்பிக்கை, பகுத்தறிவு என்ற இரு வேறுபட்ட அறிவுப் பாதைகள் உள்ளன என்பதை மறக்கக் கூடாது.

உண்மையை நாடித் தேடவும், தம் எண்ணத்தை வெளிப்படுத்தவும், அதனைப் பரப்பவும், எந்தக் கலையையும் வளர்க்கவும் உரிமை கொண்டுள்ளனர். ஆகவே அவற்றுக்கு தடை விதிக்கலாகாது. சுதந்திரம் இருக்க வேண்டும். பண்பாடு முறைகளைத் தீர்மானிப்பது அரச பொது அதிகாரிகளுக்குரியதல்ல. நாட்டில் அனைத்து மக்களினதும் பண்பாட்டு வாழ்க்கையை வளர்க்க ஏதுவான சூழ்நிலைகளையும் உதவிகளையும் அரச அதிகாரிகள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். பண்பாடு எவ்விதத்திலும் அரசியல், பொருளாதார ஆதிக்கத்திற்கு அடிமைப்படாதிருக்க வேண்டும்.

**சமூக, பொருளாதார வாழ்வும் வளர்ச்சியும்**

பொருளாதார உற்பத்தித் துறையில் எல்லா வல்லமை, வலிமையையும் விட மனித உழைப்பு பெறுமதியானது. நாசரேத்தில் தனது கைகளினால் வேலை செய்து மனித உழைப்பின் மாண்பை வெளிப்படுத்திய யேசுவின் மீட்புப் பணியில் மனிதனும் இணைந்து கொள்வது தனது உழைப்பை தியாகம் செய்வதாலாகும்.

மனிதனுக்கு தனது வாழ்க்கைத் திறனுக்கேற்ற தொழிலைப் பெற்றுத் தருவது அவசியமாகிறது. அவன் தனது குடும்பத்திற்கு, பௌதீக, சமூக, பண்பாட்டிற்கு, ஆன்மீக ரீதியில் மனித மாண்புடன் வாழ்வதற்கு நீதியான வேதனம் அளிக்கப்பட வேண்டும். தொழிலாளருக்கு தீங்கு ஏற்படும் விதத்தில் தொழிலை ஒழுங்கமைப்பது தவறாகும். முழுமையான பொருளாதார விதிகள் மனிதனின் தனிப்பட்ட தேவைகளுக்கும் அவனது வீட்டு வாழ்வுக்கும் தீங்கு ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு அவர்களது குடும்ப, சமூக, பண்பாடு, அருள்நெறி காரியங்களை ஆற்றுவதற்கு ஓய்வும் விடுமுறையும் அளிக்க வேண்டும். அவ்வாறே தொழிலாளரும் தமது உழைப்பையும் நேரத்தையும் தமது மனச்சான்றிற்கேற்ப பயனுள்ள விதத்தில் பணியாற்ற வேண்டும்.

**தொழிலாளர் மோதல்கள்**

எந்த தொழிலிலுமே அதன் வெற்றி தங்கியிருப்பது தொழிலாளரின் உழைப்பினாலேயேயாகும். அதனால் தொழிலாளர்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ அவற்றில் பங்குண்டு. அவ்வாறே தொழிலாளர் களுக்குத் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். சமூக பொருளாதார மோதல்கள் ஏற்படுமிடத்து உரையாடல் வழியாக அமைதியான முடிவுக்கு வருவது அடிப்படை கொள்கையாக இருக்க வேண்டும். வேலை நிறுத்தம் என்பது அமைதியான முறையில் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாத வேளையில் எடுக்கும் கடைசி வழிவகையாகும். ஆயினும் அது பிரச்சனையைத் தீர்க்கும் ஆரம்ப முறையாக அமையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**பொருள் உற்பத்தியின் பொதுவான நோக்கம்.**

இறைத் திட்டத்தின்படி இவ்வுலகிலுள்ள அனைத்தும், எல்லா மனிதரதும் தேவைக்காகவே உள்ளன. தமக்குரியதை பயன்படுத்தும்போது கூட ''தமது'' என்றல்லாது அவை ''பொதுவானவை'' என்ற உணர்வு எம்மில் இருக்கவேண்டும். அவ்வாறாயின் அவற்றைப் பிறரின் நன்மைக்காக பயன்படுத்துவது இலகுவானதாகும். அனைவருக்கும் தமது வாழ்வுக்குத் தேவையானவை கிடைக்காவிடின் அத்தகைய சமூக நிலையை மாற்றியமைக்க வேண்டும். ''பசியால் மடியும் மனிதனுக்கு உணவளி. ஏனெனில் அவர்களுக்கு உணவளிக்காவிடின் நீ அவர்களைக் கொன்றவனாவாய்'' என்ற கூற்றை நாம் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

**பொருள் முதலீடு செய்தலும் நிதித்துறையும்.**

இக்கால, வருங்கால மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை போதிய வருவாயை அளிக்கும் முறையில் வளங்கள் முதலீடு செய்யப்பட வேண்டும். இம் முதலீடுகளையும் பொருளாதாரத் திட்டங்களையும் பற்றி முடிவெடுக்கும் அதிகாரிகள் மேற் கூறிய குறிப்புக்களைக் கருத்திற் கொள்ள வேண்டும். அதாவது சமூகம் முழுவதும் நலமானதொரு வாழ்வு நடத்தத் தேவையானவற்றை செய்து கொடுத்தலாகும். பண மதிப்பில் ஏற்படும் மாற்றங்களால் பொருளாதாரத்தில் பின்தங்கியோர் அநீதியாக இழப்புக்கு உள்ளாகாதிருக்குமாறு கவனம் எடுக்க வேண்டும்.

**சொத்துரிமை பெறல், பொருள்கள் மீது தனி ஆதிக்கம்**

தமது தனித்துவத்தையும் திறமையையும் வெளிப்படுத்தவும் சமூகத்தில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றவும் முடியுமாயிருப்பது, சொத்தும் உடைமைகளும் இருந்தால் மட்டுமே ஆகும். தமது வாழ்வுக்குத் தேவையான குறைந்தளவு சொத்துக்களையாவது பெற்றிருப்பது மனிதனின் அடிப்படை

உரிமையாகும். சட்டப்படி, அதிகாரியினால் நியாயமான இழப்பீடு வழங்கி பொதுநலனுக்காக சொத்துக்களை கையளிக்கும்போது பல்விதங்களிலிருக்கும், பொது உரிமைகளுக்கு தனிச் சொத்துரிமை தடையாக இருக்கக் கூடாது. பொது நன்மைக்கு எதிராக தனிப்பட்டவற்றில் முறையற்றதான பயனைப் பெறுவதை தடை செய்வதற்கு அரசுக்கு உரிமையுண்டு. பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பல பகுதிகளில் பெரும் பரப்பளவுள்ள நிலங்கள் ஆதாயத்திற்காக தரிசு நிலமாக உள. சிலவேளை அந்த இடங்களில் பெரும்பாலான மக்கள் நிலமே இல்லாது அல்லது குறைந்தளவு நிலத்தைக் கொண்டுள்ளனர்.

நிலம் இருப்போர் தமது பணியாள், விவசாயி, வரிதண்டுவோரில் மனித உணர்வுடன் செயற்பட வேண்டும். அவர்களின் எதிர்காலம், வீடு, நலன்கள் பற்றி அக்கறை கொள்ள வேண்டும். வேதனம், இலாபம் பெருகும் முறையையும் வேலை செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையையும், வலிமைப்படுத்துவதையும், தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பையும் ஏற்படுத்துவது அவசியமாகும்.

**சமூக பொருளாதார செயற்பாடும் கிறிஸ்துவின் ஆட்சியும்**

சமூக பொருளாதார முன்னேற்றத்தில் செயல் முறையில் பங்கு கொண்டு நீதி, அன்பு ஆகியவற்றை வளர்ப்பதற்காகப் போராடும் கிறிஸ்தவர்கள் மனித குலத்தின் வளமைக்கும் உலக அமைதிக்கும் பெரிதும் உதவியளிக்க முடியும். கிறிஸ்தவ பெறுமதிக்கேற்ப தேவையான திறமை, அனுபவம் பெற்று இவ்வுலகு சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவர்கள் தேசிய ஒழுங்கு முறையைக் கடைபிடிக்க வேண்டும். கிறிஸ்து முன்வைத்த எட்டு பேறுகளும் அவர்களது வாழ்க்கைக் கண்ணோட்டமாக இருக்க வேண்டும்.

**கிறிஸ்தவன் என்ற ரீதியில் மக்களின் பொறுப்பு**

இன்றைய காலத்திலே சமூகத்தில் ஏற்படும் ஆழ்ந்த மாற்றங்கள் அரசியல் வாழ்வில் மாபெரும் தாக்கத்தைக் கொணர்ந்துள்ளன. உலகிலே மனித மாண்பு பற்றி உள்ள விழிப்புணர்வினால் மக்கள் - குழுவாகக் கூடி வரல், கருத்து வெளியிடல் போன்ற உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். அதனால் சமூக, மத சுதந்திரத்திற்கு தடைபோடும் அரசியல் கட்சிகள் புறக்கணிக்கப்படுகின்றன. நீதி, அன்பு, பொதுநல ஈடுபாடு ஆகியன அரசியலின் நோக்காக இருக்க வேண்டும்.

பல்வித சிந்தனைகளைக் கொண்டுள்ள அரசியல் துறையிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரி தேவைப்படுகிறார். அவர் நன்நடத்தை கொள்கைகளுடன் பொது நன்மை, மற்றும் சட்டப்படியான அதிகாரத்தின் கீழ் செயற்பட வேண்டும்.

**மக்கள் வாழ்வில் பங்குகொள்ளல்**

தகுதி வாய்ந்த அனைத்து மக்களும் செயற்பாட்டுடன் அரசியல் துறையிலே பங்குகொள்ளுதல் மனித இயல்புக்கு ஏற்றதாகும். அவ்வாறு பங்குகொள்வதானது சமூக சட்டத்தின் அடிப்படையில் கட்டப்படவும் பல்வித நிறுவனங்களில் அதன் வரையறை, நோக்கம் பற்றி தீர்மானிக்கவும் ஆட்சியாளரை நியமிப்பதற்காகவுமாகும். வாக்குரிமையைப் பாவிப்பது அனைவரினதும் உரிமையும் கடமையுமாகும். பொது நலனுக்கு தேவையான பௌதீக பொருட்களை வழங்குவதும் தனிப்பட்ட ரீதியில் பணியாற்றுவதும் நாட்டு மக்களின் கடமையாகும்.

பொதுநலன் கருதி சிலவேளைகளில் மனித உரிமைகளைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்தினால் நிலைமை மாறியதும் உடனே அதனை சுமூக நிலைக்குக் கொண்டுவர வேண்டும். மனித உரிமைகளைப் பறிக்கும் ஒற்றையாட்சியாயின் மானிட தன்மையற்ற நிலையை அது காட்டுவதாகும்.

குடிமக்கள் பரந்த உள்ளத்தோடு குறுகிய மனப்பான்மையற்று நாட்டு பற்றுடன் வாழ வேண்டும். கிறிஸ்தவர்கள் தமது பொறுப்பினை உணர்ந்து பொது நன்மைக்கு பணிபுரிந்து முன்மாதிரிகையாயிருக்க வேண்டும். ஆட்சியாளர் தமது தனிப்பட்ட தேவைகளுக்கு முதலிடம் அளிக்கக் கூடாது. ஆட்சித்துறை, அநீதி, தவறான முறையில் செயற்படும்போது அரசுக்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் நேர்மை, அறிவுடன் செயற்பட வேண்டும்.

**அரசியலும் பரிசுத்த திருச்சபையும்**

நாட்டு மக்கள் என்ற ரீதியில் கிறிஸ்தவனின் செயற்பாட்டிற்கும் திருச்சபை பெயரால் கிறிஸ்தவன் புரியும் செயற்பாட்டிற்கும் இடையில் வேறுபாடு உண்டு. திருச்சபை எந்த ஒரு அரசியல் கொள்கை அமைப்புக்கும் கட்டுப்பட்டதல்ல. சீசருக்குரியதை சீசருக்கும் இறைவனுக்குரியதை இறைவனுக்கும் அளிப்பது திருச்சபையின் நிலைப்பாடாகும். அவ்வாறே நாட்டு அரசியல் சமூகமும் திருச்சபையும் தத்தம் துறையில் சுதந்திரமும் தன்னாட்சி உரிமையும் கொண்டனவாகும். திருச்சபையானது ஒவ்வொரு நாட்டின் எல்லைகளுக்குள்ளும் நாடுகளுக்கு இடையேயும் நீதியும் அன்பும் விரிவாகப் பரந்து ஓங்கிட துணைபுரிகிறது.

எந்த ஒரு இடத்திலும், சந்தர்ப்பத்திலும் உண்மை சுதந்திரத்துடன் விசுவாசத்தை வெளிப்படுத்தவும் கற்பிக்கவும் மறைபணியைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்லவும் திருச்சபைக்கு சுதந்திரம் இருக்க வேண்டும். மனித விடுதலைக்காக அரசியல் பணிகளின்போதும்கூட கருத்து வெளியிடுவது திருச்சபையின் கடமையாகும். அவ்வாறு செய்வது. நற்செய்தியுடன் ஒன்றுபட்டு மறைபணியாற்றவும் அமைதியை ஏற்படுத்துவதற்குமாகும்.

**அமைதியைப் பேணுவதற்காக சர்வதேச தொடர்புகளை வளர்த்தல்**

''அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்.'' இது கிறிஸ்துவின் போதனையாகும். அமைதி உண்டாவது அவருக்கு உகந்தவர்களுக்கென்பது இயேசுவின் பிறப்பு செய்தியில் வெளிப்படுத்தப்படுகிறது.

அமைதி என்பது போர் நிகழாதிருக்கும் நிலைமை மட்டுமல்ல. அதிகாரத்தை சமநிலைக்கு கொண்டு வருவதுமல்ல. அடக்கியாளுகின்ற ஆட்சிமுறையிலிருந்து பிறப்பதுமல்ல. மாறாக அமைதி என்பது ''நீதியினால் விளைவது'' இறை சித்தத்தின்படி வாழ்வதன் பலனாகும். அமைதியை என்றும் நிலைத்திருக்குமாறு ஒரே முறையில் கட்டியெழுப்ப முடியாது. அதற்காக எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும். அமைதியைக் கட்டியெழுப்புவதற்கு, பிறரை மதிக்கவும் அவர்களுடன் சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கும் செயல்முறையிலான குறிக்கோள் தேவை. அமைதியைப் பெற அன்பின் வழியில் செல்லவேண்டும். பிளவு சுவரை உடைத்து இயேசு சிலுவையின் வழியில் அனைவரையும் தந்தையுடன் ஒப்புரவாக்கினார். அவர் மனிதருக்கும் ''எனது அமைதியை உங்களுக்கு அளிக்கிறேன்'' என்று கூறினார். அந்த அமைதியைக் கிறிஸ்தவர் உலகிற்கெல்லாம் அளிக்க வேண்டும். எசாயா இறைவாக்கினர் கூறியதுபோல வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களினால் காலா காலமாக மக்களினத்திற்கு எதிராக செயற்படாது அமைதியான சமூகத்தை நோக்கி மக்களைக் கொண்டு செல்வது கிறிஸ்தவர்களின் கடமையாகும்.

**போர் நிகழாது தடுத்தல்**

ஆய்வறிவு சார்ந்த வகை வகையான ஆயுதங்களின் உற்பத்தி முழு மனித இனத்திற்குமே ஒரு அச்சுறுத்தலாகும். பயங்கரவாதம் மேலும் சவாலாக உள்ளது. மனிதர் தம் மனச்சான்றுக்கு எதிராக மேற்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் பெரும் குற்றமாகும்.

யுத்தத்தை தடுப்பதற்கு போதிய அதிகாரத்தையுடைய உலகளாவிய ஆட்சி அமைப்பு இல்லாததால் அரசுக்கு தன் பாதுகாப்புக்காக தீர்மானம் எடுக்கும் உரிமை உண்டு. ஆயினும் ஆயுதங்கள் இருப்பதால் அவற்றைப் பாவிப்பது நியாயமானது அல்ல. உலகிலே வல்லரசு நாடுகளிலுள்ள ஆயுதங்களை யுத்தத்திற்காகப் பயன்படுத்தினால் புவியில் எந்த மனித உயிருமே வாழ முடியாது. ஆயுதங்களைக் குவித்து அவற்றைக் காட்சிப்படுத்துதல் எதிரியைப் பயமுறுத்தும் ஒரு தந்திரமாகும். உண்மையான நிராயுதபாணி நிலை என்பது இரு தரத்தாரிடையேயும் ஏற்பட வேண்டும். அது ஒன்றிப்பின் பிரதிபலனால் அமையவேண்டும். அதற்காக தீவிரவாதி, இன பாகுபாடு, தான் என்ற எண்ணம், காமம் ஆகியவற்றை நீக்கவேண்டும். பகைமை, இகழ்ச்சி, நம்பிக்கையின்மை ஆகிய உணர்ச்சிகள் மற்றும் இன வெறுப்பு, விடாப்பிடியான கருத்தியல் கோட்பாடுகள் ஆகியவற்றைக் கைவிடாவிடின் உலக அமைதிக்கான முயற்சியினால் யாதொரு பயனும் காணப்போவதில்லை.

**அனைத்து நாட்டு சமூகத்தை உருவாக்குதல்**

தொடர்பு ஊடகங்களின் முன்னேற்றமானது பல்வித உடன்படிக்கை, நெருங்கிய ஒற்றுமை போன்ற காரணங்களால் உலகின் அனைத்து மக்களையும் மிக நெருக்கமாக பிணைக்கிறது. அதனால் முழு உலகமும் ஒரு கிராமமாக தோற்றமெடுத்துள்ளது. இதற்காக ஐக்கிய நாடுகள் சபையும் பல உலக அமைப்புக்களும் பெரும் பணியாற்றுகின்றன. இப் பணி வெற்றிபெற வேண்டுமாயின் பொருளாதார

வெறுமையை அகற்ற வேண்டும். கல்வி, தொழிற்பயிற்சி வழியாக குடிமக்கள் அனைவரினதும் உழைப்பை நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும்.

வளர்ந்து வரும் நாடுகளுக்கு இத்தகைய உதவிகள் அளிக்க முன்வரும் அபிவிருத்தியடைந்த நாடுகள் தாராள மனதுடனும் ஆதாய ஆர்வமின்றியும் அவ்வாறு செய்ய வேண்டும்.

**அதற்கான அடிப்படை வழிமுறைகள் கீழே தரப்படுகிறது.**

1. வளர்ந்து வரும் நாடுகள் தங்கள் குடி மக்களின் முழு மனித வளர்ச்சியே முன்னேற்றத்தின் குறிக்கோள் என்பதை கருத்திற் கொண்டு அதற்காக உழைக்க வேண்டும்.
2. வளர்ந்து வரும் நாடுகளுக்கு உதவுவது வளர்ச்சியடைந்த நாடுகளின் மிக முக்கிய கடமையாகும்.
3. அனைத்து நாட்டு சமூகத்திலும் பொருளாதார முன்னேற்றத்தை ஒருங்கிணைத்து அதற்கு ஊக்கமளித்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.
4. பல இடங்களிலுள்ள சமூக, பொருளாதார, திட்டங்களை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

**மக்கள் தொகை பெருக்கம்**

விரைவாகப் பெருகிவரும் மக்கள் தொகை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனைத்து நாட்டு ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. மணம் முடிக்கவும், பிள்ளைகளை பெற்றுக்கொள்ளவும் உள்ள மனித உரிமைக்கேற்ப குடும்பத்தின் அளவைக் கட்டுப்படுத்துவது பெற்றோரின் பொறுப்பாகும். அது பொது ஆட்சியாளர் தீர்மானிப்பதல்ல. பெற்றோர் இது குறித்து தம் மனசாட்சியின்படி செயலாற்ற வேண்டும்.

**அனைத்து நாட்டு உதவி**

உலகில் எல்லாவற்றையும் பிணைக்கும் சகோதரத்துவத்துடன் கூடிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு கிறிஸ்தவர்கள் முழுமையான ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழும் ஒரு சில நாடுகள் பெருமளவான செல்வ செழிப்பில் திளைக்கும் அதே வேளை வேறு சில நாடுகள் பசி, பிணியால் துயருறுகின்றனர். இந்த அவலநிலை மாற வேண்டும். திருச்சபையில் தொன்று தொட்டு இருந்த வழக்கத்தின்படி கிறிஸ்தவர்கள் தமது தேவைக்கு அதிகமாக இருப்பதிலிருந்து மட்டுமல்லாமல் தமக்கு தேவையானவற்றிலிருந்தும் உதவி செய்ய கடமைப்பட்டுள்ளார்கள்.

**அனைத்து நாட்டு நிறுவனங்களில் கிறிஸ்தவர்கள்**

கிறிஸ்தவர் செய்யக்கூடிய மிகவும் சிறப்பான அனைத்து நாட்டுப் பணி யாதெனில், அனைத்து நாட்டு நிறுவனங்களின் பணி வெற்றியாக செய்வதற்கு உதவுதலாகும். அமைதியான உலகை உருவாக்குவதில் முழுமையான ஒத்துழைப்பை அளிக்க வேண்டும். இது பயனளிக்க வேண்டுமெனில் கத்தோலிக்கர் பிரிந்து சென்ற கிறிஸ்தவ சபையினருடன் சேர்ந்து செயல் முறைகளில், ஆக்கபூர்வமான விதத்தில் செயல்படுவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

# ஏழாம் பாடம்

## 7. சமூகத் தொடர்புச்சாதனங்களும் மறைக்கல்வி போதனா முறைகளும்

### 7.1 தொடர்புசாதனங்கள்

தொடர்புச்சாதனம் என்பது அனைத்து மக்களையும் சார்ந்த - பெரிய, சிறிய, இளைஞர், முதியோர் ஆகிய அனைவருக்கும் பொதுவான செய்தி அறிவித்தலை வழங்கும் பல்வித செய்தி வழிமுறைகளாகும். நவீன உலகில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் தொடர்புச்சாதனங்கள் மனித வாழ்வில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறன. சில தொடர்புச்சாதனங்கள் இல்லாது மனிதனுக்கு இன்று முழுமையான மனிதனாக வாழமுடியாத நிலை உருவாகியுள்ளது. வானொலி தொலைக்காட்சி, கணணி, கையடக்க தொலைபேசி, செய்தித்தாள்கள், சஞ்சிகை, நூல்கள், திரைப்படம் நாடகம், சித்திரக் கதைகள் ஆகியன தொடர்புச்சாதனங்களில் முக்கியமானவையாக உள்ளன. இவற்றை மறைக்கல்வியின்போது பயன்படுத்த வேண்டியது இன்றைய மறைக்கல்வின் ஓர் அங்கமாக உள்ளது.

### 7.2 வானொலி

இது முக்கிய தொடர்புசாதனமாகும். சமயக் கருத்துக்களை இதன் மூலம் எளிதாக பரவச் செய்யலாம். மேலும் நாளுக்குரிய சிந்தனை, அன்றாட மறை நிகழ்ச்சிகள், விசேட சமய கொண்டாட்ட நாட்கள், அக்கொண்டாட்டத்தையொட்டிய பாடல்கள், கதைகள், நாடகங்கள் ஆகியவற்றை பிரசாரம் செய்வதன் மூலம் வானொலி, மறைகல்விக்குத் துணைபுரிகிறது. மேலும் நல்ல பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் வழியாக மனித நற்பண்புகளையும் மனித உறவுகளையும் வளர்ப்பதன் மூலம் வானொலி மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு மேலும் துணைபுரிகிறது.

### 7.3 தொலைக்காட்சி

இதுவும் முக்கியமான தொடர்புச்சாதனமாகும். கேட்பதை விடக் காண்பது மனித வாழ்விலே அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதனால் மனித சமூகத்தின் எழுச்சிக்கு உதவும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதன் மூலம் மறைக்கல்விக்கு அரும்பணி ஆற்றலாம். பல்வித வாழ்க்கை சம்பவங்கள், நிகழ்வுகளைக் கொண்டு படைக்கப்படும் தொலைக்காட்சிப் படங்கள் மனித நற்பண்புகளை வெளிக் கொண்டுவருவதற்கு பயன்படுவதாய் அமைய வேண்டும்.

### 7.4 பத்திரிகை, சித்திர கதைகள் தொடர்புசாதனங்கள்

பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியன சமுதாயத்திற்குப் பல்வித செய்திகளையும், கருத்துக்களையும் முன்வைக்கும் முக்கிய தொடர்புசாதனங்களாகும். இவை மறை செய்தியை பிரசாரப்படுத்துவதற்கு துணைபுரிந்தாலும் இந்த சமய நூல்கள், வெளியீடுகள் குறிப்பிட்ட சிலரை மட்டுமே சென்றடைகின்றன. பொதுவாக பத்திரிகைகள், சஞ்சிகைகள் நேரடியாக சமயக் கருத்துக்களை வெளிப்படுத்தாத போதிலும் மனித பண்புகள், சமூக வளர்ச்சிக்கு துணை நிற்கும் ஆக்கங்களை வெளியிடுவதன் மூலம் மறைகல்விக்கு அவை பெரும் பங்காற்றுகின்றன. இன்று அனைத்து வயதினரிடையேயும் பிரசித்தம்வாய்ந்த சித்திரக் கதைகளும் இவ்வாறே அமைந்துள்ளன. அவை சமய உருவுடன் கூடிய சித்திரக் கதைகளாக இல்லாவிடினும்

நற்பண்புகளை ஏற்படுத்துவதற்கும் மாணவரின் மறை, சமூக, ஆன்மீக, உள வளர்ச்சிக்கும் உதவுகின்றன. ஆகவே சித்திரக் கதைகளை மென் மேலும் அதிகரிப்பதன் மூலம் இந்த தொடர்புச்சாதனத்தை பயன் மிக்க கல்வி மார்க்கமாகக் கொள்ள முடியும்.

### 7.5 மறைப்பாடமொன்றை ஆயத்தம் செய்தல்

மறை பாடங்களை நன்கு ஆயத்தம் செய்ய வேண்டியது மறையாசிரியர்களின் கடமையாகும். பாட ஆயத்தம் செய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள. முக்கியமாக பாடம் கற்பிக்கும் முன் மனதை ஒருநிலைப்படுத்தி பாடத்திற்கு ஆயத்தமாவது அவசியமாகும். ஆயத்தம் செய்யப்படாத பாடத்தில் பல வேளைகளிலே நோக்கம் (குறிக்கோள்) இருக்காது. எதனை கற்பிப்பது என ஆசிரியரே அறிந்திருக்கமாட்டார். மாணவருக்கு அதனால் பயன் ஏற்படாது. பாடத்தின் கருத்தை மாணவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். பாடம் போரடிக்கும். நேரம் வீணாகும்.

**பாடத்தை ஆயத்தம் செய்யும்போது கருத்திற் கொள்ள வேண்டியவை**

- தான் கற்பிக்கப்போகும் பாடம் பற்றிய பாட விடயத்தை வாசித்தறிந்து அது பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.
- தனக்கு விளங்காதவை, அல்லது சிக்கலானவை பற்றி வேறு புத்தகங்களில் வாசித்து அல்லது அது பற்றித் தெரிந்த, கற்றவர்களிடம் கேட்டறிந்து தெளிவான விளக்கம் பெற்றுக்கொள்ளுதல்
- மேலதிக புத்தகங்களை வாசித்து பாட விடயம் பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளுதல்.
- ஆசிரியர் கைநூலை வாசித்து பாட விடயம் முன்வைக்கப்பட்டுள்ள விதம், பாடத்தை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டிய விதம் பற்றிய தெளிவான அறிவை பெற்றுக் கொள்ளல்.
- பாடத்திற்குத் தேவையான துணைக் கருவிகளை, கட்புல, செவிபுல உபகரணங்களைத் தெரிவு செய்து அவற்றை உரிய நேரத்தில் ஒழுங்குப்படுத்திக் கொள்ளுதல்.
- பாடக் குறிப்பைத் தெளிவாக எழுதி கரும்பலகையில் எழுத வேண்டியதை சிவப்பு நிறத்தால் அடையாளமிட்டு பாடத்தைத் தயார்படுத்திக் கொள்ளுதல்.
- தெளிவான நோக்கத்துடனும், நம்பிக்கையுடனும் பாடத்தைக் கற்பிப்பதில் ஆர்வம் காட்டுதல்.
- தனது பணியை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு இறையருளும் தூய ஆவியின் ஒளியும் வேண்டி செபித்தல்.

**பாடக்குறிப்பை ஆயத்தம் செய்யும்போது கருதிற் கொள்ள வேண்டிய விடயங்கள்.**

- ஆய்வுப் பொருள்
- பாடத் தலைப்பு
- நேரம்
- நோக்கம் - (பொதுவான குறிக்கோள்)

**சிறப்பான நோக்கம்**
- அறிவு
- திறன்
- மனப்பாங்கு
- ஆய்வுப் பொருள்
- துணைக் கருவி (கட்புல, செவிப்புல உபகரணங்கள்)
- ஆசிரியர் - மாணவர் செயற்பாடு (பாட விருத்தி)
- செயற்றிட்டம் (பாடத்தை மேலும் உறுதி செய்து கொள்வதற்கு மாணவரால் செய்ய வேண்டியவை)
- மதிப்பீடு

### 7.6 ஆசிரியரின் ஆளுமை

**அறிமுகம்:**

ஆசிரியரின் ஆளுமை என்பது மாணவர் முன்னிலையில் அவர் நடந்து கொள்ளும் விதமும். அவரது வாழ்விலே குறித்து காட்டப்படும் அவரது பண்புகளுமாகும். இது சில வேளைகளில் அவரது ஆளுமையுடன் தொடர்புடையதாகிறது. ஆசிரியரின் தனி இயல்பினால் அவர் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இவர் இத்தகையவர் என கூற கூடியதாக உள்ளது.

**ஆசிரிய ஆளுமையின் முக்கிய பண்புகள்**

- தமது வாழ்க்கை மாதிரிகையில் புலப்படும் பண்புகளை தமது செயற்பாட்டில் வெளிப்படுத்துதல்.
- கற்பித்தலின்போது தமக்கே உரித்தான பேச்சு, சைகை, செயற்பாடு மூலம் அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுதல்
- தமது படைப்பாற்றலை பாடத்தில் பயன்படுத்தி சிறப்பாக பாடத்தை முன்வைத்து தமது தனிப்பட்ட திறமையை வெளிக்கொணரல்.
- ஆசிரியரின் தனிப்பட்ட வாழ்வும், செயற்பாடும் மூலம் மாணவர் தம் வாழ்விலே கற்று கொள்ளவேண்டிய வாழ்க்கைப் பாடத்தை முன்வைத்தல்.
- தனது உள்ளார்ந்த பண்புகளான ஆன்ம வலிமை, இறை விசுவாசம், மனத்தைரியம், அன்பு, இரக்கம், ஆன்ம வாஞ்சை ஆகிய பண்புகளை தமது தனிப்பட்ட செயற்பாடுகளிலே வெளிக்காட்டல்
- கற்பித்தலை ஒழுங்கு செய்வதிலும், வகுப்பைக் கட்டுப்படுத்துவதிலும் ஆசிரியர் காட்டும் திறமை.
- ஆசிரியர் எத்தகையவர், அவர் கற்பிப்பதை விசுவசிக்கிறாரா, அதன்படி வாழ்கிறாரா என்பவற்றுக்கான பதிலை தமது வாழ்க்கை மாதிரிகையின் மூலம் மாணவர் அறிந்து கொள்ள வழிசமைத்தல்.

## 7.7 வகுப்புக் கட்டுப்பாடும் ஒழுங்கும்

**அறிமுகம்:-**

வகுப்புக் கட்டுப்பாடு என்பது மாணவர் வகுப்பறையிலே கற்கும்போது அங்கு நிலவும் நற்சூழல், கற்கும் காலம், மாணவரின் கவனம் எவ்வித இடையூறுமின்றி பாடத்தில் இருக்கச் செய்தல் ஆகியனவாகும். நல்ல வகுப்புக் கட்டுப்பாடும் ஒழுங்கும் நிலவச் செய்வதற்கு ஏதுவான காரணிகள் சில உள்ளன. திறமை மற்றும் அறிவுள்ள ஆசிரியருக்கும் கூட கல்விக் கொள்கை, உளவியல், ஆசிரியர் பயிற்சி இல்லாது வகுப்பிலே ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவச் செய்வது இயலாத காரியமாகும்.

வகுப்புக் கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவற்றை ஆசிரியர் - பயிற்சி, அனுபவங்கள் வாயிலாகப் பெற வேண்டியிருப்பதால் சில கல்விக் கொள்கைகளை இங்கே முன்வைக்கிறோம்.

- எல்லா ஆசிரியர்களும், வகுப்புக் கட்டுப்பாடு, ஒழுங்கு பற்றிய அறிவை ஆசிரியர் பயிற்சியின் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லாவிடின் அவர் தொழிற் பயிற்சி அற்றவராகிறார். இதனால் அவர் தோல்வியை எதிர் கொள்ளும் ஆசிரியராக இருப்பார்.
- கற்பிக்கும் பணிக்கு துணைபுரியும் நல்ல சூழலை வகுப்பில் ஏற்படுத்துவதே ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றின் நோக்கமாகும்.
- வகுப்பறையில் கற்கும் சூழல் ஏற்பட்டிருந்தால் மட்டுமே ஆசிரியருக்கும் மாணவருக்கும் கற்பிக்கும்/கற்கும் பணியில் முழுமையான கவனத்தை செலுத்த முடியும்.
- மாணவனோ, மாணவர் குழுவோ சத்தமிட்டு கற்றல்/ கற்பித்தலுக்குத் தடையை ஏற்படுத்தினால் வகுப்பு கட்டுப்பாடு, ஒழுங்கிற்கு தடை ஏற்படும்.
- வகுப்பு கட்டுப்பாடு, ஒழுங்கு ஏற்படுத்துவதற்காக மாணவருக்கு கடுமையான சட்டங்களை அமைத்தல், சரீர தண்டனை அளித்தல், கடுமையாக ஏசுதல் ஆகியன நல்ல செயற்பாடாக இன்று ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.
- நல்ல வகுப்புக் கட்டுப்பாட்டிற்குத் தேவைப்படுவது. ஆசிரியரால் மாணவர் புரிந்து கொள்ளப்பட்டு - அவர்களது உளவியல் நிலைக்கேற்ப தமது பாடத்தை இலகுவாக அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிய மொழியில் முன்வைத்தலாகும்.
- ஆசிரியர் தகுந்த ஆயத்தத்துடனும், தெளிவான நோக்கத்துடனும் பாட நேரத்தை முழுமையாக பகிர்ந்து, முழு நேரத்தையும் மாணவருக்கு கற்பிக்கும் பணிக்காக பயன்படுத்தல்.
- வகுப்பு கட்டுப்பாட்டிற்கு துணைபுரியும் மேலும் ஒரு விடயம் யாதெனில் கட்புல, செவிப்புல உபகரணங்களைப் பாவித்தலும், ஆசிரியர் - மாணவர் உறவாகும். அதனால் ஆசிரியர் - மாணவர் உறவு வளர்வதோடு மாணவரின் பங்குபற்றுதலும் அதிகமாகிறது
- ஆசிரியரின் ஆளுமை, வகுப்புக் கட்டுப்பாட்டிற்கும் ஒழுங்கிற்கும் வழிசமைக்கிறது. ஆசிரியரின் சிறப்பான தோற்றம், கட்டுப்படுத்தும் திறன், சைகை, பேசும் விதம், அறிவை வெளிப்படுத்தும் வலிமை ஆகியன ஆளுமை வகுப்புக் கட்டுப்பாட்டிற்கு பெரிதும் துணைபுரிகிறது.
- ஆசிரியரின் கட்டுப்படுத்தும் திறனும் மாணவர் அதற்கு கீழ்ப்படிதலும் ஒழுங்கிற்கு வழிவகுக்கிறது. ஆசிரியரின் தந்தை/ தாய்க்குரிய கட்டுபாட்டிற்கு தாம் கீழ்ப்படிய வேண்டும் என்பதை, ஆசிரியர் தம்

கட்டுப்படுத்தும் வலிமை, கற்பிக்கும் பணியில் மாணவரை ஈர்த்துக் கொள்ளும் திறமை ஆகியவற்றால் மாணவர் புரிந்து கொள்வர்.

## 7.8 ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களுக்கான விசேட முறைகள்

### ஆரம்ப வகுப்புக்கான விசேட முறைகள்

5-11 வயது வரை ஆரம்ப கல்வி காலமாகும். இந்த வயதினருக்கு கற்பிக்கும்போது முறைசார் இறை கல்வியை விட, இறைவனையும் அவரது அன்பையும், இயேசு - மரியன்னை வழியாக புரிந்து கொள்ளுதலை யும், இறை பிள்ளையாக வாழ வேண்டிய விதத்தையும் அன்றாட வாழ்க்கை மாதிரிகையால் காட்டி அதன்படி வாழுவதற்கு கற்பிப்பது வரவேற்கப்படுகிறது. ஆயினும் ஆரம்ப வதுப்புகளுக்கு எளிமையாக கற்பிக்கும் முறை பயன்படுத்தப்படுகிறது. அவற்றில் சில:-

**1. கதை கூறும் முறை**

பாட ஆரம்பத்தில் ஆசிரியர் பாடத்திற்கேற்றதும் மனதை மிகவும் தொடக் கூடியதுமான கதை ஒன்றை முன்வைப்பார். மாணவரின் முழுக் கவனமும் இதனால் பாடத்திற்கு ஈர்க்கப்படும். பின்னர் வினா - விடை, உரையாடல் வழியாக மேற் கூறப்பட்ட கதையின் விடயங்கள் வழியாக பாட விடயங்களை முன்வைப்பர். இயேசுவும் இவ்வாறே உவமைகளை முன்வைத்தார்.

**2. படங்கள் மூலம்**

ஒன்றோடொன்று தொடர்புடைய படங்கள் மூலம் முழுமையான பாடத்தை முன்வைக்கலாம். ஒவ்வொரு பாடத்தையும் முறைப்படி முன்வைத்து பின்னர் அவற்றில் உள்ள காட்சிகளைப் பற்றி மாணவருடன் உரையாடலைக் கட்டியெழுப்பி பாட விடையங்களை கற்பிக்கலாம். வர்ண படங்கள், பெரிய அளவிலான படங்கள் இதற்கு உகந்தது.

**3. உரையாடல் மூலம்**

ஏதேனும் ஓர் செயற்பாட்டை செய்வதற்கு (உ+ம் திருப்பலி) மாணவர்கள் தீர்மானிக்க இடமளித்து பின்னர் அவர்களிடம் அது பற்றி வினா எழுப்பி உரையாடல் மூலம் பாடத்தைக் கற்பிக்கலாம்.

**4. செயற்பாட்டு முறை**

செயற்பாட்டொன்றில் மாணவர்களை ஈடுபடச் செய்து அவர்களது அனுபவங்களை விளக்கி அல்லது கருத்தை வெளிப்படுத்தி பாடத்தைக் கட்டியெழுப்பலாம். இச் செயற்பாடுகளில் சில:- நாடகம் நடித்தல், திருப்பலியில் பங்கு கொள்ளுதல், அநாதை இல்லமொன்றைத் தரிசிக்க செல்லுதல், பெற்றோருடன் திருயாத்திரை செல்லுதல்.

### இடைநிலை வகுப்புகளுக்கான முறை

**1. செயற்றிட்ட முறை**

பாடத்திட்டத்திற்கு உட்பட்ட ஏதேனும் ஒரு பகுதியை மாணவர் சிலரைக் கொண்டு படித்து ஆயத்தப்படுத்தும்படி கூறி, பின்னர் தாம் கற்றவற்றை அறிக்கையாக முன்வைக்கும்படி கூறுதல், செயற்றிட்டம் மூலம் பல்வேறு பகுதிகள் கற்பிக்கப்பட்டு ஒப்படைக்கப்படலாம்.

**2. குழு வேலை முறை**

குழுக்கள் வழியாகப் பாட விடயத்தை கற்றுத் தமது குழுவுடன் இணைந்து கொடுக்கப்பட் வேலையை நிறைவு செய்து சமர்ப்பித்தல்.

**3. பிரச்சினைகளைத் தீர்க்கும் முறை**

ஆசிரியர் சமூதாயத்தில் அல்லது தனிப்பட்ட ஒருவருக்குப் பொருத்தமான பிரச்சினையொன்றை பாட ஆரம்பத்தில் முன்வைப்பர். மாணவர்கள் இப்பிரச்சினையை ஆழமாக அலசி ஆராய்ந்து, கிறிஸ்தவ ஒளியில் தீர்வுகாணுதல், இறுதியில் கிறிஸ்தவக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுதல்.

## 7.9 உளவியல் ரீதியாக கற்பிக்கும் முறை

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே உளவியலின் புதுக் கண்டு பிடிப்புக்கள் கல்வி துறையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தின. உளவியலின் ஆரம்பத்துடன் புதிய கல்வி முறை தோன்றியது. ஆண்டாண்டு காலம் இருந்து வந்த கல்வி முறை மறையத் தொடங்கியது. உளவியலின் அடிப்படையில் புதிய தன்மையின் கட்டி எழுப்பப்பட்ட மறைக்கல்வி முறை உளவியல் முறை எனப்படும். 1930 ம் ஆண்டளவில் மியுனிக் மறைக் கல்வி முறையும் இந்த உளவியலை அடிப்படையாகக் கொண்டு கட்டிமெழுப்பப்பட்டதால் இம்முறையும் உளவியல் முறை எனப்பட்டது.

**உளவியல் முறை கற்பித்தலின் பண்புகள் சில**

- அறிவை முன்வைக்கும்போது தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளிமையானதிலிருந்து கடினமானதிற்கும் சேர்ந்திருப்பதிலிருந்து பிரிந்திருப்பதற்கும்.
- ஆசிரியர் மைய அல்லது பாட மையக்கல்வி முறைக்குப் பதிலாக மாணவ மையக்கல்வி முறையை ஏற்படுத்தல்.
- மாணவனரின் வயது, அவர்களது விருப்பு, உள நிலை ஆகியவற்றிற்கேற்ப கற்பித்தல்.
- அறிவை பகிர்ந்தளிப்பதில் - அறிவை அறிவை பெற்றுக் கொள்ளும் முக்கிய வழிமுறைகளான ஐம்புலன் பாவனை, ஒலி, ஒளி சாதனங்களைப் பயன்படுத்தல்.
- மறை பாடங்கள் அனைத்திலுமே தெளிவான நோக்கம் இருத்தல்.
- இந்நோக்கத்தை நிறைவாக்கி கொள்வதற்கு அறிவு என்ற ரீதியில் மாணவருக்கு முன் வைக்கக்க வேண்டிய பாட விடயங்கள் இருத்தல், மாணவரின் வாழ்வைக் கட்டியெழுப்பக்கூடிய திறன் யாது என தேடிப் பார்த்தல், அவர்களின் எண்ணம், விருப்பம் யாவும் கிறிஸ்தவ விழுமியங்களில் கட்டியெழுப்பப்படுவதற்குத் தேவையான மனநிலையை பாடத்தில் கொண்டிருத்தல்.

**உளவியல் முறையின்படிப் பாடத்தை ஆயத்தப்படுத்தல்.**

மேற்கூறப்பட்ட அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய விடயங்கள் மூன்றும் முக்கிய நோக்கத்தை முழுமையாக்கிக் கொள்வதற்கு பயன்படும் விதத்தில் கீழ் காணும் ஐந்து முறைகளுக்கேற்ப பாடத்தைக் கட்டியெழுப்பலாம்.

- ஆயத்தம்
- முன் வைத்தல்
- பாட விளக்கம்
- பாடச் சுருக்கம்
- மதிப்பீடு
- செயற்பாடு, ஒப்படை (மதிப்பீடு)

**ஆயத்தம்**

இந்தப் படிமுறையின் குறிப்பிடப்படும் விடயங்களைப் பின்பற்றுதல் சிறப்பானதாகும்.

- சமய சூழலை வகுப்பில் ஏற்படுத்தும் பொருட்டு சிறு செபம், வேண்டுதல், அமைதி ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.
- பாடத்தலைப்பை முன்வைத்து மாணவருக்கு அது பற்றி கற்பிப்பதற்கு நல்லுறவை ஏற்படுத்தல்.
- கடந்த பாட விடயங்களை சுருக்கமாக எடுத்துரைத்து, அவற்றுடன் இந்த புதிய பாடத்தை தொடர்பு படுத்தல்.
- ஆசிரியர் இந்த புது பாடத்தில் புதியவற்றைக் கற்பிக்கப் போகிறார் என்பதை உணர்த்துவதற்கு துணைக் கருவிகள், பாட குறிப்பு ஆகியவற்றின் வழியாக மாணவரில் வியப்பை எழுப்பி பாடம் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்தல்.

**முன்வைத்தல்**

- ஏதேனும் ஒரு கதை, நிகழ்வு, படம் வழியாக பாடத்திற்கான முக்கிய விடயங்கள் செயற்பட்டிருக்கும் விதத்தை மாணவருக்கு முன்வைத்தல்.
- அவர்கள் இப்போது கண்ட விடயத்திலிருந்து தெரியாத விடயங்களை விளக்குவதற்கு மாணவர்களுடன் உரையாடலை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- இவற்றிலிருந்து கேள்விகள் கேட்பதற்கு, விடையளிப்பதற்கு, கருத்து பரிமாற்றுவதற்கு மாணவர்களைத் தூண்டுதல்.
- வெளிப்பட்ட முக்கிய விடயங்களை கரும்பலகையில் எழுதி, அவற்றை பாட பிரவேசத்திற்கு வழியாகக் கொள்ளுதல்.

**பாட விளக்கம்**

இந்தப் படிமுறை, பாடத்தின் முக்கிய பகுதியாகும். இப்படிமுறையை முழுமையாக்கிக் கொள்வதற்காக அதிக நேரத்தை செலவிட வேண்டும்.

- முன்வைக்கும் படிமுறைகளில் காட்டப்படும் விடயங்களைத் தொடர்புபடுத்தி தெரிந்ததிலிருந்து தெரியாததற்கு - ஒன்றுபட்டிருப்பதிலிருந்து சிதறி செல்வதற்கு பிரவேசித்தல்.
- பாட விடயங்களை முறையாகக் கரும்பலகையில் எழுதி தெளிவாக விளக்குதல்.
- கட்புல - செவிப்புல கருவிகளைப் பயன்படுத்தி பாட விடயங்களை விளங்கிக் கொள்ளும் விதத்தில் தெளிவாக விளக்குதல்.
- மாணவரது கவனத்தையும், ஆர்வத்தையும் பெறும் பொருட்டு கற்பித்த பாடத்திலிருந்து கேள்வி கேட்டலும், அவர்களுக்கு விளங்காத விடயங்களில் கவனம் செலுத்துதலும்.
- கரும்பலகையில் எழுதிய பாடம் தொடர்பான படங்கள், சித்திரங்கள் மூலம் மாணவரின் கவனத்தை ஈர்த்து பாட விடயத்தைக் கற்பித்தல்.

**பாட சுருக்கம்**

இப்படிமுறையினால் மாணவர் தாம் கற்ற பாடத்திலிருந்து கேள்விகள் கேட்டு மீள ஞாபகப்படுத்தி அதனை உறுதி செய்து கொள்வர். அந்த உறுதிப்படுத்துதலும் மீளாய்வும் கீழ்காணும் படிமுறைகள் வழியாக செய்வதற்கு முயற்சிப்பர்.

- பாடத்தில் கற்றவை பற்றி முறையாக கேள்வி கேட்டலும், மாணவர் தாமாகவே முயற்சித்து விடையளித்தலும்.
- கரும்பலகையில் எழுதப்பட்ட பாடத்தில் முக்கிய விடயங்களைத் தமது பயிற்சிப் புத்தகத்தில் எழுதுமாறு கூறுதல்.
- பாடத்தில் முக்கிய பாட விடயங்கள் தொடர்பாக வகுப்பிலே பாட இறுதியில் சிறு போட்டி நடாத்துதல். அதில் வினா கேட்டு அவர்களை விடையளிக்கத் தூண்டுதல்.

**செயற்பாடு (ஒப்படை)**

கற்ற விடயங்களை வாழ்க்கையிலே கட்டியெழுப்புவதற்கு செயற்பாட்டு முறை அல்லது செயற்திட்ட முறை வழியாக மாணவர்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. மறை, அறிவுக்கு மட்டுமன்றி மனநிலை, விருப்பு ஆகியன வழியாக வாழ்வை செயற்பாட்டில் கட்டியெழுப்புவதற்கு இம் முறையினால் வழியேற்படுகிறது.

**செயற்பாடு பின்வரும் விதத்தில் பலவிதப்படலாம்**

- வினாக்களுக்கு விடையளித்தல்
- தம் அனுபவங்களை சுருக்கமாக எழுதுதல்
- தகவல்களை சேகரித்து அறிக்கை சமர்ப்பித்தல்
- பெற்றோரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறல்
- சித்திரம் வரைந்து அதற்குப் பொருத்தமான தலைப்பை எழுதுதல்
- செயற்றிட்டம் ஒன்றைப் பெயரிடுதல்
- ஏதாவது ஒன்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல்
- குழு வேலை
- திருவழிபாட்டின் ஒரு பகுதியை விளக்குதல்
- பத்திரிகைக்கு அறிக்கை சமர்ப்பித்தல்

**மதிப்பீடு**

மதிப்பிடுதல் ஆசிரியரின் பணியாகும். மாணவர் கற்றுக் கொண்டதை எந்த அளவிற்கு கிரகித்து கொண்டுள்ளார்கள் என்பதை அறியும் வழி மதிப்பீடாகும். திறமையான மாணவர்களை மென்மேலும் ஊக்குவிக்கவும், திறமையற்ற மாணவர்களை முன்னேற்றவும் இந்த மதிப்பீட்டினால் சந்தர்ப்பம் கிடைக்கிறது. தாம் செய்து முடித்த பயிற்சி எவ்வளவு தூரம் வெற்றியளித்துள்ளது என்பதை மாணவர் அறிய

ஆவலாயிருப்பர். இந்த ஆவல் நிறைவேறும்போது, மேலும் பல செயற்பாடுகளை செய்து முடிக்க அவர்களுக்கு ஆவல் ஏற்படுகிறது. இதனால் கற்பிக்கும் பணி மேலும் சாத்தியமாகிறது.

**மனித மையக் கல்வி**

**முகவுரை:** இறைவனும், இறையியல் பற்றிய விடயங்களுமே கால காலமாக மறைக் கல்வியின் மையமாயிருந்தது. ஆனால் இன்றைய மறைக்கல்விக்குள்ள, உளவியல் தாக்கத்தினால், காண முடியாத இறைவனைப் பற்றி பேசுவதற்கு முன்னர் கண்ணால் காணக் கூடிய மனிதனைப் பற்றி பேசுவது நல்லது என மறையியலாளர்கள் ஏற்றுக் கொண்டனர். இதனால் மனிதனை மையப்படுத்திய மறைக்கல்வி முறை உண்டானது. இதுவே மனித மைய மறைக்கல்வி முறையாகும்.

**இம்முறையின் பிரதான பண்புகள்**

- சமய பாடத்தை அறிவுக்கு மட்டும் கட்டுப்படுத்தாது அதனை வாழ்வுடனும் தொடர்புபடுத்துதல்.
- சமூகத்தில் அன்றாட நிகழ்வுகளில் தொடர்ச்சியாக நடைபெறும் இறை வெளிப்படுத்துதலைக் காட்டுதல்
- சமய பாடத்திலே, வீடு, பாடசாலை, கிராமம், நாடு, உலகம் ஆகிய இடங்களின் பல்வித நிகழ்வுகளைக் காட்டி, அவற்றினூடாக கிறிஸ்தவ மனநிலையை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிகாட்டுதல்.
- மனித உரிமைகள், மானிட கடமைகள், மனித பண்பு, மானிட மேன்மை ஆகியவற்றில் மானிட வாழ்வின் பெறுமதியைக் காட்டி மானிட வாழ்வை மேலும் நன்மையானதாக்குவதற்கு கிறிஸ்தவ கண்ணோட்டத்தை முன்வைத்தல்.
- மானிட நல் உறவுகளை வளர்ப்பதற்கு உதவும் விடயங்களை முன்வைத்து, அதன் வழியாக மனித சமூகத்தை இறைவன்பால் கொண்டு செல்வதற்கு பல்வித மதங்களுக்கிடையே ஒற்றுமை வாழ்வு இங்கே முக்கியமாயுள்ளது.

மனித மைய மறைக்கல்வி முறைக்கேற்ப கற்பிக்கும்போது நான்கு படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இந்த நான்கு படிமுறைக்களுக்கேற்ப முறையாக பாடத்தை கட்டியெழுப்ப வேண்டும். மாணவ வாழ்வைக் காட்டும் துணைக் கருவிகளை (கட்புல - செவிப்புல) கற்பித்தலின்போது பயன்படுத்துவது விரும்பத்தக்கது. மேலும் திருவிவிலிய பகுதிகளில் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதனை வாசித்து கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் சமூக நிகழ்வுகளை விளக்குவது விரும்பத்தக்கது.

**முதலாவது படிமுறை - மானிட அனுபவம் (வாழ்க்கை அனுபவம்)**

பாடத்தில் பிரவேசிக்கும்போது மனித அனுபவத்துடன் தொடங்குவது பொருத்தமானது. மனித அனுபவம் என்பது அன்றாட வாழ்வுடன் தொடர்புடைய நிகழ்வுகள் அல்லது செய்திகள் அல்லது கதையொன்று அல்லது பிள்ளைகளுக்கு சிறப்பான காரணியொன்றை பாடத்துடன் தொடர்புபடுத்தி அதன் மூலம் பாடத்திற்கு பிரவேசிப்பது விரும்பப்படுகிறது. இது திரைப்படம், சிறுகதை, தொலைக்காட்சிக் கதைகள், அன்றாட வாழ்க்கை அனுபவங்களாயிருக்கலாம். இந்த அனுபவத்தின் மூலம் மாணவருடன் உரையாடலைக் கட்டியெழுப்ப முடியும்.

**இரண்டாம் படிமுறை - (நற்செய்தி)**

இதில் பொருத்தமான நற்செய்தி பகுதியைத் தெரிவு செய்து அதனைத் விளக்கமாாகவும், மரியாதையு டனும் வாசித்து, இறைவெளிப்பாட்டின் ஒளியை மானிட நிகழ்வுகளில் தொடர்புபடுத்த வேண்டும்.

**மூன்றாம் படிமுறை - பாட விளக்கம்**

இதில் பாடத்தில் அடங்கும் விடயங்களை மிகவும் தெளிவாக விளக்க வேண்டும். கரும்பலகை, ஒலி - ஒளி சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். பாட விடயங்களை முறைப்படி பாடத்தில் கட்டியெழுப்ப வேண்டும். எளிய மொழி நடை, தெளிவான கருத்துக்கள், உவமைகள், படங்கள் ஆகிய மொழி நடை பயன்படுத்த வேண்டும்.

**நான்காம் படிமுறை - மாணவர் செயற்பாடு**

இதில் மாணவர் சந்திக்கும் சவால்களுக்கு அவர்கள் எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பதை விசாரித்தறிய வேண்டும். பல்வித செயற்பாடு, பயிற்சி, ஆராய்தல், செய்தி அறிக்கை, படைப்பு, கருத்து வெளியீடு, அனுபவங்கள் ஆகியவற்றுக்கு ஆளாதல் ஆகிய பல்வித செயற்பாடுகள் பயனுள்ளவை. தாம் கற்றவற்றை செயற்படுத்துவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல் இப்படிமுறையில் விரும்பப்படுகிறது.

மாணவரின் செயற்பாடு இல்லாத பாடம் முழுமையடையாத பாடம் என்பதை இங்கே நினைவிலிறுத்த வேண்டும்.

# எட்டாம் பாடம்

## 8. மத்திய யுகத்தில் திருச்சபை வரலாறு (6ம் நூற்றாண்டிலிருந்து தற்காலம் வரை)

### 8.1 மேலைத்தேய உலகில் தாக்கம் விளைவித்த திருச்சபை (கி.பி 700 - 1300)

கி.பி 750 ஆண்டளவில் றவென்னா நகரம் லொம்பெட் இனத்தவரின் ஆட்சிக்குட்பட்டது. கீழைத்தேய பேரரசன் உதவி புரியாததால் திருத்தந்தை 2ம் ஸ்ரீபன் (ஸ்தேவான்) ப்ராங் (Frank) மக்களின் துணையை நாடினார். அதன்படி கி.பி 754ல் ப்ராங் தலைவர் பெபேன், உரோமையரின் ஆதிபிதாவாக அபிஷேகம் செய்யப்பட்டார். இந்த புதிய பதவி நிகழ்வு கி.பி 800ல் நத்தார் தினத்தன்று பெபேன் அரசரின் மகன் சார்லமன் உரோமை பேரரசனாகவும் திருப்பீட பாதுகாவலராகவும் திருத்தந்தை மூன்றாம் லியோவினால் முடிசூட்டப்படும்போது முழுமை பெற்றது. தமது பேரரசில் றோமன் சட்டத்திற்கேற்ப இலத்தீன் மொழியில் சமய ஆசாரங்களை நடாத்தவும் அதற்கான சடங்கு முறைகள், உரோமை ஒழுங்கு, சட்டங்களை செயன்முறைப்படுத்துவதும் சார்லமனின் பொறுப்பாய் அமைந்தது.

ஆயர்களையும் துறவற சபைத்தலைவர்களையும் நியமிப்பதும் ஆயர் மன்றத்தை நடாத்தவுமான அதிகாரம் பேரரசனுக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு திருத்தந்தையரின் பொறுப்பும் அதிகாரமும் பின்தள்ளப்பட்டன. திருச்சபைக்கும் அரசனுக்குமிடையே உள்ள இடைவெளி படிப்படியாக பின்நோக்கிச் சென்றது.

கி.பி 1050ம் ஆண்டளவில் ஐரோப்பாவில் சமூக பொருளாதார, அரசியல் ரீதியில் ஒரு தெளிவான நிலைப்பாடு தோன்றியது. மெய்யியல், இறையியல், சட்டம், கற்ற பொதுநிலையினர் இருந்தனர். ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பீட்டர் டேமியன் (கி.பி 1072), கர்தினால் ஹம்பேட் (கி.பி 1061) ஆகிய அறிஞர்கள் முயன்றனர். முழு கிறிஸ்தவ உலகையும், நன்மையை (முன்னேற்றத்தை) நோக்கி கொணடு செல்வதே இவர்களின் நோக்கமாக இருந்தது. பின்னர் பதவிக்கு வந்த திருத்தந்தை 7ம் கிரகோரி (கி.பி 1085) திருச்சபை பதவிகள் ,சலுகைகள், வளங்களை விற்றல், திருச்சபை சொத்துக்களை ஆயர்மார், குருக்களின் பிள்ளைகளுக்கு அளித்தல், அரசர்களினால் பொதுநிலையினரை திருச்சபையின் தலைமைதத்துவத்திற்கு நியமித்தல் போன்ற விரும்பத்தகாத செயல்களைக் கட்டுப்படுத்த முயன்றார். திருத்தந்தையின் கட்டளை (டிக்டாவுஸ் பாபே) மற்றும் திருப்பீட நீதித்துறை (உரோமை கியூறியா) போன்றவற்றினால் (கி.பி 1216ல்) திருத்தந்தை மூன்றாம் இனசன்ட் என்பவரினால் ஆட்சி காலத்தில் மேற்கத்தேய இனத்தவரிடையே திருப்பீடத்திற்கு வரையறையற்ற அதிகாரம் தரப்பட்டது. திருப்பீட சட்டம் (Canon Law) முன்னெடுத்துச் செல்லப்பட்டது. அருளடையாளங்களுடன் தொடர்புடைய ஆன்மீக நிலை தளர்ந்து சட்டமய நிலை மேலெழுந்தது.

கி.மு 1234ல் திருச்சபை, சட்டத்தை நிர்வகிக்கும் ஒரு இலாகாவாக மாறியது. பொதுநிலையினரும் துறவறத்தாரும் சட்டத்தை பின்பற்றுபவர்களானார்கள். கூட்டுப் பொது அரசு முறையைப் போன்ற சத்தியப்

பிரமாணம் செய்து கொள்ளும் சடங்குமுறை திருச்சபையில் செயற்பட்டதால் ஆயர்கள் திருத்தந்தைக்கு பிரமாணிக்கமாக செயற்படுவதாக வாக்களித்தனர். திருச்சபையின் கேந்திர அதிகாரம் திருத்தந்தைக்கு உரியதானது. அவருக்கு அரசைப் போன்று முடி சூட்டுவதும் இக்காலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இவ் வழக்கம் 1978 வரை மட்டுமே இருந்தது. திருத்தந்தை 1ம் அருளப்பர் சின்னப்பர், 2ம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோர் முடிசூட்டுவதைத் தவிர்த்து திருச்சபையின் மேய்ப்புப் பணியை ஆற்றினர்.

திருச்சபையில் லௌகீகம் வளர்ந்து உள்ளார்ந்த ஆன்மீக வாழ்வு தளர்ந்தது. ஆயினும் குருக்களின் மணந்துறவு கட்டாயமாக்கப்பட்டதுடன் புதிய துறவற சபைகள் உருவானது. அவை:- கமல் டொலீஸ் புனித ரொமுவல்ட் கி.பி 1027ல் ஆரம்பித்த கார்த்துசியன் சபை, புனித புரூனோ 1101ல் ஆரம்பித்த சிஸ்டார்சியன் சபை, புனித றொபட் மொலஸ்மே கி.பி 1111லும் புனித பேர்னாட் கி.பி 1153லும் ஆரம்பித்த மோல்ட்டா வீரர், டெம்ப்லார் வீரர், டியூடொனிக் வீரர் சபையினர் இவர்கள் துறவற வீர பணியாற்றியவர்கள். ***(ஒழுக்கத்தைப் பேணுவதும் நீதி, நேர்மைக்காக போராடுவதும் இவர்களது பணியாகும்)*** இச் சபையினால் திருச்சபையின் ஆன்மீக நிலை புத்துயிர் பெற்றது. விவிலியத்தைக் கற்கும் குழுக்களை ஆரம்பித்த பொதுநிலையினர் அர்ப்பணிக்கப்பட்ட பொதுநிலை வாழ்வு வாழ்ந்தனர்.

பலஸ்தீனாவில் திருப்பீடத்தை பதிதரிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக நடாத்தப்பட்ட சிலுவை யுத்தத்தினால் கீழ் காணும் நன்மைகள் ஏற்பட்டன.

- கிறிஸ்தவ நாடான ஐரோப்பாவிலே மத – ஆன்மீக வாஞ்சை புத்துயிர் பெற்றது.
- கிறிஸ்தவ ஒற்றுமையின் வலிமை தலை தூக்கியது.
- மேற்குலக நன்நடத்தையின் தூண்டுதல் கீழைத்தேய கிறிஸ்தவர்களிடையேயும் பரவியது.
- அந்த தூண்டுதலினால் மேலைத்தேய கிறிஸ்தவ சபையிலும் இறையியல், உயிரியல் ஆகியன வளர்ச்சிப் பெற்றது.

மத்திய காலத்திலே தூய பேர்னாட் திருச்சபையின் வழிகாட்டியானார். அவர் திருத்தந்தையரிடம், லௌகீக தலைவராக அல்ல, ஆயராகவும் இறைவாக்கினராகவும் திருச்சபையில் காணக் கூடிய தலைவராகவும் செயற்பட வேண்டுமென அறிவுரை வழங்கினார். மேலும் இவர் தேவ அன்னை பக்தியையும் பரப்பினார்.

**துறவற சபைகளின் பங்கு**

திருச்சபையின் இறையியில் அடிப்படையை உறுதி செய்த மேலும் ஒரு அறிஞர் தூய அன்சலம் அடிகள் ஆவார். அவர் இங்கிலாந்தின் கென்ட்பெரி பேராயராக இருந்தார். அவரினதும் பங்கேற்புடன் 13ம் நூற்றாண் டில் ஆரம்பத்தில் இறையியல் கல்லூரிகளை ஒன்றுசேர்த்து பாரிசில் பல்கலைக்கழகங்கள் உருவாகின. அதனை மேலும் பரப்புவதற்காக பொலொக்னா, பாதுவா, நேபாளம், மொன்டிபெலியர், ஒக்ஸ்ப்ர்ட், கேம்பிரிஜ், சரமன்னா, வலென்சியா போன்ற நகரங்களில் பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டன. வேத பேதக சிந்தனைகளுக்கு (அல்பிஜென்சின், வொல்தென்சியன் பேதகங்கள்) எதிராக புதிய தாக்குதல்கள் - வன்முறைகள் தோன்ற காரணம் அசிசியாவில் தூய பிரான்சிஸ், ஸ்பானியாவில் தூய டொமினிக் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட பிரான்சிஸ்கன், டொமினிக்கன் துறவற சபைகளினால் ஆற்றப்பட்ட மறைபரப்பு பணியாகும். அவர்கள் ஆர்வத்துடன் மறைப்பணியாற்றினார்கள். நற்செய்திப் படிப்பினைகளான ஏழ்மை, கீழ்ப்படிவு, கற்பு ஆகியவற்றை செயற்படுத்தினர். அவர்களது வாழ்க்கைச் சான்றைக் கண்ட பல கிறிஸ்தவர்கள் வேத பேதக சிந்தனைகளை ஒதுக்கி திருச்சபையில் இணைந்தனர்.

**இறையியில் கல்வியின் புத்தெழுச்சிக்கு கீழ்காணும் துறவிகள் உதவினர்**

- டொமினிக்கன் சபை
  – தூய அல்பேட் (கி.பி 1280)
  – தூய தோமஸ் அக்கவைனாஸ் (கி.பி 1274)
  – மாஸ்ட எக்ஹாட் (கி.பி 1308)
- பிரான்சிஸ்கள் சபை
  – ஹேல்ஸ்ஹி அலெக்சாண்டர் (கி.பி 1245)
  – தூய பொனவெந்தூர் (கி.பி 1274)
  – டன்ஸ் ஸ்கோடுஸ் (கி.பி 1308)

ஏழ்மை வாழ்வு வாழுதல், உறுதியான எதிர்நோக்கு, பக்தி ஆகியன இத் துறவற சபையினரின் விசேட பண்பாகும்.

### 8.1.1 கிரேக்க ஒத்தடொக் சபையின் பிறப்பு

கி.பி 451லிருந்து கீழைத்தேய, மேலைத்தேய திருச்சபைகளுக்கிடையேயிருந்த நல்லுறவு சீராக இருக்ககவில்லை. இதற்கு திருச்சபை வரலாற்றில் முழுமையான காரணம் தரப்பட்டுள்ளது. ஒரு பிரிவினரை குறை கூறுவது முறையல்ல. 1043ல் கீழைத்தேய திருச்சபைத் தலைவராக பொறுப்பேற்ற ஆயர் மைக்கல் செலாரியுஸ் என்பவர் திருப்பீடம் (திருத்தந்தையின் தலைமைத்துவம்) பற்றி ஒரு கீழான கருத்தைக் கொண்டிருந்தார். மேற்குலக திருச்சபைத் தலைவராக திருத்தந்தை செயற்பட்ட புத்தெழுச்சி பற்றிய தெளிவான மனநிலையை ஆயர் செலாரியுஸ் கொண்டிருக்கவில்லை. லத்தீன், கிரேக்க சடங்கு முறைகளைப் பயன்படுத்துவதில் சில முரண்பாடுகள் தோன்றின. இது தொடர்பாக திருத்தந்தையின் பிரதிநிதிகள் தாம் விரும்பியவாறு செயற்பட் டனர். ஆயர் செலாரியுஸ் என்பவர், கீழைத்தேய பேரரசனும், அவரைப் பின்பற்றியோரும் திருச்சபையிலிருந்து விலக்கப்படுவதாக ஆணைப் பத்திரமொன்றை கொன்ஸாந்திநோபிளின் தூய சோபியா ஆலய பீடத்தில் வைத்து விட்டுச் சென்றார். அதன்பின் லத்தீன் சட்டத்திற்கெதிராக மக்கள் அலைதோன்றியது. அதன் பலனாக திருப்பீட கட்டளைப் பத்திரம் பகிரங்கமாக எரிக்கப்பட்டது. அத்துடன் கீழைத்தேய, மேலைக்தேய ஆயர் மன்றம் வழியாக மேற்குறிப்பிட்ட திருத்தந்தையின் பிரதிநிதிகளுக்கு தீர்ப்பளிக்கப்பட்டது. இதன் காரணமாக திருச்சபையிலே கீழைத்தேய விரிசல் வளர்ந்தது.

திருத்தந்தை 2ம் உர்பன் (கி.பி 1099) அமைதி பாதையைத் திறந்தாலும் 4ம் சிலுவை யுத்தத்தின்போது (கி.பி 1202 – கி.பி 1204) அந்தியோக் நகரம் தொடர்பாக கீழைத்தேய பேரரசனுக்கும் சிலுவை யுத்தத்தை முன்னெடுத்துச் சென்ற இராணுவத்தினருக்கிடையேயும் பிரச்சனைகள் தோன்றின. கிரேக்க ஆதிப்பிதாவை துரத்தி விட்டு லத்தின் தலைவரை நியமித்த சிலுவை யுத்தத் தலைவர் (கி.பி 1203ல்) கொன்ஸ்தாந்திநோபிள் நகரை அழித்தார். இதனால் மேற்குறிப்பிட்ட பூசல் மேலும் உக்கிரமானது. 1276ல் லியோன்ஸ் நகரில் நடைபெற்ற பொதுச்சங்கத்திலும் கி.பி 1439 புளோரன்ஸ் நகரில் நடைபெற்ற பொதுச்சங்கத்திலும் அமைதியை ஏற்படுத்த முயன்றாலும் (இன்றைய) 2ம் வத்திக்கான் சங்கம் வரை முரண்பாடு குறையவில்லை.

## 8.2 விரிவான மறைப்பரப்புப் பணியின் ஆரம்பம்

**ஒருமைப்பாடு அற்றுப்போனதால் பரந்த மறைத்தூதுப்பணி நோக்கி பயணித்த திருச்சபை (கி.பி 1300 - 1750)**

13ம் நூற்றாண்டின் இறுதியிலே மேலைத்தேய திருச்சபையில் சில முன்னேற்றத்தை காணக் கூடியதாயிருந்தது. திருவழிபாடு, உரோமை சடங்கு முறைக்கேற்ப ஒழுங்கு செய்யப்பட்டது. ரோமெனஸ்க் (உரோமை கட்டிட நிர்மான கலைக்கேற்ப) கொதிக் (Gothic) (பிரான்ஸ், ஜேர்மன், ஸ்பானிய, கட்டிட கலைக்கேற்ப) அலங்காரத்துடன் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. செபமாலைப்- பக்தி, தூயவர்களுக்கு மதிப்பளித்தல், பச்சாத்தாப திருயாத்திரை, நத்தார் மாட்டுத் தொழுவம், பரிபூரண பலன் பற்றி செபம் போன்ற மறை பயிற்சிகள், கிறிஸ்தவ வழக்கங்கள் பரவின.

வேத பேதகர்களுக்கு தண்டனை வருவிப்பதற்காக உண்டான வேத பாதுகாப்பு நீதிமன்றம் மூலம் நன்மை உண்டானதா என்பது கேள்விக்குறியே. தவறு செய்தவர்களை எரிப்பதானது, இன்றைய எமது கண்களுக்குப் போலவே தூய ஜோன் கிறிசோஸ்தம், தூய பேர்னாட் போன்ற பழைய திருச்சபை அறிஞர்களுக்கும் வெறுக்கத்தக்க செயலாய் அமைந்தது. மத்திய காலத்தில் கிறிஸ்தவ ஐரோப்பா, மறை என்ற ரீதியிலும், அரசியல் ரீதியிலும் ஒருமித்து இருந்தமையால் வேத பேதகம் ஒருவேளை சமூக விரோத செயலாக கொள்ளப்பட்டிருக்கலாம். திருச்சபையுள்ளும் மனித பலவீனம் காணப்படுவதை நீங்கள் இப்போது அறிந்து கொள்ளலாம். ஆயினும் வரலாற்று நிகழ்வுகளை அதன் பின்னணியுடன் பார்க்கும்போது அதன் பொதுவான கருத்தை விளக்கிக் கொள்ளலாம்.

கி.பி 1300 – 1500 காலப் பகுதியில் திருப்பீடத்தின் அதிகாரம் மேலோங்கியது. அது அந்நாட்டு அரசியல் அதிகாரத்துடன் முரண்படுமா என்ற பிரச்சனை எழுந்தது. ஆயினும் ஐரோப்பாவின் பல்வித பிராந்தியத்தில் இனவாத உணர்வுகள் தோன்றியதால் திருச்சபைக்கு வரையற்ற அதிகாரம் கிடைக்கவில்லை. இக் காலத்தில் உரோமையில் ஜேர்மனிய தாக்கம் அதிகமாக இருந்ததால் திருச்சபையினுள்ளும் சில லௌகீக இயல்புகள் காணப்பட்டன. பிரான்ஸ் நாட்டின் அவிக்ஞா நகரில் திருத்தந்தை வாழ்ந்தமை ஒரு ஆசீர்வாதமாக இருந்தாலும் பிற்காலத்தில் ஏற்பட்ட துரதிஷ்ட நிலை யாதெனில் உரோமையில் ஒரு திருத்தந்தையும் அவிக்ஞாவில் வேறொரு திருத்தந்தையும் திருப்பீடத்திற்கு உரிமை கோருதலானது ஒரு பெரிய துர்மாதிரிகையாயிருந்தது. கி.பி 1417ல் கொன்ஸ்தாந்தில் நடைபெற்ற பொதுச்சங்கத்தில் இப்

பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டது. ஆயினும் அக் காலத்தில் ஐரோப்பிய கிறிஸ்தவ சபை அதிக பலவீனமடைந்தது.

திருச்சபையின் பாரிய செல்வத்தை சரியான முறையில் பராமரிக்கத் தெரியாத தலைவர்கள் இருந்தமையால் திருச்சபையின் தோற்றம் துர்மாதிரிகையினால் அலங்கோலமானது. மறுசீரமைப்பின் தேவை நன்கு உணரப்படினும் அது நிகழவில்லை. கி.பி 1400ல் ஏற்பட்ட அறிவியல் மறுமலர்ச்சி (த ரெனெய்சான்ஸ்) காரணமாக இத்தாலியில் திருத்தந்தை கலை தொடர்பான மறுசீரமைப்பு செய்தாலும், மறை ரீதியிலும் சமூக துறையிலும் கிறிஸ்து தமக்களித்த பொறுப்புகளை சரிவர நிறைவேற்றவில்லை என்பதையும் கூற வேண்டும். இந்நிலை புரட்டஸ்தாந்து புரட்சிக்கு வழிசமைத்தது.

## 8.3 ஐரோப்பாவில் திருச்சபை பிளவுபடல்

### 8.3.1 திருச்சபை பிளவுறுவதற்கான பின்னணி

16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலே சமூகம், பொருளாதாரம் அதி வேகமாக முன்னேற்றம் கண்டது. விஞ்ஞான வளர்ச்சியைப் போலவே சுதேச, தேசிய வாணிபமும் வளர்ச்சியுற்ற காலம் அது. கலை, கட்டிடம் மிகவும் முன்னேற்றம் கண்ட காலப் பகுதியாகவும் அது அமைந்தது.

மத்திய காலத்திலே கத்தோலிக்க திருச்சபை வியாபாரமயத்திற்குட்பட்டு அங்கே லௌகீகம் ஆட்சி புரிந்தது. அக் காலத்திலிருந்த பல திருத்தந்தையர்களின் ஆன்மீக வாழ்வு வெறுமையுற்று இருந்தது. கர்தினால்மார், ஆயர்கள், குருக்கள் ஆகியோர் பல்வித அரசர்களினதும் கை பொம்மைகளாக அவர்கள் விரும்பியவாறு செயற்பட்டனர். மறையும், அவர்களின் நடத்தையும் மிகவும் கீழ் நிலையில் இருந்தன. பொதுநிலையினரின் வாழ்க்கை முறை, துறவற, குருத்துவ வாழ்வைவிட கீழ்மட்டமானது என்ற ஒரு நிலைப்பாடு இருந்தது. திருவிவிலியத்தை மொழி பெயர்க்கும்போது திருச்சபையால் பல்வித வரையறைகள் போடப்பட்டிருந்தன. பரிபூரண பலன் பணத்திற்கு விற்கப்பட்டது. பெரும்பாலான குருக்கள், துறவறத்தாரினது வாழ்க்கை - முறை சௌகரியங்கள், சொகுசினால் நிரம்பியிருந்தது. சாதாரண பொது மக்கள் திருச்சபை வாழ்விலிருந்து படிப்படியாக பிரிந்து செல்லும் நிலைக்குள்ளானார்கள்.

### 8.3.2மாட்டின் லூதரின் புரட்சி (கி.பி 1483-1546)

இவர் ஜெர்மனிய நாட்டினராவார். இறையியலாளர் புரட்டஸ்தாந்து சீர்திருத்த மறையை ஆரம்பித்தவர் இவரே. 1483 கார்த்திகை 10ம் திகதி பிறந்த இவர் கற்பதில் அதிக திறமை வாய்ந்தவர். கி.பி 1507ல் தூய அகுஸ்தினார் சபையின் குருவாக திருநிலைபடுத்தப்பட்டார். கி.பி 1512ல் கலைமானி, முதுமானி பட்டங்களையும் பெற்றார். பின்னர் ஜேர்மனியின் விட்டின்பர்க் பல்கலைகழகத்தில் மெய்யியல், இறையியல் கற்பிக்கும் பேராசிரியர் ஆனார்.

உரோமையில் பயணமொன்றை மேற்கொண்டிருந்த லூதர் ஒருமுறை திருச்சபை தலைவர்களின் ஒழுங்கீன வாழ்வைக் கண்டார். இதனால் மன வேதனையுற்று அவர் திருச்சபையின் தகாத சொற்பாடுகளை வெளிப்படுத்தியதோடு தனது மத கொள்கைகளை 95 கோட்பாடுகளாக கி.பி 1578 கார்த்திகை 1ம் திகதி எழுதி முன்வைத்தார். இதில் முக்கியமாக பணத்திற்கு பரிபூரணபலன் விற்பதை லூதர் கடுமையாக சாடியிருந்தார். 1520 ஆனி 15ம் திகதி லூதரின் படிப்பினைகளை திருத்தந்தை பத்தாம் சிங்கராயர் (லியோ) வன்மையாக கண்டித்தார். பின்னர் 1521 தை மாதமளவில் லூதர் திருச்சபையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டார். இதனால் திருத்தந்தையின் தலைமைத்துவத்திலிருந்த மேலைத்தேய திருச்சபை இரண்டாகப் பிரிந்தது.

**லூதரின் படிப்பினைகள்**

- மீட்புப்பெற நம்பிக்கை, விசுவாசம் மட்டும் போதுமானது என்ற படிப்பினை
- பத்து கட்டளை வழியாக மனிதனுக்கு அவனது பாவ நிலையை நினைவுறுத்துவது மட்டுமே நடைபெறுகிறது என்ற படிப்பினை
- திருமுழுக்கும், நற்கருணை ‘சடங்கு மட்டுமே அருளடையாளங்களாக கொள்ளப்படுகிறது என்ற படிப்பினை.
- அப்ப, இரச இயல்பு மாற்றம் பெறப்படுவதில்லை என்ற படிப்பினை

- திருத்தந்தையின் தலைமைத்துவத்தை மறுத்தல்
- குருத்துவத்தையும் பிரம்மச்சாரியத்தையும் கண்டித்தல்
- சென்ம பாவத்தினால் மனிதர் அனைவருமே பாவத்தின் அடிமையாக இருக்கின்றனர்.
- மனிதன் பாவத்திற்கு அடிமையாயிருப்பதால் தனது மீட்பைப் பெற்றுக்கொள்ள அவனால் முடியாது.
- தத்தம் மொழிகளில் வழிபாடுகளை நடாத்த வேண்டும். இலத்தின் மொழி தேவையில்லை.
- இறப்பின் பின் மோட்சம், நரகம், உத்தரிப்பு ஸ்தலம் என்ற இடமோ, நிலையோ இல்லை.
- பரிபூரண பலன் அல்லது வேறு மறை செயற்பாடுகள் மூலம் இறந்தோருக்கு ஆறுதல் அளிக்க எம்மால் முடியாது.
- திருத்தந்தையால் பரிபூரண பலன் அளிப்பது முறையற்ற விதத்தில் லாபம் பெறுவதாகும்.
- திருவிவிலியத்தின் சில பகுதிகள் இறையூக்கத்தினால் எழுதப்படவில்லை.

### 8.3.3 ஜோன் கல்வின், சுவிங்லி

**ஜோன் கல்வின் (கி.பி 1509-1564)**

பிரான்சில் பிறந்த ஜோன் கல்வின் பாரீஸ் நகரில் இறையியல், சட்டம் கற்று தனது இளமைப் பருவத்திலே லூதரின் புரட்டஸ்தாந்து சீர்திருத்த சபையின் முன்னணித் தலைவரானார். இவர் ''கிறிஸ்தவ மத கோட்பாடுகள்'' என்ற நூலின் வழியாக தனது படிப்பினைகளை விளக்கினார். இவர் திருவிவிலியத்திலே குறிப்பிடப்படாத அனைத்து நம்பிக்கைகளையும் புறக்கணித்ததோடு தன்னைப் பின்பற்றுவோரது நம்பிக்கை திருவிவிலியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தினார். ஜோன் கல்வின் சீர்திருத்த சபை, ப்ரெஸ்பெடேரியன் சபை ஆகியவற்றின் ஆரம்ப கர்த்தாவாவார்.

**ஜோன் கல்வினின் படிப்பினைகள்**

- இறைவனின் மேன்மையையும் - மனிதனின் பலவீனத்தையும் வெளிப்படுத்துகிறார்.
- நன்மையோ, தீமையோ மனிதனால் செய்ய முடியாது. அவை அனைத்தும் இறை சித்தப்படி நடக்கும்.
- வாழ்விலே ஒழுக்கம் சிறப்பானதாகும்.
- பெற்றுள்ள வளங்களை அந்த ஒழுங்கின்படி சரியாக பயன்படுத்த வேண்டும்.
- இறையன்னை பக்தி, தூயவர்களுக்கு மதிப்பளித்தல், திருப்பலி ஆகியன ஏற்றுக் கொள்ளப்படாமை.

**ஷீல்ரிச் சுவிங்ளி (கி.பி 1483-1531)**

சுவிற்சர்லாந்து இனத்தவரான சுவிங்ளி, கத்தோலிக்க மறைக்கு எதிரான நிலைப்பாட்டை முன்னெடுத்துச் சென்றார். ஆன்மீக மீட்புக்காக மனிதனின் சுய விருப்பின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ளாது, தொடக்கத்திலிருந்தே இறை சித்தப்படி சிலருக்கு மோட்சமும் சிலருக்கு நரகமும் குறிக்கப்பட்டுள்ளது என கற்பித்தார். மேலும் நல்லது - கூடாதது, நன்மை, தீமை ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பது எமது பொறுப்பு அல்ல, இறைவனது தீர்மானமே என்பது இவரது படிப்பினையாகும். ஆண்டவரின் இறுதி இராவுணவு வெறும் கொண்டாட்டம் எனவும் அதனை நினைவு கூருவதற்காக நாம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் பெற்றுக் கொள்ளும் நற்கருணை வழியாக உண்மையில் கிறிஸ்துவை நாம் பெற்றுக்கொள்வதில்லை என்பது இவரது கூற்றாகும். கி.பி 1529ல் லூதரை சந்தித்து அவருடன் தமது மறைகொள்கையில் ஒரு ஒருமைப்பாட்டைக் காண முயற்சித்தாலும் இருவரது கருத்தும் முரண்பாடுடையதாக இருந்தது. பிற்காலத்தில் கத்தோலிக்கருடனான சிவில் யுத்தத்தின்போது சுவிங்ளி கொல்லப்படடார்.

**ஷீல்ரிச் சுவிங்ளினின் படிப்பினைகள்**

* சமய வழிபாட்டிலே படங்கள், சொரூபங்கள் பயன்படுத்தல், திருப்பலி ஆகியவற்றை நிராகரித்தல்.
* ஆன்ம மீட்பு மனிதனின் சுதந்திர விருப்பப்படியல்ல, இறை சித்தத்திற்கேற்ப நடைபெறுகிறது.

### 8.3.4 இங்கிலாந்து சபையின் பிறப்பு

இங்கிலாந்தில் வாழ்ந்த 8ம் ஹென்றி அரசன் (கி.பி 1507-1547) கத்தோலிக்க நம்பிக்கையைப் பாதுகாத்த மறைபற்றுடைய அரசனாவான். 1517ல் லூதர் தொடங்கிய சமய புரட்சியை 8ம் ஹென்றி அரசன்

கடுமையாக எதிர்த்தது மட்டுமன்றி லூதரின் கருத்தைப் புறக்கணித்து ‘‘ஏழு அருளடையாளங்களின் இயல்புகள்’’ என்ற மடலை வரைந்து அதன் நிமித்தம் திருத்தந்தை 10ம் சிங்கராயரின் பாராட்டைப் பெற்றதோடு 1512ல் ‘‘விசுவாசத்தைப் பாதுகாப்போன்’’ என்ற பட்டமும் அவருக்கு அளிக்கப்பட்டது.

எட்டாவது ஹென்றி அரசன் கெத்தரின் என்ற இளவரசியை மணந்தார். இவர்களுக்கு மகள்மார் இருந்தாலும் (தனக்குப் பின் முடிசூட) மகன் இல்லாததால் அரசன் வருந்தினான். தனது மனைவியை விவாகரத்து செய்து வேறோரு இளவரசியை திருமணம் செய்ய விரும்பினான். அப்போதைய திருத்தந்தை 7ம் கிளமென்ட் அதனை நிராகரித்தார். அப்போது கான்டர்பரி பேராயரான கர்தினால் தோமஸ் சூல்சி மூலம் செய்த விண்ணப்பமும் பயனற்று போனதால் ஹென்றி அரசன் 1529ல் கர்தினால் தோமஸ் சூல்சியை பதவி நீக்கம் செய்து தான் விரும்பும் கிரேன்மர் என்ற கத்தோலிக்க வழக்கறிஞரை இங்கிலாந்தின் பேராசிரியராக நியமித்தான். ஆயினும் தோமஸ் கிரேன்மர் திருத்தந்தைக்கு பணிந்து வாழும் கத்தோலிக்கர் என்ற ரீதியில் நண்பன் ஹென்றி அரசன் தனக்களித்த பொறுப்பை ஏற்கும் முன் அரசனின் விவாகரத்து பற்றிய விடயத்தில் தன்னால் ஒன்றும் செய்ய முடியாதென அரசனுக்கு கூறினார்.

ஈற்றில் கி.பி 1534ல் ஹென்றி அரசன் இங்கிலாந்து திருச்சபையை அமைத்து அதன் தலைமைத்துவத்தையும் தானே ஏற்றுக் கொண்டான். அவன் கத்தோலிக்கத் திருச்சபையுடன் சிறப்பாக உரோமையரோடு மிகவும் கோபத்துடன் பணியாற்றினான். இவனின் நெருங்கிய நண்பரும், சிறந்த இறையியலாளரும், எழுத்தாளருமாகிய தோமஸ் மூர் என்ற இல்லறத்தவர், ‘‘திருத்தந்தை அல்ல, அரசனே தலைவன்’’ என்ற மேலாண்மை சட்டத்தை ஏற்க மறுத்ததால் 1535ல் அவரை சிரச்சேதம் செய்தான். இவ்வாறு தோமஸ் மூர் அடிகளார் கத்தோலிக்க விசுவாசத்தை பாதுகாக்கும் பொருட்டு தன் வாழ்வைத் தந்து வேதசாட்சியானார். பின்னர் ரோச்செஸ்ரர் ஆயரான ஜான் பிசரையும் சிரச்சேதம் செய்தான். தோமஸ் மூர் அடிகளாரும் ஜான் ரிசர் அடிகளாரும் பிற்காலத்தில் கத்தோலிக்க திருச்சபையால் தூயதோர் நிலைக்கு உயர்த்தப்பட்டனர்.

இங்கிலாந்து திருச்சபை ஆரம்ப காலத்தில் திருச்சபையின் அனைத்து அதிகாரங்களையும் மறுத்து, கத்தோலிக்க திருச்சபையில் இருந்து வெளியேறிச் சென்றாலும் பின்னர் கல்வின்வாதத்திற்குட்பட்டு பெரும்பாலும் புரட்டஸ்தாந்து இயல்பைப் பெற்றது. கி.பி 16ம், 17ம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்திலே கத்தோலிக்கர் பெரும் அளவில் துன்புறுத்தல்களை அனுபவித்தனர். திருத்தந்தைக்கு பணிந்திருப்போர் அரசியல் ரீதியிலே அரசனுக்கு எதிரானவர்கள் என கணிக்கப்பட்டனர் ஆயினும் பிற்காலத்தில் இங்கிலாந்து சபையில் பெரும்பாலானோர் மீண்டும் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். இது தவிர சிறப்பாக இங்கிலாந்து சபையின் உயர் சபைக்குரிய அங்கிலிக்கன் சபையினர் புரடஸ்தாந்து பண்புகளை விட, கத்தோலிக்க நம்பிக்கைக்குரிய பண்புகளைக் கொண்டவர்களாயிருந்தனர்.

## 8.4 கத்தோலிக்க சீரமைப்பும் புதுப் பிறப்பும்

### 8.4.1 திரித்தெந்தின் சங்கம் (கி.பி 1545-1563)

மறுசீரமைப்பு சபைகளின் படிப்பினைகளுக்கு பதிலளிக்கும் முகமாக திருத்தந்தை 3வது பவுலின் தலைமையில் மார்கழி மாதம் 13ம் திகதி 1545ம் ஆண்டு வட இத்தாலியிலிருந்து திரிதேந்து என்ற நகரில் 30 ஆயர்களுடன் திரிதேந்தின் பொதுச்சங்கத்தை ஆரம்பித்து வைத்தார். அது திரிதேந்தின் சங்கம் அல்லது ட்ரென்ட் சங்கம் எனப்படும். அச்சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

- லூதரின் அனைத்து படிப்பினைகளையும் நிராகரித்தல்.
- திருவிவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டுமே திருமறை உண்மைகளின் ஊற்று.
- பழைய, புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களுமே இறை ஏவுதலால் எழுதப்பட்டவை. திருமறை வசனங்கள் கடவுளிடமிருந்து வந்தவை. அவற்றிற்கு பொருள் கூறும் அதிகாரம் திருச்சபைக்கு மட்டுமே உரியது.
- போதிக்கும் அதிகாரத்தையும் கற்பிக்கும் அதிகாரத்தையும் திருச்சபைக்கு கிறிஸ்து வழங்கியுள்ளார்.
- தூய பேதுருவும் அவருக்குப் பின் உரிய முறையில் திருத்தந்தையானவர்களுமே திருச்சபைக்குத் தலைவர்கள். திருத்தந்தை வழுவா வரம் பெற்றவர்.
- வல்கேட் என அழைக்கப்படும் இலத்தீன் விவிலியமே திருச்சபையின் அங்கீகாரம் பெற்றது.
- அருளடையாளங்கள் ஏழும் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்டவை.
- திருப்பலி, உத்தரிப்பு ஸ்தலம், புனிதர் வணக்கம், திருச் சொரூபங்களை வைத்தல், பரிபூரண பலன்கள் என்பன திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.
- திருமணம் ஒரு அருளடையாளம். திருமணப் பிணைப்பு என்றுமே பிரிக்கப்படாத ஒன்று.

- நம்பிக்கையின் பிரதிபலனான நற்செயல்களில் வெளிப்படும் நம்பிக்கையினால் மனிதன் தீர்ப்பளிப்பவன் ஆகிறான்.

**திரிதெந்தின் சங்கம் முன்வைத்த குருக்குல சீர்த்திருத்தம்**

- திருச்சபையின் பரிபூரண பலனை வழங்க பிரசாரப் போதகம் செய்யும் முறை நீக்கப்பட்டது.
- மரியன்னை பக்தி, தூயவர் வணக்கம் ஆகியன தகுந்த முறையில் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- குருத்துவப் பயிற்சிப் பள்ளிகள் ஒவ்வொரு மறை மாவட்டத்திலும் நிறுவப்பட வேண்டும்.
- கத்தோலிக்கர் வாரத்தில் ஒரு தடவையாவது நற்கருணை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- அடிக்கடி ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக பாவ மன்னிப்பு பெற்றுக் கொள்ள வேண்டும்.
- நற்கருணை ஆராதனை, நற்கருணை ஆசீர் என்பன ஊக்குவிக்கப்பட வேண்டும்
- குருக்கள் தம் பங்கு மக்களை கிறிஸ்தவ மதக் கொள்கைகளில் பயிற்றுவிக்க வேண்டும்.
- ஆயர்கள் தங்கள் மறைமாவட்டங்களில் தங்கி, மறைபோதனை நடத்த வேண்டும் பங்குகளை ஒழுங்காக தரிசிக்க வேண்டும்.
- பரிசுத்த திருச்சபையின் மத போதகர்களுக்காக ‘‘திரிதேந்தின் சங்கத்தின் ஞானோபதேசம்’’ என்ற நூல் திருத்தந்தை 5வது பயசினால் (ீரைளர) 1566ல் வெளியிடப்பட்டது.

## 8.4.2 புதிய துறவற சபைகளின் பிறப்பு

**யேசு சபை**

கி.பி 1534ல் ஸ்பானியாவிலே தூய இக்னேசியஸ் லோயலாவினால் யேசு சபை ஆரம்பிக்கப்பட்டது. உயர் கல்வி கற்ற இச் சபை துறவியர் ஆழமான ஆன்மீக வாழ்வை மேற்கொண்டனர். அக் காலத்தில் ஐரோப்பாவில் பரவியிருந்த சீர்த்திருத்த சபையினரின் தவறான படிப்பினைகளுக்கு யேசு சபை துறவியர் வழியாக பதிலளிக்கப்பட்டு மக்களுக்கு சரியான வழிகாட்டப்பட்டது.

திருத்தந்தைக்குப் பணிந்திருந்து கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியைக் கற்பித்து அதனை பாதுகாப்பதில் இச்சபைத் துறவியர் முன்நின்றனர். லோயலாவினால் எழுதப்பட்ட ‘‘ஆன்மீக பயிற்சிகள்’’ என்ற நூல் இன்றும் பிரசித்தி பெற்ற நூலாக உள்ளது. இச் சபைத் துறவியர் பல மறைக்கல்வி நூல்களை எழுதியுள்ளனர். அவற்றிலே பீட்டர் கெனிசியஸ் அடிகளார் எழுதிய கத்தோலிக்க நம்பிக்கை மறைக்கல்வி நூல் முக்கியமானது.

திரிதெந்தின் சங்கத்தில் இறையியலாளராக பணியாற்றியவர் இச்சபையைச் சேர்ந்த தூய றொபேர்ட் பெலார்மின் என்பவராவார். ‘‘ஆசியாவின் பெரும் மறைத்தூதுவர்’’ என புகழப்பட்ட பிரான்சிஸ் சேவியர் அடிகளார் யேசு சபையின் ஆரம்பகால அங்கத்தவராவார். இன்று உலகமெங்கும் இச்சபை துறவரத்தோர் பரந்து காணப்படுகின்றனர்.

**கார்மேல் சபை**

- பலஸ்தீனாவில் கார்மேல் மலையில் இச்சபை ஆரம்பமானது. தபசு வாழ்வுக்கான ஒழுங்கு சட்டகோர்வை 12ம் நூற்றாண்டில் தயாரிக்கப்பட்டது.
- தூய சைமன் ஸ்டொக் இத் துறவற வாழ்வு மரபை இங்கிலாந்திற்கு கொண்டு சென்று கார்மேல் துறவற வாழ்வுக்கு துணைபுரிந்தார்.
- கார்மேல் சபை துறவியான அவிலா திரேசா (1515-1582) தனது துறவற சபையிலே புத்தெழுச்சியை ஏற்படுத்துதற்கு முயன்றார். இறைவன் இவருக்கு பலவிதமாக காட்சியளித்தார். கார்மேல் சபையில் ஆரம்பத்தில் இருந்த தபசு வாழ்வு, ஆழ் தியான நிலை வாழ்வு ஆகியவற்றை மீண்டும் கார்மேல் சபைக்குள் கொண்டுவர முயன்று புத்தெழுச்சியை ஏற்படுத்தினார். ‘‘நிறை வாழ்வின் வழி’’, ‘‘உள்ளக மாளிகை’’ ஆகிய ஆன்மீக வாய்மொழிக்கு நூல் வடிவம் கொடுத்தார்.
- தூய அவிலா திரேசாளுக்கு உதவியாகவிருந்த தூய சிலுவை யோவானும் அவரைப் பின்பற்றி, அவரது உதவியுடன், கார்மேல் ஆண்கள் சபைத் துறவிகளுக்கான சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். அவரும் பல ஆன்மீக நூல்களை எழுதினார். அவை:- ‘‘கார்மேல் சபை ஏற்றம்’’இ ‘‘இருண்ட இரவு’’, ‘‘ஆன்மீக பாடல்’’, ‘‘அன்பின் அணையாச் சுவாலை’’ என்பனவாகும்.
- இவ்விருவரினதும் ஆன்மீக வாழ்வின் எழுத்தாக்கம் பலரது வாழ்விற்கு பெரிய ஆறுதலாக இருந்தது. செபவாழ்வு, ஆழ்தியான நிலை செபம் ஆகியவற்றை அனுபவிக்கும் விதம் பற்றிய அவர்களது ஆன்மீக படைப்பு பல பயனைத் தந்தன.
- ஆன்மீக வாழ்விலே இறையுறவை அனுபவிப்பதாயின் தாழ்மை அவசியம் என்ற போதனைக்கு யேசுவின் சிறிய மலரான திரேசா, தூய ஈடித் ஸ்ரெயின் ஆகிய கார்மேல் சபைத் துறவிகள் சான்று பகர்கின்றனர்.

**கப்புச்சின் சபை**

- 13ம் நூற்றாண்டில் தூய பிரான்சிஸ் அசீசியினால் ஆரம்பிக்கப்பட்ட பிரான்சிஸ்கன் துறவற சபையில் புத்தெழுச்சியின் தேவை உணரப்பட்டது.
- தூய பிரான்சிஸ் அசீசியின் சட்ட ஒழுங்குகளை மிக நுணுக்கமாகக் கடைபிடிக்க வேண்டுமென்றும், தொடக்க கால நற்செய்தி அறிவுரை வாழ்க்கை முறையை மீண்டும் வலியுறுத்தவும், தனிமை நிலை, தபம் போன்றவற்றை மீண்டும் நிலைநாட்டவும் பிரான்சிஸ்கன் சபை உறுப்பினர்கள் சிலர் தீர்மானித்தனர். இவர்களுக்குத் தலைமை தாங்கியவர் மத்தேயோ செரபீனி டீ பாஷ்ஸி என்பவராவார்.
- அவர்கள் தங்கள் போதிக்கும் பணியையும், தபசு வாழ்க்கையையும் இணைத்து வாழ்ந்தனர். நோயாளரைப் பராமரிப்பதிலும், கடின உழைப்பினாலும் கிடைத்த வருமானத்தைக் கொண்டு வாழ்ந்தனர். புரொட்டஸ்தாந்து சீர்திருத்தவாதிகளுக்கு எதிராகப் போதித்தனர். எளிமையான வாழ்வு வாழ்ந்தனர். சாதாரண மக்கள் மட்டத்தில் நின்று, அவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் மறையுரை ஆற்றினர்.

## 8.5 தற்கால யுகம் (கி.பி 1789-2014)

### 8.5.1 பிரான்சிய புரட்சி

1788ல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. வேளாண்மை தவறியதால் கடும் பஞ்சம் ஏற்பட்டு, மக்கள் ஆயிரக்கணக்கில் உணவின்றி மடிந்தனர். சுகபோகத்தை அனுபவித்து வந்த மன்னரும் மேல் மட்ட பிரபுக்களும், ஆயர்களும், குருக்களும் மக்களின் துயர்போக்க முன்வரவில்லை. எனவே வாழ்க்கைப் பழுவைத் தாங்க முடியாத ஏழைக் குடியானவர்களும், தொழிலாளர்களும் நாட்டின் நீதி முறை மாற்றப்பட வேண்டுமென புரட்சி செய்தனர். முடியரசு ஆட்சி முறை குடியரசு ஆட்சி முறையாக மாற்றப்படவேண்டுமென குரலெழுப்பினர். அதை எதிர்த்த உல்லாச வாழ்வு வாழ்ந்து வந்த மன்னர், பிரபுக்கள், ஆயர்கள், குருக்களுக்கு எதிராக எழுந்தனர். 1792ல் அது பயங்கர பிரான்சிய புரட்சியாக வெடித்தது. சில அடிமட்டக் குருக்களும், பிரபுக்களும் குடியானவர்கள், தொழிலாளர்களுடன் இணைந்து கொண்டனர்.

நாடு, மக்கள் விருப்பத்திற்கு அமையவே ஆளப்பட வேண்டுமென்ற ரூஸ்ஸோவின் கொள்கை அதற்கு உரமூட்டியது. குடியரசு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஆயிரக் கணக்கான பிரபுக்கள், குருக்கள், துறவியர் கொலை செய்யப்பட்டனர். இதற்கு கில்லெட்டின் என்ற இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. பெரும் பிரபுக்களும், நில உரிமையாளர்களும் நாட்டை விட்டு ஓடினர். ஏனையவர்கள் தங்கள் உரிமைகளைக் கைவிட்டனர். பல ஆண்டுகளாக கூட்டப்படாமலிருந்த பாராளுமன்றம் (States General) 1789ல் வெர்செயில்சில் கூட்டப்பட்டது. அதில் புதிய அரசியல் சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. தேசிய சட்டசபையின் மேலான்மையின் கீழ் திருச்சபை கொணரப்பட்டது. பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க 1789ல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி திருச்சபையின் சொத்துக்கள் அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டன. திருச்சபை அரசின் கீழ் கொண்டுவரப்படுவதை எதிர்த்த 16வது லூயிஸ் மன்னர் 1792ல் கொல்லப்பட்டார்.

பிரான்சிய புரட்சியின் பயனாக அங்லிக்கன் கோட்பாட்டினருக்கு பெரும் வெற்றி கிட்டியது. 156 மறைமாவட்டங்கள் கலைக்கப்பட்டு, மக்களுக்கு தங்கள் குருக்களை, ஆயர்களைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. அதை ஏற்றுக்கொள்ளாத ஆயர்களும், குருக்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். நாடுகடத்தப்பட்டனர். திருத்தந்தை 6ம் பத்திநாதர் அச்சட்டத்தை எதிர்த்தார். இவ்வாறாக பிரான்சில் தொடங்கிய புரட்சி முழு ஐரோப்பாவிலும் திருச்சபையிலும் பேரழிவை ஏற்படுத்தியது. திருச்சபையே அதனால் மிகவும் பாதிக்கப்பட்டது. திருச்சபையின் சொத்துக்கள், உடைமைகள், கல்வி, சமூகப்பணித்தாபனங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. வார நாட்கள் ஏழிலிருந்து பத்தாக மாற்றப்பட்டன. தொழில் விழா, அறிவு விழா, நற்செயல் விழாவெனப் புதிய விழாக்கள் புகுத்தப்பட்டு, கிறிஸ்தவ திருநாட்களும் ஞாயிறு திருப்பலிகளும் தடைசெய்யப்பட்டன. நோட்டர் டாம் தேவாலயம் அவசங்கைப்படுத்தப்பட்டது. அதன் பலிபீடத்தின் மேல் துர்நடத்தையுள்ள ஒரு பெண்ணை நிறுத்தி, அவளே ‘‘பகுத்தறிவின் கடவுள்’’ என வழிபட்டனர்.

1794ல் சர்வாதிகாரி ரூபிஸ்பியர் சிரச்சேதம் செய்யப்பட்டு, நெப்போலியன் போனப்பார்ட் அரசரானார். ‘‘வேதம் இல்லா நாடு திசை காட்டும் கருவியில்லாத மரக்கலம்’’ என்பதை அவர் உணர்ந்து. 1797ல் திருச்சபையை அரசிலிருந்து பிரித்து, அதற்கு மதச் சுதந்திரம் வழங்கினர். திருத்தந்தை 6ம் பத்திநாதருடன்

ஒப்பந்தம் செய்து, திருச்சபையிடமிருந்து ஏராளமான நிலப் பரப்பையும், நாடுகளையும், பல விலையுயர்ந்த கைப்பிரதி நூல்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆனால் 1798ல் உரோமையில் பிரான்ஸ் நாட்டவர் ஒருவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நெப்போலியன் உரோமையை முற்றுகையிட்டு, திருத்தந்தையின் உடைமைகளைச் சூறையாடி, அவரை வாலன்சிற்கு நாடு கடத்தினான். அங்கு திருத்தந்தை 6வது பத்திநாதர் இறந்தார். 1802ல் நெப்போலியன் புதிய திருத்தந்தை 7வது பத்திநாதருடன் ஒரு ஒப்பந்தம் செய்து, திருச்சபையின் உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுத்தான். ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டன. துறவற சபைகள் தத்தம் பணியை மீண்டும் ஆரம்பித்தன. கத்தோலிக்க மதம் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்டது. ஆயர்களைத் தெரிவு செய்வதற்கு தேசாதிபதிகளுக்கு உரிமையிருந்தாலும், அதை ஏற்று கொள்ளவோ நிராகரிக்கவோ திருத்தந்தைக்கு அதிகாரம் இருந்தது. எனினும் விரைவில் நெப்போலியன் ஒரு சர்வாதிகாரியாக மாறினான். அவனுடைய சகோதரனின் திருமணத்தை விவாகரத்து செய்ய திருத்தந்தை மறுத்தமையினால் கோபமடைந்து, உரோமையை முற்றுகையிட்டு, அதை பிரான்சின் ஆளுகைக்கு உட்படுத்தினான். திருத்தந்தையைக் கைது செய்து ஆறு ஆண்டுகளுக்குச் (1809-1814) சிறைப்படுத்தனான். எனினும் திருத்தந்தை 7வது பத்திநாதர் தம் முடிவில் உறுதியாகவிருந்தார். 1815ல் நெப்போலியன் வாட்டர்லூ போரில் தோல்வியுற்று அடைக்கலம் தேடி பாப்புவிடம் உரோமைக்கு வந்தான். திருத்தந்தை அவனை வரவேற்று, மன்னித்து, வேண்டிய உதவிகளைச் செய்தார். இதன் பின் பிரான்சில் திருச்சபை சுதந்திரமாக வளரத் தொடங்கியது.

இத் திருத்தந்தையின் காலத்திலே பல புதிய துறவற சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவைகளுள் மாரியனிஸ்ற், மாறிஸ்ற், டி லாசால் சகோதரர், அன்புக் கன்னியர், பவுலினிஸ்ற், சலேசியன், இறைவார்த்தை சபை, வெள்ளைத் தந்தையர் சபை என்பன குறிப்பிடத்தக்கவை. அவை மறைபரப்புப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, மேய்ப்புப் பணி போன்றவற்றில் ஈடுபட்டு, திருச்சபைக்கு புத்துணர்ச்சியையும், புதுப்பித்தலையும் வழங்கின. லயன்ஸ் நகரத்தில் ஆரம்பிக்கப்பட்ட மறைபரப்புதல் சபை திருத்தந்தை 7ம் பத்திநாதரினால் 1822ல் அங்கிகரிக்கப்பட்டது.

### 8.5.2 முதலாம் வத்திக்கான் சங்கம் (1869-1870)

- கி.பி 1869 மார்கழி 8ம் திகதி முதலாம் வத்திக்கான் சங்கம் உரோமையிலே கூட்டப்பட்டது.
- திருச்சபையின் அடிப்படை உண்மைகள், இறைவன் உள்ளார் என்ற கோட்பாடு, இயற்கையும் இறைவனும், இறைவனின் வெளிப்படுத்தல்கள், பகுத்தறிவுக்கும் இறைவெளிபடுத்துதலிற்கும் இடையிலான ஐக்கியம் என்பன பற்றிய படிப்பினைகள் ஆராயப்பட்டு, அறிக்கை வெளியிடப்பட்டது. நாத்திகம், உலோகாயிதம், பகுத்தறிவுவாதம் போன்ற தப்பறைகள் எடுத்துக்காட்டப்பட்டன.
- திருத்தந்தையின் வழுவாவரக் கோட்பாடுகள் (Infaillbity) ஆய்வு செய்யப்பட்டு, விசுவாச உண்மையாக பிரகடனம் செய்யப்பட்டது. அதாவது திருத்தந்தை திருச்சபையின் தலைவராக பேதுருவின் அரியணையிலிருந்து வேத கோட்பாடுகளை அறிவிக்கும்போது, தூய ஆவியின் அருளால் உண்மையைப் பேசுகிறார் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. திருத்தந்தையின் முதன்மை தலைமைத்துவமும் (ீசஅையஉல) அங்கீகரிக்கப்பட்டது.
- கி.பி 1870ல் தொடங்கிய பிரான்ஸ் - புரூசிய போரின் நிமித்தம் திருச்சங்கம் இடை நிறுத்தப்பட்டது. இதனால் திருச்சபையின் பணி, பொதுநிலையினர், துறவறத்தாரின் நிலை பற்றிய உரையாடலைத் தொடர முடியவில்லை.
- ஆயினும் 18ம் நூற்றாண்டில் நலிவடைந்திருந்த திருத்தந்தையின் அதிகாரம், ஆன்மீக தலைமைத்துவம் ஆகியனவும் 19ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஆன்மீக, ஒழுக்க தலைமைத்துவமும் திருத்தந்தைக்கு மீண்டும் அளிக்கப்பட்டது.

## 8.6 நவீன காலத்தில் திருச்சபையிலே அளப்பரிய பணிபுரிந்த சில முக்கிய திருத்தந்தையர்கள்

### 8.6.1 திருத்தந்தை 9ம் பத்திநாதர் (கி.பி 1846 - 1878)

முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம் இவராலேயே கூட்டப்பட்டது. (கி.பி 1868-1870) திருத்தந்தையின் வழுவா வரக் கோட்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு விசுவாச உண்மையாகப் பிரகடனம் செய்யப்பட்டது. தேவ

அன்னை சென்ம பாவ தோஷமின்றி பிறந்தவர் என கி.பி 1854 மார்கழி 8ம் திகதி வெளியிட்டார். கி.பி 1858 மாசி 11ம் திகதி இறை அன்னை லூர்து நகரிலே காட்சி கொடுத்தது, இவரது காலப்பகுதியிலாகும். 32 ஆண்டுகள் திருச்சபையின் தலைவராக பணியாற்றிய இவரே நீண்டகாலம் திருத்தந்தையாக பணியாற்றியவராவார்.

**8.6.2 திருத்தந்தை 13ம் சிங்கராயர் (கி.பி 1878 - 1903)**

சிறந்த இறையியலாளரான இவர் இறையியல் கல்வியை சீர்படுத்தினார். விஞ்ஞான ரீதியில் திருவிவிலியத்தைக் கற்க வழிவகுத்தார். வத்திக்கான் ஆவண மன்றத்தை பயன்படுத்த அனுமதித்து கல்வி ஆய்வினை ஆதரித்தார். உலகின் எல்லா நாடுகளுடனும் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். பல்வித நூல்கள், அப்போஸ்தலிக்க திருவுரைகள் எழுதியுள்ளார். (செபமாலை பக்தி, தூய ஆவி, நற்கருணை) முதலாவது சுற்று மடலான ‘‘உழைக்கும் மக்கள்’’ (ரேரும் நொவாரும்) ஆகியவற்றை முன்வைத்தார். தொழிலாளரின் உரிமைகள் பற்றிய கிறிஸ்தவ பார்வை இதன் மூலம் காட்டப்படுகிறது. 1902ல் உரோமையில் திருவிவிலிய ஆணைக்குழுவை அமைத்தார்.

**8.6.3 திருத்தந்தை 10ம் பத்தினாதர் (கி.பி 1903 - 1914)**

இவர் கல்வியறிவுடைய, நற்குண சீலரான திருத்தந்தையாவார். பிள்ளைகள், இயைஞர்கள் மட்டில் விசேட கவனம் செலுத்திய இவர், அவர்களை உயர்வடையச் செய்வதற்காக உழைத்தார். முதல் நன்மை பெறும் வயதெல்லையைக் குறைத்தவர் இவரே. (சிறுவர் நற்கருணை பெறுதல், அடிக்கடி.்.தினமும் நற்கருணை பெறுவதற்கு அனுமதியளித்தல்) திருவழிபாட்டில் அதிக ஈடுபாடு கொள்ளச் செய்து அதில் பல்வித சீரமைப்புகளைச் செய்வதில் முன் நின்றவர். பிற்காலத்தில் இவரை திருத்தந்தை 12ம் பத்திநாதர் தூயவர் நிலைக்கு உயர்த்தினார்.

**8.6.4 திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர். (கி.பி 1914 - 1922)**

பேரார்வம் கொண்ட திருத்தந்தையான இவரது காலத்தில்தான் முதலாவது உலகப்போர் நடந்தது. உலகெங்கும் கம்யூனிஸ்ட்வாதம் பரவியிருந்த இக் காலத்தில் கத்தோலிக்கர் ஒரு விதத்தில் துன்புறுத்தல்களை அனுபவித்தனர். கி.பி 1917ல் போர்த்துக்கலில் பத்திமா என்னும் இடத்தில் மரியன்னை மூன்று சிறுவர்களுக்கு காட்சியளித்தது இவரது காலத்திலாகும்.

**8.6.5 திருத்தந்தை 11ம் பத்திநாதர் (கி.பி 1922 - 1939)**

இவரது ஆட்சிகாலத்தில் இத்தாலியிலே இருந்த பாசிக் கொள்கையாளன் பெனிட்டோ முசலோனியாவான். இத்தாலி அரசுக்கும் திருத்தந்தைக்கும் இடையே 1929ல் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. அதை இலாத்தரன் ஒப்பந்தம் என அழைப்பர். அதன்படி வத்திக்கான் ஒரு தனி நாடாக, நடுநிலை நாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் மன்னர் திருத்தந்தையெனவும் அறிவிக்கப்பட்டது. இவர் பொது நிலை மறைத்தூதுப் பணியின் எழுச்சிக்கு உற்சாகம் அளித்தார். பொதுநிலையினர் பற்றி பல்வித அப்போஸ்தலிக்க திருவுரைகள் வெளியிட்டார். ‘‘ரேரும் நோவாரும்’’ (தொழிலாளர் சாசனம்) சுற்று மடலின் 40வது ஆண்டு நிறைவு விழாவையெட்டி ‘‘நாற்பது ஆண்டுகள்’’ (Quardagessimo Anno) என்ற சுற்று மடல் இவரால் வெளியிடப்பட்டது.

**8.6.6 திருத்தந்தை 12ம் பத்திநாதர். (கி.பி 1939 - 1958)**

இவர் சிறந்த பண்டிதராவார். பல மொழிகள் அறிந்தவர். ஆன்மீகத்தில் சிறந்தவர். இவரது ஆட்சி காலத்தில்தான் இரண்டாவது உலக மகா யுத்தம் இடம் பெற்றது. உலக அமைதிக்காக இவர் பெரிதும் உழைத்தார். கைதிகளைப் பாதுகாப்பதற்காக பல்வித வழிகளைக் கையாண்டார். தேவதாய் ஆன்ம சரீரத்துடன் பரலோகத்திற்கு ஆரோகணமானார் என்ற நம்பிக்கையை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார். நற்கருணை பெறுவதற்கான சரீர ஆயத்த எல்லையை குறைத்தார். பல சிறந்த சுற்று மடல்களை எழுதினார்.

‘‘கிறிஸ்துவின் உடல்’’ என்ற சுற்றுமடல் இவர் வெளியிட்ட சிறப்பான ஆக்கமாகும். பொது நிலையினரின் தூதுப்பணி பற்றி அதிகம் ஆர்வம் காட்டிய திருத்தந்தையாவார்.இவர் எழுதிய ‘‘சும்மி பொந்திபிக்காத்துஸ்’’ என்ற முதல் சுற்றுமடலில் இன்றைய சீர்கேடுகளை சுட்டிக்காட்டி எச்சரித்தார். அவரது மற்றுமொரு சுற்றுமடலா கிய ‘‘கியுமானி ஜெனறிஸ்’’ விவிலிய ஆராய்ச்சியின் வரம்புகளைச் சுட்டிகாட்டுகிறது. 1943ல் ‘‘டிவினோ அவிலான்றே ஸ்பிரிற்று’’ என்ற இன்னுமொரு சுற்றுமடலில் விவிலிய ஆராய்ச்சிக்கான புது முறைகளை ஊக்குவித்தார்.

**8.6.7 திருத்தந்தை 23ம் அருளப்பர் (கி.பி 1958 - 1963)**

திருச்சபை வரலாற்றிலே பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய திருத்தந்தை இவர் என கூறலாம். 2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியவர் இவரே. உலக அமைதிக்காக பெரும் பணியாற்றியவர். ''அவனியில் அமைதி''இ ''அநீதிக்கு பதில்'' ஆகிய சுற்றுமடல்களை எழுதினார். பிற இனத்தவர்கள், மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒன்றுபட்டு உலக சகோதரத்துவத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார். ஆன்மீகத்தில் மேலானவர். இன்று இவர் தூயவர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

**8.6.8 திருத்தந்தை 6ம் சின்னப்பர் (கி.பி 1963 - 1978)**

இடை நிறுத்தப்பட்டிருந்த 2ம் வத்திக்கான் சங்கத்தை முன்னெடுத்துச் சென்றார். இவர் 1965ல் 2ம் வத்திக் கான் சங்கத்தை வெற்றியாக முடிவுக்கு கொண்டு வந்தார். ஆன்ம வாஞ்சையுடைய திருத்தந்தையாவார். உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பயணிப்பதை ஆரம்பித்தவர் இவரே. கி.பி 1970 மார்கழி 04ம் திகதி இலங்கைக்கு வருகை தந்தார். திருத்தந்தை ஒருவர் முதல் முதலில் இலங்கைக்கு வருகை தந்த வரலாற்று நிகழ்வு இதுவாகும். ''மக்கள் முன்னேற்றம்'' என்ற சுற்றுமடலை எழுதினார். ''மறையையளித்தல'' பற்றிய அப்போஸ்தலிக்கத் திருவுரை எழுதியுள்ளார்.

**8.6.9 திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் (கி.பி 1978 - 2005)**

600 வருடங்களின் பின் இத்தாலிக்கு அப்பால் உள்ள நாட்டிலிருந்து திருத்தந்தை நிலைக்கு உயர்த்தப்பட்ட இவர் போலந்து நாட்டினராவார். ஆன்ம வாஞ்சையுடையவர். உலகின் பல நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்ட இவர் கி.பி 1995ல் இலங்கைக்கு வருகை தந்தார். இங்கு வந்து யோசேப்வாஸ் அடிகளாரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

சுற்றுமடல்கள், திருவுரைகள் பல இவரால் எழுதப்பட்டன. அவற்றில் சில ''வர இருக்கும் மூன்றாம் ஆயிரம்'' பற்றிய அப்போஸ்தலிக்க சுற்றுமடல், ''மறைக்கல்வி'' பற்றிய திருவுரை, ''மீட்பரின் தாய்'' சுற்றுமடல், ''இன்றைய உலகின் கிறிஸ்தவ குடும்பம்'' பற்றிய சுற்றுமடல், ''பொதுநிலையினர்'' பற்றிய திருவுரைகள் ''குருத்துவ, துறவற பணிகள்'' பற்றிய அப்போஸ்தலிக்க சுற்றுமடல் ஆகியவையும் அடங்கும். ஆன்மீகத்தில் முழு நிறைவாக இருந்த இவர், பல நாட்டினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவராவார். 2005ம் ஆண்டு மரணித்த இவரை திருச்சபை இன்று தூயவர் நிலைக்கு உயர்த்தியுள்ளது.

# ஒன்பதாம் பாடம்

## 9. இலங்கை திருச்சபை வரலாறு (போத்துக்கேயர் காலத்திற்கு முன்னரும் போர்த்துக்கேயர் காலமும்)

### 9.1 போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததற் கான சான்றுகள்.

கிறிஸ்தவ மறை கி.பி 1505ற்கு பின்னரே இங்கு முறையாக பரவினாலும் அதற்கு முன்னரே இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள. அவற்றில் முக்கிய சில சான்றுகள்:-

**1. கொஸ்மஸின் வெளியீடு**

கி.பி 6ம் நூற்றாண்டில் பல நாடுகளுக்கு பயணத்தை மேற்கொண்ட கொஸ்மஸ் என்பவர் எழுதிய ''கிறிஸ்தவ சபைகளின் விவரணம்'' (த கிறிஸ்டியன் டொபோக்றேப்) என்ற நூலில் இலங்கையைப் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''இந்தியர் வியாபாரத்திற்காகச் செல்லும் இந்திய கடலில் பெரிய சிங்களத் தீவொன்று உண்டு. அதனை 'தப்ரபோன்' என்றழைத்தனர். அங்கு இரு அரசர்கள் இருந்தாலும் இருவரும் ஒருவருக்கொருவர் எதிரானவர்க ளாக இருந்தார்கள். இங்கு வாழ்ந்த பாரசீக இனத்தவர்களுக்கான கிறிஸ்தவ ஆலயம் ஒன்று உண்டு. அத்தீவில் பாரசீகத்தினால் நியமனம் பெற்ற ஒரு குருவும், ஒரு திருத்தொண்டரும் இருக்கிறனர். அங்கு திருவழிபாடுகளும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான பொருட்கள் அனைத்தும் அவர்களிடம் உண்டு. இவரின் இக் கூற்றுக்கேற்ப அக்காலத்தில் இலங்கையில் ''நெஸ்தோரியன்'' (Nestorian) சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததாகக் கருத முடிகிறது.

**2. அனுராதபுர சிலுவை**

1912ல் அனுராதபுரத்திலே தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின்போது கட்டிடச் சிதைவுகளுக்கிடையே இருந்த கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிலுவையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நெஸ்தோரியன் கிறிஸ்தவர் கள் திருச்சிலுவையில் அதிக பக்தி கொண்டிருந்தார்கள் என சொல்லப்படுகிறது. இச்சிலுவை கொஸ்மஸ் குறிப்பிடும் கிறிஸ்தவர்களின் ஆலயத்திற்குரியதா, அல்லது அவர்கள் வசித்த ஒரு வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்டதா, அல்லது நெஸ்தோரிய கிறிஸ்தவர்கள் அனுராதபுரத்தில் வாழ்ந்தார்களா என எதை யுமே உறுதியாக சொல்லக் கூடிய சான்றுகள் இல்லை.

**3. மிகார தளபதி**

இந்தியாவிலிருந்து வந்த முதலாவது காசியப்பன் அரசனுக்கு (கி.பி 473-491) பின்னர் முதலாவது முகலன் அரசனுக்கும் (கி.பி 491-508) கீழ் தளபதியாக பணியாற்றிய கிறிஸ்தவ பக்தரான மிகார ‘‘அபிஷேக ஜின்’’ என்பவருக்காக கோயில் கட்டி அதன் அர்ப்பணத்திற்காக ஒரு கொண்டாட்டம் நிகழ்த்தியதாக ‘‘சூல வம்சம்’’ என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.(39:6-7, 40-41). ‘‘தான் மற்றவரை வெற்றி கொண்டவன்’’ அல்லது ‘‘தான் அடிமையாக்கியவன்’’ என்ற கருத்தையுடைய ‘‘ஜின்’’ என்பது பாளி மொழியில் புத்தரையும், சைன மதத்தின் ஆரம்பகர்த்தாவான வர்த்தமானையும், ஆஜீவன காலத்தில் தொடங்கிய மக்பலி கோசாலவையும் குறிக்கிறது. கிறிஸ்து என்ற கருத்துடைய அபிஷேக என்னும் சொல் ‘‘ஜின்’’ னுடன் இணைந்து ‘‘கிறிஸ்து’’ என்றானது என செனரத் பரண விதான என்பவர் கூறியுள்ளார்.
மூன்றாம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் கிறிஸ்தவர்கள் வசித்ததால் அவர்கள் அடிக்கடி இலங்கைக்கு வருகை தந்திருக்கலாம் என கருத முடிகிறது. மிகாரவைப்போன்று இலங்கை அரசனின் படையினராக இந்திய கிறிஸ்தவ படையினரும் பணியாற்றியிருக்கலாம்.

4. முகலன் அரசன் காலத்தில் கிறிஸ்தவ அடையாளத்துடன் கூடிய தங்க நாணயங்கள் இருந்ததாக சீகிரிய செய்திகள் குறிப்பிடுகின்றது.

5. அராபிய விஞ்ஞானி அல் இத்ரிட் கூறுவதன்படி பொலநறுவை காலத்தில் பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் யூத மதத்தினருக்காக பிரதிநிதிகள் நான்கு பேர் இலங்கை அரச சபையில் இருந்தார்கள் ஆயினும் இக்கால பகுதியில் வெளிநாட்டு கிறிஸ்தவர்களேயன்றி உள்நாட்டு கிறிஸ்தவர்கள் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. இவ்வாறு போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் கிறிஸ்தவர்கள் இங்கு இருந்ததற் கான நிச்சயமற்ற சான்றுகள் இருந்தபோதிலும் ஒழுங்கு முறையாக கிறிஸ்தவ மதம் பரவியதற்கான நிரந்தர சான்றுகள் இல்லை.

## 9.2 போர்த்துக்கேயர் காலம் (கி.பி 1505-1657)

**மறை பரப்புவதற்கு ஏதுவான பின்னணி**

போர்த்துக்கல் என்பது ஐரோப்பாவின் மேற்கு மாகாணத்தில் இருக்கும் ஒரு சிறிய அரசாகும். புர்கன்ட் (Burgant) இளவரசனின் உதவியுடன் முஸ்லிம்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற போர்த்துக்கேயர் ஐரோப்பாவில் முஸ்லிம்களின் வியாபார செல்வாக்கை அழிக்கும் நோக்கத்துடன் ஆபிரிக்காவைச் சுற்றி ஆசிய நாடுகளுக்கு செல்லக்கூடிய கடல் வழியை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். இம் முயற்சி 1498ல் வாஸ்கொடகாமா (Wasgothama) இந்தியாவின் கல்கத்தா நகரை கடல் மார்க்கமாக வந்தடைந்ததும் வெற்றியளித்தது.

அதற்கு எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு இந்தியாவில் ஆசிய நாடுகளுக்கு ஆளுநரான டொம் பிரான்சிஸ் டி அல்மெய்டா, இலங்கை, பேகுவா, மலாக்கா ஆகிய இடங்களிலிருந்து முஸ்லிம்களை விரட்டும் நோக்கத்துடன் இருந்தார். மலாக்கா, செங்கடல், பாரசீகம் துறைமுகத்திற்கு மேலிருந்த வழக்கமான கப்பல் பயண வழிகள் அடைக்கப்பட்டிருந்ததால் முஸ்லீம்கள் மாலைதீவு ஊடாக பயணத்தை மேற்கொண்டனர். இதனையும் முறியடிக் கும் பொருட்டு டொம் பிரான்சிஸ் டி அல்மேய்டா ஏழு கப்பல்கள் அடங்கிய குழுவை ஒழுங்கு செய்து, தனது மகன் டொம் லோறென்ஸோ டி அல்மேய்டா கொவினை அனுப்பினார். புயலில் சிக்கிய அக் குழுவினர் 1505 கார்த்திகை 15ம் திகதி காலி துறைமுகத்தை வந்தடைந்தனர். தாம் வந்துள்ள தீவு இலங்கை என்று அறிந்தவுடன் லொரென்சோ கடற்கரையை நோக்கி பயணம் செய்து கொழும்பு தலைநகரை வந்தடைந்தார்.

அக்காலப்பகுதியில் கோட்டை இராச்சியத்தில் 9ம் தர்ம பராக்கிரமபாகு அரசனும், மலைநாட்டில் விக்ரமபாகு அரசனும் யாழ்பாணத்தில் பரராசசேகரன் என்னும் அரசனும் ஆட்சி செய்தனர். குறுகிய காலத்தில் கோட்டை அரசனுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்ட போர்த்துக்கேயர் பின்னர் கொழும்பில் கோட்டையை கட்டினார்கள். புராதன கால கிரேக்கர் ‘‘தப்பிரபோன்’’ என்று அழைத்த இலங்கைக்கு போர்த்துக்கேயர் காலடி வைத்ததையடுத்து நற்செய்தியை அங்குள்ள மக்களுக்கு அளிக்க முடியும் எனவும், போர்த்துக்கேயர் அரசன் உரோமையிலிருந்த திருத்தந்தை யூலியஸ் அவர்கட்கு செய்தியனுப்பினார்.

**அரச அனுசரணையுடன் பரவிய கிறிஸ்தவ மறை**

கோட்டை அரசர் போத்துக்கேயருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். தனது அரசை பாதுகாக்கும் பொருட்டு அவர்களின் உதவியை நாடினான். போர்த்துக்கேயர் 1539ல் சீதாவாக்கை அரசன் மாயாதுன்னைக்கு உதவி செய்தனர்.

புவனேகபாகு அரசன் சிங்கள - போர்த்துகேய உறவுகளைப் பலப்படுத்தும் பொருட்டு சேலப்பு ஆராய்ச்சி என்னும் சிங்கள அரசன் அரச தூதுவரை போர்த்துக்களிலுள்ள லிஸ்பன் (Lisban) நகருக்கு அனுப்பினான். அத்தூதுப் பணியின் விளைவாக புவனேகபாகுவின் பேரன் தர்மபால இளவரசனை (புவனேகபாகுவிற்கு பின்னர்) கோட்டைக்கு அரசனாக்குவதாக போர்த்துக்கேய நாட்டின் மூன்றாவது யுவான் அரசன் உறுதியளித்தான். இதன் அடையாளமாக சேலப்பு ஆராய்ச்சி போர்த்துக்கேய நாட்டிற்கு கொண்டு சென்ற தர்மபால இளவரசனின் தங்கச் சிலைக்கு கொண்டாட்டத்துடன் முடி சூடப்பட்டது. அத்துடன் புவனேகபாகுவின் வேண்டுகோளுக்கமைய இந்நாட்டில் கிறிஸ்தவ மறையை பரப்புவதற்காக 1543ல் யுவான் டா விலா டோ கொண்டே என்ற குருவின் தலைமையில், வேறு ஆறு பிரான்சிஸ்கன் மறைப்பரப்பாளர்களும் சேலப்பு ஆராய்ச்சியும் இலங்கைக்கு வந்தனர். அவர்களை வரவேற்ற அரசன் கோட்டை அரசில் சுதந்திரமாக மறை பரப்புவதற்கு அனுமதியளித்தான். புதிய மறை நன்கு பரவியது. மறை பரப்பாளர்களின் வாழ்க்கைச் சான்று, ஏழைகள் மட்டில் காட்டிய இரக்கம், நோயாளர்களுக்கு பணியாற்றியமை, இன, மத பேதமின்றி மக்களுடன் ஒன்றுபட்டு செயற்பட்டமை ஆகியனவே இதற்கான காரணமாயிற்று சிங்கள மொழியை அறியாத மறைத் தூதுவர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் மூலம் போதனை செய்தனர். பௌத்த மனநிலைக்கு பழகியிருந்த சிங்களவர்க்கு கிறிஸ்தவ மனநிலையை கற்பிப்பது இலகுவான காரியமல்ல என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள்.

**கோட்டை அரசதானியில் மறைப்பரப்பு பணி**

புவனேகபாகுவின் மரணத்திற்கு பின்பு தர்மபால இளவரசன் கோட்டைக்கு அரசனானான். அதற்கு ஐந்து வருடங்களுக்கு பின்பு 70,000 அளவில் கரையோர மக்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவினர். பின்பு தர்மபால னும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியதால் போர்த்துக்கேயரும் மறைத்தூதுவர்களும் மிகுந்த பயனடைய முடிந்தது. ஆலயங்கள், பாடசாலைகள், இரக்கப்பணி நிலையங்கள் அமைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. பௌத்தர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்து சீதாவாக்கை அரசன் மாயாதுன்னையின் உதவியை நாடினர்.

மாயாதுன்னையின் மகன் இராசசிங்கம் யுத்தம் செய்து கோட்டை அரசைக் கைப்பற்றியதினால், தர்மபாலன், கொழும்பு நகரை தமது இராசதானியாகத் தெரிவு செய்தான். மேலும் அவன் (அவனுக்கு பிள்ளைகள் இல்லாததால்) தனது மரணத்திக்குப் பின்பு அரசு போர்த்துக்கேய அரசனுக்கு உரிமையாகும் பொருட்டு 1580ல் இறுதி சாசனம் ஒன்றை எழுதினான். அதற்கேற்ப 1597ல் தர்மபாலன் அரசனின் மரணத்திற்கு பின்பு கோட்டை அரசு போர்த்துக்கேயருக்கு உரிமையாயிற்று.

தர்மபாலன் அரசனின் தந்தை விதிய பண்டார போர்த்துக்கேயரை எதிர்த்ததால் அவர்களைப் புண்படுத்தும் பொருட்டு பாணந்துறை, களுத்துறை, மக்கொன, பேருவல, காலி, வலிகாமம் ஆகிய இடங்களில் இருந்த ஆலயங்களை எரித்து அழித்தான். குருவானவர்களையும், கிறிஸ்தவர்களையும் கொன்றான். இவ்வாறு 1555ல் கடுமையான துன்புறுத்தல்களினால் பிரான்சிஸ்கன் சபை குருக்களான பிரான்சிஸ்கோ டி பிராகா, ஜாவோகல்வோ, அன்தோனியோ பத்ராவோ ஆகிய குருக்கள் மறைசாட்சிகளானார்கள். கோட்டை அரசன் புவனேகபாகுவின் சகோதரனான விக்ரமபாகு அரசன் கண்டியை ஆட்சி செய்தான். அவன் மாயாதுன்னைக்கு எதிராக போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். அவர்களைத் திருப்திபடுத்தும் பொருட்டு மிஷனரி குருக்களை அழைத்து இரகசியமாக கிறிஸ்தவ மதத்தை தழுவியதாகவும் குறிப்பிட்டுள்ளது.

விக்கிரமபாகுவின் மகனான கரலியத்தே பண்டார தனது தந்தையை அரசாட்சியிலிருந்து விலக்கி தான் அரசனானான். அவன் மாயாதுன்னைக்குப் பயந்து, போர்த்துக்கேயரின் உதவியை நாடி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினான். அவனுடைய உறவினர்களும் அரச ஊழியர்களும் திருமுழுக்கு பெற்றனர். அவனுடைய சகோதரியான தோனா மர்கரீத்தா கோட்டை தர்மபால அரசனை திருமணம் செய்தாள். இதன் காரணமாக கண்டியில் மறைபரப்பு பணிபுரிவது மிக இலகுவான காரியமாயிற்று. 1582ல் சீதாவாக்கை அரசன் இராசசிங்கன் கண்டியைக் கைப்பற்றியதுடன் கரலியத்தே பண்டார தலைமறைவாகினான். இடையில் வைசூரி நோயினால் அவன் மரணமானான். அவனது மகளும் மருமகன் யமசிங்க இளவரசனும் கொழும்பிலிருந்து போர்த்துக்கேயரின் பாதுகாப்பைப் பெற்றனர். பின்னர் யமசிங்க, தொன் பிலிப்பு என்ற பெயரையும் மகள், தோனா கத்தரினா என்ற பெயரையும் பெற்று திருமுழுக்குப் பெற்றனர்.

கண்டி மக்கள் இராஜசிங்களை விரட்டினர். அப்போது கம்பொல தேவியின் மகன் பிரான்சிஸ்கோவிற்கு அரசு உரிமையாயிற்று. அதைக் கேற்வியுற்ற யமசிங்க இளவரசன் தனது உரிமையைக் காட்டி கண்டி

இராச்சியத்தை பெற்றுக் கொண்டபோதிலும் அவன் விரைவில் மரணமானான். அப்போது அவனுடைய 12 வயதான மகன் தொன் ஜாவோ அரசனான். ஆகிலும் யமசிங்கவின் சேனைத் தளபதி கோணப்பு பண்டார தொன் ஜாவோவையும் போர்த்துகேயரையும் விரட்டியடித்து முதலாவது விமலதர்மசூரிய என்னும் பெயருடன் கண்டியை ஆட்சி செய்தான். (முன்னர் அவன் தொன் யுவான்)

அவனை விரட்டி கண்டி அரசாட்சியை தோனா கத்தரினா இளவரசிக்கு பெற்றுக் கொடுப்பதற்காக போர்த்துக்கேய சேனையொன்று கண்டிக்கு வந்த போதிலும் கோணப்பு பண்டார அவர்களை விரட்டியடித்து தோனா கத்தரினா இளவரசியைத் திருமணம் செய்தான். விமலதர்மசூரியன் அரசன் கிறிஸ்தவர்களுக்கும், போர்த்துக்கேயருக்கும் எதிராக செயற்பட்டபோதிலும் தோனா கத்தரினா இளவரசியின் நிமித்தம் மக்களைத் துன்புறுத்தவில்லை.

அவனுக்குப் பின்னர் அரசனான செனரத் இளவரசன் மிகவும் பக்தியுள்ள பௌத்தன் ஆனான். தோனா கத்தரினா அவனுடைய மனைவியானாள். அதன் காரணமாக கிறிஸ்தவர்களுக்கு துன்பம் ஏற்படவில்லை. அரசன் விமலதர்மசூரியனின் மகனைக் கொன்று தனது மகனுக்கு அரசை கொடுப்பதற்கு செனரத் திட்டமிடுவதை அறிந்த தோனா கத்தரினா இளவரசி கவலையின் காரணமாக மரணமானாள். கண்டி இராச்சியத்தில் அரச குடும்பத்தின் - கத்தோலிக்க இனத்தின் பரம்பரை அவளுடன் முடிவுற்றது. செனரத்தின் ஆட்சி காலத்தில் கிறிஸ்தவ மறை பிரசாரத்திற்கு தடை ஏதும் ஏற்படவில்லை. அதேபோன்று சிங்கள அரச பரம்பரையின் கடைசி அரசனான வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் (1706-1739) கண்டி கத்தோலிக்கருக்கு வசதிகளை செய்துக் கொடுத்தான். அவனுக்கு முன்பு கண்டியை ஆட்சி புரிந்த 2வது இராஜசிங்கன் (தோனா கத்தரினா செனரத் இருவருக்கும் பிறந்த இளவரசன்). 2வது விமலதர்மசூரியன் (1687-1706) ஆகிய அரசர்கள் ஒல்லாந்தரின் துன்புறுத்தலுக்குள்ளான கத்தோலிக்கருக்கு உதவியதாக வரலாறு கூறுகின்றது. யோசேவாஸ் அடிகளாரையும் ஒரத்தோரியன் குருக்களையும் மிகவும் நன்றாக கவனித்தவர், மேற் கூறப்பட்ட நரேந்திரசிங்கரசனாவார். இவ்வாறு கண்டி இராசதானியில் கிறிஸ்தவ மறை பரவியது.

**சீதாவாக்கையில் மறை பரப்புப்பணி**

முதலாவது இராஜசிங்க அரசனின் பின்னர் நிகபிட்டிய பண்டார, சீதாவாக்கை அரசிற்கு உரிமைக் கோரினான். அதை எதிர்த்த போர்த்துக்கோயர் அவனை கொழும்பிற்கு அனுப்பினார்கள். தொன் பிலிப்பு என்னும் பெயரில் திருமுழுக்கு பெற்ற இவன் போர்த்துக்கேய நாட்டிற்கு அனுப்பப்பட்டு 1611ம் பிரான்சிஸ்கன் குருமடத்தில் மரணமானான். இக்காலப் பகுதியிலே சீதாவாக்கையில் மறைபரப்புப் பணி பரவியது.

சீதாவாக்கை யுகத்தில் தோன்றிய அலகியவன்ன என்ற கவிஞர் இலக்கிய நூல்கள் பலவற்றை எழுதினார். இவரது ஆக்கமாகிய ''கொன்ஸ்தாந்தீனு சடன்'' என்னும் சிங்கள கவிதை நூலை சிங்கள காவியங்களில் சிறந்ததாக கணிக்க முடிகிறது. அது போர்த்துக்கேய ஆளுனர் கொன்ஸ்தாந்தினுக்கும் சிங்கள தளபதி அந்தோனியோவு பரேத்துக்குமிடையில் ஏற்பட்ட போரை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. இக்காவியம் சிங்கள கிறிஸ்தவ இலக்கியத்தில் முதன்மையானதாகும்.

**யாழ்ப்பாணத்தில் மறை பரப்புப்பணி**

இது வேறொரு பரராஜசேகரனின் (ஹென்தஹமனசிங்கம் இவருடைய இன்னுமொரு பெயர்) ஆட்சி காலத்தில் ஆரம்பமாகியது. அரசனின் அனுமதியுடன் பிரான்சிஸ்கன் குருக்கள் அரண்மனைக்கருகில் ஆலயம் ஒன்றையும் ஆசிரமம் (Monastry) ஒன்றையும் கட்டினர். பின்னர் அரசனான சங்கிலி அரசன் போர்த்துக்கேய ரையும் திருச்சபையையும் எதிர்த்தான். யாழ்பாணத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய சங்கிலி மன்னன் படையொன்றை கொண்டு சென்று அங்கு வாழ்ந்த 600 அளவிலான கிறிஸ்தவ பக்தர்களைக் கொன்றான். அந்த மறைசாட்சிகளில் சிறு குழந்தைகளும் அடங்குவர். பின்னர் சங்கிலி அரசன் போர்த்துக்கேயரினால் சிறைபிடிக்கப்பட்டு கோவைக்கு அனுப்பப்பட்டு அங்கு மரண தண்டனை பெற்றான்.

1623ல் பரராசசேகரனின் (வெறன்தகமனசிங்க) மகன் தொன் கொன்ஸ்தாந்தீனு என்னும் பெயரில் திருமுழுக்கு பெற்றதால் யாழ்பாணத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்த வேறு பலரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். இது யாழ்பாணத்தில் மறைத் தூதுப்பணிக்கு பேருதவியாய் அமைந்தது. கோவையில் உயர் கல்வி கற்ற தொன் கொன்ஸ்தாந்தின், பிரான்சிஸ்கன் சபை குருவானவரானார். அவரது சகோதரிகளான தோனா மரியாவும், தோனா இசபெல்லாவும் பிரான்சிஸ்கன் அருட்சகோதரிகளானார்கள். இவர்கள் இருவருமே இலங் கையின் முதல் அருட்சகோதரிகளாவர். சில அரசர்கள் உண்மையான உள்ளத்துடன் திருமுழுக்கு பெற்றனர். அரச குடும்பத்தினர் கிறிஸ்தவரானது மறைபிரசாரத்திற்கு பெரிதும் உதவியது என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

துன்புறுத்தல்கள் தலைதூக்காமல் இல்லை, வெளிவாரியாக கிறிஸ்தவ மதத்தை எதிர்த்த அரசர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினர். வெளிவாரியான துன்புறுத்தல்கள், சமயத்திற்கெதிரான துன்புறுத்தல்கள், ஆட்சியாளர்களிடையே போட்டி மனப்பான்மை, போர்த்துக்கேய ஆட்சியாளர்களின் கொடூரமான செயற்பாடுகள்

ஆகியவை காரணமாக திருச்சபையின் வளர்ச்சி குன்றியது. 1658ல் ஒல்லாந்தர் யாழ்பாணத்தைக் கைப்பற்றிய பின்பு கத்தோலிக்க மறை பரப்புப் பணி முழுமையாக செயலிழந்தது.

## மறை பரப்பு பணியில் துறவற சபைகளின் பங்கு

### மறையைக் கற்பித்தல்

இலங்கையில் மறைபணிக்காக தம்மையே அப்பணித்த துறவற சபைகள் - பிரான்சிஸ்கன் சபை, அகுஸ்தீனார் சபை, டொமினிகன் சபை, யேசு சபை ஆகியோராவர், அசீசியில் பிரான்சிஸ் அடிகளார் ஆரம்பித்த அப்பெயர் கொண்ட சபையைச் சேர்ந்த ஐந்து குருக்கள் 1543ல் சிங்கள அரச தூதுவர் சேலப்பு ஆராச்சியுடன் இலங்கைக்கு வருகை தந்ததை ஏற்கனவே குறிப்பிட்டோம். பல்வேறு தடைகள், மத்தியில் அவர்கள் 60 ஆண்டு காலமாக இந் நாட்டில் மறை பரப்புப் பணியாற்றியது போற்றத்தக்கதாகும்.

### பங்குகளை உருவாக்குதல், எழுத்தாக்கம்

இச்சபையை சேர்ந்த மறைப் பரப்பு பணியாளர்கள் நவகமுவ, மாபிடிகம, தொம்பே, வத்தளை, கொழும்பு ஆகிய இடங்களில் ஆலயங்களைக் கட்டினார்கள். கொழும்பிலிருந்து தெவுந்தர வரை 40 ஆலயங்களும், காலியில் ஒரு ஆலயமும் கன்னியர் மடமும், கொக்கல (Koggala) தூய வளனார் ஆலயமும் அவர்களால் கட்டப்பட்டது.

இச்சபையில் அருட்பணி அன்தோனியா பெக்சோடேர் அடிகளார் சிங்கள கவிதையொன்றையும் கவிதையிலான நாடகத்தையும் சமய நாடகங்களையும் இயற்றியதாக வரலாறு கூறுகிறது. மாத்தறையில் நடைபெற்ற முதலாவது பாஸ்கா நாடகம், இவரது படைப்பென்று சிலர் கூறுகின்றனர். பிரான்சிஸ்கன் சபை குருக்களின் நேர்மை, பேரார்வம் கொண்ட பணிகள் காரணமாக வேறு சபை துறவற குழுக்கள் இங்கு வருகை தரும் இறையாசீர் எமக்குக் கிடைத்தது.

1602ல் இயேசு சபையையும், 1605ல் டொமினிக்கன் சபையையும், 1606ல் அகுஸ்தீனார் சபையையும் சேர்ந்த குருக்கள் இங்கு வந்து மறைபரப்பு பணியில் ஈடுபட்டனர். மகா ஓயாவுக்கு அப்பாற்பட்ட இடங்கள் இயேசு சபைக்கும் சப்பிரகமுவ அகுஸ்தீனார் சபைக்கும் சத்கோரலை டொமினிக்கன் சபைக்கும் ஏனைய இடங்கள் பிரான்சிஸ்கன் சபைக்கும் கொச்சின் ஆயரால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

சமய பணியில் ஈடுபடுபவர்கள், தேசிய மொழியில் கற்பிக்க வேண்டுமெனவும் மறைத் தூது பணியாளரின் முதல் பணி தேசிய மொழிகளை கற்பதாகும் எனவும் இயேசு சபையின் ஆரம்பகர்த்தாவான தூய இஞ்ஞாசியார் லோயலா கூறியதற்கேற்ப, இந்நாட்டில் பணி புரிந்த இயேசு சபை குருக்கள் செயற்பட்டு சிங்கள - தமிழ் மொழிகளைக் கற்று பண்டிதரானார்கள். 1616ல் மறைசாட்சியான மதேயா பெலங்கொட்டி, ஜோன் மஜெல்ல ஆகியோர் அவர்களில் சிலர் ஆவர். தமிழ் மொழி பண்டிதர் லம்பர் ருயிஸ் என்ற குருவானவர் தமிழ் மொழியில் இறைவனை மன்றாடி தமது இறுதி மூச்சை விட்டார்.

**இந்த அருட்தந்தையர் இரண்டு வகையான நூல்களை வெளியிட்டுள்ளனர்.**

- ஐரோப்பிய குருக்களுக்கு தேசிய மொழியை கற்பதற்கு உதவியாகவும்.
- சுதேச மக்களுக்கு மறையை கற்கும் வழியாகவும் நூல்கள் வெளியிடப்பட்டன.

டொமினிக்கன், அகுஸ்தினார் சபைகளை சேர்ந்த அருட்தந்தையர் இந்நாட்டில் ஆற்றிய மறை பரப்பு பணியின் காரணமாக ரம்புக்கனை, அத்தனகல்ல, வெலிவேரிய, பிடகல்தெனிய, மாபிட்டிகம, பெந்தொட்ட, நாராஹேன்பிட்டிய ஆகிய இடங்களில் பங்குகள் (Parish) அமைக்கப்பட்டன. அப்பிரதேசங்களில் 500 - 3000 வரையிலான கத்தோலிக்க பக்தர்கள் இருந்ததாக வரலாற்று ஆசிரியர் கெவ்ரோஸ் காட்டுகிறார்.

### கல்வி, சமூகப்பணி, பண்பாட்டின் பங்களிப்பு

அக்காலத்திலிருந்த ஐரோப்பிய பழக்கத்திற்கேற்ப, போர்த்துக்கேய ஆட்சியாளர்கள் இலங்கைக் கல்வியை குருக்களுக்கு பொறுப்பளித்தனர். அதனால் அக் காலத்தில் பிரான்சிஸ்கன் சபை குருக்கள் இங்கு ஆலயங்களுக்கு அண்மையில் பாடசாலைகளை ஆரம்பித்து மறை, எழுத்து, பாடல், இலத்தீன் மொழி, நன்னடத்தை ஆகிய பாடங்களைக் கற்பித்தனர். இங்கு வருகை தந்த இயேசு சபை குருக்களும் அவ்வாறே செய்தனர். கிராமங்களில் ஆலயத்திற்கு அருகே பாசாலைகளை நிறுவியது போலவே நகரங்களிலும் வித்தியாலயங்களை நிறுவினர். கொழும்பு, யாழ்ப்பாணம், நவகமுவ ஆகிய இடங்களில் இவ்வாறான வித்தியாலயங்கள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. ஆசிரியர் கல்லூரி ஒன்றும் பிரான்சிஸ்கன் சபை அருட்தந்தையர்களால் நிர்வகிக்கப்பட்டதாக வரலாறு காட்டுகிறது.

திருச்சபையின் பொதுவான பழக்கத்திற்கேற்ப இந்நாட்டு மறைத்தூதுவர்கள் கொழும்பு, யாழ்பாணம், மன்னார் ஆகிய இடங்களில் வைத்தியசாலைகளை நிறுவினர். அது மட்டுமன்றி நோயாளர்களின், துன்புறுவோர்களின் நலன் கருதி ''இரக்கப்பணி சங்கம்'' அமைக்கப்பட்டிருந்ததாக அறிக்கைகள் உண்டு. அனாதைகளுக்கு கல்வி வசதி, மரித்தோரை அடக்கம் செய்தல் போன்ற சேவைகள் இச் சங்கத்தினால் மேற்கொள்ளபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வைத்தியசாலைப் பணிக்கு தேவைப்படும் பணத்தை நன்கொடைகள் மூலம் பெற்றுக் கொண்டதுடன், கத்தோலிக்கர் வேதனமின்றி இவ் வைத்தியசாலைகளில் பணிபுரிந்தகாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரத்துகேய தழுவல் காரணமாக அவர்களின் கலாச்சார பிரிவுகள் சில தமிழ், சிங்கள, கலாச்சாரத்திலும் இணைந்துள்ளதையும் இங்கே குறிப்பிட வேண்டும். அவற்றில் சில இவ்வாறு காட்டப்படுகின்றன:-

- இன, பேதத்தின் அவசியமற்ற பகுதிகளை முறையாக நீக்குதல்.
- திருமணம் தொடர்பான கிறிஸ்தவ பழக்கங்கள் மதிக்கப்பிடல்.
- சில போர்த்துகேய சொற்கள் சிங்கள மொழிக்கு சேர்க்கப்படல். (பேதுரு, பாவுலு, சூசை போன்ற (பெயர்கள்) பென்திங்ஞா, குருஸ், செபமாலை, கொமிசம் ஆகியவையும் ஆகும்)
- மேல் நாட்டு கட்டலைகலை, சிற்பம், ஓவியக் கலை, சங்கீதம், ஆடைகள், ஆபரணங்கள் இந்நாட்டில் பரவுதல்.
- சமய நாடகங்கள் நடித்தல்.
- ஞாயிறு ஓய்வு நாளாக கணிக்கப்படுதல்.
- நத்தாரை மிகவும் விமரிசையாக கொண்டாடுதல்
- பாஸ்கா காலத்தில் நோன்பு அனுசரித்தல்.

போர்த்துகேயர் துப்பாக்கி முனையில் கிறஸ்தவ சமயத்தை பரப்பியதாக சிலர் கூறுகின்றனர். இது தவறாகும். அவ்வாறு பரப்பியிருந்தால் ஒல்லாந்தரின் காலத்தில் நிகழ்ந்த கொடூரமான துன்புறுத்தல் களுக்கு மத்தியில் கத்தோலிக்க சமயம் இன்று ஒழிந்திருக்க வேண்டும்.

**தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்**

‘லங்காராம’, 19 பெல்கும் இடம்

கொட்டா வீதி, கொழும்பு — 08

தொ.பே. 011–2685459

தொலைநகல் : 011–2665021

மின் அஞ்சல் : **natcatbible@gmail.com**

9786246121020